நடராஜா அவர்களைப் பொறுத்த வரை, அவர் திறமை, ஆற்றல் மற்றும் சிந்தனைத்தெளிவு காரணமாகவே மேல்நிலைக்கு வந்தவர். சட்டத்துறை யில் தனது வாதங்களை முன்வைப்ப தில் அவர் காட்டிய ஆளுமையும் துணி வாற்றலும் அறிவுக்கூர்மையும் என் றென்றைக்குமே பெருமையுடன் நினைவுகூரத்தக்கவை. அவர் மனச் சாட்சியின் ஒரு கைதி. அனுபவம், நிபுணத்துவம், உயர் சிறப்பு மற்றும் அதி விசேட குணாம்சம் ஆகியவை ஒருங்கே சேரப்பெற்ற ஆளுமை என்று நடராஜாவை வர்ணித்து கொண்டாட முடியும்.

இத்தகைய மேன்மை பொருந்திய தனது மகனைக் குறித்து கரவெட்டி என்றென்றைக்கும் பெருமைப்பட முடியும். லண்டனில் தனது கல்வியை முடித்துக்கொண்டுவந்த பிறகு நடராஜா ஊரவரான அப்போதிக்கரி வேலுப்பிள்ளையின் மகள் மகேஸ்வரி யை திருமணம் செய்துகொண்டார். அது அவரின் பெற்றோர் ஏற்பாடு செய்த திருமணமாகும். அன்பான கணவனாக, பாசமுள்ள தந்தையாக குடும்ப வாழ்வில் விளங்கிய நடராஜாவின் ஒரே மகள் குமாரியும் ஒரு பாரிஸ்டராவார். அவர்களது குடும்பம் மகிழ்ச்சி நிறைந்ததாக, முன்னுதாரணமாக விளங்கியது. நடராஜா செல்வச் செழிப்புடன் வாழ்ந்தவர். கொழும்பில் மாளிகை போன்ற தனது வாசஸ்தலத்தில் 1994 ஆம் ஆண்டில் அவர் இயற்கை எய்தினார்.

உலகப் புகழ்பெற்ற மகப்பேற் றியல் வைத்திய நிபுணரான செல்வி சிவா சின்னத்தம்பி, நடராஜாவின் இளைய சகோதரியாவார். அவரே இலங்கையில் குடும்பக் கட்டுப்பாட்டு சங்கத்தை தாபிப்பதில் முன்னின்று செயற்பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

# ஈழத்து இசை நாடக வளர்ச்சியில் அண்ணாவியார் எஸ். தம்பிஐயா



**திருமதி குயீன்ஜெஸீலி கலாமணி**
*MA (தமிழ்)*

ஈழத்து இசை நாடக மரபின் வரலாறு முறையாக எழுதப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றபோதும், அதற்கான சாத்தியப்பாடுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இசை நாடகம் குறித்த ஆய்வுகளும் குறைந்த அளவி லேயே காணப்படுகின்றன. ஈழத்து இசை நாடக வரலாறு பற்றிய நூல் களும் குறைவாகவே காணப்படு கின்றன. இசை நாடகக் கலைஞர் களும் தமது கலை வரலாற்றை எழுதியதாக இல்லை. அத்துடன் இக் கலைக்கான மூத்த கலைஞர்களும் உயிரோடு இல்லை. ஆனால் இவர் களிடம் காணப்படாத சிறப்பு எஸ். தம்பிஐயாவிடம் காணப்பட்டது. 'இத்தி மரத்தாள்' என்ற பெயரில் நெல்லண் டைப் பத்திரகாளி அம்மனின் தல வரலாறு 1985 இல் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் மனோன் மணி சண்முகதாஸ் ஆகியோரால் எழுதி வெளியிடப்பட்டபோது அவர் களின் கோரிக்கைக்கு இணங்க அந் நூலின் அனுபந்தமாக தனது கலை யுலக வரலாற்றையும், நெல்லண்டைப் பதியுடனான தனது கலைத் தொடர் பினையும் விளக்கி ஒரு கட்டுரையினை எஸ். தம்பிஐயா எழுதியிருக்கின்றார்.

அண்ணாவியார் எஸ். தம்பிஐயா ஈழத்து இசை நாடகம் தொடர்பாக பல்வேறு வகிபாகங்களை வகித்தவர். நடிகராக, அண்ணாவியாராக, நாடக ஆசிரியராக, ஒப்பனையாளராக, பாட லாசிரியராக, அரங்க முகாமையாள ராக பல்வேறு வகிபாகங்களை வகித்த எஸ். தம்பிஐயா மனையடி சாஸ்திரம், கைரேகை சாஸ்திரம், ஜாதகம் பார்த்தல் போன்ற சோதிடக் கலை யிலும் விற்பன்னராக விளங்கியிருக் கின்றார். பாடலே அரங்காகக் கொண்ட இசை நாடக மரபு தமிழகத்தில் ஸ்பெஷல் நாடக மரபாக தறிகெட்டுச் சென்றவேளை அதனை ஈழத்தில் வளமார்ந்த அரங்காக திசை திருப்பப்படுவதற்கு காலாக அமைந்த வர்களில் எஸ். தம்பிஐயா முக்கிய மானவர். அதற்கான ஆதாரக் குறிப்புகள் அவரது வரலாற்றுக் குறிப்பில் காணப்படுகின்றன. மேலும் எஸ். தம்பிஐயா ஒரு சிறந்த நாடக ஆசிரியர் என்றவகையில் பல இசை நாடக எழுத்துருக்களை எழுதியுள் ளார். இசை நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படும் சங்கரதாஸ் சுவாமிகள் போன்று நாடகத்திற்கான வசனங் களையும் பாடல்களையும் நினைத்த மாத்திரத்திலே எழுதும் ஆற்றல்

மிக்கவராக, இலக்கண, இலக்கிய புலமையாளராக இருந்திருக்கின்றார். பல்வேறு தமிழ் பிரதேசங்களுக்கு குறிப்பாக திருகோணமலை கணேசன் தியேட்டர், ஒட்டிசுட்டான் தான்தோன் றீஸ்வரம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பரந்தன் நாகபூசணி அம்மன், நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வட அல்வை வீரபத்திரர் ஆலயம் போன்ற இடங்களில் இவரது நாடகங்கள் கொண்டுசென்று நடிக்கப் பெற்றமை சமூக விழிப்புணர்வை ஏற்படுத்திய வராகவும் இவரை இனம்காட்டுகிறது. அல்வாய் பிரதேசத்தில் 'மனோகர கான நாடக சபாவின் இயக்குநராக விளங்கி அரை நூற்றாண்டுக்கு மேலாக நாடகங்களை மேடைஏற்றி, தமது பிரதேச மக்களை நாடகக் கலையில் இணைத்து பல்வேறு கலைஞர்களை உருவாக்கிய தலைமை அண்ணாவியாராகவும் விளங்கியிருக்கின்றார். அல்வாய் கிராம மக்களும், அவரது பரம்பரை வழித்தோன்றல்களும் இன்றும் கோயில்களில் இசை நாடகத்தினை முன்னெடுத்து வருகின்றனர். இசை நாடகத்தின் புகழீட்டிய பிரதிநிதியாக விளங்கிய *V.V.* வைரமுத்து கூட ஆரம்ப காலங்களில் எஸ். தம்பிஐயாவின் நாடகப் பட்டறையில் வளர்க்கப்பட்டவ ராவார். இசை நாடக மரபு குறித்த முறையான ஆய்வு இடம்பெறாதமை யினால் எஸ். தம்பிஐயா பற்றிய தகவல் கள் பல வெளிக்கொண்டுவரப்பட வில்லை.

ஒருவரது ஆளுமை உருவாக்கத் தில் பல்வேறு காரணிகள் தாக்கம் புரிவதாக உளவியலாளர்கள் கூறுவர். அண்ணாவியார் எஸ். தம்பிஐயாவின் ஆளுமை உருவாக்கத்தில் அவரது குடும்பப் பின்னணி, சமூக வரலாற்றுப் பின்னணி, கலாசாரப் பின்னணி, தனியாள்சார் காரணிகள் பங்களித்தன.

கலை மலிந்த பூமியாக வருணிக் கப்படும் வடமராட்சிப் பதியின் சபாபதி கதிராசி தம்பதியினரின் எட்டாவது மகனான எஸ். தம்பிஐயா இளமை யிலே கல்வியார்வம் மிக்கவராக இருந்திருக்கின்றார். தேவரையாளி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் பண்டிதர் மு. செல்லையா, சைவப் புலவர் சி. வல்லிபுரம், ஆசிரியர் க. முருகேசு ஆகியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றவ ராவார். இவரது தந்தைவழிப் பேரன் மார்களும், பாட்டன்மார்களும் சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞர்களாக இருந்திருக்கின்றனர். இதனால் இவர் சிறுவயதிலிருந்தே நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றார். இவரின் சிறிய தந்தையான சோதிடர் வே. தம்பையாவினால் நாடகமாக உருவாக் கப்பட்ட 'அங்குலன் சரித்திரம்' என்ற நாடகத்தில் மூத்த கலைஞரான வட அல்வை சிதம்பரியானுடன் சிறுவனாக எஸ். தம்பிஐயா நடித்திருந்தார். தேவரையாளிப் பாடசாலையில் எஸ். எஸ்.சி. படித்துக் கொண்டிருந்தபோது பாடசாலை நாடகங்களை நெறிப்படுத்

தும் பொறுப்பும் இவருக்கு வழங்கப் பட்டது. இவ்வகையில் இவரது ஆளுமை உருவாக்கத்தில் தேவரையாளித் தலைமையாசிரியர் மு. செல்லையா, ஆசிரியர் க. முருகேசு போன்றோரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளனர். கவிஞர் மு. செல்லையா 'சாந்த சக்குபாய்' என்ற பேசும் படத்தை இசை நாடகமாகத் தயாரித்து ஆலடிப் பிள்ளையார் கோயிலில் மேடை ஏற்றிய வேளை சக்குபாயின் மாமியாராக பிரதான பாத்திரம் ஏற்று நடித்தவர் எஸ். தம்பிஐயா. இதுவே முதன்முதல் இவரது இசை நாடகப் பிரவேசமாக அமைந்தது. பின்பு மோகினி - ருக்குமாங்கதா என்ற நாடகத்திலும் பிரதான பாத்திரம் ஏற்றார். இதே காலப் பகுதியில் ஆசிரியர் க. முருகேசுவினால் தயாரிக்கப்பட்ட மதிவதனா - சத்தியசீலன் என்ற நாடகத்தை நெறிப் படுத்தினார்.

ஒருவரது ஆளுமையைக் கட்டி எழுப்புவதில் சூழல், சந்தர்ப்பங்கள் நன்கு கிடைக்கும்போது சிறந்த ஆளுமைகள் உருவாகும் என்று உளவியலாளர் கருதுகின்றனர். கலை மலிந்த பூமியான வடமராட்சியில் நாட்டுக்கூத்துப் பாரம்பரியம் சிறப்பாக விளங்கிய சூழல், பாடசாலைச் சூழல், ஒழுக்கமான குடும்பச் சூழல் என்பனவும் எஸ். தம்பிஐயாவின் ஆளுமையில் பெரும் செல்வாக்கைச் செலுத்தி இருக்கவேண்டும். இவரது பரம்பரை வழிவந்தவர்கள் ஆறு தலைமுறைகளுக்கு முன்னராக காத்தவராயர் தேவஸ்தானத்தை ஸ்தாபித்தவர்களாவர். மற்றும் ஊரின் அண்ணாமார் ஆலயத்தை சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் தேவஸ்தானமாக மாற்றுவதிலும் இவர் பரம்பரையினர் பெரும் பங்களிப்பைச் செய்தனர். இவ்விரு ஆலயங்களிலும் இவரது நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டன. அத்துடன் வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்தில் இசை நாடகக் கலைஞர்கள் அறிவாளர்களாகக் கொள்ளப்பட்டு அவர்கள் மேடை ஏற்றிய இசை நாடகங்கள் கல்வியறிவூட்டலின் சில கடமைகளை நிறைவேற்றவும் செய்தன. இந்நிலையும் எஸ். தம்பிஐயா போன்ற கலைஞர்களின் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தி அம் மரபினை வளர்க்க உதவியிருந்தது.

அண்ணாவியார் எஸ். தம்பிஐயா சமூக நிலைப்பட்டதும் தனியாள் சார்ந்ததுமான சவால்களை எதிர் கொள்ளும் திறனுடையவராகவும் விளங்கியிருக்கிறார். இதுவும் அவரது ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தி இருக்கவேண்டும். இசை நாடகங்களை தனது வீட்டு முன்றலில் பெற்றோமக்ஸ் வெளிச்சத்தில் இரவிரவாகப் பழக்கும் இக் கலைஞர் நாடக ஆசிரியர் என்ற வகையில் சமரகவி புனைபவராகவும் ஆலயங்கள் மீதான கீர்த்தனைகளை இயற்றுபவராகவும் இருந்து தனது கவித்துவ ஆற்றல்களை வளர்த்துக் கொண்டார். இவர் எழுதிய இசை நாடகப் பாடல்கள், விருத்தங்கள் இன்றும் இசை நாடகங்களில் பாடப்படுகின்றன. அவ்வாறான சதி அகல்யா என்ற இசை நாடகத்தில் ஒரு பாடல்

***'கண்ணோ குவளை முகமோ கருதுமுயர்***
***விண்ணோர் மகிழும் அலங்கார ரூபமிகு***
***மதுரப்***
***பண்ணோ கரும்புடன் தேன் சேர்ந்ததாகப்***
***பயிலுமிந்தப்***
***பெண்ணோ எனக் கமுதாமென வாய்த்த***
***பெருந்தவமே'***

இந்திரன் அகலிகையின் அழகைக் கண்டு இப் பாடல் பாடப்பட்டதாகும். கலைஞர் நாரதராக வரும் நாடகங் களுக்கென பின்வரும் இசை, நாடகப் பாடலை எழுதிப் பாடி இசை நாடகத் திற்கு வளமூட்டியிருக்கிறார்.

பல்லவி

**நாராயணா நரபூசணா - ஹரி**
**நாராயணா....**

அநுபல்லவி

**சூராதி சூரா சங்காரா ஹரிதேவா**
**மாறாக் கோபியர் லீலைக்காரா மகிழ்வுதரும்**

சரணம்

**நாளும் நினது தொண்டு நாடிச்செய் வேழம்**
**அன்று**
**ஆதிமூலம் எனவே ஓடிச்சென்றருள் தந்தாய்**
**கோலாகலா வேணுகோபாலனே தேவா**
**ஞாலம் புரக்கும் உந்தன் கோலம்**
**கொண்டருள் தாராய்.**

நினைத்த மாத்திரத்தே கவி புனையும் ஆற்றலுடைய இவர் நாடகங்களில் நாடக தர்க்கங்களை உருவாக்கி பலரை விஞ்சும் வகையில் தர்க்கிக்கும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

நெல்லண்டைப்பதியில் சாந்த சக்குபாய் நாடகத்தை தொடர்ந்து மேடை ஏறிய மோகினி ருக்குமாங்கதா தந்தையின் நேர்த்திக்கடனுக்காக மேடை ஏறியபோது இவர் நெறியாள ராக, நடிகராகப் பொறுப்பேற்றிருந்தார். இதனைத் தொடர்ந்து பல இசை நாடகங்களில் நடிக்கும் ஆற்றல் பெற்ற இவர் 'அல்வாய் மனோகர கான நாடக சபா'வின் இயக்குநராக, நாடக ஆசிரிய ராக, அண்ணாவியாராக விளங்கி வடமராட்சியில் இசை நாடக மரபு நிலைகொள்ள உதவியிருக்கின்றார். 'மனோகர கான நாடக சபா'வின் ஊடாக அண்ணாவியார் எஸ். தம்பிஐயா நாடகங்களைத் தயாரித்த போது அந் நாடகங்களில் பங்கு கொண்ட கலைஞர்களென ஒரு நீண்ட பட்டியலைக் குறிப்பிடுவார். கவிஞர் வே. ஐயாத்துரை, நடிகமணி *V.V.* வைரமுத்து, கே. இரத்தினம், என். கிருஷ்ணபிள்ளை, எஸ். கந்தவனம், பி. சபாரத்தினம், வி. விருத்தாசலம், வீ. சிவலிங்கம் என அவை விரியும். பின்னாளில் அவர் நாடகங்களைத் தயாரிக்கவும், நாடக ரசிகர்களிடம் பெரும் வரவேற்புப் பெறவும் வதிரிக் கலைஞர் எம்.பி. அண்ணாசாமி யுடனான இணைவு முக்கிய காரண மென எஸ். தம்பிஐயா குறிப்பிடுகிறார். அவருடன் இணைந்து சத்தியவான் சாவித்திரி என்ற நாடகத்தை நெல்லண்டை அம்மன் ஆலயத்தில் எஸ். தம்பிஐயா நடித்திருந்தார். சத்தியவானாக அண்ணாசாமியும் நாரதராக நற்குணமும் எமனாக வசாவிளான் மார்க்கண்டுவும் முன் சாவித்திரியாக இரத்தினமும் பின் சாவித்திரியாக தாமும் நடித்ததாக கட்டுரையில் குறிப்பிடுகிறார். இதன் மூலம் புகழ்பூத்த கலைஞர்கள் எஸ்.தம்பிஐயாவுடன் இணைந்து

நடித்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

*1945* இல் எஸ். தம்பிஐயா அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயில் தலைவராக இருந்த காலத்தில் சிவராத்திரி தினத்தில் ஆலயத்தில் நாடகங்களை மேடையேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார். கோயிலில் மேடை ஏற்றும் நாடகங் களைத் தீர்மானித்தல், பிரதி எழுதுதல், நடிகர் தெரிவு, நாடகத்தைப் பழக்குதல் என்ற கருமங்களை நிறைவேற்றுவதில் இவர் வல்லவராக இருந்தார். இவ்வகையில் அல்வாய் கிராமத்திற்கென கலையார்வம் மிக்க கலைஞர்களை உருவாக்கியதில் இவரது பங்கு அளப்பரியதாகும்.

ஆயிரத்திற்கும் அதிகமான இசை நாடகங்களில் நடித்த இவரோடு இவரது பிள்ளைகளும் பேரப்பிள்ளை களும் கூட இவரது நாடகங்களில் நடித்துள்ளனர்; நடித்து வருகின்றனர். இவரது மகன் த. கலாமணியும் பேரனான கலாமணி பரணீதரனும் இவரைப் போன்று பல்பரிமாண ஆளுமை மிக்க கலைஞர்கள். இவ் வகையில் அல்வாய் கிராமத்திற்கென ஒரு நாடகப் பரம்பரையை உருவாக்கி நாடகசபையை அமைத்து இசை நாடக மரபு அழியாது பாதுகாத்தவர் என்ற வகையில் அவரைப் பற்றிய ஆய்வு பேராசிரியர் சிவலிங்கராசா அவர்களின் வழிகாட்டலில் முதுநிலைக் கல்விமானி (தமிழ்) நெறிக்காக, இக்கட்டுரை ஆசிரியரால் யாழ் பல்கலைக்கழகத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

ஈழத்து இசை நாடக உலகில் அண்ணாவியார் எஸ். தம்பிஐயாவிற்கு சிறப்பான இடம், அவர் தலைசிறந்த ஒரு நாடக ஆசிரியராக விளங்கினார் என்பதனாலேயே ஆகும். அண்ணாவி யாரின் நாடகப் பிரதிகளின் பட்டியல் நீண்டதாகும். இவை தமிழகத்தில் நாடகங்களின் வரையறையற்ற நிலை கண்டு வரையறையுடன் நாடகங்கள் ஆக்கிய சங்கரதாஸ் சுவாமிகள் போன்று, எளிமையாக்கி, நடிப்பதற் கென வரம்புக்குட்படுத்தி எழுதப் பட்டவைகளாகும். அத்தோடு இவர் தாமாக எழுதிய நாடகங்களையும் உள்ளடக்கியதாக ஒரு நீண்ட பட்டிய லுண்டு. இப் பட்டியலை நோக்கின்,

1. சத்தியசீலன்
2. சரோசா
3. அல்லி - அர்ச்சுனா
4. பவளக்கொடி
5. சாரங்கதாரா
6. கோவலன் - கண்ணகி
7. மலர்விழி
8. மார்க்கண்டேயர்
9. வள்ளி திருமணம்
10. சீமந்தினி
11. கண்ணப்ப நாயனார்
12. ஔவையார்
13. சத்தியவான் - சாவித்திரி
14. அரிச்சந்திரா
15. பக்த துருவன்
16. பக்த நந்தனார்
17. பாமா விஜயம்
18. நல்லதங்காள்

19. ஞான சௌந்தரி
20. சீதா கல்யாணம்
21. காலவ ரிஷி
22. சதி அனுசுயா
23. தாயின் மகிழ்ச்சி
24. கொக்கென நினைத்தாயோ
25. மகாகவி காளிதாஸ்
26. நாம் இருவர்
27. தமயந்தி
28. சகுந்தலை
29. அம்பிகாபதி
30. அருச்சுனன் தபசு
31. அசோக்குமார்
32. வாலி வதை

இவரது அழகான கையெழுத்துப் பிரதிகளே பரவலாக வெவ்வேறு இடங்களிலும் பயிலப்பட்டன. குறிப்பான சில கலைஞர்களின் வரலாறு எழுதப்பட்ட போது அண்ணாவியார் எஸ். தம்பிஐயா எழுதிய நாடகப் பிரதிகளின் பெயர்களிலான நாடகங்களைத் தயாரித்து அக் கலைஞர்கள் மேடை ஏற்றினார்கள் என்ற விபரங்கள் காணப்படுகின்றனவே தவிர இப் பிரதிகளை எஸ். தம்பிஐயாதான் எழுதினார் என்ற குறிப்பு எவ்விடத்தும் காணப்படவில்லை. பிரதிகளை தாம் பயிற்சி அளித்த கலைஞர்கள் நாடிநின்ற போது அண்ணாவியார் கையளித்து உள்ளார். ஆயினும் அவர் எழுதிய நாடகம் பற்றிய விபரங்கள் அவரது சுய வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளன. அவரது நாடகப் பிரதிகளில் எட்டு மட்டுமே எஞ்சியுள்ளன.

அண்ணாவியார் எஸ். தம்பிஐயா நடித்த பாத்திரங்களை ஆண், பெண் பாத்திரங்களாகப் பட்டியலிடலாம்.

**ஆண் பாத்திரங்கள்**

அரிச்சந்திரா - அரிச்சந்திரன்
சத்தியவான் சாவித்திரி - சத்தியவான்
பல்வேறு நாடகங்கள் - நாரதர்
பக்த நந்தனார் - நந்தன், வேதியர்
மகாகவி காளிதாஸ் - போஜராஜன்
பவளக்கொடி - கிருஷ்ணன்
அல்லி அர்ச்சுனா - கிருஷ்ணன்
சத்தியசீலன் - சத்தியசீலன்
சீதா கல்யாணம் - விஸ்வாமித்திரர்
சதி அனுசுயா - சிவன்
அருச்சுனன் தபசு - சிவன்
ருக்கு மாங்கதா - ருக்கு மாங்கதன்
பக்த துருவன் - உத்தான பாதன்
சீமந்தினி - யமன்
மார்க்கண்டேயர் - யமன்
கண்ணப்ப நாயனார் - நாணன்

எஸ். தம்பிஐயா வகித்த ஆண் பாத்திரங்களை விட பெண் பாத்திரங்களே அவருக்குப் பெரும் புகழைத் தந்தன.

சத்தியவான் சாவித்திரி - சாவித்திரி
அரிச்சந்திரன் - சந்திரமதி
நல்லதங்காள் - நல்லதங்காள்
கோவலன் கண்ணகி - கண்ணகி
ஞான சௌந்தரி - ஞானசௌந்தரி
ஔவையார் - ஔவையார்

எஸ். தம்பிஐயா ஐந்தரைக் கட்டைச் சுருதியில் நன்றாகப் பாடக் கூடியவரென்றபடியால் சோகரஸமான பாடல்களை இயற்றிச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பாடி நடித்து வெற்றி பெற்றார் எனவும் அறியமுடிகிறது.

அண்ணாவியார் எஸ். தம்பிஐயா நாடகம் ஆரம்பமாகும்போது நடிகர்

கள் எல்லோரையும் திரைச்சீலையின் பின்னால் நிற்கவைத்து தான் இயற்றிய பின்வரும் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையாருக்கான இறை வணக்க வெண்பாவை பூபாள இராகத்தில் பாடும் வழக்கத்தைக் கொண்டிருந் தார். இவ் வெண்பா இன்று இவரது இசை நாடகங்களிலும் ஊரிலும் பாடிய பின்பே நாடகம் தொடங்கும் வழக்கம் இருந்து வருகிறது.

**ஆலடிவாழ் ஐங்கரனெ ஐயா உனதருள்சேர்**
**மாலடியை நெஞ்சில் வழுத்தினோம் - சீலமொன்றும்**
**இல்லையோம் ஆனாலும் எம்முன்னே இவ்வரங்கில்**
**வல்லே அருள்புரிய வாராய்.**

அதேபோல் சிறந்த ஒழுக்க சீலரும் காத்தவராயன் கோயில் பூசகருமான இவர் தனது குருவை போற்றி எழுதிப் பாடியிருக்கின்றார்.

**பணிவோமே பணிவோமே பகரும் தமிழ்த் தாயின் - பத**
**மலரிணையை வேண்டி (பணிவோமே)**
**அணிசெய்யும் கவிஞன் கம்பன் அருட்கீரன் கபிலரோடு**
**பணியிலுயர் மேவும் மணிவாசகன் பெறு தாயை (பணிவோமே)**

**தெள்ளுதமிழ் வேதம் தரும் வள்ளுவன் இளங்கோவை**
**அள்ளும் கவிஒளவை ஆழ்வாரை ஈன்ற தாயை (பணிவோமே)**
**அமரகவி என்றேத்தும் பாரதியை நாவலோனை**
**அவனி போற்றும் கவிஞர் அல்வாயூர் செல்லையாவை (பணிவோமே)**

இது, கவிஞர் மு. செல்லையா உயிரோடு இருக்கும்போதே எஸ். தம்பிஐயா உணர்வுபூர்வமாக தனது குருவிற்காகப் பாடிய பாடலாகும். 1940 இல் திருகோணமலைக் கணேசன் தியேட்டரின் 'சதி அகல்யா' என்ற இசை நாடகத்தை மேடை ஏற்றச் சென்ற பயணத்தின்போது இடைவழி யில் எழுதப்பட்டதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

வாலி வதை என்ற இசை நாடகத் தை தயாரித்தபோது பின்வரும் தர்க்கப் பாடலை இவர் இயற்றியிருந்தார்.

*இராகம் : கமாஸ் ("வலை தப்பியே குற மான்களே" என்ற மெட்டு)*

*சுக்கிரீவன் :*
**போருக்கு நீ வந்து பாரடா - இந்த**
**ஊருக்கு ராசனோ கூறடா**
**மாருக்கு மார்தட்டி வானரப்பிடி கிட்டி**
**யாருக்கும் அஞ்சேன் உனை மாய்திடுவேன் மட்டி**

*வாலி :*
**என்னடா சுக்கிரீவா இன்னமுமே யுந்தன்**
**எண்ணத்திலுள்ளது என்னடா**
**முன்னம் நீ பட்டதை மறந்தனையோ இன்னும்**
**என்னதான் படுவாய் என்றறியாது துள்ளுகிறாய்**

*சுக்கிரீவன் :*
**வீண் ஜம்பம் பேசாதே வாடா நீ போருக்கு**
**சேண் உலகனுப்புவேன் நேரடா**
**ஆண்டகை என்ற உன் அதிகாரம் இன்றோடு**
**பூண்டோடு குழியிலே புதையுது பாரடா**

வாலி :

**என்னோடு பொருதற்கு யாரடா உண்டிங்கு**
**மண்ணோடு மண்ணாவாய் பாரடா**
**விண்ணவர். மண்ணவர் யார் துணை நின்றாலும்**
**திண்ணமாய் உன்னை இனிக் கொல்லாது விடமாட்டேன்.**

*இப்பாடலில் காணும் துள்ளல் இசையும் சந்தமும் சொற்பிரயோகமும் அதனைப் பாடி நடித்தவர்களுக்கு உற்சாகமூட்டியதாக அவர்கள் கூறினர். இந் நாடகமும் பல மேடைகளைக் கண்டது.*

*1988இல் அண்ணாவியார் எஸ். தம்பிஐயாவின் மறைவின்போது பலர் அவரை வியந்து பாடினர்.*

*கவிஞர் வே. ஐயாத்துரை,*

**நமனையே பின்தொடர்ந்து**
**நாயகன் உயிரை மீட்ட**
**தமிழிசை நாடகத்தில்**
**சாவித்திரி வேடமிட்டே**
**இமயமா புகழே பெற்ற**
**என்னுயிர்த் துணைவா நீங்கள்**
**உமையவள் பங்கனோடு**
**ஒன்றினீர் என் செய்வேன்**

*என மனைவியின் பிரலாபப் பாட்டில் எவராலும் வெற்றிகொள்ள முடியாத சாவித்திரிப் பாத்திரத்தை நடித்தார் என நிறுவுகிறார். மேலும் கலைஞர் V.K. இரத்தினமும்*

**"நாடறிந்த கலைஞரிலே நற்புகழை ஏற்றிவைத்த**
**பேரறிஞர் தம்பிஐயா நும்பிரிவு தாங்கொணாதே**
**பாறிய உந்தனைப்போல் பக்குவமும் சொற் செயலும்**
**யாரினிமேற் சொல்லிடுவார் யாமொன்றும் அறியோமே**
**நாடக மேடையிலே நல்லமொழி சொல்லித் தந்தாய்**
**பாதகமானோருக்குப் பதிலடியும் போட வைத்தாய்**
**உன் சொல் மொழி கேட்டு உவந்து நாம் நடிக்கையிலே**
**எங்களுக்கு ஆதாரம் நீதானே தந்தாய் ஐயா"**

*என, தனது உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகிறார்.*

**பாட்டெழுதிக் காட்டியிதம் பாடவைத்து நாடகத்தேன்**
**ஊட்டி வைத்த சற்குருவே உத்தமரே - போட்டி வெற்றி**
**நாட்டவரும் நாடகத்தில் நல்வசனப் புள்ளி கூட்டி**
**ஈட்டுவையே வெற்றியிதம் இங்கு**

*என இவரைப் பற்றி கவிஞர் வே. ஐயாத்துரை கூறுபவை சத்தியமான வார்த்தைகள். ஈழத்து இசை நாடக அரங்கு "ஸ்பெஷல் நாடக அரங்காக" மாறியவேளையிலும் ரசிகர்களுக்கு அறிவூட்டும் வகையில் தர்க்கங்களுக்கு இடமளித்து அத்தர்க்கங்களை ஆரோக்கியமாக வழிநடத்தியவர் என்ற வகையிலும் எஸ். தம்பிஐயா முக்கியம் பெறுகின்றார். சுருங்கக் கூறின் அண்ணாவியார் எஸ். தம்பிஐயா இசை நாடக வரலாற்றில் செய்த பங்களிப்புகள் குறித்து நோக்கும்போது அவரின் முக்கியத் துவம் இசை நாடக மரபு வரலாற்றில் தவிர்க்கப்பட முடியாததாகவே காணப் படுகின்றது எனலாம்.*

# கொழும்பு மாநகரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்திய க. கணேசலிங்கம்



திரு. செ. துரைராசா

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் புலோலி என்னும் கிராமத்தில் 1938ம் ஆண்டு பிரபல சட்டத்தரணி கனகசபையின் மகனாகப் பிறந்தவர். தனது கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், பின்னர் கொழும்பு சென்தோமஸ் கல்லூரியிலும் தொடர்ந்தார். கல்வி பயிலுகின்ற காலத்தில் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் ஆர்வம் காட்டியவர். கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக கல்லூரிக் கல்வியியலாளன் *REV-ROY. H.BOWYER-YIN* என்பவரின் வழிகாட்டலிலும் போதனையிலும் இலங்கைப் பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் கணித பாடம் கற்கும் பேற்றினைப் பெற்றிருந்தார். பல்கலைக்கழக மாணவர் மத்தியில் சமதர்ம கொள்கைகள் வேரூன்றியிருந்தன. பல்கலைக்கழக மாணவர் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றிகண்டவர். பல்கலைக்கழக படிப்பை முடித்துக் கொண்டு கணக்காளர் படிப்பினை மேற்கொள்வதற்காக *FORD RHODES - THORNTON & CO* யில் சேர்ந்து கொண்டார். கணக்காளர் பட்டப்படிப்பு முடித்ததும் அவர் பல தொழிற்துறைகளில் ஈடுபட்டதோடு, தனது அயரா உழைப்பினால் வெற்றி கண்டவர்.

அரசியல் துறையில் ஆர்வம் காட்டிய கணேஷ் காலப்போக்கில் கொழும்பு நகரின் மேயர் பதவியை அலங்கரிக்கும் வாய்ப்பினையும் பெற்றுக் கொண்டார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகாலப் பொருளாளராகப் பணியாற்றியவர். இத் துறையில் மகத்தான சேவையாற்றியதனால் முன்னைய ஜனாதிபதி காலஞ்சென்ற பிரேமதாச இவரின் ஆற்றலைக் கண்டு அரசியலில் சேர்ந்து சேவையாற்றும்படி வேண்டினார். தேர்தற் களத்தில் வெற்றிபெற்ற கணேசலிங்கம் கொழும்பு மாநகர சபையின் பிரதி முதல்வராக இரண்டரை வருடங்களும், பதில் முதல்வராக மேலும் இரண்டரை வருடங்களும் முதல்வராக ஒன்பது மாதங்களும் எதிர் தரப்பு தலைவராக ஐந்து வருடங்களும் கடமையாற்றியவர். நகரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் பொருட்டு கடுமையாக உழைத்தவர்.

தொலைநோக்கு சிந்தனையுடன் வரவு செலவுத் திட்டங்களை தயாரித்து அதனை நிறைவேற்றுவதற்கான படிமுறைகளை வகுத்துக் கொண்டவர். மாநகரசபை உறுப்பினர்கள் தமது விருப்புரிமையின் பிரகாரம்

செலவு செய்வதற்கான நிதியை ஐந்து லட்சத்தில் இருந்து பத்து இலட்சமாக உயர்த்தியவர். வறுமை நிவாரண திட்டம் என்றவகையில் தனிநபருக் கான கொடுப்பனவு நூற்று ஐம்பது ரூபாவை முந்நூறு ரூபாவாக உயர்த்தியவர். குடும்பமொன்றுக்கு மாதம் 750/- ரூபாவை 1000/- ரூபாவாக உயர்த்தியவர்.

நகரத்தை சுத்தப்படுத்துதல், அழகுபடுத்துதல், வீதிகள் பாதை களை விஸ்தரித்தல், கழிவுப் பொருட் களை அகற்றுதல், ஏழை எளிய மக்களின் துயர்துடைத்தல். இவற்றில் கூடிய கவனம் செலுத்தியிருந்தார். நாட்டில் உள்ள சமூக அரசியல் மாற்றங்கள் முன்னேற்றங்கள் தேவை கள் அவர் கவனத்தை ஈர்த்தன.

தன்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதில் நெகிழ்ச்சித் தன்மை யுடையவராக செயற்பட்டார். பலவந்த மாக திணிப்பதில் நாட்டம் கொள்ள வில்லை. விட்டுக்கொடுக்கும் மனப் பாங்கு, மற்றவர் கருத்திற்கு மதிப்பளித் தல் போன்றவற்றில் நம்பிக்கை உடைய வராக செயற்பட்டவர்.

இவருடைய காலத்தில் எத்தனையோ வீதிகளின் பெயர்கள் மாற்றப்பட்டன. COTTA வீதியை டாக்டர் என். எம் பெரேரா மாவத்தை யாகவும், UNION PLACE ஐ கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்தையாகவும், இவ்வாறு பல வீதிகள் பெயர் மாற்றம் பெற்றன. கேத்தாருகம மைதானத்தை பிரேமதாச சர்வதேச விளையாட் டரங்கு என்ற பெயரில் அதன் உட் கட்டமைப்பினை சர்வதேச தரத்திற்கு உயர்த்த உதவியவர். கவிஞர் சில்லையூர் செல்வராசன் அவர் களுக்கு கனத்தையில் ஒரு சிலை அமைத்த பெருமையும் இவரையே சாரும். இவர் மேஜராக இருந்த காலத்தில் தான் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இலங்கை வந்தபோது, ‘கலைக் குரிசில்’ என்ற கௌரவப் பட்டத்தையும் வழங்கி பாராட்டிய பெருமையும் இவரையே சேரும். போப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது இவர் நகரபிதாவாக விளங்கியமையால் அவரை வரவேற் கும் பெரும் பாக்கியத்தையும் பெற்றுக் கொண்டார்.

தான் கற்ற கல்லூரியான ஹாட்லிக் கல்லூரியின் வளர்ச்சிக்காக சரீர உதவி, மதி உதவி, நிதி உதவி போன்றனவற்றையும் வழங்கியுள்ளார். ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருந்து சங்கத்தின் வளர்ச்சியிலும் பங்கெடுத்துக் கொண்டவர். ஹாட்லிக் கல்லூரியின் மாணவர்கள் உயர் கல்வியை மேற் கொள்வதற்காக நிதி உதவியும் புரிந் துள்ளார். பழைய மாணவர் சங்கத்தின் தலைவர்களாக விளங்கிய டாக்டர் எம். இராமஜெயம், வி. ஜெயராசா, கே. பாலச்சந்திரன் போன்றவர்களோடும் மற்றவர்களோடும் பல ஆண்டுகள் செயலாளராகப் பணியாற்றியவர்.

தான் உயர் கல்வி கற்ற கொழும்பு சென்ற் தோமஸ் கல்லூரியின்

வளர்ச்சிக்கும் வேண்டிய பல உதவி களைச் செய்தவர். றோயல் – நோமியன் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கற் போட்டியை முன்னின்று செயற்பட்டு சென்ற் தோமஸ் கல்லூரியின் வெற்றிக் காகவும் அயராது உழைத்தவர்.

ஸ்பானிய வரலாற்று ஆசிரியர் ஒருவர் கூறியது போல ஆரம்ப வாழ்க்கையையும் தான் மாணவனாக இருந்த காலத்தில் எதிர்நோக்கிய தடைகளையும் இடர்களையும் மீட்டுப் பார்க்க தவறியதில்லை. அவர் தனது பாரம்பரிய கிராமமாகிய புலோலிக்கு ஆற்றக்கூடிய சேவைகளை கண்ணும் கருத்துமாக இருந்து நிறைவேற்றி யவர்.

புலோலியைச் சேர்ந்த புகழ்பூத்த வைத்திய கலாநிதி P. ஸ்ரீபத்மநாதனின் மகளாகிய யமுனாவைத் திருமணம் செய்துகொண்டவர். இவரது பாரியார் இவரது தன்னலமற்ற சேவைக்குப் பக்கபலமாக நின்று உழைத்தவர். தற்போது இவரது பிள்ளைகள் மேனகா, காண்டீபன் இருவரும் லண்டன் நகரில் வசித்து வருகின்றனர்.

திரு. கணேசலிங்கம் நாட்டில் அசம்பாவித நிலையை கருத்திற் கொண்டு வெளிநாட்டில் வசிப்பதற் கான வாய்ப்பு இருந்தும் “பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தன்றே” என்ற பாரதியின் பாடலுக்கு அமைவாக இறுதி மூச்சு வரை வாழ்ந்து இவ்வுலகை நீத்தவர். தெரேசா அம்மையார் இவரது சேவை யை பாராட்டி எழுதிய வாழ்த்து மடலில், அன்புக்குரிய திருவாளர் கணேசலிங்கம் அவர்களே! இப் பரந்த உலகில் வாழும் ஏழை எளியவர்கள், பாதிப்புற்றவர்கள் சார்பில் உங்களது சேவையை பாராட்டி எனது தாழ்மை யான நன்றிக்கடனை தெரிவித்துக் கொள்கிறேன். இறைவன் தனது நல்லாசிகளை வாரி வழங்கப் பிரார்த்திக்கின்றேன்' என மனமார வாழ்த்தியுள்ளார்.

# என்கடன் பணிசெய்து கிடப்பதே என வாழ்ந்த பெருந்தகையாளர் திரு. இளையதம்பி ஐயாத்துரை அவர்கள் (1982 - 1992)



திருமதி ரஞ்சினி சிவராசா

நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்துக்கும் சவாலாக விளங்கிய ஒரு அசாதாரண சூழ்நிலையில், 1982 – 1992 காலப்பகுதியில் 10 வருடங்கள் கரவெட்டி பிரதேச உதவி அரசாங்க அதிபராக அளப்பரிய சேவையை ஆற்றி மக்கள் மனங்களில் நிறைந்த ஒருவரே உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை அவர்கள்.

கப்பூது – அந்தணன்திடல் கிராமத்தில் 1934.02.12 இல் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/ கப்புதூ ஏகாம்பர வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யா/ நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று உயர்தரம் கற்றுக் கொண்டிருந்த தருணத்தில் எழுது வினைஞர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றி சித்திபெற்றதன் மூலம் 1955 யூலை இல் தனது அரச சேவையை தொடங்கினார். அவரது ஆற்றல், திறன், முயற்சி காரணமாக பல பரீட்சைகளில் படிப்படியாகச் சித்தியெய்தி கொழும்பு – கட்டிட திணைக்களம் – நிர்வாக உத்தியோகத்தர், கொழும்பு – மேல் நீதி மன்றம் – பிரதி பதிவாளர், வவுனியா கச்சேரி நிர்வாக உத்தியோகத்தர் (AO) என பல பதவிகளை வகித்து வருகையில் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்தமையால் தான் பிறந்து வளர்ந்து படித்த கரவெட்டிப் பிரதேசத்திற்கு 1982 இல் உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். பல்வேறு நிர்வாகப் பதவிகளில் பணியாற்றி வந்தமையினால் உதவி அரச அதிபராக எந்த ஒரு கடின சூழ்நிலையிலும் திறம்படப் பணியாற்றுவது அவருக்கு எளிதாக இருந்தது.

அவர் கரவெட்டி உதவி அரச அதிபராக பணியாற்றிய ஒரு தசாப்த காலத்தில் நாட்டின் போர்ச் சூழல் காரணமாக நம் பிரதேசத்தில் பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள், பிரதேச சபைகள் என்பன இயங்காத நிலையில் இருந்தன. இதனால் இவற்றின் செயற்பாடுகள் அனைத்தையும் செய்வதற்குரிய அதிகாரங்கள் உதவி அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்பட்டன. இதனால் மக்களின் அனைத்துத் தேவைகளுடனும் உதவி அரசாங்க அதிபர் தொடர்புபட்டிருந்தார். அன்னார் அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை முற்று முழுதாகப் பயன்படுத்தி மக்களின் நலனுக்கு அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தன்னால் இயன்றளவு உயர்ந்த பட்சம் அயராது பாடுபட்டார். அவரும் அவரின் கீழான கிராம சேவகர்களும் அலுவலக உத்தியோகத்தர்களும் கால நேரம் பாராது வாரத்தில் ஏழு நாட்களும் கடுமையாக உழைத்தனர்.

இன்றைக்கும் நீதி மன்றங்களுக்கும் காவல் நிலையங்களுக்கும் சவாலாக விளங்கும் வேம்படிக் கிராம மக்களை தன் சேவையாலும் அன்பாலும் கண்டிப் பாலும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந் தமை அவரது ஆளுமை மிக்க நிர்வாகத் திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தித் திட்ட வேலைகளை நடைமுறைப் படுத்தும் பணி உதவி அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது. கிராமிய மின்சார விநியோகத்திட்டம், வீதி மற்றும் குளங் கள் புனரமைப்பு வேலைகள், சனசமூக நிலையங்கள், கோயில்கள் புனரமைப் புக்கள் என்பவற்றை ஒதுக்கப்பட்ட நிதிகளை உரிய காலத்தில் முற்றுமுழு தாகப் பயன்படுத்தி நிறைவேற்றியதன் மூலம் தன் செயற்றிறனில் விவேகத்தை யும் வேகத்தையும் வெளிப்படுத்தினார்.

1987ம் ஆண்டு போர்ச் செயற்பாடு களால் இடம்பெயர்ந்த மக்களுக்கு மீள் குடியமர்வுப்படி உலர் உணவுகள், வீட்டு உபகரணங்கள், தங்குமிட வசதிகள் என்பவற்றை உடனடியாக மக்களுக்கு வழங்குவதற்காக கிராம சேவகர்களுடன் கிராமம் கிராமமாகச் சென்று நேரக் கணக்கின்றி கடுமையாக உழைத்தார். மக்களின் துன்பங்களை களைவதில் தன்னால் இயன்றளவு உதவிகளை செய்வதற்கு உதவி அரச அதிபர் அவர் கள் பேரவா கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசினால் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட உணவு முத்திரைகளை விநியோகிப்பதிலும், அது நிறுத்தப்பட்டு அதற்கு பதிலாக வறுமை நிவாரணம் அறிமுகப்படுத்தப்பட்டு நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்ட தருணத் திலும் மிகச் சரியான தரவுகளை கிராம சேவகர்கள் மூலம் திரட்டி முடிந்தவரை அதிகமானவர்களுக்கு நிவாரணங்களை வழங்கி மக்களின் அபிமானத்திற்குரிய "ஐயா" ஆனார். அது மட்டுமல்ல இத் திட்டத்தினை (நிவாரணம் வழங்க) சரியாக ஒருங்கமைத்துச் செவ்வனே நிறைவேற்றியமைக்காக, யாழ் மாவட்ட அரச அதிபர் திரு. M. பஞ்சலிங்கம் அவர் களால் பாராட்டப்பட்டார்.

மாணவர்களுக்கான மதிய உணவுக் குரிய முத்திரைகள் வழங்கும் பணிகளும் உதவி அரச அதிபரிடமே ஒப்படைக்கப் பட்டன. பாடசாலை அதிபர்களுடனும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுடனும் கண்டிப்புடன் கூடிய நல்லுறவைப் பேணியதன் மூலம், இப் பணியையும் திறம்படச் செய்து அனைவரதும் பாராட்டையும் நல்லபிப் பிராயத்தையும் பெற்றமை அவருடைய உச்ச ஆளுமைப் பண்பைக் காட்டியது.

கிராமங்கள் தோறும் வறிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு சுய தொழிலை ஊக்குவித்தமை இவரது அளப்பரிய சேவைகளில் ஒன்றாகும். பெண்களுக்கு தையல் இயந்திரங்களை பெற்றுக் கொடுத்தமை, மற்றும் மர வேலை, கட்டுமான வேலைகளுக்கான உபகரணங்களை வழங்கி தொழிலை ஆரம்பித்து வைத்தமை போன்றவற்றை குறிப்பிட்டுக் கூறலாம். அன்று ஆரம்பித்து வைத்த சிறுதொழில் முயற்சியே இன்று பல தொழில் வல்லுனர்களையும், தொழில் வழங்குனர் களையும், தொழிலதிபர்களையும் உருவாக்கியுள்ளதெனலாம். உதாரண மாக சுயதொழிலாலும் அதன் மூலம் கல்வி மற்றும் பொருளாதார வசதி

களாலும் மிக முன்னேற்றம் கண்டுள்ள கரணவாய், அண்ணாசிலையடி கிராமத்தைக் குறிப்பிடலாம். இன்றும் அவர்களால் நினைவுகூரப்படும் "A.G.A – ஐயா" ஆக திரு. ஐயாத்துரை அவர்கள் உயர்ந்து நிற்கிறார்.

வறிய மக்களினதும் ஆதரவற்றவர்களதும் வயோதிபர்களினதும் நிலைமையைக் கருத்தில் எடுத்து தம்மால் எத்தனை பேருக்கு உதவிப் பணம் வழங்க முடியுமோ, அத்தனை உயர்ந்த பட்ச எண்ணிக்கையானோர்க்கு வழங்கி அவர்களது வாழ்த்துக்களுக்கும் போற்றுதலுக்கும் உரியவராக இன்றும் நினைவுகூரப்படுகின்றார்.

படித்துவிட்டு வேலையற்று இருந்த வசதி குறைந்த குடும்பத்து யுவதிகள் நிலையையும் சிறுவர்களின் கல்வித் தேவையையும் கவனத்தில் கொண்டு, கிராமங்கள் தோறும் முன்பள்ளிகளைத் தோற்றுவித்து, தற்காலிக முன்பள்ளி ஆசிரியர்களை நியமித்து அவர்கள் ஊதியம் பெறுவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டார். பின்னர் அவர்களில் பலர் நிரந்தர நியமனம் பெறுவதற்கும் உதவினார். இதன்மூலம் குழந்தைகள் தம் வீட்டுக்கருகாமையில் கல்வி கற்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆதரவற்ற சிறுவர்கள், முதியோர்களை கொண்ட பரமானந்தா ஆசிரமம் அன்று மிகுந்த சிரம நிலையில் இயங்கிக் கொண்டிருந்தது. இதனை அவதானித்த உதவி அரசாங்க அதிபர் தன் நிர்வாகத் திறனைப் பயன்படுத்தி ஆசிரமத்திற்கு உதவும் வழிமுறைகளைக் கண்டறிந்து உதவிகள் வழங்கி சிரமங்களைக் குறைத்தார்.

இவர் காலத்தில் அரசாங்கத்தினால் ஜனசக்தித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. கிராமசேவகர் பிரிவுகள் தோறும் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து இத் திட்டம் சிறப்புற நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்தார்.

இவை யாவும் அவரது தொழில் தான் என்றபோதும், தனது கடமையை துணிவுடனும் அர்ப்பணிப்புடனும் விருப்புடனும் செய்து, தன் சேவையை மக்களுக்கு முழுமையாக கிடைக்கச் செய்தமையே அவரது சிறப்பம்சமாகும்.

மிகுந்த புத்திக்கூர்மையும் ஞாபகத் திறனும் அனைவருடனும் சிறந்த தொடர்பாடல் கொள்ளும் திறனும் அனுபவத்துடன் ஆன நிர்வாகத் திறனும் எந்தச் சூழலையும் சமாளிக்கவல்ல சமயோசித முடிவுகளை எடுக்கும் ஆற்றலும் மக்கள் தன்மை சார்பான முடிவுகளை துணிந்து எடுக்கும் தற்துணிவும் அவரை உச்ச ஆளுமை மிக்க உதவி அரசாங்க அதிபராக கரவெட்டி பிரதேச மக்களுக்கு இனம் காட்டியது. கண்டிப்பும் அன்பும் இரக்கமும் கொண்ட திரு ஐயாத்துரை அவர்கள் பின்னர் அரச அதிபர் - கிளிநொச்சி, உள்ளூராட்சி ஆணையாளர் – வட மாகாணம் என உயர் பதவிகளை வகித்தபோதிலும் இன்றும் கரவெட்டி வாழ் மக்களால் "A.G.A ஐயாத்துரை" என்றே அழைக்கப்படுகின்றார். அந்தளவிற்கு கரவெட்டி மக்களுடன் ஒன்றாக கலந்து கடமையாற்றிய உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரை அவர்களின் சேவைக் காலத்தில் இந்த ஒரு தசாப்த காலம் பொற்காலம் என கூறின் அது மிகையாகாது.

# முகாமையின் இலக்கணம் அமரர் கந்தையா கணேஷ்



**வ. செல்வராசா**
*ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்*

*மக்கள் பணியை மாண்புடன் போற்றி
காலத்தால் அழியாக் காவியம் படைத்து
அரச பணியாளர்க்கு அகராதி தந்த
அண்ணல் கணேசையா நாமம் வாழி!*

உலக மாந்தரில் மிகப் பெரும் பாலானோருடைய வாழ்க்கை அவர்களுடைய மறைவோடு மறக்கப்பட்டு விடுகின்றது. ஒரு சிறு பகுதியினருடைய வாழ்க்கையே சாவின் பின்னரும் நினைவுகூரப்படுகின்றது. அவ்வாறு அவர்கள் நினைவுகூரப்படுவதற்குக் காரணம் அவர்கள் தமக்கென வாழாது தமது மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் வாழ்ந்து பணியாற்றிய பெருமையே என்க. ஒருவருடைய பிறப்பு சாதாரணமாக இருக்கலாம். ஆனால் அவருடைய சாவு என்பது சரித்திரமாக இருக்க வேண்டும். இவ்வாறு பிறப்பிலே சாதாரணமானவராகப் பிறந்து சாவிலே சரித்திர நாயகனாகச் சிறப்பான இடத்தைப் பெற்றவராக விளங்குபவர் அமரர் கந்தையா கணேஷ் எனச் செப்புதல் சாலப் பொருத்தமுடைத்து.

இந்துமாகடலின் முத்தாகத் திகழும் ஈழவள நாட்டின் சிரசாய் அமைந்த யாழ்ப்பாண மாவட்டத்தின் மூளை வளமிக்க பிரதேசமான வடமராட்சியில் கடலலைகள் கீதமிடும் கந்தவனக் கடவை ஆலயம் அமைந்துள்ள பொலிகைப் பதியிலே சீரும் சிறப்புடன் வாழ்ந்த திரு. கந்தையா திருமதி தங்கம்மா தம்பதியினரின் தவப் பயனால் இளைய புதல்வனாக திரு. கணேஷ் அவர்கள் 1942ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 28ஆம் நாளன்று இவ்வுலகில் அவதரித்தார். இளமையிலேயே கல்வியில் மிகுந்த நாட்டமும் ஆர்வமும் உடையவராக இவர் விளங்கியதுடன் இறை பக்தியுடையவராகவும் இருந்தார்.

திரு கணேஷ் தனது ஆரம்பக் கல்விக்காக பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அடியெடுத்து வைத்தார். ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை உணர்ந்த இவர் தனது மூத்த சகோதரர்களின் வழிகாட்டலில் இடைநிலைக் கல்விக்காக வல்வை சிதம்பராக் கல்லூரியில் இணைந்தார். கல்வியில் மிகுந்த ஆர்வங் காட்டிய திரு கணேஷ் rpgh.j g (S.S.C) பொதுப் பரீட்சையில் திறமைச் சித்திபெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். இப் பரீட்சையிற் சித்தியடைந்த அவர் பொது எழுதுநர் சேவைப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து 1961 ஆம்

ஆண்டு 18 வயதில் கொழும்பு மாவட்டச் செயலகத்தில் பொது எழுதுநராக சேவையில் இணைந்தார். பொது எழுதுவினைஞர் சேவையில் அம்பாந்தோட்டை, அநுராதபுரம் ஆகிய மாவட்டச் செயலகங்களில் அவர் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உயரிய தேர்ச்சியை அவர் பெற்றார். 01.06.1991 தொடக்கம் 31.10.1978 வரையான 17 வருட கால பொது எழுதுவினைஞர் சேவையே பின்னாளில் சிறந்த ஒரு நிருவாகியாக அவர் வருவதற்குப் பல வழிகளிலும் உதவியதெனலாம்.

1978ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிருவாக சேவைப் போட்டிப் பரீட்சையிற் சித்தியடைந்த அவர் 1979 ஆம் ஆண்டு செட்டிகுளம் பிரதேசச் செயலராக நியமிக்கப்பட்டார். திரு கணேஷ் இரண்டரை ஆண்டுகள் மட்டுமே செட்டிகுளத்திற் கடமை யாற்றியபோதும் குறுகிய இக்காலத் தில் இப்பிரதேச மக்களுக்காகச் சிறப்பாகப் பணியாற்றினார். 01.12.1981 இல் மன்னார் மாவட்டத்திற்கு இட மாற்றம் பெற்று விவசாய உதவி ஆணையாளராகவும், திட்டப் பணிப்பாளராகவும் தொடர்ச்சியாகப் பத்து ஆண்டுகள் பணி செய்தார். விவசாயப் பிரதேசமான மன்னார் மாவட்டத்தின் துறை சார்ந்த பல்வகை வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய பணி மகத்தானதாகும். இதன்மூலம் இம் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பிடித்தார்.

10.06.1991இல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் ஓய்வைத் தொடர்ந்து அம் மாவட்டத்தின் அரச அதிபராகக் கடமையேற்ற திரு கணேஷ் மூன்றரை ஆண்டுகள் யுத்த நெருக்கீடுகள், பலவித அழுத்தங் களின் மத்தியில் மக்கள் பணியை மகேசன் பணியாகக் கருதி அரும் பணி யாற்றினார். சுகாதாரம், கல்வி, போக்கு வரத்து, விவசாயம், கடற்றொழில் முதலான அனைத்துத் துறைகளதும் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். விடுமுறை நாள்களில் கூட ஓய்வின்றி, உறக்கமின்றி அவர் ஆற்றிய பணியை மன்னார் வாழ் மக்கள் இன்றும் நினைவு கூர்கிறார்கள்.

20.01.1995 இல் வந்தாரை வாழ வைக்கும் வவுனியா மாவட்டத்தின் அரசாங்க அதிபராகக் கடமையேற்ற திரு கணேஷ் உள்நாட்டுப் போரின் விளைவுகளுக்கு அங்கும் முகங் கொடுத்தார். வவுனியா மாவட்டத்தில் ஒரு தசாப்த காலம் அவர் ஆற்றிய மகத்தான பணியின் குறிகாட்டியே இன்றைய நவீன வவுனியா நகரமாகும். நவீன கடைத்தொகுதிகள், நெடுஞ் சாலைகள் முதலானவற்றைக் கொண்டதாக வவுனியா நகரத்தை மாற்றியமைத்த சிற்பியாக திரு. கணேஷ் அவர்களைக் கூறலாம். நாட்டிலேற்பட்ட கொடூர யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை அகதி முகாம்களில் அரவணைத்து உணவு, உடை, கல்வி, சுகாதார வசதிகளை வழங்கி வாழவைத்த பெருமைக்குரிய வர் திரு. கணேஷ் அவர்களேயாவர்.

01.01.2005 இல் திரு கணேஷ் யாழ் மாவட்ட அரச அதிபராகக் கடமை யேற்றார். நீண்டகால கொடூர யுத்தத் தால் சிதைந்த நிலையிலிருந்த யாழ் மாவட்டத்தின் இன்றைய எழில்மிகு தோற்றத்திற்கு தளமிட்ட பெருமை அவரையே சாரும். சுனாமிப் பேரலை யின் கோரப் பசிக்கு இரையான கடலோரக் கிராமங்கள், பாடசாலைக் கட்டடங்களை மீளுருவாக்கிப் புதிய தோர் தோற்றத்தை அவர் வழங்கினார். 2006 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் உக்கிரமடைந்தபோது யாழ் மாவட்டத் துக்கான தரைவழிப் போக்குவரத்து முழுமையாகத் துண்டிக்கப்பட்டபோது மக்களுக்கு வேண்டிய உணவு, மருத்துவ வசதிகள் அனைத்தையும் கப்பல் மூலம் வருவித்து குடாநாட்டு மக்களை வாழவைக்க அயராது பாடு பட்டார். அது மட்டுமன்றிக் குடாநாட்டி லிருந்து கப்பல் மூலம் மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக வெளி மாவட்டத்துக்குச் செல்வதற் கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

அரச பணியில் மக்களுக்காக சுமார் 50 ஆண்டுகள் பணியாற்றிப் பொன் விழாக் கண்டவர்கள் ஒரு சிலரே. அவர்களில் முதன்மையிடம் பெறுபவர் திரு கணேஷ் அவர்களே. நேர முகாமைத்துவம், நேர்மை, கடமையுணர்வு, நடுவுநிலைமை, நல்லாட்சி முதலான அனைத்தினதும் ஒட்டுமொத்த வடிவமே அமரர் கணேஷ். அரச பணியாளர்கள் எவ்வாறு மக்களுக்காகப் பணியாற்ற வேண்டுமென்பதற்கான அகராதியை அவர் எம்மிடம் கையளித்துச் சென்றுள்ளார். காலன் அவரைக் காவு கொண்டாலும் காலத்தால் அழிக்க முடியாத காவிய நாயகனாக அவர் என்றுமே எம் மண்ணில் நிலைத் திருப்பார்.

# வடமராட்சி - இடப்பெயராய்வு : பண்பாட்டு - வரலாற்று, தொல்-மொழியியல் அடிப்படையிலான அறிமுக ஆய்வு

# Vadamaradchi – Investigation on Place –Names: Based on Cultural History and Palaeo – linguistics Approach

**பேராசிரியர் செ. கிருஸ்ணராசா**

வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

யாழ்ப்பாணத்தில் இடப்பெயராய்வானது ஒரு நீண்ட வரலாற்றுப் பரிணாமத்தினைக் கொண்டுள்ளது. இலங்கையின் வரலாற்று வரைபியலில் வடஇலங்கையின் இடப்பெயராய்வு பல்வேறு பரிமாணத்தில் பல்வேறு கால கட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமையைக் காணமுடியும். போல் இ பீரிஸ், சுவாமி ஞானப்பிரகாசர், க.வேலுப்பிள்ளை, கமலிகா பீரிஸ், J.P. லூாயிஸ் , கலாநிதி இ.பாலசுந்தரம், P. இரகுபதி போன்றோர் யாழ்ப்பாணக் குடாநாட்டினையும் வடஇலங்கையையும் மையமாகக் கொண்டு இடப்பெயராய்வுகளில் ஈடுபட்டு, நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளனர். இவர்களைவிட தொல்லியலாளர்களும் தமிழர் வரலாற்றாசிரியர்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள இடப்பெயர்கள் தொடர்பாக விளக்கங்களை கொடுத்து வந்துள்ளமையைக் காணமுடியும். சுவாமி ஞானப்பிரகாசர், கமலிகா பீரிஸ் போன்றோர் பாளி மொழியடிப்படையில் வடஇலங்கையிலுள்ள இடப்பெயர்களுக்கு விளக்கமும் பொருளும் கொடுத்திருப்பதனைக் காணலாம். இடப்பெயராய்வில் மொழியடிப்படையிலான செல்வாக்கின் பின்னணியை விட அவ்விடத்தின் பிரதேச வரலாற்றுத் தனித்துவம் பெருமளவிற்கு செல்வாக்குச் செலுத்துவதனைக் காணமுடியும். உதாரணமாக ஊர்காவற்துறை என்ற இடப்பெயரானது பாளிமொழியடிப்படையில் ஊரத்தொட்ட என்ற பன்றித்துறை என்பதிலிருந்து உருவாக்கம் பெற்றதாக குறிப்பிடப்படும் அதேநேரத்தில் நாகர் துறை என்று பொருள் தரும் உரகதுறை என்ற பதத்திலிருந்தும் உருவானதாகக் குறிப்பிடப்படுகின்றது. உரக(ர்)நாணயம் (நாகநாணயம்) யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டதன் அடிப்படையில் உரகதுறையே பின்னர் ஊராவற்துறையாக மருவி மத்திய காலப்பரப்பில் ஊர்காவற்துறையாக இலக்கியங்களிலும் சோழர் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்பட்டதெனலாம். அனுராதபுரத்திலுள்ள இசுருமுனியா என்ற மலைக்குகையானது முன்பு முன் ஈஸ்வரம் (முன்னீஸ்வரம்) என்ற பெயரில் சிவன் கோவில் ஒன்றினைக் கொண்டிருந்தமைக்கான தொல்லியற் தடயங்கள் காணப்படுவதன் அடிப்படையில் பல்லவப் பண்பாட்டின் கட்டிடக்கலைச் செல்வாக்கினை வெளிப்படுத்தி நிற்பதனைக் காண்கின்றோம். இதேபோன்று கரவெட்டியிலுள்ள

சோனப்பு என்ற மையம் வடஇந்தியப் பெயராகக் கொண்டு எடுத்துக்காட்டப் பட்டுள்ளமையைக் காண்கின்றோம். ஆனால் சோழ உப்புப் புலம் சோனப்பு என வடிவெடுத்திருந்தமையை காணும் போது தெளிவான தமிழ்ப் பண்பாட்டுக் குரிய ஓர் இடப்பெயராக அது விளங்கு வதனைக் காணமுடியும். எமது இந்த ஆய்வுக்கட்டுரையில் பண்பாட்டு வரலாற்று மொழியியல் அடிப்படையில் வடமராட்சியில் உள்ள சில இடப்பெயர்களின் தோற்றம், மற்றும் அவ்விடப்பெயர் உணர்த்தும் பண்பாட்டுச் செல்வாக்கு என்பன தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.

**இடப்பெயர்கள் பற்றிய பகுப்பு**

வடமராட்சியிலுள்ள இடப்பெயர் கள் பற்றிய ஆய்வில் வில், கணி, புரை, திட்டை, பொக்கணை, என முடிவடை யும் இடப்பெயர்களை காண்பது அரிது. வடமராட்சியின் கரையோரப் பிரதேசங் கள் பாகு, தெணி, ஊருணி, சிட்டி / ஊட்டி, துறை, கண்டி என முடிவடையும் இடப் பெயர்களைப் பொதுவாகக் கொண்டு ள்ளன. பிட்டி, வத்தை, இறை, கட்டு, பாதி, கலட்டி, குளம், கோட்டை என முடிவடையும் இடப்பெயர்களை உட் பிரதேசங்களில் காணமுடியும். இவற் றைப் பொதுவாக துளைப்பெயரடிச் சொற்களாகவும், பண்புப்பெயரடிச் சொற்களாகவும், பொருட்பெயரடிச் சொற்களாகவும் அறிஞர்கள் அடை யாளம் கொண்டு விளக்கமளித்திருப் பதனைக் கண்டுகொள்ள முடியும். சுவாமி ஞானப்பிரகாசர் இடப்பெயர் பற்றிய தனது ஆய்வொன்றில் பின்வரு மாறு குறிப்பிட்டுள்ளமை நோக்கத் தக்கது.

"இந்தோ-ஐரோப்பிய மொழிகளில், வேர் கள் என உன்னிக்கப்படுபவை, பொருள் தொடர்பற்ற வெறும் குறியீடுகள்தான். திராவிடமொழிவேர்களோவெனில், ஐயத்திற்கிடமின்றிப் பொருளையும் காரணத்தையும் காட்டுபவையாக. உயிரோட்டமுள்ள முளைக்கரு போலத் தோன்றும். எந்தக் கருத்தோட்டத்தில் பல்வேறு சொற்கள் உருவாயின என்பதைத் தெற்றென அவை காட்டும் வகையில் அமைந்துள்ளன. இத்தன்மை இல்லாததால், இந்தோ-ஐரோப்பிய 'வேர்கள்' இருள் மண்டிய, பொருளற்ற, வெறும் ஒலிக் குவியல்களாகவே தோன்றும். அவற்றுக்கும் தெளிவுதந்து, ஒளிகாட்டி, உயிருட்டம் தரக்கூடியவை திராவிடமொழி வேர்கள்தான்." இவ்வாறு ஞானப்பிரகாசர் குறிப்பிடுவது இடப்பெயர் ஆய்வின்போது திராவிட-ஆரிய மொழிச் செல்வாக்கின் பின்னணியில் வடமராட்சி யிலுள்ள இடங்கள் எந்தளவிற்கு செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதனை ஆராய்வதற்கும் உதவுவதாக அமையும்.

**கப்புதூ**

வடமராட்சியிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓரிடமாக கப்புதூ விளங்குவதனைக் காணமுடியும். கப்புதூ வெளி ஒரு திடல் போல் காட்சி யளித்தாலும் ஐதான குடியிருப்புக்களைக் கொண்டு விளங்குவதனைக் காண்கின் றோம். கப்பு என்னும் தமிழின் துளைப் பொருட்சொல் உட்கூடு உடையதாக கப்பு - ஊது என்றாகி கப்புதூ என இன்று வழங்குகின்றது. இவ்விடப் பெயர் துளைப் பொருட் கருத்தில் வழங்கி வருகின்ற முறையில் 'யானை பிடிக்கும் பள்ளம்' என்ற பொருளமைதியைக் கொண்டுள்ளது.

***கல் > கல்பு > கப்பு :***

***யானை பிடிக்கும் பள்ளம்/ மாடுகள் சாய்க்கும் வெளி***

***மரம் கல்லிய கப்பல் + கோதிய கலம்***

***ஒல் என்னும் கூட்ட மூலம் ஒல் + பு - ஒல்பு = ஒப்பு*** என்றதொரு சொல்லைத் தோற்றுவித்தமையை போன்று கல் என்னும் கூட்ட மூலம் கல் + பு = கப்பு என்ற சொல்லைத் தோற்றுவித்தது. முனைவர் கு. அரசேந்திரன் தனது ஆய்வில் கப்பு பற்றி பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது. "கப்பு என்னும் சொல்லிற்குப் பள்ளம், துளை, குழி என்பனவே அடிப்படை வேர்ப் பொருள் என்றும், அதுவே பிறகு பள்ளம் செய்யப்பட்ட மரக்கலத்திற்குப் பெயராயிற்று என்றும், தமிழ் என்னும் நம் தாய்மொழி தோன்றி வளர்ந்த முந்துமுது வரலாற்றுப் போக்கினை நாம் நுணுகிக் காணும்போது கப்பு என்னும் அடிச்சொல் தமிழுக்கேயுரியது என்ற உண்மை பனிமலைபோல் உயர்ந்து புலப்படுகின்றது."

**கல்லுவம்**

கரவெட்டி கிழக்கில் ஒரு பழம் பெருங்கிராமமாக இன்று இராசகிராமம் என்ற பெயரில் காணப்படும் ஒரு கிராமக் குடியிருப்பே கல்லுவம் என்றழைக்கப்படும் இடமாகும். தொல்லியல் மேலாய்வுகளுக்கு உட்படுத்தப்படாத நிலையில் இக்கிராமம் காணப்படுவது துர்ரதிஸ்டமே. உடுவிலில் ஒரு மல்வம் போன்று கரவெட்டியில் கல்லுவம் என்ற கிராமம் ஒத்த தன்மைகளைக் கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியை கல்லுவம் என்ற பெயர்த் தோற்றம் எடுத்துணர்த்துவதனைக் காணலாம்.

கல் என்ற கூட்டமூலத்திலிருந்து உருவான இப்பதம் துளைப் பொருட் கருத்தினைக் கொண்டுள்ளது.

கல் எனும் கூட்டமூலம் பின்வருமாறு :

***கல் - (கல்லு) - கல் + அம் - கலம் (குறிஞ்சி நிலத்தில் முதன்முதலில் துளைக்கப்பட்ட இடம்)***

***கல் - கல்லு - கல்லுவம் - கலுவம் (மருந்து அரைக்கும் பள்ளமாக்கப் பட்ட கல்)***

***கல் - கன் - கன்னம் (துளையுடைய காது)***

***கல் - கன்னம் - கன்னமிடுதல் (சுவரைத் துளைத்து திருடுதல்)***

***கல் - கால் - காய் - காயம் (நெருக்கத்தால் கல்லோ கருவியோ துளைத்த கேணிப்புண்)***

வல்லுவம் என்றொரு பழந்தமிழ்ச் சொற்பதமும் வல் - வல்லு - வல்லுவம் என்ற துளைப்பொருட்கருத்தினையே கொண்டுள்ளது. வல் + உ + அ + அம் = வல்லுஅம் - கோலப்பட்ட சிறிய ஏதனம். இப்பின்னணியில் நோக்கும் போது கல்லுவம் என்ற கிராமத்தின் தொன்மமானது பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமையின்படி 2000 ஆண்டுக்கால பழமையுடன் கூடியது என்பதனை உணரலாம்.

**கரவெட்டி**

கரவெட்டி என்பது ஓரிடத்திற்குக் கொள்ளப்படாமல், ஒரு குறிப்பிட்ட குறிச்சிக்கு இடப்பட்ட பெயராகக் கொள்வதன் அடிப்படையில் வரலாற்று

வளர்ச்சியில் கரவெட்டிக்கு எத்தகைய பங்கு இருந்திருக்கவேண்டும் என்பதில் ஐயப்பாடுகள் நிலவுகின்றன. தொண்டமானாறு பள்ளத்தாக்குடன் இணைக்கப் பட்டிருந்த வாணிப மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளுடன் கரவெட்டியும் இணைக்கப்பட்டிருந்தமையின் பின்னணியில் போத்துக்கேயர், ஒல்லாந்தர் கால சமய - பண்பாட்டு நடவடிக்கைகளுடனும் வாணிப நடவடிக்கைளுடனும் இணைந்து கரவெட்டி தமிழர் சமுதாய வளர்ச்சிக்கு பங்களிப்புக்களை நல்கியுள்ளது.

தமிழ்மொழியில் உள்ள சொல்லாக் கத்தில் குற்றப்பண்புக்குரிய சொற்களாகக் குறிப்பிடப்படுவனவற்றுள் கரவு, கரப்பு, கறை, கரி, கரில், கரிசு, கசடு, கவ்வை, கள்ளம், களங்கம் என்பன முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. மேற்சொல்லப்பட்ட பண்புச் சொற்கள் அனைத்தும் கல் என்னும் கருமை மூலத்திலிருந்து பிறந்தவையாகும்.

**கல் - கற் - கர் - கரவு (பட்டி - கூட்டம்)**
**கல் - கற் - கர் - கர - கரப்பு (வட்டம், வட்டில்)**
**கல் - கற் - கறு - கறை(யான்) (புற்று - பொந்து)**
**கல் - கற் - கர் - கரி - கரிச்சல்**

கரவெட்டி என்ற குறிச்சிப் பெயரும் மேலே குறிப்பிட்டவாறு குற்றக் கருத்துச் சொற்கூட்ட மூலத்திலிருந்தே தோற்றம் பெற்றது எனக் கொள்ளவேண்டும்.

**கரவு + பட்டி = கரபெட்டி**
**கரப்பு + வட்டில் = கரவட்டில்**
**கறையான் + பட்டி = கறைபட்டி**
**கரிச்சல் + பட்டி = கரபெட்டி (கரவெட்டி)**

கரவன் என்றொரு தமிழ் வணிகன் ஒருவனுடைய பெயர் அனுராதபுரத்தில் ஓரிடத்திலுள்ள *Tamil House Holders Terrace* இல் பிராமி எழுத்தில் பொறிக்கப் பட்டுள்ளது என S. பரணவிதானா குறிப்பிட்டுள்ளார். அவ்வணிக மாளிகையினுள் வாழ்ந்த ஆறு தமிழ் வணிகர்களுள் கரவ(ன்) இறுதியாகக் குறிப்பிடப் பட்டுள்ள பெயராகும். கரவன் என்ற இச்சாசனப் பெயர்த்தொடர் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குரியதாக எஸ். பரணவிதானாவினால் எடுத்துக்காட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறாயின் கரவன் கரவெட்டியைச் சேர்ந்த ஒரு வணிகனாகக் கொள்வோமாயின் கரவு என்ற சொல்லடியாக வரும் கூட்டம், பட்டி என்ற பொருளில் கரவெட்டி என்ற பதம் பொருள் கொள்ளப்பட்டிருக்கும். கரவெட்டி ஒரு புராதன வாணிகப் பிரதேசமாக விளங்கியிருந்திருக்கும் பட்சத்தில் வாணிகக் கூட்டம் நிறைந்த குடியிருப்புக் களையுடைய பிரதேசமாக கரவெட்டி விளங்கியிருந்தது எனக் கொள்ள முடியும். இப்பின்னணியிலேயே நெல்லியடி ஒரு வாணிக நகராக வளர்ச்சியடைந்து வருகின்றமையையும் எடுத்துக் காட்டப்படலாம்.

**குடத்தனை (வடமராட்சி - கிழக்கு)**

அடைதற் பொருட் சொல்லடியாக உருவான குடம் என்ற வேர்ச் சொல்லிலிருந்து குடத்தனை உருவாக்கம் பெற்றது.

**குடம் - குடந்தம் - குடந்தம்படுதல்**
**- வளைதல், வணங்குதல்**
**- தொழுதல், இறைஞ்சுதல்**
**குடி - குடை - குடவு (குடவோலை)**
**குடி - குடா - கொட்டியாரம் (வளை குடா)**

**குடி - குண்டி - குண்டிகை - குடிகை (குண்டிகைக் கையர்கள் - சமணர்கள்)**

**குடி - குடா - குடத்தல் - குடத்தனை (குடத்தல்- குளங்கள்/ மணல்ஏரி)**

'ஐந்து கரத்தனை' என்பது ஐந்து கைகளையுடையவனே என்பது போல குடத்தனை என்பது மணல் நீர்ச்சுனைகளையுடைய கிராமம் என்று பொருள் தரும். குடங்கல் - முடங்கல் ; குடதிசை - சூரியன் முடங்கும் திசை (மேற்கு) மறைந்து வாழக்கூடிய கிராமம் - குடத்தனை.

## கிராய்

கூட்டப்பொருட் சொல்லடியான குர் என்ற அடியிலிருந்து உருவான கிராய் பெருமளவிற்கு ஈற்றுப்பெயரடையாக உள்ள இடப்பெயராகவே வழக்கிலிருந்து வந்துள்ளமையைக் காணலாம். ஈற்றுப் பெயரடையாக வருகின்ற கிராய் ஒரு தமிழ்ப் பதமா என்பதில் ஐயம் காணப் படுகின்றது. பரமன்கிராய், வேம்பிராய், உரும்பிராய், கொல்லன் கிராய், வெல்லன் கிராய், மாக்கிராய், பனங் கிராய், கஞ்சன்கிராய் என்று விரிந்து செல்லும் இப்பெயரடையானது இப் பிரதேசப் பண்பாட்டுத் தனித்துவத்தினை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து கொண்டு விளங்கி வருகின்றது என்பதற்கு வல்லிபுரப் பொற்சாசனம் சிறந்த சான்றாகும். இச்சாசனத்தில் வரும் இஸூகிராயே என்ற தொடர் ஈழராயர் என விரியும் என பேராசிரியர் கா.இந்திரபாலாவினால் வாசிக்கப்பட் டுள்ளது. கரவெட்டியிலுள்ள கிராய் பிள்ளையார் கோவில் சுற்றாடல் கிராய் என்றே இற்றைவரைக்கும் அழைக்கப் பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

**குர் - குரா(ல்) - குரவை - கிராய் (குரால் - சினை; குரால் பசு - சினைப் பசு)**

f pa k ;- f puha k ;- f puha ;= **சூரியன் (கிரயம் - வரி)**

**திராயம் - தோராயம்; ஆயம் - பேராயம் (பெருங் கூட்டம்)**

**கிராயம் - திராயம் - கிராய் = கிராமம் (வத்திரா(ய)ன்)**

## தும்பளை

துல் என்ற துளைப்பொருளின் அடியாக தும்பளை என்ற சொல் பிறந்தது. மத்தியகால வட இலங்கையின் வரலாற்றில் தும்பளை பிரதான பங்கினைப் பெற்றிருந்தது. இரண்டாம் சங்கிலிகுமாரனின் முக்கியமான வாஸஸ்தலமாக தும்பளை விளங்கியது. பிராமணக் குடியேற்றத்தின் ஒரு முக்கியமான மையமாகவும் தும்பளை விளங்கியது.

**துல் - துன் - துன்பு - தும்பு - தூம்பு**

**துல் - துள் - தொள் - தொளை**

**துல் - துள் - தொள் - தொள்து - தொடு - தொண்டு - தோண்டு.**

என்றவாறு துளைப்பொருட் சொற்கள் தமிழில் தோற்றம் பெற்றுள்ளன. தும்பளை என்ற பெயர் தும்பு என்ற துளைப் பொருட்சொல்லைப் பிறப்பித்த துல் என்ற பெயரடியூடாகப் பிறந்த தும்பு என்ற பண்புப் பெயரடக்கத் தொடரை மையமாகக் கொண்டு வழங்கி வந்துள்ளது. தூம்பு - மூங்கில்; தூம்பளைத் திரள்கால் எனத் துளையுள்ள தூம்பு என்னும் துளைச்சொல்லால் சங்க இலக்கியங்களில் மூங்கில் நிறைந்த கூடல் என்னும் பொருளில் வழங்கி வந்துள்ளமையைக் காணலாம். தூம்புடைத் திரள்கால் என்பது தாமரைத் தண்டு என்ற பொருளிலும் சங்க இலக்கியங்களில் தூம்பு என்ற

துளைப்பொருட் சொல்வழக்கில் விரவி வந்துள்ளமையைக் காணமுடியும். அவ் வகையில் கடல் முகப்புத்தளமாக அம்மையம் அமைந்து காணப்பட்டமை யின் பின்னணியில் மூங்கில் நிறைந் திருந்த ஒரு கிராமமாக கொள்வதே இங்கு பொருத்தமானதாகும்.

**துன் - தும் - தும்பு - தூம்பு (நீர்க் குழாய்)**

**தூம்பு - தூம்பா - தூம்பாவளை - தும்பாவளை = தும்பளை (நீர்க்கசி வுடைய கிராமம்)**

### தெம்பை / தெணி

தெம்பை என்ற துளைப்பொருட் கருத்தின் அடிப்படையில் தெணி என்ற சொல்லும் தெம்பை என்ற சொல்லும் பெயரீற்றுப் பதங்களாக வடமராட்சியில் இன்றும் வழங்கிவருவதனைக் காண முடிகின்றது. தல் என்ற கூட்டப் பொருட் சொல் தெல் - தெம்மை - தெம்பை = மாதெம்பை எனவும், தல் - தெல் - தெள்ளி - தெண்ணி - தெணி = மாலந்தெணி எனவும், அவை விரி வடைந்து சென்று பெயரீற்றுப் பதமாக வழங்குவதனைக் காணமுடிகின்றது. வடமராட்சியிலுள்ள கடற்கரையோரமாக உள்ள கிராமக் குடியிருப்புகளுக்கே இப்பெயர் இடப்பட்டிருந்த வகையைக் காணும்போது இத்துளைப்பொருட் கருத்தின் அடிப்படையில் தெம்பை, தெணி ஆகிய பெயரீற்றுப் பதங்கள் நீர் கசிந்து செல்லும் தரைத்தோற்ற - வெள்ளநீர் வடிந்தோடும் உட்புறம் கவிந்த தரையமைப்பினையுடைய கிராமக் குடியிருப்புக்களுக்கு வழங்கி வந்த இடப்பெயர்களாக உள்ளமையைக் காணலாம்.

**தல் - தற் - தற்பை - தம்பை - தெம்பை**

**தல் - தற் - தணி - தண்ணி - தம்பை**

**தல் - தற் - தணி - தெணி - தெம்பை**

**தல் - தற் - தழி - தருமி - தாருணி - தெணி**

மேலே காட்டப்பட்டுள்ள தல் என்ற கூட்டப் பெயர்ச்சொல் துளைப்பொருட் கருத்தின் உட்பொருளை வினையாகவும் பண்பாகவும் கொண்டு பெயரீற்றுப் பதங்களாக வடமராட்சியிலுள்ள இடப் பெயர்களுக்கு வழங்கி வருவதனைக் காணமுடியும். மேலும் தல் என்னும் பொருந்தற் கருத்து வேர் தல் + கு = தக்கு எனவும் அது தக்கை என விரிவடைந்து தக்கை - தம்பை - தெம்பை - தெணி என்ற பெயரீற்றுப் பதங்களாக வழங்கி வருதனைக் காணமுடிகின்றது. தக்கை வேர் - அடர்த்தியான வேர். எனவே உறிஞ்சுதல் மற்றும் துளைக் கருமத் தினை தல் என்பது கொண்டிருப்பது வெளிப்படையாகின்றது. ஆகவே தெம்பை, தெணி ஈரொற்றுப் பதங்கள் துளைக் கருத்தினையாற்றுகின்ற உறிஞ்சல், ஊடுருவல், ஊடறுத்தல் என்ற தொழிற்பாட்டுப் பொருளிலும் பிரயோகிக் கப்பட்டுவருவதனைக் காணமுடி கின்றது. எனவே வடமராட்சியிலுள்ள கடற்கரைக் கிராமங்களின் பெயரோடு இவை காரண - காரியத் தொடர்பின் அடிப்படையில் பெயரிடப்பட்டு வழங்கி வருவதனை தமிழ்மொழிக்குரிய ஒரு சிறப்பியல்பாக எடுத்துக்காட்டலாம்.

**தெம்பை - தம்பை - தம்பசெட்டி**

**தெம்பை - தும்பை - தும்பளை**

**தெம்பை - இம்பர் - இம்பரூட்டி**

**பதி / பாதி / பாடி / பாத்தி**

**செட்டிபாதி - அம்மியாபாதி - உலகப்பன்பாதி - சித்தம்பாதி - வில்லிபாதி - வாகைப்பாடி**

பாதி என்ற பின்னொட்டுச்சொல் தொடர்பாக யாழ்ப்பாணத்து ஆய்வாளர் களில் குறிப்பாக பேராசிரியர் பொ. ரகுபதி தனித்துவமான முறையில் கருத்துக் களை பதிவுசெய்துள்ளார். "மண்ணுலக மாகிய இது உயிர்கள் யாவும் படிந்து வாழ்வதற்கு அடிப்படையாய் இருத்தல் பற்றியே 'படி' எனப்பட்டிருக்கவேண்டும். மக்கள் நிலையாய் தங்கி வாழும் ஊருக்குப் 'பதி' என்னும் பெயர் தோன்றிய மரபினை இங்கு இணைத்து எண்ணலாம். புதிந்து வாழ்வதற்குரிய இடமே பதியாகும்"

***"பதியெழுவறியாப் பழங்குடி" - (சிலப்பதிகாரம் 1:15)***

***"குன்றாக் கொள்கை கோவலன் தன்னுடன்***
***ஆன்றைப்பகலோர்அரும்பதி தங்கி" - (சிலப்பதிகாரம் 11:63:164 )***

எனும் சிலம்படிகளில் ஊர் பதியெனப் பட்டதைக் காணலாம். இவ்வாறு பதியெனப்பட்ட குடியிருப்புக்கள் சோழர் காலத்தில் பாதி என்ற பெயரீறாக வழங்கப்பட்டமைக்கு கல்வெட்டுச் சான்றுகளில் உதாரணங்களைக் காண முடிகின்றது.

**படி - பதி - பாதி - பாத்தியம் (உரிமம்)**
**படி - பட்டி - பாடி - இரட்டைபாடி**
**படி - பட்டை - பாடை / ஆடை (ஓடை) - மாப்பாடை / புலவராடை (புலவரோடை)**
**உலகப்பன்பாதி : உலகப்பனுக் குரியது/ உலகப்பனுடையது.**

பிராகிருதத்தில் அனுராதாஸ என்ற தொடர் அனுராதாவினுடையது என்பது போன்று தமிழில் உலகப்பன்பாதி - உலகப்பனுடையது எனப் பொருள் கொள்ளவேண்டும். அம்மைய்யாபாதி - அம்மைய்யாவினுடையது.

**பாகு - சமரபாகு (கொற்றாவத்தை)**

பாகு என்ற பதம் திராவிட மொழிக் குடும்பத்தில் பொதுவான பிரயோகமாக உள்ளது. ஆந்திரப்பிராகிருத மொழிப் பிரயோகத்திலிருந்து ஊற்றுப்பெற்ற பெயரீற்று அடையாக இப் பாகு என்ற பதம் தமிழ்மொழியில் வழங்கிவருகிறது. பொலனறுவைக்கால சிங்கள மன்னர் களுடைய பெயர்கள் கூட பராக்கிரம பாகு, விஜயபாகு என முடிவடை வதனைக் காணமுடியும். மேற்கு ஆந்திராவிலுள்ள ஒரு மலைக்குன்றிற்கு பாஹ்க் என்ற பெயர் இற்றைவரைக்கும் வழங்கிவருகின்றது. வென்றிபாகு தேவன் குறிச்சியிறை என்ற ஒரு கிராமம் புலோலியில் காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் பாகு ஒரு சிறந்த உணவுப் பண்டமாக குறிப்பிடப்படு வதனையும் காண்கின்றோம். ( இறுக்க மான - கட்டியான இனிப்புப் பண்டமும் பாகு என அழைக்கப்படும்). மண்ணினா லான சிறு குடிசைக்கு மேற்கூரை பாகு இட்டு களிமண்ணினால் பூசப்படுகின்ற ஒரு மரபினையும் கிராமங்களில் காணலாம்.(இங்கு பாகு என்பது பாதியாக பிளக்கப்பட்ட மரத்துண்டங்களை கவித்து அல்லது மடல்களை நிமிர்த்தி யும் கவிட்டும் ஒன்றன்மீது மற்றதை அடுக்கி களிமண்ணை இடுவது பாகுக் கூரை எனப்படும். சாந்துக்கூழ் - பாகு).

**புலவராவோடை (வதிரி)**

வடமராட்சியின் இடப்பெயர் வரலாற்றில் புலவராவோடை ஒரு தனித் துவமான விளக்கத்தினைப் பெறு கின்றது. சோழர்காலக் கல்வெட்டுக் களில் பூவாராடை எனக் குறிக்கப்பட் டுள்ள ஓரிடப் பெயரே பின்னர் திரிந்து புலவரோடை என வழங்கியதா என்பது பற்றி விரிவாக ஆராய வேண்டிய நிலை

காணப்படுகிறது. கந்தாடை எவ்வாறு கந்தரோடையாக மாற்றம் பெற்றதோ அதேபோன்று பூவாராடை பின்னர் புலவராடையாக மாற்றம் பெற்றது எனக் குறிப்படலாம்.

**பூவர் + ஓடை = பூலவ(ர்)ரோடை (பல்லவர் ஓடை)**

**பூவல் + கரை = பூலவற்கரை -பூவற் கரை**

**பூவல் + அரசு = பல்லவர் அரசு**

**பூவல் + நகர் = பூநகர்/ புகார் (பூம்புகார்)**

பல்லவர் என்ற பதம் பின்னர் பூவர் என மருவி வழங்கியதா என்ற வினாவிற்கும் விடையளிக்க வேண்டியவர்களாக உள்ளோம். பூநாகர் என்ற பதம் பின்னர் பூநகர் என்றாகி காலப் போக்கில் பொன்னகர் என வழங்கி, இன்று பூனேரி எனக் குறிக்கப்படுவதனைக் காணமுடிகின்றது. பூவல்+ஏரி = பூனேரி என மருவி வழங்கியிருந்த வகையையும் காணமுடிகின்றது. பூவன் என்ற பதம் தாவரங்களிலுள்ள மதாளிப்பு நிலையை உணர்த்துகின்றது. பூவன் என்றால் பிரமன் என்ற பொருளுமுண்டு. புலவராவோடை என்ற இடப்பெயரைப் பொறுத்தவரையில் அதன் இடப்பெயர் சுட்டும் பொருளுக்கும் அவ்விடத்திற்கும் இடையே தொடர்பினை காட்டும் வகையிலான பண்பாட்டு எச்சங்கள் எவையும் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை. புலவர்கள் வாழ்ந்த ஒரு மையம் என்று குறிப்பிடுவதற்குக்கூட எந்தவிதமான அகப்புறச் சான்றுகளும் கிடைக்கவில்லை. பல்லவர் அடை என்ற காணிப்பெயர் தோலியோடைக்குச் சற்று மேற்குப்புறமாகக் காணப்படுவதிலிருந்து அப்பெயரிலிருந்தே பல்லவராடை என்றாகிப் பின்னர் புலவராடை என வழங்கிய நிலையில் புலவரோடை என இன்று மரூவுப்பெயராக வழக்கிலிருக்கின்றது எனக் கொள்ளமுடியும்.

### துலாக்கட்டு/ பெரிய துலாக்கட்டு/ மலட்டுத் துலாக்கட்டு

துலா என்ற துள்ளற் செயற் பாட்டுக்குரிய - துளைப்பொருட் சாதனமாக வெளிப்பட்டு, தொழிலடிப்படையிலான ஓரிடப்பெயரை துலாக்கட்டு குறித்து நிற்கின்றது. துல் என்னும் கூட்டப்பொருள் மூலத்திலிருந்து உருவாகிய துளைப் பொருட் சொல்லிலிருந்து இவ்விடப் பெயர் தோன்றியது.

**துல் - துன் - துன்பு - தும்பு - தூப்பு**

**துல் - துள் - தொள் - தொளை**

**துல் - துல் - தொள் - தொள்து - தொடு - தொண்டு - தோண்டு**

**துல் - துள் - துர் - துலா**

இங்கு காட்டப்பெற்றவாறு வேர்ச் சொற்பரிணாம மூல ஒழுங்கில் இறுதியாக உள்ள ஒழுங்கே துலா என்ற துள்ளற் செயற்பாட்டுக்குரிய - துளைப் பொருட் சாதனமாக வெளிப்பட்டு, தொழிலடிப்படையிலான ஓரிடப் பெயரைச் சுட்டி நிற்கின்றது.

**துல் - துன் = தைத்தல் / பொருத்துதல் / செறிதல் / அடைதல்**

**துல் - துல்லியம் = ஒப்பு / தெளிவு**

**துல் - துலாம் = நீட்சி / நிறை - நூறு பலம் அல்லது ஐந்து வீசை கொண்ட நிறை.**

**துல் - துலா = ஏற்றம் / துலாக்கட்டை / துலாவோரை / ஏர்க்கால்**

**துல் - துலா = கனம் / பாரம் / அமுக்கம்**

**துல் - துலா = தூண் போதிகையின் கீழ் உள்ள பூ வடிவில் அமைந்த அணியுறுப்பு.**

**துல் - துலா = கைத்துலா : ஓலைப் பட்டையினால் நீர் இறைக்கும் சிறிய ஏற்றம்.**

**= ஆளேந்து துலா : பலர் குறுக்கு மரத்தில் ஏறி நின்று முன்னும் பின்னும் உலாவ, கூந்தற்பனைப் படியிற் குடைந்த சாலில் ஒருவன் நீர் இறைக்கும் பெரிய ஏற்றம்.**

இங்கே காட்டப்பெற்ற வேர்ச்சொற் பரிமாண ஒழுங்கில் அவதானிக்கும் போது துலாக்கட்டு என்ற இடப் பெயரானது இன்னும் சில அடைப் பெயர்களுடன் இணைந்த வகையில் மலட்டுத்துலாக்கட்டு, காளித்துலாக் கட்டு, சின்னத்துலாக்கட்டு என்று குறிச்சிப்பிரிவுகளாக வகுக்கப்பட்ட நிலையில் பயிர்ச்செய்கைப் பிரதேசங் களாக கிணற்றுடன் கூடிய தோட்டங் களுக்கு இடப்பட்ட பெயராக இருப்பதனைக் காணமுடிகின்றது.

**துன்னாலை**

வடமராட்சியில் தற்போது மிகப் பிரபல்யம் பெற்ற ஒரு கிராமமாக பேசப் படுவது துன்னாலை என்ற கிராமமாகும். துல் என்ற துளைக் கூட்டப் பெயரடியாக பிறந்த ஒரு கிராமத்தின் பெயராக துன்னாலை விளங்குகின்றது. வலிகாமத் தில் பொன்னாலையும் வடமராட்சியில் துன்னாலையும் விஸ்ணு கோயில்களின் பிராந்தியங்களாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**துல் - துன் - தொளை = துன்னாலை**
**துல் - துன் - துன்னு = நெருக்கம்**
**துல் - துன் - துன்னி - துன்னியர் = நெருங்கிய உறவினர் / நெருக்கமாக உள்ள பாம்புப் புற்று**
**துன்னு + அளை = துன்னளை - துன்னாலை (தையல் ஆலை)**
**துன்னல் - துன்னம் = தையல்**
**துன்னர் = தையல்காரர்**
**துன்னார் = பகைவர்**
**துன்னியார் = நண்பர்**

ஆலை என முடிவடைகின்ற இடப் பெயர் வரிசையில் வடமராட்சிக்கு வெளியே பொன்னாலை, போக்காலை, சில்லாலை, வங்காலை, தங்காலை என்பன குறிப்பிடத்தக்கன. வலிகாமத் திலுள்ள பொன்னாலை என்ற இடப் பெயரானது **பொன்னாமை** என்ற பதத்தி லிருந்தே திரிபுபட்டு இன்று வழங்கி வருவதாக எடுத்துக்காட்டப்படுகின்றது. புராதன விஸ்ணு வழிபாட்டுடன் தொடர்பு டையதான ஐதீகமொன்றுடன் பொன்னாலை இணைக்கப்பட்டு பேசப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத் தக்கது. ஆனால் வடமராட்சியிலுள்ள துன்னாலை பண்பாட்டு வரலாற்றில் எத்தகைய முக்கியத்துவத்தினைக் கொண்டுள்ளது என்பது இன்னும் ஆராயப்படவில்லை. வல்லிபுரம் விஸ்ணு ஆலயம் அமைந்துள்ள குறிச்சி துன்னாலைக்குள் அமைந்திருப்பினும் துன்னாலை பற்றிய இடப்பெயராய்வில் வல்லிபுரத்தின் வரலாற்றுப் பெருமைகள் எடுத்துக் கூறப்படுவதில்லை. துன்னாலை என்ற பரந்த ஒரு கிராம நிர்வாக அலகிற்குள் **குடவத்தை** என்றொரு குக்கிராமமும் அமைந்து காணப்படுவதும் இங்கு குறிப்பிடத் தக்கது. **குடமூக்கு** என்றொரு கிராமம் கும்பகோணத்திலுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. குடாரப்பு வடம ராட்சியிலுள்ள இன்னொரு நெய்தல் நிலப் பண்பாட்டுக் கிராமமாகும். **குடமுருட்டி ஆறு வன்னிப்பிரதேசத் தில் பிரவாகிக்கின்ற ஒரு நதியாகும். இப் பின்னணியில் துன்னாலைக் கிராமம் பற்றி மேலும் ஆராய இடமுண்டு.**

**புலோலி**

வடமராட்சியில் மிகத்தொன்மை யான காலந்தொட்டு மிக அண்மைக் காலம் வரைக்கும் வரலாற்று முக்கியத் துவத்திற்கப்பால் தமிழ் இலக்கியப் பண்பாட்டில் முதலிடம் வகிக்கின்ற ஒரு பெருங்கிராமமாக புலோலி காணப்படு கின்றது. கிடைத்த தொல்லியற் சான்று களும் தமிழ் இலக்கியங்களும் அவ்வூரின் சிறப்பினை உறுதிப்படுத்தியுள்ளன. வடமராட்சியின் நாகரிக வரலாற்று மையம் என்ற நிலையில் புலோலி நடுநாயகமாக விளங்குகின்றதென்றால் அது மிகையான கூற்றாகிவிடாது. புலவர்கள், இலக்கண வித்தகர்கள், தத்துவ ஞானிகள், சித்தர்கள், அரசியல் விற்பன்னர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் என்றெல்லாம் நாகரிகத் தின் அடிப்படைக்குரிய கர்த்தாக்கள் வாழ்ந்து மறைந்த அறிவியல் கிராமமாக புலோலி விளங்குகின்றது. படி என்ற அடைதற் சொற்பொருட் கூட்டத் தொடரிலிருந்து பிறந்த புலோலி பின்வருமாறு சொற்பொருட் கூட்டத் தொடரில் படிதல் என்னும் வினை வழி விரிவடைந்து செல்கின்றது.

**படி - படு + இ - படு - பள் + து - பல் - புல் = புலொலி**

**படி - படு + இ - பதி - பள் + தி - புல் - புல்லாலி / புல்லோலி**

**படி - புடு + தி - புதி - புள் + தி - புலோலி**

படி என்பதற்கு உலகம், உயிர், வாழ்வதற்குரிய பதி, அளவு, மதிப்பு, கௌரவம் என பல பொருட்பிரிவுகள் உள்ளன. படி என்ற படிதற்தொழிலும் புல் என்ற துளைப்பொருட் தொழிலும் இணைந்தே புலோலி என்ற பெயரைப் பெற்றிருக்கவேண்டும். புலோலியில் காணப்படும் ஒரு சிற்றூர் பல்லப்பை என்பதாகும். வலிகாமத்திலும் பல்லப்பை என்ற பெயரில் பல கிராமங்கள் காணப் படுகின்றன. புலோலியிலுள்ள பல்லப் பைக்கிராமத்திலிருந்து ஆந்திரக் கலை மரபில் அமைந்த புத்தர் சிலை ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது. பல்லவம் - பல்லப்பை இரு சொற்களும் ஒரு பொருளைக் குறித்தனவா என்பது ஆராயப்பட வேண்டும். மணிபல்லவத்துடன் பல்லப்பயை இணைத்துப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுமாயின் புலோலியின் வரலாறு கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தினைச் சென்றடையும் எனலாம்.

இரண்டாம் இராசேந்திர சோழ னுடைய 14ஆம் ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்றில் புல்லாலி என்ற இடப்பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதனைக் காணலாம். "இப்படி மழவராயந் எழுத்துப் பணியால் ஊர்க்கணக்கு திருவாலி யுடையாந் அலங்காரப்பிரியந் எழுத்து : இப்படிக்கு இவை புல்லாலி வெள்ளான் எழுத்து இப்படிக்கு இவை பெராங் குடையாந் எழுத்து" இங்கு புல்லாலி என்பது ஓர் இடப்பெயரினைக் குறித்து நிற்கும் நிலையில் புலோலி என திரிபு பெற்ற நிலையில் யாழ்ப்பாண வைபவ மாலையார் பின்னர் ஒரு குடியேற்றமாக அதனைக் காட்டுகின்ற காலப்பரப்பிற்கு முன்னர் அப்பெயர் வழக்கு வடமராட்சி யில் நிலைத்திருந்திருக்கக்கூடும்.

வடமராட்சியிலுள்ள இடப்பெயர் ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான பண்புகள் காணப்படினும் அவற்றைப் பற்றி இங்கு தனித்தனியாக ஆராய்வது இயலாத காரியமாகின்றது. இதற்கென

தனியான நூல் ஒன்றினை எழுதும்போது விரிவாக ஆராய்வது பொருத்தமான தாகும். சோழங்கன், கங்குண்டான் (கங்கை கொண்டான்), சோனப்பு (சோழ உப்புப் புலம்) கோட்டைத்தெரு, மாயக்கை, வல்லிபுரம், வல்வெட்டித் துறை போன்ற இடங்கள் தொடர்பாக **தொல்லியலும் வடமராட்சியின் பண் பாட்டுத் தொன்மையும்** என்ற நூலில் விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளேன்.

அவற்றைப்பற்றி மீண்டும் அதே விடயத்தினை இங்கே குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் தோம்பு ஓலைகளையும் தோம்புக் குறிப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு வடமராட்சியின் வாலாற்று விடயங்களை ஆராயும்போது பல புதிய விடயங்கள் வரலாற்று வெளிச்சத்திற்கு வரும் என எதிர்பார்க்கலாம்.

## ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்ட நூல்கள்


1. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு., 1982 , யாழ்ப்பாணக் குடியேற்றம், சுன்னாகம்.
2. கவிராஜவரோதயன் 1993, கோணேசர் கல்வெட்டு, இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
3. சிவகுமார், ஜெயக்கொடி., 1973, யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற் கரைப்பகுதியினது புவிவெளியுருவ வியல் (வடக்கே தொண்டமானாறு முதல் கிழக்கே சுண்டிக்குளம் வரை), ஆய்வுக்ககட்டுரை, பிரசுரிக் கப்படாதது (கொழும்புப் பல்கலைக் கழகம்).
4. *Kathiresu, S.,1905,* ***A Hand Book of to the Jaffna Peninsula and a Souvenior of the opening of the Railway to the North,*** *Colombo.*
5. பாலசுந்தரம், இ,ஈழத்து இடப்பெய ராய்வு - யாழ்ப்பாண மாவட்டம், 2002, ரொறன்ரோ, கனடா.
6. கிருஸ்ணராசா, செ., 1986, 'கங்கை கொண்டான் கிராமம்', வீரகேசரி, 28/12/1986
7. கிருஸ்ணராசா, செ., தொல்லிய லும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும். 2012. பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.
8. கிருஸ்ணராசா,செ., 1998, தொல் லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.
9. மீனாட்சி சுந்தரம், பா.,2006, வரலாற்றில் வல்வெட்டித் துறை,வெளியீடு அரும்பொருள் காப்பகம்-வல்வெட்டித்துறை, இலங்கை.
10. அரசேந்திரன், கு., 2004, தமிழ்க் கப்பல் : மொழி ஆய்வு, சென்னை.


பண்டிதர் இ.வடிவேல் என்பவரால் பதிக்கப்பட்ட கோணேசர் கல்வெட்டு என்ற நூலில் இடம்பெற்றுள்ள வடமராட்சியிலுள்ள சில இடப்பெயர்கள் வருமாறு :

1. 'மஹா கொம்பிராயன் கொடுத்தது' வரி - 4 : சில்லியக் கொம்பிராய் - பொலிகண்டியில் உள்ளது.
2. கருணைக்கடலான் காளிங் கராயன் கொடுத்தது. வரி-3 : காளிங்கராயன் புலம் - கரவெட்டி மேற்கிலுள்ளது.

3. பொன்னவராயன் – வதிரி
4. சிதம்பரராயன் - பருத்தித்துறை சிவன் கோவிலடி
5. காளிங்கராயன் –வியாபாரிமூலைப் பிரதேசம்
6. தென்னவராயன் - கரணவாய் பிரதேசம்
7. செம்பகராயன் – ஆவரம்பிட்டி

(கோணேசர் கல்வெட்டு – பக்.102)

## வடமராட்சியிலுள்ள இடப்பெயர்கள் - சோழர்காலம்

| இன்றைய பெயர் | அன்றைய பெயர் |
|---|---|
| ஆரியவளவு | ஆரியர் வளவு |
| ஆத்திப்புலவு | ஆதித்தியன் புலம் |
| வாணகப்பாதி | வாணர்பாடி |
| உலகப்பன்பாதி | உலகப்பன்பாடி |
| அம்மையாபாதி | அம்மையார்பாடி |
| செட்டிபாதி | செட்டியார் பாடி |
| சித்தம்பாதி | சித்தம் பாடி |
| வில்லிபாதி | வல்லி பாடி |
| வீரணங்கல் | வீராணன் கல் |
| வீரபாண்டியன் வீதி | வீரபாண்டியன் வீதி |
| மாவில் | மாவில்லி/ மாவல்லி |
| பெரியதோட்டம் | பெருந்தோட்டம் |
| சோழர்தோட்டம் | சோழன்தோட்டம் |
| சோலை வடலி | சோழர் வடலி |
| சோழங்கன் | சோழ கங்கன் |
| மலையத்தன்னை | மாளிகைத்திடல் |
| மண்டான் | மண்டலை/ மண்டை/ மண்டலாய் |
| சோனப்பு | சோழ உப்புப் புலம் |
| செம்பிமா | செம்பியன் மாதேவி |
| சேனாத்தறை | சோழத்துறை |
| கோட்டைத்தெரு | கோட்டுத்தெரு |

# வடமராட்சி தந்த முதல் பெண் புலமையாளர்

**தகைசார் முதுநிலைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
(முன்னாள் கலைப் பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வுப் பீடாதிபதி)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

வடமராட்சியில் 19ஆம் நூற்றாண்டிறுதியிலிருந்து ஒரு பெண் புலமைத்துவ மரபு இருந்து வந்துள்ளது. குமாரசுவாமிப் புலவர், ம.க.வேற்பிள்ளை, சிவபாத சுந்தரனார் எனப் புகழ்பெற்ற அறிஞர் பரம்பரையைச் சார்ந்தவர் புலோலியைச் சேர்ந்த பார்வதி அம்மையார். வால்மீகி இராமாயணத்தை சமஸ்கிருத மொழியிலேயே படித்து விளக்கம் சொல்லும் திறனுடையவராக பார்வதி அம்மையார் திகழ்ந்துள்ளார். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களை நன்கு கற்றுத்தேறிய அம்மையார் அவற்றைக் கதை சொல்வது போலக் கற்பித்து விடுவாரெனத் தான் கேள்விப்பட்டதாக பண்டிதணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். (1978) இந்த அம்மையாருடைய புலமைச் சிறப்புக்கு எல்லோரும் எடுத்துக்காட்டும் ஒரு நிகழ்ச்சி உண்டு. அதாவது, அவ்வம்மையார் தன் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைகளை மிக இளம் பருவத்திலேயே மதுரைப் பண்டிதர்களாக ஆக்கியமையாகும். எஸ்.சிவலிங்கராஜா (1984) இது தொடர்பாகப் பின்வருமாறு கூறுகிறார்.

> "மரபுவழிக் கல்வியில் புலமை பெற்ற பெண் பரம்பரையையும் முதன்முறையாக வடமராட்சிப் பகுதியிலேயே காணமுடிகிறது. பாரம்பரியக் கல்வி வழிவந்து முதல் முறையாக மதுரைத் தமிழ்ப் பண்டிதர் பரீட்சையிலே இரு பெண் பிள்ளைகள் சித்தியெய்தக் காரணமாயிருந்த பார்வதி அம்மையார் புலோலி வ.கணபதிப்பிள்ளையுடைய சகோதரியாவார்."

பார்வதி அம்மையாருடைய உயர்ந்த கற்பித்தலினாலே மதுரைத் தமிழப் பண்டிதர்களாகிய இரு பெண்களுள் ஒருவரே திருமதி இ. பத்மாசனி அம்மாள் ஆவார். இவரே ஈழத்து மரபு வழிப் புலமைவாய்ந்த முதற் பெண் புலவர் ஆவார். பார்வதி அம்மையார் கல்விப் புலமை வாய்ந்தவராக இருந்தார். அவருடைய எழுத்துக்கள் எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் பத்மாசனி அம்மாளோ மரபுவழிப் புலமை வாய்ந்தவர் என்பதற்கு அவர் பாடிய **புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத் தந்தாதி** சான்றாகவுள்ளது. அதனுடன் அம்மையார் மதுரைத் தமிழ்ச் சங்க **செந்தமிழ்** இதழிலே தன்னுடைய ஆக்கங்கள் சிலவற்றையும் வெளியிட்டுள்ளார்.

## மலையகத்தில் மீனாட்சியம்மாள் வடக்கில் பத்மாசனியம்மாள்

வடமராட்சியைச் சேர்ந்த பத்மாசனி அம்மாளுடைய **புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி** 1925இல் முதன் முறையாக அச்சிடப்பட்டு வெளிவந்தது. இதே காலப்பகுதியில் மலையகத்தில் தன்னுடைய தொழிற்சங்க நடவடிக்கைகளாலும், அரசியல் நடவடிக்கைகளாலும், பாராளுமன்ற விவாதங்களாலும் பத்திரிகை நூல் வெளியீட்டுப்

பணியினாலும், இலக்கிய முயற்சிகளினாலும் சாதனை படைத்த கோ.நடேசய்யருடைய துணைவியார் மீனாட்சியம்மாள் புது மரபுக் கவிதைகளை இயற்றிக்கொண்டிருந்தார். நடேசய்யரும் மீனாட்சியம்மாளும் இணைந்து செயற்பட்டனர். மீனாட்சியம்மாள் பற்றி செ.யோகராசா (2007:27) பின்வருமாறு கூறுகிறார்.

> "இவர்களிருவரும் தொழிலாளர் பற்றிய பாடல்கள் இயற்றியுள்ளனராயினும், மீனாட்சியம்மாள் நடேசய்யரே இவர்களுள் முதன்மை இடம்பெறக்கூடியவர். தொழிலாளரது வாழ்க்கைப் பிரச்சினைகள் போராட்டங்கள், சுரண்டல் என்பன பற்றிப் பேசும் இவர்களது பாடல்கள் பின்வரும் இரு விதங்களில் குறிப்பிடத்தக்கன.
>
> (அ) எதிர்ப்புக் குரல்களாக உள்ளன. அதாவது அன்றைய அரசினரின் செயற்பாடுகளை எதிர்ப்பன.
>
> (ஆ) பொதுமக்கள் மத்தியிலே செல்வாக்குற்று விளங்கிய நாட்டார் பாடல் வடிவங்களிலும் ஜனரஞ்சகம் பெற்று விளங்கிய பாடல் மெட்டுகளிலும் அவை வெளியிடப்பட்டன"

மீனாட்சியம்மாள் நடேசய்யர் எழுதிய பாடல் ஒன்றினை செ.யோகராசா தன்னுடைய நூலிலே தந் துள்ளார். அது வருமாறு,

"சிங்கள மந்திரிகள் கூற்று மிக
சீர்கெட்ட தென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று–திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று"
நன்றிகெட்டுப் பேசும் மந்திரிமாரே –
உங்கள்
நியாய மென்ன சொல்லுவீரே
இன்றியமை யாத வொரு போரே – செய்ய
இடமுண்டாக்குகிறீர் நீரே"

மலையகத்திலே மீனாட்சியம்மாளின் நவீன தமிழ்க் கவிதை ஓங்கியொலித்தது. பெண்ணின் குரலை நன்கு இனங்கண்ட பெண்கள் ஆய்வு வட்டம் மீனாட்சியம்மாள் நடேசையரின் **இந்தியர் களின் இலங்கை வாழ்க்கையின் நிலைமை** என்ற பாடல் தொகுப்பை மீள்பதிப்புச் செய்தது. (தகவல்: சித்திரலேகா மௌனகுரு, **ஞானம்**, 2008:83). மலையகத்திலே மீனாட்சியம்மாளின் புதுமைமிக்க தமிழ்க்கவிதை ஓங்கியொலிக்கும் வேளையிலே யாழ்ப்பாணம் வடமராட்சியிலே பத்மாசனி அம்மாளுடைய மரபுவழிக் கவிதை நூல் தோற்றம் பெறுகின்றது.

## பத்மாசனி அம்மாள்

பத்மாசனி அம்மாள் **புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி** பாடியபோது அவருக்கு வயது இருபத்தியிரண்டு. அந்நூல் 1925இல் முதன் முதலாக வெளியிடப்படுகின்றது. எனவே பத்மாசனி அம்மாள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே பிறந்திருக்கலாம். அவருடைய தந்தையார் பெயர் நமசிவாயம். தாயின் பெயர் நாகரத்தினம் தனது பாட்டி பார்வதி அம்மையாரின் தமிழிலக்கண இலக்கிய அறிவினைப் பெற்றவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதைப் பட்டம் பெற்றவர். நல்ல செய்யுட்களைப் பாடும் புலமைத் திறனுடையவராக இருந்திருக்க வேண்டும். இதனால், கவிஞர்

ம.க.வே.மஹாலிங்கசிவம்

**"வண்டு கூட்டுணமலர்ந்து வள்ளிதழ் நறைபிலிற்றும்**
**விண்டுலாய் மிளிக் கொன்றையத் தாரணி விமலன்**
**தொண்டைவா யிளமயிலொடுத் தோன்று சீகருவே**
**கண்டு நாடொறுங் கவிமழை பொழிகின்ற கருத்தாள்"**

என்று பத்மாசனி அம்மாளின் கவிபாடும் திறனைப் பற்றிக் கூறுகிறார். இப் பாடலிலே, தனக்குச் செந்தமிழ் நூல்கள் அருளிய பத்மாசனி அம்மாயாரின் பாட்டி பார்வதி அம்மையாரையும் கவிஞர் மஹாலிங்கசிவம் குறிப்பிடுவதுடன் பத்மாசனி அம்மாள் பண்டிதைப் பட்டம் பெற்றதையும் குறிப்பிடுகிறார்.

**"திருத்து செந்தமிழ் நூல்பல வெனக்கருள் செய்த**
**அருந்தவக் கலைக்கடனிகர் பார்வதியார் பாற்**
**பரந்த மாமதுரைத் தமிழ்ச்சங்க பண்டிதையாய்ப்**
**பொருந்துகின்ற பாலாம்பிகையொடுந் தமிழ் பயின்றார்.**
**மாடமாளிகை வானிமிர் மதுரையம் பதியிற்**
**கூடுகின்ற நாலாந்தமிழ்ச் சங்கத்திற் குழீஇய**
**ஞாடு சீரிசைப் புலவர்கனயுந் தினிதளித்த**
**பாடு செந் தமிழ்ப் பண்டிதைப் பட்டமும் படைத்தாள்"**

சிறந்த பெண் தமிழறிஞரிடம் தமிழ் கற்று, மதுரைத் தமிழ்ப் பண்டிதையாகிய பத்மாசனி அம்மாள் ஈழத்தின் மரபுவழி வந்த முதல் தமிழ்ப் பெண் புலவராகத் திகழ்கிறார்.

## புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத் தந்தாதி

பண்டிதை பத்மாசனி அம்மாளின் புலமைத்திறன்களைப் புலப்படுத்துவ தாக அமையும் **புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி** 1925 இல் முதன் முறையாக வெளியிடப்பட்டது. காப்புப் பாடல் நீங்கலாக பசுபதீஸ்வரர் புகழ் பாடுவனவாக 100 பாடல்கள் அமைந் துள்ளன. ஒவ்வொரு பத்துப் பாடலும் ஒவ்வொருவகைப் பாவடிவத்திலே அமைகின்றன. அறுசீர்க்கழிநெடிலடி விருத்தம், எழுசீர்க்கழிநெடிலடி விருத்தம், கலிநிலைத்துறை, கலிவிருத்தம் ஆகிய பாவடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சந்த வேறுபாட்டுக்கும் பொருள் புலப்பாட் டுக்கும் இப்பாவடிவங்கள் உதவுகின்றன. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1997இல் வெளிவந்தது. மூன்று ஆண்டுகளில் உரையுடன் கூடிய மூன்றாம் பதிப்பு வெளிவந்தது. அந்நூலுக்கு பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் உரை எழுதினார்.

## செய்யுட் சிறப்புக்கள்

புலோலி நகர்ச் சிறப்புப் பற்றி உரையாசிரியர் 48 எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார். "சீரார் புலோலி" (காப்பு), "வளஞ்சேர் புலோலி" (34), "வான்மிகு பயன்குன்றாப் புலோலி" (49) என்பன சில எடுத்துக்காட்டுக்களாகும். கோயிற் சிறப்புகளெனப் பின்வருவன எடுத்துக் காட்டுகளாயமைகின்றன.

**"தடங்கொள் பூண்முலைச் சசிமணி கொழுநனுந் தடங்கார்**
**அடங்கு மாயனு மருமறைக் கிழவனு மருச்சித்து**
**இடங்கொளும் புலோலிப் பதியாய்"**

(18)

**"எளியேனுன் திருக்கோயில் இறைஞ்சுகிலேன்"**

(37)

**"திகந்து புலோலித் தளியிலிருந்த தேனே"**

(48)

**"ஆனந்தக் கொடிகள் மேகமேற்றாவும் அணிபெயிற் புலோலிஆலயத்தாய்"**

(63)

பசுபதீஸ்வரருடைய கோலச் சிறப்பு களை அம்மையார் நன்கு புனைந்துரைக் கிறார். நிலாவையும் கொன்றை மலரை யும் சூடும் சிவனுடைய கோலம் பல பாடல்களிலே இடம் பெறுகிறது.

**"நிலவுஞ்சடை மேல் நிலாவணியும் நிமலர்"** (1)

**"குதிக்கும் புனல்சூழ் புலோலிவருங் கொன்றைத் தாராய்"** (6)

"கதிநிலா வுமிழ் கதிர்மதிக் கடவுள்" (11)

"சடைக்கு இசை மதியினாய்" (22)

"வாசமார் கொன்றை மாலை வனைந்திடு மௌலியானே" (26)

"நிலாவணியும் சடையானே" (31)

"கோத்தமலர்க் கொன்றைமாலைச் சடையானே" (40)

இறைவனுடைய அருட்செயல் களைப் பத்மாசனி அம்மாள் தன்னுடைய அந்தாதிப் பாடல்களிலே பொதிந் துள்ளார்.

"ஆலமன்ன வெத்துயர் தெறுமா ரருளறிந்து
மாலயன் தொழும் புலோலியாய்" (17)

என்னும் பாடலடிகள் நஞ்சு போன்ற கொடிய துன்பங்களை ஒழியச்செய்யும் நிறைவான அருட் பண்பை உணர்ந்து கொண்டு திருமாலும் பிரமனும் வணங்கும் புலோலியில் உறைபவனே என்று கூறுகின்றன. திருப்பாற்கடலைக் கடைந்தபோது அமுதம் தோன்றுகின்ற வேளையிலே ஆலகால விடமும் தோன்றியது. அதனாலே விண்ணவர்க் கும் மண்ணவர்க்கும் ஏற்படக்கூடிய தீங்கினை எண்ணி இறைவன் அவ் விடத்தைத் தன் மிடற்றிலே அடக்கித் தியாகராஜன் ஆனான். அவனருள் எப்படிப் பட்டதென்பதை 'ஆலம்' என்னும் சொல்லூடாக அம்மையார் புலப்படுத்தியுள்ளார். இன்னோரிடத்தில்,

## நிறைவுரை

கலாநிதி ஆ.சதாசிவம் ஈழத்துத் தமிழ்க் கவிஞர்களுடைய சுருக்கமான வரலாறுகள் அடங்கிய **ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்** என்னும் நூலை 1966ஆம் ஆண்டிலே வெளியிட்டார். எல்லாமாக 143 புலவர்கள் பற்றி இந்நூலிலே தகவல்கள் திரட்டித் தந்துள்ளார். இங்கு தரப்பட்ட புலவர் பட்டியலில் ஒரு பெண்பாற் புலவர்கூட இடம்பெறாதிருப்பது வியப்பாக உள்ளது. மீனாட்சியம்மாள் நடேசய்யரையும், பத்மாசனி அம்மாளையும் இவர்கள் அறியாதிருந்துள்ளனர். எனினும், இன்றைய காலகட்டத்திலாவது இவர்களை அறியவந்தது பயனுடையதா யுள்ளது. ஒரே காலகட்டத்தில் வாழ்ந்த இவ்விரு பெண்களுள் மரபுவழி முதல் தமிழ்ப் புலவராக பத்மாசனி அம்மாளும் முதல் நவீன தமிழ்க் கவிதை ஆசிரியை யாக மீனாட்சியம்மாள் நடேசய்யரும் திகழ்கின்றனர். இவ்விருவருள் பத்மாசனி அம்மாள் வடமராட்சிக்குப் புகழ்தேடித் தந்துள்ளார்.

## உசாத்துணைகள்

மனோன்மணி, சண்முகதாஸ், உரையாசிரியர், **புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி,** மூன்றாம் பதிப்பு உரையுடன், 2000.

சிவலிங்கராஜா, எஸ்., **வடமாராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும், 1984.**

யோகராசா, கலாநிதி செ., **ஈழத்து நவீன கவிதை,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2007.

சித்திரலேகா மௌனகுரு, "ஈழத்தில் பெண்கள் இலக்கியம்," **ஞானம்** 100ஆவது இதழ், பக்.83, 2008.

# வடமராட்சி பிராந்தியத்தின் பேண்தகு பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள்

**பொ. பாரதி**
*விரிவுரையாளர்,*
*புவியியல் துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

## 1. அறிமுகம்

பௌதிக ரீதியிலோ அல்லது பண்பாட்டு ரீதியிலோ ஒத்த பண்பினைக் கொண்டுள்ள பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு எல்லை வரையறுக்கப்படுவது பிராந்தியமாகும். பிராந்திய வரையறையானது பிரதேசங்களின் வளங்களை நிலைத்திருக்கின்ற வகையில் திட்டமிட்டு கொள்வதற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இன்றியமையாத செயற்பாடாகும். பிராந்திய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளானது கிராமிய மட்டத்திலிருந்து நகர, மாகாண, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் கட்டமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதாக அமையும். அந்தவகையில் நுண்மட்ட ரீதியில் பிராந்தியங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயன்முறைகளே ஒரு நாட்டினுடைய பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இட்டுச்செல்லும். இவ்வாறான நுண்மட்ட பிராந்திய அபிவிருத்திகள் கிராமமட்டத்தில் உள்ள வளங்களினது வினைத்திறனான பயன்பாட்டிற்கு உதவுவதுடன் பிராந்திய சமமின்மை *(regional imbalance)*, பிராந்திய வேறுபாடுகள் *(regional disparities)* என்பவற்றை நீக்கவும், மக்களது வாழ்வாதார சமூக பொருளாதார நலவாழ்விற்குமான விருத்தியை மேம்படுத்தவும் இன்றியமையாததாகின்றது. பிராந்திய ரீதியில் காணப்படுகின்ற வளங்களை நிலைத்திருக்கக்கூடிய வகையில் பயன்படுத்தும்போது பிராந்தியங்களில் ஏற்படுகின்ற வறுமை, உட்கட்டுமான விருத்தியின்மை, கல்வி சுகாதார வசதியின்மை, வேலைவாய்ப்பின்மை போன்ற பல்வேறான பிரச்சனைகளுக்கும் தீர்வினைப் பெறக்கூடியதாக அமையும். அந்தவகையில் இவ்வாறு நுண்மட்ட ரீதியில் பிராந்திய அபிவிருத்தி செயன்முறைகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. இலங்கையில் இப்பிராந்திய ரீதியிலான வரையறைகள் பொருளாதார அபிவிருத்திகளை நோக்காகக் கொண்டு பிரிக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக நிர்வாக ரீதியிலான பிராந்தியங்களே காணப்படுகின்றன. எனினும் யாழ் குடாநாடானது அதனது நிலஅமைப்பு, புவியியல் ரீதியாக வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் எனும் நான்கு பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் வடமராட்சி பிராந்தியத்தினுடைய பௌதிக பண்பாட்டு நிலைகள், தற்போதைய அபிவிருத்தி நிலைமைகள், அபிவிருத்திக்கான சவால்கள், அபிவிருத்தி திட்டமிடல் பொறிமுறைகள் என்பன இங்கு விபரிக்கப்பட்டுள்ளன.

## 2. வடமராட்சியின் பௌதிக பண்பாட்டு நிலைகள்

### 2.1. இட அமைவும் தரைத்தோற்றமும்

யாழ்ப்பாணக் குடாநாடு எனும் புவியியற் பரப்பினுள் அதன் கிழக்கு பகுதியில் வடக்கு தெற்கு நோக்கி நீட்சியாகக் காணப்படும் புவியியற் பிராந்தியம் வடமராட்சியாகும். இப் பிரதேசம் கிழக்கு நெடுங்கோடு 79°54" – 80°02" என்பவற்றுக்கு இடையிலும் வட அகலக்கோடு 9°30" – 9°50" என்பவற்றுக்கு இடையிலும் அமைந்துள்ளது. இப்பிராந்தியம் 262.7 சதுர கிலோமீற்றர் பரப்பை உள்ளடக்கி யுள்ளதுடன் வடக்கே பாக்குநீரிணை, கிழக்கே இந்து சமுத்திரம், வங்களா விரிகுடா மற்றும் தெற்கே தொண்டைமானாறு கடனீரேரி, தென்மராட்சி பிராந்தியம், மேற்கே வலிகாம பிராந்தியம் என்பவற்றையும் எல்லையாகக் கொண்டுள்ளது. வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய மூன்று பிராந்தியங்களையும் தொண்டைமானாறு கடனீரேரி பிரிக்கின்றது. பௌதிக ரீதியில் தொண்டைமானாறு கடனீரேரி முகத்துவாரப் பகுதியிலிருந்து சுண்டிக்குளம் நல்லதண்ணீர் தொடுவாய்வரை அமைந்துள்ளது. அத்துடன் வடமராட்சி பிராந்தியம் தரைத்தோற்ற ரீதியாக மேட்டு நிலப்பகுதி, தாழ் நிலப்பகுதி, கரையோரப் பகுதி, மணற் பகுதி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இப்பகுதியில் இருவாட்டி மண், செம்மண், மணல் மண், உவர் மண் என்பன பரம்பியுள்ளன.

### 2.2. நிர்வாக அமைப்பு

வடமராட்சி பிராந்தியம் நிர்வாக ரீதியில் வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி கிழக்கு என மூன்று பிரதேச செயலகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை உரு 1 இல் காட்டப்பட்டுள்ளது. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகமானது வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையினையும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமானது பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை பிரதேசசபை என்பவற்றையும், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமானது பருத்தித்துறை பிரதேச சபை என்பவற்றையும் உள்ளூராட்சி சபைகளாகக் கொண்டுள்ளன. வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரிவுகளில் தலா 35 கிராமசேவகர் பிரிவுகளும் வடமராட்சி கிழக்கில் 18 கிராமசேவகர் பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.3. சனத்தொகை

| நிர்வாக அலகு | ஆண்டு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| வடமராட்சி வடக்கு | 49053 | 46744 | 45937 | 47182 | 47058 | 45989 | 44955 | 45296 |
| வடமராட்சி தெற்கு மேற்கு | 47360 | 47410 | 45793 | 45164 | 45292 | 45349 | 45679 | 45504 |
| வடமராட்சி கிழக்கு | | | 15400 | 15550 | 15824 | 16087 | 16354 | 16477 |
| மொத்தம் | | | 107130 | 107896 | 108174 | 117425 | 106988 | 107277 |

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் 2009 இல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து நாட்டில் நிலவும் அமைதியான சூழ்நிலை மக்களினது நிலையான குடியேற்றத்திற்கு வழிசமைத்தது. இந்நிலையில் 2017 ஆம் ஆண்டு புள்ளிவிபரத் தரவுகளின் அடிப்படையில் வடமராட்சியில் 107277 பேர் மக்கள் வாழ்கின்றனர். வடமராட்சிப் பிராந்தியத்தின் சனத்தொகையில் 2010 இலிருந்து 2014 வரையான காலப்பகுதியில் சிறிதளவான அதிகரிப்பும் பின்னரான காலப்பகுதியில் சிறியளவிலான தளம்பல் போக்கும் காணப்படுகின்றன.

**வடமராட்சிப் பிராந்தியத்தின் கால ரீதியான சனத்தொகை**

அதாவது வடமராட்சி கிழக்கு பகுதிகளில் 2010 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையான காலப்பகுதி நோக்கி வருடாந்தம் சனத்தொகை அதிகரித்துவருகின்றது. மாறாக வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி தெற்கு மேற்குப் பகுதிகளில் 2010 இலிருந்து சனத்தொகை குறைவடைந்துள்ளது. ஏனெனில் 1990 களில் வலிகாமம் வடக்கிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்த மக்கள் இப்பகுதிகளில் குடியேறியிருந்தமையும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் மீள தம் சொந்த இடங்களுக்கு நகர்ந்து வருகின்றமையுமே இப்பகுதி சனத்தொகை வீழ்ச்சிக்கு பொதுவான காரணமாக அமைகின்றது. அதனைவிட இப் பகுதிகளில் இடம்பெற்ற வெளிநாட்டு இடப்பெயர்வுகளும் சனத்தொகை வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளன.

அத்துடன் வடமராட்சிப் பிராந்தியத்தினுடைய சனத்தொகையானது சில பகுதிகளில் செறிவாகவும் சில பகுதிகளில் ஐதானதாகவும் அமைந்திருப்பது இப் பிராந்தியத்தினது பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துவதாக அமைகின்றது. வடமராட்சிப் பிராந்தியத்தினுடைய சனச்செறிவினது இடரீதியான பரம்பல் உரு 2 இல் காட்டப்பட்டுள்ளது. அந்தவகையில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புலோலி வடமேற்கு, கரணவாய், கரவெட்டி, நெல்லியடி ஆகிய பகுதிகளில் அதிக சனஅடர்த்தி நிலவுகிறது. அதாவது இப்பிரதேசங்கள் ஒரு சதுர கிலோமீற்றரில் 3000 பேருக்கு அதிகமான மக்கள் வாழ்கின்ற பகுதிகளாகக் காணப்படுகின்றன. இப்பகுதிகள் விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்ற வளமான மண் பரம்பலைக் கொண்டுள்ளதுடன் மக்களின் நிலையான குடியேற்றத்திற்கும் ஏதுவான பகுதிகளாக அமைந்துள்ளமையே இப்பகுதிகளில் சனச்செறிவு அதிகமாக இருக்க காரணமாக அமைகின்றது. மாறாக வடமராட்சி கிழக்கு மணல்சார் பகுதியாகவும் சனச்செறிவு ஐதான பகுதியாகவும் காணப்படுகின்றது. அந்தவகையில் வடமராட்சி கிழக்கின் பெரும் பகுதிகளில் ஒரு சதுர கிலோமீற்றரில் 500 பேருக்கும் குறைவான மக்கள் தொகையே காணப்படுகின்றது. அத்துடன் கப்பூது, மண்டான் ஆகிய பகுதிகளில் சனச்செறிவு குறைவானதாக அமைந்திருப்பதற்கு இவை உவர்நிலங்களாகவும் வெள்ளப் பெருக்குக்கு உட்படும் பகுதிகளாகவும் காணப்படுவதே காரணமாக அமைகின்றது.

### 2.4. நிலப்பயன்பாடும் பொருளாதார நடவடிக்கையும்

நிலம் மனிதனது வாழ்வாதாரத்தில் அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது. நிலம் மானிட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும்போது நிலப்பயன்பாடு என வரையறைப்படுத்தப்படுகின்றது. அந்தவகையில் வடமராட்சி பிராந்தியத்தில் குடியிருப்புக்களும் வீட்டுத்தோட்டங்களும், குளங்களும் நீர்ப்பாசனத்தொகுதியும், புல்நிலம், கடற்கரை, மணல் மற்றும் பாறைப்பகுதி, வனப்பகுதி, விவசாய நிலம் ஆகிய நிலப்பயன்பாடுகளாக பாகுபடுத்தப்பட்டுள்ளது. இந்த நிலப்பயன்பாட்டு வகைப்பாடானது உரு 3 இல் காட்டப்பட்டுள்ளது.

இந் நிலப்பயன்பாட்டுத் தன்மைக்கேற்பவே வடமராட்சிப் பிராந்தியத்தினுடைய பொருளாதார நடவடிக்கைகளும் காணப்பட்டுவருகின்றன. அந்தவகையில் வடமராட்சி வடக்கில் விவசாயம், மீன்பிடி, சேவைத்தொழில் என்பனவும் வடமராட்சி தெற்கு மேற்கில் விவசாயம், சிறுகைத்தொழில், சேவைத்தொழில் என்பனவும் வடமராட்சி கிழக்கில் மீன்பிடியும் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாகக் காணப்படுகின்றன.

## 3. வடமராட்சிப் பிராந்தியத்தின் பேண்தகு பொருளாதார அபிவிருத்திக்கான நிலப்பயன்பாடுகள்

இங்குள்ள வளங்கள் அடையாளப்படுத்தப்பட்டு பிரதேச ரீதியான அபிவிருத்தியினை முன்னெடுப்பதன் மூலமே வடமராட்சிப் பிராந்தியத்தினது பொருளாதார அபிவிருத்தியினை அதிகரிக்கக்கூடியதாகவும் மக்களது வாழ்க்கைத் தரத்தினையும் நலவாழ்வினையும் மேம்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

அந்தவகையில் வடமராட்சி பிராந்தியத்தினது வளங்கள் மற்றும் வாய்ப்புக்கள் ரீதியாக ஆய்வுசெய்ததன் மூலம் இப் பிராந்தியத்தினது பேண்தகு பொருளாதார அபிவிருத்தியினை அடைந்துகொள்ள மூன்று பிரதான நிலப்பயன்பாட்டு வகைகளாக வரையறுக்கவேண்டியுள்ளது. அவையாவன,

1. உற்பத்தி சார் நிலப்பயன்பாடு
2. நகர மற்றும் அது சார்ந்த நிலப்பயன்பாடு
3. பாதுகாக்கப்படவேண்டிய நிலப்பயன்பாடு என்பனவாகும்.

இம்மூன்று பிரதான நிலப்பயன்பாட்டு வகைகளும் உரு 4 இல் காட்டப்பட்டுள்ளது. இப் பிரதான நிலப்பயன்பாடுகளுக்குள்ளேயான பொருளாதார அபிவிருத்தி வாய்ப்புக்களை அறிந்து இவை ஒவ்வொன்றுக்கும் இடையே முரண்பாடு ஏற்படாத வகையில் திட்டமிடல் பொறிமுறைகளை முன்வைப்பதன் மூலமே வடமராட்சி பிராந்திய பேண்தகு அபிவிருத்தியினை மேம்படுத்தமுடியும். அதற்கு தற்போது இம்மூன்று நிலப்பயன்பாடுகளுக்குள்ளே எத்தகைய பொருளாதார செயற்பாடுகள் இடம்பெறுகின்றன, இந்நிலப்பயன்பாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற சமூக பொருளாதார சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் எவை, இந் நிலப்பயன்பாடுகளுக்குள் முரண்பாடுகள் ஏற்படாதவகையில் எவ்வாறான திட்டமிடல்களை முன்வைக்கமுடியும்

என்பன சார்ந்த விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. இவ்வாறான முரண்பாடற்ற திட்டமிடல் நடவடிக்கைகளை வடமராட்சிப்பிராந்தியத்தில் முன்னெடுப்பதன் மூலமே பேண்தகு அபிவிருத்தியினை முன்னெடுக்கக்கூடியதாக அமையும்.

### 3.1. உற்பத்தி சார்ந்த நிலப்பயன்பாடு

இங்கு விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு ஆகிய நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுகின்றன. வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் தற்போது *4803.83* ஹெக்டேயர் பரப்பளவில் நடைபெற்றுவருகின்றது. இவ்விவசாய நடவடிக்கைகளுள் நெல் தாழ்நிலப்பகுதிகளிலும் மேட்டுநிலப்பகுதிகளில் பணப்பயிர்களான வெங்காயம், மிளகாய், புகையிலை என்பனவும் ஏனைய மரக்கறி பயிர்ச்செய்கைகளும் இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக கப்பூது, துன்னாலை, இமையாணன் வடக்கு, இமையாணன் மேற்கு போன்ற கிராமங்களில் நெற்செய்கையும், கெருடாவில், கரணவாய், தொண்டைமானாறு, கரவெட்டி, புலோலி போன்ற பகுதிகளில் ஏனைய மரக்கறி செய்கைகள், பணப்பயிர் உற்பத்திகளும் இடம்பெற்றுவருகின்றன. மேலும் மரப்பயிர்களாக பனை, தென்னை காணப்படுகின்றன. உற்பத்தி சார் நிலப் பயன்பாடுகளில் குறிப்பாக விவசாய நிலங்கள் கட்டிட நிலங்களாக மாறிவரும் நிலை அண்மைக் காலங்களில் அதிகரித்துவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதி *(AB 20 வீதி)* அகலிப்பின் பின்னர் அவ்வீதியின் இருமருங்கிலும் காணப்படும் கரணவாய், நெல்லியடி, நெல்லியடி கிழக்கு, பருத்தித்துறை, பருத்தித்துறை தெற்கு, புலோலி வடக்கு, புலோலி கிழக்கு இடங்களில் அதிகளவு விவசாய நிலங்கள் கட்டிட நிலங்களாக மாறியுள்ளன. அத்துடன் விவசாய நடவடிக்கைகளில் காலநிலை மாற்றம், விவசாய நடவடிக்கை சார்ந்த மரக்கறிப்பயிர்களுக்கான கேள்வி குறைவடைதல் போன்றவற்றால் விவசாயிகளது வருமானம் வீழ்ச்சியினை காட்டி நிற்கின்றது. அத்துடன் வடமராட்சிப் பிராந்தியத்தில் பெருமளவு வருமானத்தை ஈட்டித்தரும் பிரதான பணப்பயிரான புகையிலைச் செய்கை போதையற்ற நாட்டினை உருவாக்கும் செயற்திட்டத்தின் கீழ் *2020* இல் முற்றுமுழுதாக தடைசெய்யும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருவதன் காரணமாக தற்போது மட்டுப்படுத்தப்பட்டளவிலே புகையிலை பயிரிடப்படுகின்றன. இந்நிலையில் புகையிலைச்செய்கையினை நம்பியிருக்கும் மக்களினது வருமானம் வீழ்ச்சியடைவதுடன் வடமராட்சி பிராந்தியத்தினது விவசாய பொருளாதாரமும் வீழ்ச்சியினைக் காட்டிநிற்கின்றது.

அடுத்து கைத்தொழில் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் வடமராட்சியில் அண்மைக்காலத்தில் எந்தவொரு கைத்தொழில்களும் பெருமளவில் முன்னெடுக்கப்படவில்லை. கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் தோல் உற்பத்தி கைத்தொழில், பனைசார் கைத்தொழில் என்பன பெருமளவு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மனித கட்டுமானத் தேவைகளுக்கும் ஏற்றுமதி செயற்பாட்டிற்காகவும் பெருமளவு பனைமரங்கள் அழிக்கப்பட்டு வருவதனாலும் பனை

சார் உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடுவோரை தாழ்சாதிக் கட்டமைப்புடன் ஒப்பிடப்படுவதன் விளைவாகவும் பின்னரான காலப்பகுதியில் பனைசார் கைத்தொழிலானது பெருமளவு வீழ்ச்சியினைக் காட்டிநிற்கின்றது.

அத்துடன் மீன்பிடி நடவடிக்கை பற்றி நோக்கும்போது வடமராட்சி வடக்கு கரையோரம், வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதிகளில் அதிகளவு மீன்பிடி செயற்பாடு இடம்பெறுவதுடன் ஏற்றுமதி நடவடிக்கைகளும் இடம்பெறுகிறது. எனினும் இப்பகுதியில் துறைமுக விருத்தியின்மை, புதிய மீன்பிடி கருவிகளை பயன்படுத்தாமை, மீன்களை பழுதடையாது பேணுவதற்குரிய போதிய குளிரூட்டல் வசதிகளின்மை, வினைத்திறனான பதப்படுத்தல் வசதியின்மை போன்ற காரணங்களால் ஒப்பீட்டு அளவில் மீன்பிடி மூலமான வருமானம் குறைவடைந்தே காணப்படுகின்றது. அண்மைக்காலங்களில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கரையோர பகுதிகளில் தெற்கு மீனவர்களது ஊடுருவல் மீன்பிடி உற்பத்தியில் பெருமளவு பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றது.

கால்நடை வளர்ப்பு செயற்பாட்டை பொறுத்தவரையில் வடமராட்சி தெற்கு மேற்கு பகுதியிலும் வடமராட்சி வடக்கில் ஒரு சில பகுதிகளிலும் இதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன. அதாவது தாழ்நிலப்பகுதிகளில் நெற்செய்கை ஒரு போகம் மட்டுமே செய்யப்படுகின்ற தன்மை காணப்படுவதால் இப்பகுதிகள் ஏனைய காலங்களில் மேய்ச்சல் தரவைகளாக பயன்படுத்தப்படுகின்றன. வடமராட்சி வடக்கில் மேட்டுநிலப்பயிர்கள் இடம்பெறும் இடங்களிலும் ஓரளவு கால்நடை வளர்ப்பு இடம்பெறுகிறது. இதனால் இறைச்சி, பால், முட்டை போன்றன மூலம் வருமானம் ஈட்டக்கூடியதாக அமைந்துள்ளது. வடமராட்சிப் பிராந்தியங்களில் ஒரேயொரு கால்நடை வைத்திய நிலையம் மட்டுமே இயங்கிவருவதும் இப் பிராந்தியத்தினுடைய கால்நடைகளுக்கான பாதுகாப்பினைப் பெற்றுத்தர போதுமானதாக அமையவில்லை.

### 3.2. நகர மற்றும் அது சார்ந்த நிலப்பயன்பாடு

நகரம் என்பது ஒரு சதுர கிலோமீற்றரில் 2000 ற்கு மேற்பட்ட மக்கள் தொகையினையும் விவசாயம் சாராத பொருளாதார நடவடிக்கை நிலவுகின்றதுமான பிரதேசங்கள் ஆகும். இவை பிரதானமாக நிலைமாறும் செயற்பாடு உடையதாகவும் இடம்சார் நோக்கை அடிப்படையாகக் கொண்டதுமாகும். கடந்த மூன்று தசாப்த காலமாக யுத்த நிலைமைகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றான வடமராட்சிப் பிராந்தியத்தில் யுத்தத்திற்கு பின்னரான நிலையில் மீண்டும் துரித நகராக்கச் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. அதிலும் குறிப்பாக நகரசபை அந்தஸ்து பெற்ற பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய நகரங்களும் நகரசபை அந்தஸ்து பெறாத நெல்லியடி நகரமும் துரித நகராக்கம் பெற்றுவருகின்றன.

இன்று நெல்லியடியானது நகர அந்தஸ்து பெறப்படாத நகரமாக உள்ளபோதும் நகர அந்தஸ்து பெற்ற பருத்தித்துறை, வல்வெட்டித்துறை என்பவற்றை விட வேகமாக வளர்ச்சியடைந்த பகுதியாக காணப்படுகின்றது. நெல்லியடி நகரத்தின் நகராக்கம் பருத்தித்துறை வீதி, கொடிகாம வீதி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதி எனும் வீதிகளை அண்மித்த பகுதிகளில் செறிவடைந்து காணப்படுகின்றன.

வடமராட்சியில் 5763.689 ஹெக்டேயர் பரப்பு நகரமயமாக்கப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. எனினும் வடமராட்சி பகுதியில் வைத்தியசாலை வசதிகள் போதுமானதாக இல்லை. மந்திகை ஆதார வைத்தியசாலை, ஊறணி பிரதேச வைத்தியசாலை எனும் இரண்டுமே அரச வைத்தியசாலைகளாக காணப்படுகின்றன. அத்துடன் அவ்வைத்தியசாலைகளில் போதிய மனித வளங்கள் காணப்படாத தன்மையும் அவதானிக்கப்படுகின்றது. பிரதான நகரங்கள் மூன்றினையும் சூழ பருத்தித்துறை தெற்கு, புலோலி மத்தி, பருத்தித்துறை கிழக்கு, வல்வெட்டித்துறை வடமேற்கு, வல்வெட்டித்துறை தென்கிழக்கு, வல்வெட்டித்துறை தென்மேற்கு, உடுப்பிட்டி வடக்குப் பகுதிகளிலும் நகர செயற்பாடுகள் துளிர்விடத் தொடங்கியுள்ளன. எனினும் இவையனைத்தும் திட்டமிடப்படாத முறையில் தன்னிச்சையாக உருவாக்கப்பட்டவையாக உள்ளன. இத்தகைய நகராக்கச் செயன்முறைகள் பேண்தகு பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதாக அமையாது. மாறாக வெவ்வேறு சமூக பொருளாதார சூழல் பிரச்சனைகளை தோற்றுவிப்பதாகவே அமைகின்றது.

### 3.3. பாதுகாக்கப்படவேண்டிய நிலப்பயன்பாடு

மணற்குன்றுகள், வனப்பகுதிகள், கடனீரேரிகள், சதுப்பு நிலங்கள், ஈரநிலங்கள், கண்டற்தாவரங்கள் என்பன வடமராட்சிப் பகுதிகளின் உயிர்ப்பல்வகைமையின் உறைவிடமாகத் திகழ்கின்றன. அந்தவகையில் வடமராட்சியில் 15707.4 ஹெக்டேயர் பரப்பு பாதுகாப்பை வேண்டிநிற்கின்ற நிலப்பயன்பாடுகளாகக் காணப்படுகின்றன. இலங்கையின் வடபகுதிக்கு வருகைதரும் சுற்றுலா பயணிகளுக்கு இயற்கை அளிக்கும் அருங்கொடையாகத் திகழும் சுண்டிக்குளப் பகுதியானது பசுமை நிறைந்த காடுகள், நீர் நிறைந்த குளங்கள், கடனீரேரிகள், மணற்குன்றுகள், உள்ளூர் மற்றும் இடம்பெயர் பறவைகள், உயிர்ப்பல்வகைமை ஆகிய சூழலியல் சுற்றுலாக் கூறுகள் அனைத்தும் ஒன்றித்த இடமாக விளங்குவதனால் 1938 ஆம் ஆண்டு பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. நவம்பரிலிருந்து ஜனவரி வரை இப்பகுதியில் வேறுபட்ட உள்ளூர் பறவையினங்களையும் வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் புதிய பறவையினங்களையும் காணக்கூடியதாக இருக்கும். ஏறத்தாழ 11108 ஹெக்டேயராக உள்ள இச் சரணாலயப் பகுதியினுடைய நிலப்பயன்பாட்டில் மானிடத் தேவைகள் அதிகரித்ததன் விளைவாக இப்பகுதியின் வனப்பகுதிகள் வேகமாக சுருங்கிவருவதுடன் உயிரினச் சூழலுக்குப் பாதிப்பினையும் ஏற்படுத்து கின்றன. அதாவது 1960 களில் 1647 ஹெக்டேயர், 1987 களில் 901 ஹெக்டேயர் ஆகவும்

*2014, 2018* களில் முறையே *685, 683* ஹெக்டேயராக வனப்பகுதிகளது பரப்பு வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன் தொண்டைமானாறு கடனீரேரி உயிர்ப்பல்வகைமை சூழலைப் பேணி வருகின்ற இயற்கையின் கொடை. கண்டல் தாவரங்கள், ஈரநிலப்பகுதிகள் என்பன இடம்பெயர் பறவைகளுக்கும் உள்ளூர் பறவைகளுக்கும் உகந்த இடமாக திகழ்கிறது. இப்பகுதிகளில் அண்மைக்காலங்களில் கண்டல் தாவரங்கள் விறகுத் தேவைக்காகவும் இராணுவ இருப்பிடம் அமைப்பதற்காகவும் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் திண்மக் கழிவுகள் கொட்டப்படும் பகுதிகளாகவும் இவை மாறிவருகின்றன. இதன்விளைவாக சூழல்சார் பிரச்சனைகள் பாரியளவில் ஏற்படுகின்றன. குறிப்பாக வல்லை, மண்டான் பகுதிகளில் கழிவுகள் கொட்டப் படுவதையும் கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வடகீழ் பருவக்காற்றுக் கால கரையொட்டிய நீரோட்டம் இந்திய கரையோரத்திலிருந்து கண்டமேடை வழியாக படிவுகளை கொண்டுவந்து வடமராட்சி கிழக்கு கரையோரங்களில் படிவுசெய்துவருகிறது. மணற்காட்டிலிருந்து அம்பன்வரை தாவரப்போர்வையற்ற அசையும் மணற்படிவினையும் அம்பன் முதல் குடாரப்பு வரை தாவர அடர்த்தியுள்ள நிரந்தர மணற்திடர்களையும் காணமுடியும். அந்தவகையில் இடம்சார் ரீதியில் மணற்காடு, குடத்தனை வடக்கு, அம்பன், நாகர்கோவில் கிழக்கு மற்றும் மேற்குப்பகுதிகளில் மணற்படிவுகள் அதிகமாகவும் பொற்பதி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, போக்கறுப்பு, கேவில் ஆகிய பகுதிகளில் குறைவான மணற்படிவுகளும் காணப்படுகின்றன. இப் பகுதிகளில் படிய விடப்படும் மணற்படிவுகள் மானிட கட்டிட நிர்மாணத் தேவைகளுக்கும் ஏற்றுமதிக்காகவும் பாரியளவில் சட்டவிரோதமாக அகழப்படுகின்றன. அதிலும் குறிப்பாக யுத்தத்தினால் பாரியளவில் சிதைவடைந்திருந்த உட்கட்டுமானங்கள் அண்மைக் காலங்களில் வேகமாக மீள்கட்டுமானத்திற்கு உட்படுத்தப்படுவதனால் இப்பகுதியில் இயற்கையின் மீள்உற்பத்தித்திறனுக்கு அதிகமாக மணல் நுகரப்படுதுடன் அதன் காரணமாக உவர்நீர் ஊடுருவல், தாவரப்போர்வைகள் அழிக்கப்படுதல், சூழல் சமனிலை குழப்பமடைதல் போன்ற பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. குடத்தனை, நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில் கிழக்கு, குடாப்பூர், அம்பன் போன்ற இடங்களில் அதிகளவான மணல் சட்டரீதியற்ற முறையில் அகழப்பட்டுவருகின்றன. மணல் அகழ்வுப் பகுதியிலிருந்து 500 மீற்றர் தூரத்திற்குள் விவசாய நிலம் காணப்படுவதனால் மணல் அகழ்வுகளினால் தரைக்கீழ்நீர் உவராக்கமடைந்து வருவதால் மணற்காடு, அம்பன், நாகர்கோவில் பகுதிகளில் விவசாய நடவடிக்கையிலும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. அத்துடன் மணற்காடு, குடத்தனை வடக்கு, அம்பன், நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில் மேற்கு ஆகிய பகுதிகளில் செறிவடைந்துள்ள தாவரப் போர்வைகள் மணலகழ்வு காரணமாக நீக்கப்படுகின்றன. இதனால் இப்பிரதேச காட்டுச்சூழல் உயிரினங்களுடைய பல்வகைமைத்தன்மை

பாதிக்கப்படுவதுடன் மண்ணரிப்பும் தூண்டப்படுகின்றது. அம்பன், நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் மேற்கு, மணற்காடு போன்ற இடங்களில் மணல் அகழப்படுவதன் காரணமாக மணல்அகழ்வுக்குழிகளினுள் வெள்ளப்பெருக்கின்போது மழைநீர் தேங்குவதாலும் கடல்நீர் ஊடுபுகுவதனாலும் வெள்ளப்பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

## 4. நிலப்பயன்பாடுகளிற்கிடையிலான முரண்பாடுகளும் அதனாலான சமூக பொருளாதார சுற்றுச்சூழல் பாதிப்புக்களும்

நகர மற்றும் அது சார்ந்த நிலப்பயன்பாடுகளில் துரிதமான திட்டமிடப்படாத நகராக்கச் செயற்பாடுகள் உற்பத்திசார் நிலப்பயன்பாட்டிலும் இயற்கைப் பாதுகாப்பு நிலப்பயன்பாட்டிலும் ஊடுருவுவதன் மூலம் வடமராட்சிப் பிராந்தியத்தின் பொருளாதார அபிவிருத்தி பேண்தகு நிலையில் அமையவில்லை. மாறாக இவை பின்வரும் சுற்றுச்சூழல் சமூக பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

- ✧ திட்டமிடப்படாத நகராக்கச் செயற்பாடுகள் காரணமாக குடியிருப்புக்கள் நெருக்கமடைந்து வருகின்றன. உதாரணமாக வல்வெட்டித்துறை, பருத்தித்துறை என்பவற்றில் இந்நிலையை அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.
- ✧ நகராக்கத்தின் மூலம் நிலநிரப்புகை, நிலமீட்பு செய்யப்படுவதால் மழைநீர் வெளியேற்றப்படுவது பாதிக்கப்படுகின்றது. இதனால் தாழ்நிலப்பகுதிகளில் நீர்தேங்கி அருகிலுள்ள குடியிருப்புக்களிலும் வெள்ளப்பாதிப்பினை ஏற்படுத்துகிறது.
- ✧ விவசாய நிலங்கள் குடியிருப்பு நிலமாகவும் வர்த்தக வியாபார நிலமாகவும் மாற்றப்படுகிறது. கடனீரேரியை அண்மித்த வயல்நிலங்கள் நிலநிரப்புகை செய்யப்பட்டு குடியிருப்பு நிலமாக மாற்றப்படுவதனால் நெல் உற்பத்தி குறைவடைகின்றது. கரவெட்டி, கரணவாய், துன்னாலை பிரதேசங்களில் வயல்நிலங்களில் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுவருகிறது.
- ✧ நகராக்க செயற்பாட்டினால் உள்நாட்டு நீர்நிலைகள், கடனீரேரிசார் நீரின் தரம் குறைவடைகிறது. குறிப்பாக கடனீரேரி அண்டிய பகுதிகளில் காணப்படும் வயல்நிலங்கள் மற்றும் தாழ்நிலப்பகுதிகள் என்பன மழைக்காலங்களில் அதிகம் நீரினைத் தேக்கி வைத்திருப்பதன்காரணமாக இங்குள்ள நிலத்தடி நீரினை சேமிப்பதில் அதிக பங்காற்றுகின்றன. இவ்வாறான நிலையில் நகராக்கம் காரணமாக வயல்நிலம் தாழ்நிலங்களில் நிலமீட்பு, நிலநிரப்புகை என்பன மேற்கொள்ளப்படுவதனால் உள்நாட்டிலிருந்து நீர் வேகமாக மழைக் காலங்களில் கடனீரேரியை சென்றடைவதனால் உள்நாட்டில் நீர்தேங்கி நிற்கும் அளவு, காலம் குறைவதால் நிலத்தடிநீர் சேமிப்பும் குறைவடைகின்றது. இதனால் உள்நாட்டின் நீரின்தரம் குறைதல், உவர்நீராதல் என்பன ஏற்படுகின்றது.

- நகராக்கச் செயற்பாட்டால் வடமராட்சிப் பிராந்தியத்தில் அதிகளவு புதர்கள், தாவரப்போர்வைகள், பனைவளம் அழிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பனைகள் நகராக்கத்துக்காக சட்டவிரோதமாக அழிக்கப்படுகின்றது.

- திண்மக்கழிவுகள் திட்டமிடப்படாத வகையில் மண்டான் வெளியில் கொட்டப்படுவதும் எரியூட்டுவதும் பாரிய சூழல் மாசடைவினை ஏற்படுத்து வதுடன் அருகிலுள்ள விவசாய நிலங்களுக்கு பொலித்தீன் பிளாஸ்ரிக் கழிவுகள் காற்றின்மூலம் பரவுவதால் நிலம் தரமிழக்கப்படுகின்றது.

- வடமராட்சி கிழக்குப் பகுதியில் காணப்படும் மணற்குன்றுகள் நகராக்க மற்றும் கட்டுமானச் செயற்பாடுகளுக்காக சட்டவிரோதமாக அகழப்படுவதனால் மண்ணரிப்பு, கடல்நீர் ஊடுபுகுதல், வெள்ளப்பெருக்கு, தாவரப்போர்வை அழிக்கப்படுதல், உயிர்ப்பல்வகைமை பாதிப்படைதல், நீர் உவராதல் என்பனவும் ஏற்படுகின்றன.

## 5. வடமராட்சி பிராந்தியத்தின் பேண்தகு பொருளாதார அபிவிருத்திக்கான சில சிபாரிசுகள்

பேண்தகு பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்தக்கூடிய இம்மூன்று நிலப்பயன்பாட்டு பிரிவுகள் ஒவ்வொன்றும் அதற்கான வரையறுத்த எல்லைக்குள் அபிவிருத்தி நடவடிக்கையினை முன்னெடுப்பதனூடாக பேண்தகு அபிவிருத்தியினை ஏற்படுத்தமுடியும். இம்மூன்று நிலப்பயன்பாடுகளது தற்போதைய தளநிலைமைகளை ஆராய்ந்து அவை ஒவ்வொன்றுக்குமான எல்லையிலிருந்து ஏனைய நிலப்பயன்பாடு களுக்குள் ஊடுருவாத வகையிலான பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போதே பேண்தகு பொருளாதார அபிவிருத்தியினை மேற்கொள்ளமுடியும். நகராக்க செயற்பாடுகள், உற்பத்தி நடவடிக்கைகள், இயற்கைப் பாதுகாப்பு பிரதேசங்கள் என்பவற்றின் மீதான மானிட நடவடிக்கையில் சமனிலை பேணப்படுவதன் மூலமே உயிர்ப்பல்வகைமைச் சூழல், மானிட நல்வாழ்வு என்பவற்றைப் பேணும்வகையிலான பொருளாதார அபிவிருத்தியினையும் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியினையும் வடமராட்சிப் பிராந்தியத்தில் ஏற்படுத்த்முடியும். அந்தவகையில் இம்மூன்று நிலப்பயன்பாடுகளில் பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்த பின்வரும் பொருளாதார அபிவிருத்தி திட்டமிடல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

### 5.1. உற்பத்தி சார் நிலப்பயன்பாட்டில் மேற்கொள்ளக்கூடிய திட்டங்கள்

- விவசாய நிலப்பகுதியில் நகராக்க மற்றும் குடியிருப்பு ஊடுருவல்களைத் தடுத்தல் வேண்டும்.

- அனைத்து நெல் உற்பத்திக்கு வாய்ப்பான அனைத்து நிலங்களிலும் மானாவரி நெற்செய்கையினை ஊக்குவிப்பதோடு சிறு போகத்தில் நீர் வசதி கிடைக்கக் கூடிய பகுதிகளில் குறுகியகால பயிரினங்களை அல்லது கால்நடைக்கான புற்களை பயிரிட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- ✧ விவசாய நடவடிக்கையில் பாரிய பிரச்சனையாக அமைவது புகையிலைச் செய்கைத் தடையாகும். அந்தவகையில் பிரதான பணப்பயிராகத் திகழும் புகையிலைக்கு மாற்றீடாக மிளகாய், வெங்காயம், மரக்கறிப்பயிர்களை பயிரிடல் வேண்டும். அத்துடன் வேறு பயிர்களும் ஆய்வு செயற்பாடுகளுக்கூடாக மாற்றுப்பயிராக சிபாரிசு செய்யப்படவேண்டும். அத்துடன் வடமராட்சி தெற்கு மேற்கு மற்றும் வடமராட்சி வடக்குப் பகுதிகளில் செறிவான பயிர்ச்செய்கை இடம்பெறுவதுடன் நவீன விவசாய நுட்பமுறைகளையும் பயன்படுத்த வேண்டும்.

- ✧ வடமராட்சி கிழக்குப் பகுதி மணல்சார் பகுதியாக அமைவதால் இங்கு கற்றாழை செய்கையினை மேற்கொள்வது அப்பகுதியின் பொருளாதார விருத்திக்கு சாதகமாக அமையும். ஏனெனில் அண்மைக்காலத்தில் மருத்துவம், அழகு சாதனப் பொருட்களின் உற்பத்தி போன்றவற்றுக்கு உதவுவதால் அதிகளவான சந்தைவாய்ப்பு, கேள்வி என்பன கற்றாழை செய்கைக்கு காணப்படுகின்றது. அத்துடன் இப்பகுதியில் மரமுந்திரிகை, பேரீச்சம்பழ செய்கையினையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

- ✧ பனை, தென்னை ஆகிய மரப்பயிர்களது மீள்நடுகையினை ஊக்குவித்தல் வேண்டும். கடற்கரை சார்ந்த பகுதிகளில் தென்னையும் ஏனைய பகுதிகளில் பனையினையும் மீள்நடுகை செய்யும் திட்டம் அமுல்படுத்தவேண்டும். வதிரி பகுதியில் அமைந்துள்ள எண்ணெய் ஊற்றும் ஆலையினது செயற்பாட்டினை மேலும் விருத்தியடையச்செய்வதுடன் அவற்றின் மூலம் வெளியேற்றப்படும் கழிவுகளை விலங்குணவுகளாக சந்தைப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். அத்துடன் இது போன்ற ஆலைகளை சனப்பரம்பலுக்கேற்ற வகையில் வேறு பல இடங்களிலும் அமைக்கவேண்டும்.

- ✧ வடமராட்சி பிரதேசம் கடல்சார் வளங்களை அதிகம் உள்ளடக்கியிருப்பதால் இப்பகுதியில் இயற்கை மீள்உற்பத்தி திறனுக்கேற்ப மீன்பிடி செயற்பாடு நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி இடம்பெறவேண்டும். பிடிக்கப் படுகின்ற மீன்களை பழுதடையாமல் பேணுகின்ற வகையில் ஐஸ்கட்டித் தொழிற்சாலையினை வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு கரையோரம் சார்ந்த பகுதிகளில் விருத்தி செய்யப்படுவதுடன் சந்தை வாய்ப்பினையும் விருத்தி செய்து ஏற்றுமதி செயற்பாட்டினையும் துரிதப்படுத்தவேண்டும்.

- ✧ அத்துடன் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை துறைமுகங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். இதனூடாக மீன்உற்பத்திக்கான சந்தைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதியினை சிறப்பாக மேற்கொள்ளமுடியும். அத்துடன் இந்தியாவுக்கான கப்பல் போக்குவரத்தினையும் ஏற்படுத்தி சமூக நல்லுறவினையும் அயல் நாடுகளுடன் பேணமுடியும்.

- காலநடைவளர்ப்பு நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் ஊக்குவிக்கப்படுவதுடன் கால்நடை வைத்தியசாலைகள், பாற்பண்ணைகள், கோழிப்பண்ணைகள் உருவாக்கப்படுவதோடு அவற்றுக்கூடாக வினைத்திறனான ஏற்றுமதி செயற்பாடும் இடம்பெறவேண்டும்.

- பனைசார் கைத்தொழில் நடவடிக்கைகள் வதிரி, இமையாணன், நாவலடிப் பகுதிகளில் இடம்பெறவேண்டும். இதற்கூடாக அழகு சாதனப் பொருட்கள், உணவுப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் என்பவற்றை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யமுடியும். அத்துடன் திக்கம் வடிசாலையினையும் மீள அமைத்தல் வேண்டும்.

- இலக்கணாவத்தை பகுதியில் சிறிய அளவில் இடம்பெறும் மட்பாண்ட உற்பத்தியினை நவீன வடிவமைப்பிலான மட்பாண்ட கைத்தொழிலாக மேலும் விருத்தியடையச் செய்தல் வேண்டும்.

- தோல் சார் உற்பத்தி கைத்தொழிலினை வதிரியில் சந்தை வாய்ப்புக்கேற்ப மீளக் கட்டியமைத்தல் வேண்டும். இவற்றுக்கூடாக ரயர்களினது மீள்பயன்பாடு, பைகள், சப்பாத்துக்கள், காலணிகள் போன்ற பல்பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருக்கும்.

- வடமராட்சிப் பிராந்தியத்திற்கு தனித்துவமான பருத்தித்துறை வடை, வடகம், மோர்மிளகாய், பழரசம், பனாட்டு போன்ற உணவு உற்பத்தியினையும் சந்தைவாய்ப்புக்கேற்ப விருத்திசெய்தல் வேண்டும்.

- வடமராட்சிப் பகுதியில் அதிகளவு பெண் தலைமை குடும்பங்கள் காணப்படுவதால் இவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் வகையில் ஆடைக் கைத்தொழிற்சாலை அமைக்கப்படவேண்டும். இதற்கு மண்டான் பகுதி ஏற்புடையது. இங்கு உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தும் முகவர் நிலையங்களை வடமராட்சியின் ஏனைய பகுதிகளில் பரவலாக அமைக்க வேண்டும்.

## 5.2. நகர மற்றும் அது சார்ந்த நிலப்பயன்பாட்டில் மேற்கொள்ளக்கூடிய திட்டங்கள்

- நகர அந்தஸ்து பெற்ற பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரங்கள் நகராக்க விருத்தியில் மந்தகதி செயற்பாட்டைக் கொண்டிருப்பதைத் தவிர்த்து திட்டமிட்ட வகையில் நகராக்க செயற்பாட்டை முன்னெடுக்கவேண்டும்.

- அதேபோல் வேகமாக நகரமயமாகிவரும் நெல்லியடியில் தன்னிச்சையாக கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், சேவை நிலையங்கள் அமைக்கப் படுவதைத் தடுத்து திட்டமிட்ட வகையில் நகராக்கச் செயற்பாடு இடம்பெறவேண்டும். அத்துடன் நெல்லியடியினை மைய நகரமாகக் கொண்டு

உடுப்பிட்டி, வல்வெட்டி, கரவெட்டி, புலோலி போன்ற இடங்களை உபநகரங்களாக திட்டமிட்டு விருத்தி செய்யவேண்டும்.

- நெல்லியடி மைய நகரப்பகுதிகளைச் சூழவும், உருவாக்கப்படும் உபநகர்ப் பகுதிகளை சூழவும் பசுமைப்போர்வைகளை அமைப்பதனூடாக நகர வெப்பத்தீவு உருவாக்கம், சூழல் மாசடைதல் போன்ற சுற்றுச்சூழல் பாதிப்புக்களிலிருந்தும் விடுபடமுடியும்.

- நகராக்கப்பகுதியில் விவசாய நிலங்கள் பாதுகாக்கப்படவேண்டிய நிலங்கள் என்பவற்றை நோக்கி நகராக்க செயற்பாடுகள் ஊடுருவுவதை தவிர்க்கும் பொருட்டு கிடையான நகராக்கச் செயற்பாடுகளை தடுத்து குத்தான நகராக்க செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும்.

- மந்திகை ஆதார வைத்தியசாலை, ஊறணி வைத்தியசாலை என்பவற்றின் மனித மற்றும் பௌதிக வளம் என்பன மீளமைக்கப்படவேண்டும். அத்துடன் உருவாக்கப்படுகின்ற ஏனைய உபநகரப்பகுதிகளிலும் வடமராட்சி கிழக்கு பகுதியிலும் புதிய வைத்தியசாலைகள் நிறுவப்படவேண்டும்.

- கல்வியில் பல சாதனை படைத்த வடமராட்சிப் பிராந்தியத்தின் இன்றைய வீழ்ச்சிநிலையை தடுத்து மீளவிருத்தியடைய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அத்துடன் கல்விக்காக யாழ்நகரை நோக்கி மாணவர்கள் இடம்பெயர்வதைத் தடுத்து வடமராட்சியிலேயே சிறந்த கல்விக்கூடங்களை அமைத்தல் வேண்டும். ஆங்கிலம் மற்றும் தொழில் வாய்ப்பு கல்வி நிறுவனங்களை அமைப்பதனூடாக அறிவுசார் பொருளாதாரத்தினையும் வடமராட்சியில் விருத்தியடைய செய்யமுடியும்.

## 5.3. பாதுகாக்கப்படவேண்டிய நிலப்பயன்பாட்டில் மேற்கொள்ளக்கூடிய திட்டங்கள்

- தொண்டைமானாறு கடனீரேரி பகுதிகளில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுப்பதுடன் நன்னீர் மீன்பிடி செயற்பாட்டை முன்னெடுக்கவேண்டும்.

- இக்கடனீரேரி பகுதிகளில் காணப்பட்ட கண்டல்தாவரங்கள் ஏனைய நீர்த்தாவரங்கள் விறகுத்தேவைக்கும் இராணுவமுகாம்கள் அமைப்பதற்கும் வேறு மானிடச் செயற்பாட்டிற்கும் அழிக்கப்படுவதைத் தடுத்து மீள்நடுகை செய்யப்படவேண்டும். இதன்மூலம் இடம்பெயர் பறவைகளது வருகையினை அதிகரிப்பதுடன் உயிர்ப்பல்வகைமையினையும் பேணமுடியும். சுற்றுலாத் துறையினையும் விருத்திசெய்யமுடியும்.

- 1990களில் முன்மொழியப்பட்ட உவர்நீரை நன்னீராக்கும் திட்டம் விவசாய நடவடிக்கையினை பாதிக்காத வகையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- ✧ சுண்டிக்குள பறவைகள் சரணாலயப்பகுதியில் காடழிப்பு, மனித அத்துமீறல் செயற்பாடுகளை தடுத்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பறவைகளது இயல்பான அசைவுக்கு வழிவகுப்பதுடன் அதனை சிறந்த சுற்றுலா மையமாக விருத்தி செய்யமுடியும்.

- ✧ மண்டான் வெளிப்பகுதியில் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தினை அமைக்கவேண்டும். இதன்மூலம் கொட்டப்படுகின்ற கழிவுகளை உக்கக்கூடிய உக்காத கழிவுகள் என வேறுபிரித்து உக்கக்கூடிய கழிவுகளிலிருந்து கூட்டெரு தயாரிப்பும் உக்காத கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்துவதனூடாக பயன்மிக்க பொருட்களின் உற்பத்தியினையும் மேற்கொள்ளமுடியும். இதனூடாக வடமராட்சி பிராந்தியத்தின் சுற்றுச்சூழல் சுத்தமாக்கப்படுவதுடன் அப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

- ✧ வடமராட்சி கிழக்கில் அழிவுக்குள்ளான சவுக்குமரங்கள், தாழை மரங்கள் என்பவற்றை மீள்நடுகை செய்வதன் ஊடாக அப்பகுதியின் பெறுமதி சார் மணல் மண் அரித்தலை தடுக்கமுடியும். அத்துடன் இப்பகுதிகளில் நிலம் மற்றும் நீர் உவராதலைத் தடுப்பதற்கு கடற்கரையோரங்களை அண்டி கண்டல் தாவரங்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன்மூலம் கண்டல் தாவரங்கள் உவர்நீரை உள்வாங்கச்செய்வதால் ஏனைய பகுதிகளில் உவர்நீர் ஊடுருவலைத் தடுக்கமுடியும்.

- ✧ வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில், வல்லிபுரம் ஆகிய பகுதிகளில் காணப்படும் சிலிக்கா மணல் கண்ணாடி உற்பத்திக்கான மூலப்பொருளாக அமைவதால் இப்பகுதியில் கண்ணாடித் தொழிற்சாலையினை அமைக்கமுடியும்.

- ✧ கட்டுமான தேவைக்கான பெறுமதிமிக்க மணல்மண் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுத்து மணலின் இயற்கை மீள்உற்பத்தித் திறனுக்கேற்ற வகையில் திட்டமிட்டு மணல் அகழப்படவேண்டும். அத்துடன் கட்டுமான செயற்பாட்டில் மணலிற்கான பிரதியீட்டுப்பொருளினை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.


- ✧ செல்வச்சந்நிதி, வல்லிபுரக்கோவில், இயற்கையான சுண்ணாம்பு கற்பாறை நிலவுருவங்களை பிரதிபலிக்கும் கெருடாவில், சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம், பருத்தித்துறை வல்வெட்டித்துறை கடற்கரை, வங்காலை கடற்கரை, தொண்டைமானாறு மற்றும் வடமராட்சிக் கடனீரேரி என்பவற்றை சிறந்த சுற்றுலாத்தளமாக மாற்றுவதனூடாக அதிகளவு வருமானத்தினை ஈட்டமுடியும்.

## 6. முடிவுரை

வடமராட்சிப் பிராந்தியத்தில் உற்பத்தி நடவடிக்கையினை மேற்கொள்ளக்கூடிய நிலப்பயன்பாடு, நகர மற்றும் அது சார்ந்த நிலப்பயன்பாடு, பாதுகாக்கப்படவேண்டிய நிலப்பயன்பாடு ஆகிய மூன்று பிரிவுகளுக்குள்ளான அபிவிருத்திகள் எந்தவொரு முரண்பாடுமற்ற நிலையில் மேற்கொள்ளும்போதே பேண்தகு அபிவிருத்தியினை இப்பகுதியில் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். இந்நிலையில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம், 2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சுனாமி என்பவற்றால் இப்பகுதியில் பொருளாதார அபிவிருத்திகள் மிகவும் வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது. யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் பொருளாதார அபிவிருத்திகளும் பேண்தகு அபிவிருத்தியை நோக்காகக்கொள்ளாமல் தன்னிச்சையான அபிவிருத்தித் திட்டமிடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக நகராக்க செயற்பாடுகள் ஏனைய உற்பத்திசார் நிலப்பயன்பாடுகளிலும் பாதுகாக்கப்படவேண்டிய நிலப்பயன்பாடுகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன. இச்செயற்பாடுகள் தற்காலத்திலே வெவ்வேறு சமூக சுற்றுச்சூழல் பாதிப்பினை ஏற்படுத்துவதுடன் பொருளாதார அபிவிருத்திகளில் தளம்பல் நிலையினையும் ஏற்படுத்துவதாக அமையும். இந்நிலையினைத்தடுத்து வடமராட்சிப் பிராந்தியத்தின் பேண்தகு பொருளாதார அபிவிருத்தியினை மேற்கொள்ளவேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.



வடமராட்சியின் நிர்வாகப்பிரிவுகள்
N
பிரதான வீதி
சிறு வீதி
கிராம சேவகர் பிரிவுகள்
வடமராட்சி தெற்கு மேற்கு
வடமராட்சி கிழக்கு
வடமராட்சி வடக்கு
0 4 8 16 Kilometers

உரு : 1


வடமராட்சிப் பிரதேச சனத்தொகை அடர்த்தி
N
0 - 500 பேர்
501 - 1000 பேர்
1001 - 2000 பேர்
2001 - 3000 பேர்
3001 - 11000 பேர்
0 4 8 16 Kilometers


உரு : 2

## வடமராட்சிப் பிரதேச நிலப்பயன்பாடு




உரு : 3

## வடமராட்சியின் நிலைபேண் பொருளாதார அபிவிருத்திக்கான நிலப்பயன்பாடுகள்




உரு : 4

# கரவை வேலன் கோவை காட்டும் கரவெட்டி

கலாநிதி (திருமதி) நாளினி கணபதிப்பிள்ளை

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஈழமானது தனக்கென ஒரு தனித்துவத்தையும் பன்முகப் பரிமாணத்தையும் கொண்டு விளங்குகிறது. சங்கத் தமிழ் வளர்த்த புலவர்களான முரஞ்சியூர் முடிநாகராயர், ஈழத்துப் பூதந்தேவனார் முதல் இன்றுவரை தமிழிற்கு பெருமை சேர்ப்பவர்களாக ஈழத்து தமிழ் அறிஞர்கள் திகழ்வது வரலாறு கண்ட உண்மை. எனினும் கால விகற்பத்தால் ஈழத்தின் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அழிந்தொழிந்து போகவே யாழ்ப்பாணத்தரசர் காலத்திலிருந்தே வரலாற்றை ஆரம்பிக்கும் துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டது. எனினும் தொல்பொருளாய்வுகள் ஈழத்தில் சங்ககாலத் தொன்மையை நிறுவியிருப்பதும் புவிச் சரிதவியலாளர்கள் மயோசின் காலத் தொன்மையை இனம் கண்டிருப்பதும் நோக்கத் தக்கது. மேலும் திருமந்திரத்தில் 'சிவபூமி' என்றும் பட்டினப்பாலையில் 'ஈழத்துணவும் காழகத்தாக்கமும்" என்றும் திருமுருகாற்றுப்படையில் 'ஏழ்பனை நாடு' என்றும் முத்தொளாயிரத்தில் 'தொன்மாவிலங்கை' என்றும் குறிப்பிடப்படும் இலங்கையின் பெயரும் தமிழின் தொன்மையை பறைசாற்றுகிறது. சிவனொளிபாதமலை எனும் மாண்பினை கொண்ட ஒளி நாடு என்பதால் 'இலங்கை' எனவும் 'செங்கேழ் முருகன் வாழ் கதிர்காமத்தை கொண்டு விளங்குவதால் ஈழமெனவும் காரணப் பெயர் கொண்டு அழைக்கப்படும் இலங்கை அழகாபுரி எனவும் குபேரபுரி எனவும் குறிப்பிடப் படுதற்கு இலங்கை அரசன் இராவணனின் அண்ணனான குபேரனின் (இயக்கர் கோமானின்) நாடு என்பதே காரணமாகும்.

இத்துணை பெருமைமிகு இலங்கையின் சிரமென, மகுடமென புண்ணிய பூமியாம் யாழ்ப்பாணம் திகழ்கிறது. யாழில் வல்ல பாணனுக்கு பரிசாக கிடைத்த பதியாம் யாழ்ப்பாணம் மணற்றிடல் என்பதால் மணற்றி என்ற பெயரிலேயே இறையனாரகப் பொருளுரையின் உதாரணச் செய்யுட்களில் குறிப்பிடப்படுகிறது. மேலும் முதற் சங்கப் புலவராக விளங்கிய முரஞ்சியூர் முடிநாகராயர் யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடியாம் நாகர் குலத்தவர் என்பது பெருமைக்குரியது. இவ்வாறான சிறப்புக்களுடைய யாழ்ப்பாணப் பண்பாட்டினதும் மரபுகளதும் வாழ்விடமாக கருதப்படும் உயர்வுடையது வடமராட்சிப் பிரதேசம். இவ்வூர்ப் பெயரானது வட+மறவர் ஆட்சி எனும் காரணத்தால் வந்திருக்கலாம் என்பர். மேலும் சோழ நாட்டின் வட பகுதியிலிருந்து வந்த மறக் குடிகள் முதலில் குடியேறி நிலைத்த இடம் எனவும் யாழ் வாவியை அகலப்படுத்திய இடம் எனவும் பலவாறு கருதப்படுகிறது. வடமராட்சியின் உயிர்நாடியாக, பிரதி பிம்பமாக கருதப்படும் ஊராம் கரவெட்டி 'கற்றோர் நிறைந்த கரவெட்டி' எனப் புகழப்படுவது.

வடமராட்சி தெற்கு - மேற்கு, கரவெட்டி.

கரவெட்டி என்பது நில அமைவு, சமூக அமைவு என்பவற்றால் ஏற்பட்ட காரணப் பெயர் என்றே கூறலாம். நீர் நிலைகளின் ஓரமாக உள்ள கரைகளை வெட்டி அமைத்த ஊர் என்பதாலும் காரைப் பற்றைகளை வெட்டிப் புதுக்கிய ஊர் என்பதாலும் கரவெட்டி எனப்படும் இவ்வூரானது மனப்பாங்கில் கரவற்ற மக்கள் வாழும் ஊர் எனவும் கருதப்படுகிறது. கரவெட்டி எனும் பெரிய பிரதேசத்துள் துன்னாலை, கோயிற்கடவை, வதிரி, நவிண்டில், கரணவாய் எனும் பல கிராமங்கள் அங்கமாயுள்ளன. எனவே இலகு கருதி கரவெட்டியை கிழக்கு, மேற்கு, மத்தி, வடக்கு எனும் பிரிவுகளால் வகைப்படுத்தியுள்ளனர்.

கரவெட்டியை களமாக கொண்ட கரவை வேலன் கோவை கரவெட்டிக்கு அழியாப் புகழ் சேர்த்த இலக்கியமாக உள்ளது. உள்ளூர் பிரபுத்துவத்தை பாட எழுந்த இவ்விலக்கியம் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி, "நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய கரவை வேலன் கோவை" எனும் நூல் ஈழத்து இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் பெறுவதாகும். ஒல்லாந்தராட்சியின் கீழ் முதலியாராக, கடமையாற்றிய கரவெட்டியெனும் கிராமத்தைச் சேர்ந்த வேலாயுத முதலியார் பற்றிய இந்நூல் உள்ளூர்ப் பிரபுத்துவ பரம்பரை பற்றித் தோன்றிய முதல் ஈழத்து நூலாகும். சமயச் சார்பற்ற தேசிய நிலை நின்ற இலக்கியத்தின் கால்கோளாக இந் நூலைக் கொள்ள வேண்டும்." (ஈழத்து தமிழ் இலக்கியம், சென்னை தமிழ் புத்தகசாலை ப. 20) என்ற கருத்துக்கள் காத்திரமான அறிமுகமெனலாம்.

கரவை வேலன் கோவையை அணுகுமுன் இதன் நுழைவாயில்களான நூலாசிரியர், பாட்டுடைத் தலைவன் பெருமை, நூலாக்கச் சூழல் எனும் பின்புலங்களை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

**நூலாசிரியர் :**

கரவை வேலன் கோவை தந்த கவிஞர் ஒல்லாந்தர் காலப்பகுதியின் புகழ்பூத்த புலவரான நல்லூர் சின்னத்தம்பிப் புலவராவார் (1718 – 1780). இவர் உயர்ந்த கல்விப் பாரம்பரியமும் இலக்கண இலக்கியப் புலமையும் நிறைந்தவர். இவரது தந்தை வில்லவராய முதலியார் இலக்கிய ஆளுமையும் அரசியல் செல்வாக்கும் மிகுந்தவர். இப் பெருமையை, யாழ்ப்பாணப் பாரம்பரியம் பேணும் நடவடிக்கையாக ஒல்லாந்தரால் தொகுக்கப்பட்ட தேச வழமைச் சட்டத்தொகுப்பில் முதலாவது கையொப்பம் இவரது தந்தையாகிய தொன்பிலிப் வில்லவராய முதலியாருடையது என்பதால் அறியலாம். சின்னத்தம்பி புலவர் பாலப் பருவத்திலேயே பாடும் திறன் கைவரப் பெற்றவர். தந்தையை தேடிவந்த புலவர் ஒருவர் வீடு விசாரித்தபோது,

**"பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந்தாதிறைக்கும்<br>நன்பூதலத்தோர்க்கு நன்னிழலாம் – மின்பிரபை<br>வீசுபுகழ் நல்லூரான வில்லவராயன்றன் கனக<br>வாசலிடைக் கொன்றை மரம்"**

என்னும் வெண்பாவால் வழிகாட்டிய நுண்மதியாளன். கரவை வேலன் கோவை தவிர கல்வளை அந்தாதி,

மறைசை அந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு முதலிய நூல்களும் இவர்தம் கவித்துவத்தை வெளிப்படுத்துவன வாகும். மேலும் வண்ணார்பண்ணை யில் கணேசய்யர் எனும் பெருஞ் செல்வர் வீட்டில் நடைபெற்றுவந்த இராமாயணப் பிரசங்கத்தின்போது, ஒரு செய்யுளுக்கு யாருமே பொருள் சொல்ல முடியாதபோது தன் பத்து வயதிலேயே அச் செய்யுளை திறம்பட விளக்கி பண்டாரிக்குளம் வயலை பரிசிலாகப் பெற்றவர். இவர்தம் பாடும் திறன் கண்ட கரவை வாழ் வேலாயுத முதலியார் பாவகை பாடிய வாயால் கோவை பாடுக என வேண்டி பாடு வித்ததே கரவை வேலன் கோவை.

**நூல் உருவான சூழல்**

கரவைவேலன் கோவை பாடப் பட்டமை குறித்து செவிவழிச் செய்தி யொன்று வழங்குகிறது. கரவெட்டியில் வாழ்ந்த சேதுநிலையிட்ட மாப்பாண முதலியார் இரு மரபுந்துய்ய மாப்பாண முதலியார் ஆகிய இரு பிரபுத்துவ குடும்பங்களுக்கும் இடையே போட்டி யும் முரண்பாடும் நிலவியதென்றும் இருமரபுந்துய்ய மாப்பாண முதலியார் தமது குடும்பப் பெருமைகளையும் சிறப்புக்களையும் பாடுவிக்க விரும்பி நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் பாடும் புலமை கண்டு அவரை அழைத்தார் என்றும் கூறுவர். புலவர் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுவில் வழியாக கரவெட்டிக்கு வருவதை அறிந்த வேலாயுதபிள்ளை வரும் வழியில் கப்புதூவில் சொக்கட்டான் பந்தலிட்டு வரவேற்றார். (அவ்விடம் இன்றும் எல்லைமானப் பந்தலடி என வழங்குகிறது) புலவரை கட்டில் மேல் பச்சை வடம் விரித்து அமரச் செய்து உபசரித்தனர். புலவரும் மகிழ்ந்து

**"ஆனிப் பொற்கொடை வழங்கும் பெருமாள்தன்**
**கிளை வாழ்க அனேக காலம்**
**சேணிக்கை புகழ் சேது நிலையிட்ட**
**மாப்பாணன் சேயாம் வேலன்**
**காணிக்கைப் பிரதாப மாகவே**
**புலவர் தம் கட்டில் மீது**
**மாணிக்கப் பிரகாசப் பச்சைவட**
**விரித்தது நல் வடிவுதானே"**

எனப் பாடிக்கொண்டே அமர்ந்தார். அவரை உபசரித்தபின் வேலாயுத பிள்ளை தாம் வாழுமாறு தம்மேல் ஒரு பிரபந்தம் பாடும்படி வேண்ட புலவர் பாடிய பிரபந்தமே கரவை வேலன் கோவை. பல மணிகளை ஒரு கயிற்றில் கோர்க்க கோவை ஆவது போல களவொழுக்கத்தைக் கொண்டு கோக்கப்பட்ட மாலை ஆதலின் கோவை ஆயிற்று. 425 செய்யுட்களால் இக்கோவை பாடியபோது ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வோர் பொற் தேங்காய்கள் வழங்கியதுடன் வேறு பரிசில்களையும் வழங்கிய கொடைப் பண்பு கண்டு புலவரும் சங்ககாலத் தில் வாழ்ந்த முதல் இடை கடைச் சங்க வள்ளல்களை அடுத்து வைத் தெண்ணத்தக்கவர் எனும் பொருள் பட

**"இருபத்திரண்டாம் தொகை வாய்ந்த வள்ளல்**
**கரவையில் வேலன்"** (பா – 20)

எனப் பாடிப் புகழ்ந்தார்.

இக் கோவையானது நெடுங் காலம் ஏட்டுருவிலேயே இருந்தது. சுன்னாகம் குமாரசாமிப் புலவர் இப் பிரபந்தத்திலிருந்து சில செய்யுள்

களை மதுரை 'செந்தமிழ்' பத்திரிகையில் வெளியிடவே முகாந்திரம் தி. சதாசிவையர் தேடிப்பிடித்து அரும்பத வுரையோடு வெளியிட்டார். இந் நூலை ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தார் தமது சங்கப் பரீட்சையின் பாட நூலாக்கி மதிப்பளித்தனர். அந்நூல் செலவாகிவிடவே மீள் பதிப்பானது தென்கருணையூர் ஆழ்வாப்பிள்ளை ஆசிரியர் உரையுடன் வெளிவந்து இன்று எம் கைகளில் கிடைத்துள்ளது. ஆனாலும் 425 செய்யுட்களில் 175 செய்யுட்கள் அழிந்தொழிந்தமை பேரிழப்பாகும். எனினும் எஞ்சியவற்றையாவது பேணிப் பாதுகாக்க வேண்டியது கரவையூர் மக்களின் கடமையாகும். பிராந்திய பண்பாட்டு இலக்கியங்களில் முதலில் தோன்றிய இந்த கோவையானது தனி மனித சாதனைகளோடு சமூகத்தின் இயங்கியல் முறையினையும் கருப் பொருளாகக் கொண்டுள்ள காரணத்தால் கரவெட்டியின் வரலாற்று பதிகை என்றே கூறலாம்.

**இலக்கியப் பின்புலம்**

ஒவ்வோர் இலக்கியமும் சமூக பொருளாதார அரசியல் கட்டுமானத்தின் அடியாகவே தோற்றம்பெறுவது வரலாற்றுண்மை. இதனை இந்த இலக்கியத் தோற்றத்திலும் காண முடிகிறது. ஏனெனில் இவ்விலக்கியம் தோன்றிய காலமான ஒல்லாந்தர் காலம் திருப்புமுனையான காலமெனலாம். போர்த்துக்கேயராட்சி எனும் இருள் நிறைந்த காலத்தின் பின் நெகிழ்ச்சித் தன்மையுடையதாய் காணப்பட்டதுடன் யாழ்ப்பாணத்தில் நெடுங்காலம் பின்பற்றப்பட்ட ஆட்சி முறையை தழுவியதாய் அமைந்ததால் தமிழர்தம் சமூக பொருளாதார பண்பாட்டு நிலையை பேணும் ஆட்சியாயும் திகழ்ந்தது. சைவ வழிபாட்டு முறைக்கு கிடைத்த ஓரளவு சுதந்திரம் யாழ்ப்பாண மன்னராட்சிக் கால சமூகவியல் போக்குக்களை தொடரும் நிலையையுருவாக்கி அதன் தொடர்ச்சியாக நிலப்பிரபுத்துவ மீள் புத்துயிர்ப்புக்கும் வழிவகுத்தது. பெரும்பாலான அதிகாரங்கள் பதவிகள் இப் பிரபுத்துவ குடும்பங்களுக்கே ஒப்படைக்கப் பட்டன. அதேவேளை ஆளும் வர்க்க அனுசரணை பெற்றவரெனக் காட்ட அவர்கள் இயற்பெயர் முன் தொன், டொம் எனும் கிறிஸ்தவப் பெயரும் பின்னால் முதலியார், உடையார் எனும் பதவிப் பெயர்களும் இணைக்கப் பட்டன. எனினும் நிலப் பிரபுக் களிடையே அதிகாரப் போட்டிகள் நிலவின. இப் போட்டிகளால் தமது இருப்பையும் தொன்மையையும் நிலை நிறுத்த வேண்டிய தேவை காணப் பட்டமையும் இந்த இலக்கிய தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்தி இருக்கலாம். ஒல்லாந்தர் கால சமூக அரசியல் நிலை பற்றி யாழ்ப்பாணச் சரித்திரம் எனும் நூலில் ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை குறிப்பிடும் சில கருத்துக்களை இவ்விடத்தில் கூறுவது பொருத்தமாயிருக்கலாம்.

"ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை 4 பிரிவுகளாகவும் 32 கோவில் பற்றுக் களாகவும் பிரித்து அதிகாரம் செலுத்தி வந்தனர். 4 பிரிவுகளுக்கும் ஒவ்வொரு கோவில் பற்றுக்கும்

ஒவ்வொரு முதலியாரும் இறை சுவரும் நியமிக்கப்பட்டனர். (ப-149)

இதில் முதலியாரின் கடமைக ளாவன தத்தம் பிரிவுகளில் நடக்கும் சங்கதிகளை விசாரித்து காலத்துக்கு காலம் அறிக்கைப் பத்திரம் அனுப்பு வதும் எவ்வேலைகளை நடத்த வேண்டுமோ அவற்றை நடத்துவதுமே ஆகும். (ப-150)

தலைமைக்கார உத்தியோகங்கள் அதிகமாக வெள்ளாளருக்கே கொடுக் கப்பட்டன. மேயொறாலுக்கும் முதலி யார்களுக்கும் கண்ணியமும் அதிகார மும் பெருகவே வேளாளர் செல்வாக் கை குறைப்பதற்காக ஓரிடத்தில் இரு வேளாளரை தலைமைக்காரராக நியமிக்கப்படாதென்றும் மூன்று வருடத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டும் என்றும் கட்டளை உண்டாக்கினர். (ப-191)

மேலும் பறங்கியர் தம் காலத்தில் தமிழரசர் ஆட்சியில் கடற்படை அதிபதி களாக இருந்த கரையாரத் தலைவருக் கும் முதலியார் பட்டமும் கண்ணிய மான உத்தியோகங்களும் கொடுக்கப் பட்டது. அரசிறைப் பகுதிக்கு வேளாண் தலைவனாகிய பூதந்தம்பி முதலியை யும் நிருபம் பகுதிக்கு கரையார் தலைவர் (குருகுல தலைவன்) மனுவல் அந்தி ராசியையும் நியமித்து அவனுக்கு முதலியார்ப் பட்டம் அளித்தனர். இருவரையும் ஒல்லாந்தர் மந்திரிமா ராகப் பாவித்து அவர்களை வினாவியே அரசு செய்துவந்தனர். (ப-167)

இச் செயற்பாடுகள் காரணமாக பரம்பரையாக முதலியாராக கடமை யாற்றிய வேளாளர் குலத்தவர்களுக்கு ஒல்லாந்தர் முன் தமது புகழை நிலை நாட்டுவது காலத்தின் கட்டாயமா யிற்று. மேலும் தமக்குள்ளும், வேறு குலத்தவருடனும் ஏற்பட்ட பதவிப் போட்டிகள் காரணமாக தம் பரம்பரைப் பெருமையை கூறும் இலக்கியங்களை, அதாவது வாழ்விக்கும் இலக்கியங் களை உருவாக்கும் முயற்சியில் ஈடு பட்டனர். அதுவும் கரவைவேலன் கோவை தோன்ற வித்திட்டிருக்கலாம் எனக் கருதக்கிடக்கிறது.

**பாட்டுடைத் தலைவன் வாழ்வியல்**

கரவை வேலன் கோவையில் இடம்பெறும் பாடல்களில் பாட்டுடைத் தலைவன் கரவெட்டியில் முதலியா ராகத் திகழ்ந்த சேதுநிலையிட்ட மாப்பாண முதலியாரின் மகனான வேலாயுதபிள்ளை என்பதை,

**"சேது நிலையிட்ட மாப்பாணனின் றருள்செல்வன் கலை**
**ஓதும் வரிசைக் கரவையில் வேலன்"**

(பா-9)

ஆரம்பத்திலேயே அறிமுகம் செய்ததுடன் குலப்பெருமையை பல வேறு பாடல்களில் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. தமிழரசர்களைப் போல நதியோடு தொடர்புபடுத்தி குலப்பெருமை கூறுவது இக் காலத்தி லெழுந்த வேறு இலக்கியங்களிலில் லாத பண்பாகும். கங்கைநதிக் குலம் என்பதையும் வேளாளர் குலத்தவர் என்பதையும்

**"கங்கா குலமணி வேலன்"**

(பா-62)

**"தூங்க மேழி கொண்ட வேளாளர் வேந்தன்
கங்கா குலத்துதித்த கரவைவேலன்"**

(பா-23)

**"கங்கை குலத்துதித்த கரவையில் வேலன்"**

(பா-148)

**"நதிக்குலவேந்தன் தமிழ்க் கரவையில் வேலன்"**

(பா-315)

**"மந்தாகினிக்குல வேலன் கரவை"**

(பா-318)

என பல்வேறு பாடல்களில் குறிப்பிட்டு குலப்பெருமையை பறைசாற்றுகிறார். மேலும் இவர் இற்றைக்கு ஏறக்குறைய 1780ற்கு முன் பின்னாக வாழ்ந்திருக்க லாம் என்பதனை கரவெட்டி வென்றி பாகுதேவன் குறிச்சிக்குரிய அக்கால காணித் தோம்பில் சில நிலங்களின் சொந்தக்காரனாக சேதுநிலையிட்ட மாப்பாண முதலியார் வேலாயுத பிள்ளை எனும் பெயர் இடம்பெற்றதா லறியலாம். இவர் பரம்பரையே பெருமைக்குரியது என்பதுடன் புகழ்பூத்த மகனை வாரிசாக கொண்டமைந்த சிறப்பினையும்

**"தாரணி மெச்சிய சிற்றம்பலவனைத் தந்த தந்தை
போரணி வாகைக் கரவை"**

(பா-11)

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலும் இவரது பரம்பரையில் வந்தவரே பின்னாளில் தென்மராட்சி மணியகாரராக இருந்த சிற்றம்பலம் (சித்த மணியம்) என்பதும் அவரும் கரவெட்டியின் கல்வி வளர்ச்சிக்காய் கல்லூரிகள் அமைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேலாயுத முதலியார் அன்ன தானம் முதலான சமூகப் பணிகளில் ஈடுபட்டதுடன் அதற்கேதுவாக ஏழு மடாலயங்கள் கட்டுவித்தார் என்றும் அவைகளுள் சில அழிந்துபோயின என்றும் தாழக்குழி மடம், தம்பான் மடம் எனும் இரண்டு மாத்திரம் இன்று முள்ளன என்பர். மேலும் இவர் "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்ற பழமொழி வழி வாழ்ந்தமையை இவருக்கு சொந்தமாக உள்ள திரை கடற் புரவி, சிங்காரப் புரவி எனும் இரு கப்பல்களால் அறியமுடியும். மேலும் இவ்வாறு கப்பலோட்டிய தமிழராய் வாழ்ந்தமையை

**"பாய் பரியூரும் கரவையில் வேலன்"**

(பா-211)

**"அடற் பரியேறும் கரவையில் வேலன்"**

(பா-102)

என்ற பாடல் வரிகள் இயம்புகின்றன.

இவர் காணி பூமிகளுக்கு அதிபதி என்பதால் 'வேலமகுபதி' என்றும் தந்தை போல பெருஞ் செல்வந்தர் என்பதால் 'வேலப்ப முதலி' என்றும் தாய் போல விருந்தோம்பியதால் 'வேலாத்தை உடையார்' என்றும் அழைக்கப்பட்டார். இவர் புலவர் போற்றி வாழ்ந்த காரணத்தாலும் அரிய செயல்கள் செய்ததாலும் ஊரின் புகழோங்கச் செய்தார்.

**"திசை எங்கும் புகழ் கரவை"**

(பா-51)

**"தரை பொங்கு கீர்த்தி கரவையில் வேலன்"**

(பா-118)

**"தரையே மதிக்கும் கரவையில் வேலன்"**

(பா-22)

என்ற பாடலடிகள் யாவும் கரவெட்டி யின் புகழோங்கு தன்மையை காட்டு கின்றன. இத்தகைய கீர்த்தியுடைய கரவெட்டியின் சிறப்புக்களை கரவை

வேலன் கோவையூடாக நோக்கு வோம்.

### இயற்கை வளம்

இயற்கை எழில் கொஞ்சும் பூமி யாக கரவெட்டி கரவை வேலன் கோவையில் சித்திரிக்கப்படுகிறது. நெல் விளையும் பூமியாகவும் கரும்பு வேலிகளையுடைய நிலங்களும் ஓங்கி உயர்ந்து நிற்கும் பாக்கு மரங்களும் அருகேயுள்ள உப்பங்கழியிலிருந்து பாயும் விரால் மீன்களும் கொண்ட வளமான ஊராகவும் காணப்படுகிறது. மேலும் நீர் வளம் காரணமாக நெற் பயிர்கள் ஓங்கியுயர்ந்து விளங்கு கின்றன என்பதை கூறும்

**"விண்ணாக்கும் சாலியின் பைந்தேறலுக்கு வயல்வாய்**
**அண்ணாக்கும் பண்ணைக் கரவை"** (பா-14)

பாடலடிகள் கற்பனைச் சிறப்பும் கவித்துவமும் மிக்கனவாகும். வயல் களெல்லாம் மழை வளம் காரணமாக நீர் நிறைந்திருப்பதால் சங்குகள் தவழ் வனவாக இருப்பதை

**"சங்கந் தவழும் வயல்சூழ் கரவை"** என்றும் (பா-42)

கரும்புகள் செழித்து வளர்ந்து வேலி யாக இருப்பதனை,

**"கரும்பாலை வேலிக் கரவையில்"** என்றும் (பா-104)

**"கரும்பும் நெல்லும் செழிப்புறு கரவை"** என்றும் (பா-46)

வர்ணிக்கிறார். கமுக மரங்களின் பாளைகளில் வரால் மீன்கள் பாயும் அழகினை

**"கான்றாவும் பச்சிளம் பூகதம்பாளையில் கன்னி வரால்**
**தின்றாவும் பண் கரவையில்"** (பா-15)

என்ற பாடலடிகளால் சித்திரிக்கிறார். இத்துணை அழகிய கிராமமான கரவெட்டி சமயப் பாரம்பரியத்தில் மேன்மையுடன் திகழ்ந்த பிரதேசமாக விளங்குவதை இப்பிரபந்தத்தினூடே நோக்குவோம்.

### சமயப் பாரம்பரியம்

ஒல்லாந்தர் சமயப் பொறையுடன் நடந்தமையால் சைவசமயம் அடைந்த சுதந்திரத்தின் பிரதிபலிப்பை நாம் கரவை வேலன் கோவையூடாக கரவெட்டியில் காணமுடிகிறது. யாழ். குடாநாடெங்கும் பர சமயப் பரம்பல் காணப்பட்ட போதும் கரவெட்டியில் மட்டும் நிலப் பிரபுக்களின் செயற்பாட் டால் சற்றே எட்டியிருந்ததெனலாம். இதற்கு,

**"பிறசமைய ஆதபனுயர் வேலன் கரவை"** (பா-134)

எனும் பாடலடிகள் சான்றாகும். இங்கு பிற சமய இருளகற்றும் சூரியன் எனக் கூறிய விளக்கம் பொருத்தமானது.

சமய வளர்ச்சி நோக்கில் கோவில் களில் பூசை செய்வதற்காக அந்தணர் களை அழைத்து வந்து தெய்வ வழிபாட்டில் ஈடுபடுத்தியதுடன் அவர் களுக்கு வேண்டிய உதவியும் செய்து பொன்னும் வழங்கியமை பற்றிய செய்தியை,

**"ஏழு முகிலதன்னிலிரண்டென புசுரர்க் கென்றும் தெண்ணீர்**
**விழுமிய பொன்பொழி வேலன் கரவையில்"** (பா-72)

எனும் பாடலடியினூடாக கண்டு கொள்ள முடிகிறது. இங்கு ஆவர்த்தம், புட்கலாவர்த்தம் எனுமிரு முகில் போல

அந்தணர்க்கு என்றும் கொடை வழங்கும் பண்பும் உணர்த்தப்படுகிறது. அந்தணர் வருகையோடு வேள்வி, யாகம் ஆகிய செயற்பாடுகளும் கரவெட்டியில் ஓங்கி வளர்ந்தமையை

**"மேதகு வேள்விக் கரவையில்"** (பா-105)

**"எழுபாரில் சதமகத்தான் (100 யாகம் செய்தவன்) அனைய கரவையில்"** (பா - 130)

எனும் பாடல்கள் கூறுகின்றன. அதே வேளை அதற்கு அடிநாதமாக திகழும் கோவில்களும் கட்டப்பட்டன. இயல் பாக குலதெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடுகளோடு பெருந் தெய்வமான சிவன், முருகன், பிள்ளையார், அம்மன் கோவில்களமைத்த பெருமையையும் பெற்றதனை

**"மந்திர நேரும் கரவையில்"** (பா-270)

எனும் வரியானது தெளிவுபடுத்து கிறது. மேலும் வள்ளுவர் தம் வழியில் சைவ, வைணவ மத முரண்பாடின்றி இறைவனை ஆதி பரம்பொருளாக கொண்டு வழிபட்டமை இவ்வூரின் தனித்துவமெனலாம்.

**"ஆதிபதம் பணி வேலன் கரவையில்"** (பா-8)

எனும் பாடல் சமயப் பொறையை காட்டுகிறது.

மேலும் இறை வழிபாடியற்றும் முறையாக விரத முறைமை காணப் பட்டதை இக்காலத்திலெழுந்த 'விரத புராணங்களூடாக' அறிந்திருப்பீர்கள். அவ்வழி இங்கும் பேணப்பட்டதை

**"விரத குணாகர வேலன் கரவையில்"** (பா-164)

எனும் வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

சைவசமய வழிபாட்டின் முதற் படியாக முழுமுதற்கடவுளாம் சிவனை வழிபடும் பக்த அடியார்களாக கரவை யூர் மக்கள் காணப்பட்டதைக் கண்ட புலவர் பல பாடல்களில் குறிப்பிட் டுள்ளார்.

**"பரம் பொருளின் மேலூன்று சிந்தை"** (பா-47)

**"பைந்தமிழின் கவிச்சுந்தரன் சந்துரை பண்ணுதற்க சந்துரை முன் கைக் கரவையில்"** (பா-36)

**"கண்ணன் சுருதியென் கண்ணயனுக்கு கண்ணானை ஏத்தும் கரவையில்"** (பா-114)

**"மதி வண்ணவேணி இருவண்ண மேனி மறைக் கொழுந்தை"** (பா-115)

**"ஆறணிச் செஞ்சடை சங்கரன் பாதம் அகத்துள் வைத்தான்"** (பா-154)

**"விடைமண்ணல் பதம் முடிப்பூவென வைத்த வேலன் கரவை"** (பா-196)

இப் பாடல்களூடாக சிவனுக்கு சந்தண முரைத்தல், மால் அயன் காணமுடி யாத சிவ வழிபாடு செய்தல், வாயால் துதித்தல், பாதங்களை சிந்தையில் கொள்ளல், முடியில் தரித்தல் என வழிபாடியற்றிய முறைகளை வண்ண முற குறிப்பிடுகிறார்.

சிவ வழிபாடு மட்டுமன்றி கரவை மக்கள் முருக வழிபாடும் செய்பவர் களாக விளங்கியதுடன் அதன் உயர் நிலையாக கதிர்காமக் கந்தனை பாத யாத்திரை சென்று வழிபடும் பாரம் பரியமும் கொண்டவர்கள் என கூறி யிருப்பது கவனிக்கத்தக்கது.

**"சந்திக் குமரன் பதம் பணிவேலன்"** (பா-13)

**"தொழு கருணாநிதி வேலன்"** (பா-134)

**"வேலாயுதனை வணங்கும் கரவையில் வேலன்"**
(பா-208)

**"கதிராபுரிக் கந்தக் கன்றி வணங்காத சென்னிக் கரவையில்"** (பா-84)

இப் பாடல்கள் யாவுமே கரவையில் கலியுகக்கந்தனும் சங்ககால கடவுளுமான முருக வழிபாட்டின் தொன்மை பேணும் செயற்பாட்டின் சான்றாகின்றன.

தெய்வ வழிபாட்டுடன் சைவ ஆசாரங்களைப் பேணும் முறைமையும் கரவையில் காணப்பட்டது. இங்கு பிதிர் வழிபாடு எனப்படும் பிதிர்ச் சடங்குகள் மிகச் சிறப்பாக நடைபெற்றமைய,

**"தென்புலத்தாரை காலன் செய்யும்
சிறைவிடவந்த கரவையில் வேலன்"**
(பா-70)

எனும் பாடலானது புலப்படுத்துகிறது. இங்கு தென்புலத்தாரை காலனிடமிருந்து விடுவிக்க திவசம் செய்யும் முறைமையையும் புண்ணிய கன்ம பலனால் சுவர்க்க லோகம் அனுப்புவதும் ஆகிய இரு செயற்பாடுகள் குறிப்பிடப்படுகின்றன. இச் செயற்பாடு வள்ளுவர் தம் வாய்மொழியாகும்.

**"தென்புலத்தால் தெய்வம் விருந்தொக்கல்
ஐம்புலத்தார் ஓம்பல் தலை"**

எனும் குறள்வழி வாழ்ந்த வாழ்வினை சுட்டுகிறது.

## தமிழ்ப்பற்று

கற்றோர் மிகுந்த கரவெட்டி என எம்மூர் போற்றப்படுதற்கு அந்நிய ராட்சிக் காலத்திலும் தமிழைப் போற்றி வளர்த்தமையே எனக் கூறுமளவு கரவை வேலன் கோவையில் ஆதாரங்களுள. இவ்வூரில் வாழ்ந்த மக்களெல்லோரும் சரஸ்வதி கடாட்சம் பெற்றவராய் காணப்பட்டதனை

**"மொழி நாவக கலைப்பெண்ணை மேவுங் கரவையில் வேலன்"** (பா-107)

எனும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன. இவ்வூர் முழுமையும் இலக்கிய ஆர்வமிக்க மக்கள் வாழ்ந்தனர் என்பதை,

**"முத்தமிழும் மங்காது வந்த கரவை"**
(பா-2)

என்ற பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன. கரவையூரானது தமிழ் பிரபந்தங்கள் பேணும் மரபு காணப்பட்ட ஊர் எனவும் புலவர்கள் தமிழ் இலக்கியம் படைக்கும் ஊர் எனவும் இலக்கியங்களுடன் இலக்கண நூலும் ஆயும் ஊர் எனவும் பல வழிகளில் தமிழ் பேணப்பட்ட ஊர் எனவும் பல்வேறு செய்யுள்களில் குறிப்பிடுவார்.

**"தமிழ்நூல் பிரபந்தங்களை ஆயும் கரவையில்"**
(பா-20)

**"முத்தமிழ் செவிக்கு விருந்தே யுதவுங் கரவை"**
(பா-52)

**"மொழிகண்ட முச்சங்க முத்தமிழ் நூலை முழுமதியால்
வழிகண்ட நீதிக்கரவையில் வேலன்"** (பா-60)

**"தொடைத் தமிழ் கொண்டு புலவோர் யணிமணி
துள்ளிய செந்தேன்
மடைத்தலை பாயுங் கரவை"** (பா-69)

**"தமிழ் நூல் இனிக்கும் குணாகரன்"**
(பா-117)

**"இலக்கண நூலுணர் வேலன்"**
(பா-223)

**"புலவர் தமிழ்மாலை விரும்புங் கரவையில் வேலன்"**
(பா-216)

**"பண்ணிற் சிறந்த தமிழாயும் வேலன்"**
(பா-31)

எனும் கரவை வேலன் கோவைப் பாடல் யாவும் முத்தமிழையும் வளர்த்த தமிழ்ப்பற்றுடைய மக்களது பிரதேசம் கரவெட்டி எனக் காட்டுகிறது. மேலும் அவர்களது உயர்நிலை அறிவையும் எடுத்துக் காட்டுகிறது. இதற்கு கரவை வேலன் தமிழறிவில் அகத்தியருக்கு ஒப்பானவன் என உவமிப்பதால் அறிய முடிகிறது.

**"வடிதமிழ்க் கும்பன் கரவையில் வேலன்"** *(பா-308)*

**"ஆய்தமிழ் கும்பன் கரவையில் வேலன்"** *(பா-317)*

**"இயற் குறியோன் நிகழ் வேலன்"** *(பா-1911)*

இப் பாடல்களில் கும்பன், குறி யோன் என்பவை அகத்திய முனிவரைக் குறிக்க பயன்படுத்தியவை என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி தமிழ் வளர்ப்பதற் காக புலவர்களும் நிலப் பிரபுக்களும் கூடி ஒன்றாக மன்றுகளிலும் சோலை களிலும் தமிழாய்ந்த செயற்பாடுகள் நடைபெற்றதனை

**"....உத்தியானத்தில் வண்டமிழ் நூற்**
**பந்தத்தை ஆயும் கரவையில் வேலன்"** *(பா-24)*

**"இயலாயு நாலன் கரவையில் வேலன்"**

*(பா-240)*

எனும் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. மேலும் இசைஞானமும் இன்தமிழோடு சேர்ந்து வளர்ந்தமையை

**"பண்ணுரை நூலன் கரவையில் வேலன்"**

*(பா-338)*

**"விதிக்கின்ற முத்தமிழ் ஏழிசை யாவும்**
**வியந்துணர்ந்தோ**
**கதிக்கின்ற பூமிக்கனம் புரிந்தோ எழு காசினியில்"**

என முத்தமிழோடு ஏழிசையும் விரும்பி யுணர்ந்தோர் வாழும் இடம் எனக் குறிப்பிடப்படலால் அறியமுடியும். மேலும் பட்டிமன்றங்களிலோ அல்லது வேறு புகழிடங்களிலோ வாதங்கள் நிகழ்ந்தமையை

**"வாதித்தவர் சிங்கம் கரவையில் வேலன்"**

*(பா-232)*

எனும் பாடலடிகள் வெளிப்படுத்து கின்றன.

## விழுமியங்கள்

இவ்வூரானது உழவுத் தொழிலை போற்றும் பண்பினால் கலப்பையை தமது கொடியில் பதித்த பெருமை மிக்கது எனவும் அதுமட்டுமல்லாது தனது கைகளாலேயே வயலில் உழுகின்ற நிலப்பிரபு வாழும் இடம் என்பதையும் குறித்து நிற்கிறது.

**"... மேழி தன்னை**
**பொறிக்கும் பதாகைக் கரவையில் வேலன்"**

*(பா-35)*

**"கைப்பயில் மேழிக் கரவையில் வேலன்"**

*(பா-110)*

எனும் பாடல்கள் இந்த உண்மையை புலப்படுத்துகின்றன.

மேலும் இவ்வூரானது நீதித் திறத்தில் துலாக்கோல் போல சமன் செய்து சீர்தூக்கும் பண்புடையது என்பதனை

**"துலாக் கோலனைய கரவையில் வேலன்"**

*(பா-64)*

**"வழி கண்ட நீதிக் கரவையில் வேலன்"** *(பா-60)*

எனும் பாடல்களினூடாக உணர்த்து வார். கரவெட்டி மக்களின் ஒழுக்க விழுமியப் பண்புகளை பாட்டுடைத் தலைவன் மேலேற்றி பாடும் போதில் விருந்தோம்பல், ஊராண்மை, பொறுமை, வாய்மை, கருணை என அடுக்கிக் கொண்டே செல்வத னூடாக கண்டுகொள்ளலாம்.

**"புதுவிருந்தாய் வந்து சேர்ந்தவர்க்குத்**
**தாயாகு நந்தக் கரவையில் வேலன்"** *(பா-44)*
**"பூவென்ற மாவிலங்கேசனை நாளைக்கு போர்புரிய**
**வாவென்ற வீரன் கரவையில் வேலன்"** *(பா-3)*
**"செம்பொன் மேருவென்ன பொறை கொண்ட சீலன்**
**கரவையில் வேலன்"** *(பா-37)*
**"ஒருமொழியாளன் கரவையில் வேலன்"**
*(பா-315)*
**"அருள் விழிநாடன்"** *(பா-171)*
**".... நிறை குணத்திற்**
**கறந்திடு பாலன்ன வேலன் கரவை"** *(பா-167)*
**"அமுத குணாகரன்"** *(பா-312)*
**"இனிக்கும் குணாகரன்"** *(பா-117)*

என்ற பாடல் வரிகள் யாவும் ஒழுக்க விழுமியங்களினை பேணிய எம்மூர்ப் பிரதேசப் பெருமையை காட்டி நிற்கின்றன.

கொடைப் பண்பு இப் பிரதேசத்தில் மேலோங்கி நின்ற உயரிய பண்பாக காட்டப்படுகிறது. இவ்வளவு என்று இல்லாது அள்ளிக் கொடுக்கும் தன்மையால் தேவலோக மரங்களாக கற்பகம் முதலான ஐந்தருவுக்கு ஒப்பாக புலவர் பாடுதல் சான்றாகும்.

**"ஐந்தருவான கரவையில்"** *(பா-132)*
**"மந்தார மன்ன கரவையில் வேலன்"** *(பா-281)*

இவ்வாறு கொடுப்பதனால் சிவந்த கரங்களையுடையவன் என்பதை பின்வரும் பாடல் காட்டுகிறது.

**"காராருஞ் செங்கை கரவையில் வேலன்"**
*(பா-272)*

இக் கொடையானது இரவலர்க்கு கொடுத்தல், புலவர்க்குக் கொடுத்தல் என இரு வகையாக வழங்கப்பட்டதனை கூறி அவற்றுள் புலவர்க்கு கொடுத்து தமிழ் வளர்ப்பதை தம் பணியெனச் செய்தல் பற்றி பல இடங்களில் கூறுவார்.

**"பெரும் புலவர் பிடிபோக வந்த கரவையில்"**
*(பா-27)*
**"கொடை கற்ற மேகங் கரவையில்"** *(பா-28)*
**"நாவலர்க்கு சொர்ணம் தருங்கை கரவையில்"**
*(பா-34)*
**"மேன்மணி நாவலர்க் கீந்திடும் வேலன்"**
*(பா-57)*
**"முப்பொருனூற் கவிப் பாலானர்க்கு முகந்துவந்து**
**கைப்பொருள் நல்கும் கரவை"** *(பா-101)*
**"பன்னாகமணி பாவலர்க் கீந்திடும் பாரி"**
*(பா-113)*
**"வரையாத வள்ளல் கரவையில் வேலன்"**
*(பா-111)*
**"கற்றோர் வாட்டந் தவிர்த்திடும் வேலன்"**
*(பா-118)*

எனும் பாடலடிகள் கொடையின் உச்ச நிலையை காட்டுவதாயுள்ளது. இதனை நிரூபிப்பதாக கோவைப் பாடல் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் பொற்தேங்காய் கொடுத்து மகிழ்ந்தது நிஜமாக வாழ்ந்து காட்டிய உன்னதத்தை ஈழத்திற்கு உணர்த்திய செயற்பாடாகும்.

மேலும் கரவையூரானது நெல் வாணிபம், உப்பு வாணிபம் என்பவற்றை விளைவித்து ஏற்றுமதிக்கு உகந்த ஊராக காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்தர் காலத்தில் நெல் ஏற்றுமதி தொடர்பாக நடந்த கூட்டத்தில் வேலாயுத முதலியார் இடம்பெற்றமையும் அவர்தம் கப்பல்கள் நெல் வியாபாரத்துக்குதவியமையும் கவனிக்கத்தக்கது. மேலும் சோழர் காலத்திலிருந்து சோழ உப்பு புலத்தி

லிருந்து (சோனப்பு) பெறப்பட்ட உப்பின் விளைச்சல் தஞ்சாவூருக்கு அனுப்பிய நிலை ஒல்லாந்தர் காலத்தில் பின் பற்றப்பட்டமையும் மதிப்பை உயர்த்தி யது. அத்துடன் இன்று கரவெட்டியி லுள்ள ஆனைப்பந்தி எனும் இட மானது யானைகளை கொணர்ந்து வந்து கட்டிய இடமாக கருதப்படுகிறது. இது தொடர்பாக

**"வெங் கயமூர்ந்திடும் கரவையில்"** *(பா-173)*

**"மத்தக யானைக் கரவையில் வேலன்"** *(பா-133)*

**"காவேழ மூருங் கரவையில்"** *(பா-193)*

எனும் பாடல்கள் புலனாக்குகின்றன.

கரவெட்டியின் சமூக பொருளா தார செல்வாக்கினாலும் உயரிய பண்பு களாலும் கட்டுக்கோப்பான நிர்வாக முறையினாலும் ஒல்லாந்த ஆட்சி யாளர்களால் போற்றப்பட்ட தன்மை யினை

**"தேசாதிபர் மெச்சும் வேலன்"** *(பா-73)*

**"மண்டலீகர் மெச்சும் கரவையில் வேலன்"** *(பா-1119)*

எனும் பாடல்கள் எடுத்துக் கூறு கின்றன. மேலும் ஒல்லாந்த அரசால் போற்றப்பட்ட நிலப் பிரபுவாக வாழ்ந்ததையும் புலவர் போற்றும் புகழுடையவராய் வாழ்ந்த நிலையை யும் காட்டுவதுடன் தேச வழமையை அனுசரித்த ஊர் என்ற பெருமையை யும் நிலைநாட்டுகிறது.

தொகுத்து நோக்குமிடத்து கரவைவேலன் கோவை கரவெட்டி யின் புகழ் பாடும் இலக்கியமாக மட்டு மன்றி பண்பாட்டுப் பாரம்பரியங்களின் வாழ்விடமாகவும் இறை பக்தி, தமிழ் உணர்வு என்பவற்றை வாழ்விக்கும் இலக்கியமாகவும் விளங்குகிறது. இலக்கியம் என்பது காலக் கண்ணாடி என்பதற்கியைய ஒல்லாந்தர் கால கரவெட்டியை காலம் கடந்து காட்டும் கண்ணாடியாகவும் திகழ்கிறது. இலக்கியத்தை உன்னதமான வரலாற்றுப் பொன்னேடாக கருதி கண் போலக் காப்பதும் ஆய்வுக்களமாக்கு வதும் எமது கடமையாகும்.

# கைவண்ணக் கலையில்

## ஆன்ம தரிசனங் கண்ட கரவையின் கலைஞர்கள்

**"கண்ணாடியின் முன்னின்று எமது உருவத்தைத் தரிசிக்கலாம்**
**கலையில் எமது ஆன்மாவையே தரிசிக்கலாம்"**

**கோபாலபிள்ளை கைலாசநாதன்**
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்)

பழைய துவிச்சக்கரவண்டியின், சற்று நீண்டு ஒடுங்கிய ஆசனத்தையும் (seat), அதன் கான்டிலையும் (Handle bars) தனித்தனியாகவே எடுத்து, அந்த ஆசனத்தை கான்டிலின் சமச்சீர் அச்சுக்குச் சற்று மேலே இறுக்கமாகப் பொருத்துவதன் மூலம், எருதின் தலை ஒன்றினை உருவாக்கிவிடலாம். கான்டில்கள் இரண்டும் எருதின் கொம்புகளாகவும் ஆசனமானது (seat) எருதின் தலையாகவும் கொள்ளப்படுகின்றன. சாதாரணமாக எல்லோரின் பார்வையிலும் ஆசனமாகவும், கான்டிலாகவும் கண்டுகொள்ளப்பட்ட இவ்விரண்டு பொருள்களும் 'பிக்காஸோ' என்ற ஓவியரின் அகக் கண்ணில் 'பளிச்செனப்' பொருத்தமுற இணைக்கப்பட்டு எருதின் தலை (Bull's Head) என்ற ஒரு கலைப் பொருளாக உருமாற்றமடைகிறது. பிக்காஸோவின் கற்பனைப் 'பாய்ச்சலே' ஒருங்கிணைக் கப்பட்டு இக் கலை வடிவத்தினைப் படைத்தது எனலாம்.

தனது கற்பனையை இன்னொருவருக்குக் கடத்தும் ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உள்ள சிறப்பம்சங்கள் பலவற்றுள் ஒன்றாகவும் இருக்கிறது. இது மற்றைய விலங்கினங்களுக்கு இல்லையெனவும் கூறலாம். "அறிவைவிடக் கற்பனையே மிகவும் முக்கியமானது" எனப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஒருவர் குறிப்பிட்டுமுள்ளார். அறிவென்பது தகவல்களைச் சேகரித்துக் களஞ்சியப் படுத்தும் செயன்முறையால் வருகிறது. கற்பனை என்பது தர்க்கவியலுக்கும் அப்பாற்பட்டது என்பதுடன் படைப்பாற்றல் திறனுடன் மிகவும் நெருக்கமான தொடர்பினையும் கொண்டது. கலைஞர்களுக்கு மட்டுமல்லாமல் விஞ்ஞானிகளுக்கும் கற்பனையானது அவர்களின் படைப்புப் புலத்தில் தனது செல்வாக்கை வலுவாக ஊன்றியுமுள்ளது.

2500 வருடங்களுக்கு முன்பு இவ்வுலகில் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வேட்டையாடுவதையே தனது தொழிலாகக் கொண்டிருந்தான். வேட்டையின்போது தான் பார்த்ததும் தனது மனதில் பதிந்ததுமான விலங்கினங்களையெல்லாம் உணர்வுபூர்வமாகவே உருவங்களாகத் தான் வாழ்ந்த குகையின் சுவர்களிலெல்லாம் வரைந்துமுள்ளான். விலங்குகளின் பாய்ச்சல், அவைகள் கால்களை மடித்து இலாவகமாகவே படுத்திருக்கும் பாங்கு, அவைகளின் ஓட்டம், அவைகளின் கடுந்தனம், அவைகளின் மென்தனம் இவற்றையெல்லாம் நேர்த்தியாகவே பதிவு செய்துமுள்ளான். "வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் இவற்றையெல்லாம் வரைந்து முடித்துவிட்டான். எமக்கென்ன இனியும் படைப்பதற்கு" எனப் பிக்காஸோவே ஒரு

முறை கூறினார். எனவே வரைதல் என்பது மனித குலத்தின் ஒரு தொடர்ச்சி யான செயற்பாடாகவே இருந்து கொண்டும் வருகிறது.

ஓர் ஓவியம் ஆயிரம் சொற்களுக்குப் பெறுமதியானது. சொற்களைப் பார்த்து வாசித்து முடிப்பதற்கிடையில் ஓவிய மானது எமது மனதுக்குள் ஊடுருவியும் விடுகிறது. ஓவியம் ஒரு மொழியெனவும் கூறலாம். இந்த ஓவியமொழியில் கோடு f s ;(line), வடிவமைப்பு (form), நிறம் (colour), மேற்பரப்பின் இயல்பு (texture), வெளி (Space) ஆகியவை அடிப்படை யான கட்புல மூலகங்களாகவும் இருக் கின்றன. மிகவும் சிக்கலான சிந்தனை யொன்றினை இலகுவாகவும் தெளிவாக வும் வெளிப்படுத்துவதற்குக் கலைஞர் கள் குறியீடுகளையும் பயன்படுத்துவார் கள். தமது எண்ணத்தைக் கட்புல வடிவாக்குவதற்கு கலைஞர்கள் எதனை யும் எடுத்தாளலாம். ஆனால் பயன்படுத் தப்படுபவை பொருத்தமுறுவனவாக அமைதல் வேண்டும் என்பது மிகவும் பிரதானமானது. சைக்கிள் ஆசனத்துக் கும் அதன் கான்டிலுக்குமிடையில் எருதின் தலையானது மறைந்து கிடக் கிறது என்பதனை பிக்காஸோவைத் தவிர வேறு எவராவது கண்டார்களா? நவீன ஓவியமோ அல்லது மரபு ஓவிய மோ எதுவாக இருந்தாலும் நல்ல படைப்பு என்பது பார்வையாளர்களை ஏதோவொரு வகையில் வசீகரித்துத் தனக்குள் கட்டி வைத்திருக்கும் கூறு களைக் கொண்டதாகவே அமைந்தும் இருக்கும். இன்றைய இக்கால கட்டத்தில் நவீன ஓவியங்கள் என்ற பெயரில் போலி ஓவியங்களே உலாவருகின்றன. போலி ஓவியர்களும் நிறையவே உள்ளனர். முட்டாள்தனமான ஓவியங்களுக்கெல் லாம் வண்டிற் கணக்கான வசனங் களுடன் விமர்சன ஆராதனைகளும் நடந்துகொண்டேயும் இருக்கின்றன. காத்திரமான படைப்பு எது? காத்திரமற்ற படைப்பு எது? என இனங்காணக்கூடிய கூர்மையும் உரசிப் பார்க்கும் ஆற்றலும் மிகமிகச் சிலரிடமே இருப்பதனால் போலிப் படைப்புகள் அரியாசனங்களில் அமர நிறையவே சந்தர்ப்பங்களும் வழங்கப்படுகின்றன. தமது வாழ்நாளில் எந்தவிதமான கலைப் பாவனையும் பண்ணாது, தமக்குள் இருந்த கலையை எம்முடன் பகிர்ந்துகொண்ட வடமராட்சிப் பிரதேசத்துக் கலைஞர்களைப் பற்றியும் அவர்களின் கலைப் படைப்புகளைப் பற்றியும் இக்கட்டுரையானது குறிப்பிடு கின்றது.

**திரு. சி. தங்கராஜா :**

*04.01.1923* இல் கரவெட்டியில் பிறந்த இவர், வரைதல் ஆசிரிய தராதரப் பத்திர ஆசிரியராவார். யா/ கரவெட்டி மேற்கு மெதடிஸ்த மிசன் பாடசாலை, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யா/ நெல்லியடி மத்திய கல்லூரி, மு/ முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, மு/ புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரிய ராகப் பணியாற்றியவர். முக்கியமாக, MISS. MAN அவர்கள் யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் இப் பாடசாலையில் அடிக்கடி ஓவியக் காட்சிகளை நடத்தியவர். அக் காலம் *1963 – 1969* வரையிலாகும்.

மூன்று சேவல்கள், பறவைகள், பூக்கள், பறவைகள், விலங்குருக்கள், மனித முகங்கள் இவற்றை உள்ளடக்கிய கோட்டு வரைதல் ஒன்று ஆகியவையே பார்ப்பதற்குக் கிடைத்துள்ளன. மனித

மெய்ந்நிலைகளை வெளிப்படுத்தும் சித்திரங்களைக் காணமுடியவில்லை என்பது முக்கியமானது. அலங்கரிப்புச் சித்திரக் கலையில் *(Decorative Art)* அதிக நாட்டங் கொண்டவர் போல் காணப்படுகிறார். மூன்று சேவல்கள் என்ற சித்திரத்தில் சேவல்களின் நிலை, அவற்றின் அசைவு, நிறங்களின் ஊடாகவும் கோடுகளின் ஊடாகவும் கொண்டு வரப்பட்டுள்ளன. பிரகாசமான நிறப் பயன்பாடும் இவரிடம் இருந்துள்ளமையைப் பொதுவாகவே உணரவும் முடிகிறது. சேவல்கள் முன்னணிக்குக் காட்சியாகும் போது பின்னணியில் இரண்டு பெண்களும் அவர்களின் குடிசை ஒன்றும் சிறிய அளவில் இருப்பதுவும் தூரத்தே பனைகளுக்கூடாகச் சூரிய உதயம் வெளிவருவதையும் அவதானிக்க முடிகிறது. கிராமியச் சூழல் ஒன்று இதிலிருந்து வெளிப்படுகிறது. ஒளி படும் இடங்கள் ஒளி படாத இடங்கள் ஆகியன அதிகமாகக் கவனிக்கப்படவுமில்லை என்பதுவும் புலப்படுகிறது.

பெண், பையன், பாம்பு, முயல், மீன்கள், மயில்கள், புலி, கிளி, யானை, கொக்கு, கற்பனை விலங்கொன்று, ஆகாயம், அலை கடல், மரம் இன்னும் அலங்கரிப்பான பறவைகள் இவற்றையெல்லாம் உள்ளடக்கிய கோட்டுச் சித்திரமொன்றும் இவரின் படைப்பாகும். ஒரு வகையில் விலங்குலகு ஒன்றினை ஒருங்கிணைப்பாகக் காட்டியுமுள்ளார் எனக் கூறலாம். பையன், பெண் இவை இரண்டினையும் விட ஏனைய உருவங்களின் வடிவமைவில் நேர்த்தி தெரிகிறது. கோடுகளில் 'சந்தம்' வெளிப்படுவதுடன் சிறுசிறு கோடுகள், புள்ளிகள், தடித்த கோடுகள், மென் கோடுகள் இவற்றின் கையாள்கை மூலம் இரேகைப் பலத்தைக் காட்டியுமுள்ளார். அலங்கரிப்புக்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தாலும் நவீன எண்ணக்கருவுடனான படவாக்கமாகவும் அது ஓரளவுக்குப் புலப்படுகின்றது. உருவம், வடிவமைப்பு, மேற்பரப்பின் இயல்பு, வெளி ஆகிய அடிப்படை அம்சங்களையெல்லாம் ஒரு நிறத்திலேயே இங்கு கண்டும் கொள்ளலாம்.

பொதுவாகவே பறவைகள், பூக்கள், அலங்கரிப்புடன் கூடிய கிளி ஆகியவையே இவரின் படைப்புகளில் அதிகம் செல்வாக்கைச் செலுத்தியுள்ளன. இந்த நிலையானது மாற்றப்பட வேண்டுமென்பதுடன் கருத்து வெளிப்பாட்டு ஆக்கங்களே கலைஞனின் கலை ஆளுகையை எடுத்துக்காட்டும் உண்மையான காட்டிகள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

6 – 10 வகுப்புகள் வரை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவும் வகையில் "புதுமுறைச் சித்திரம்" என்ற நூலை இவர் எழுதினார். சித்திரக் கலைக்குத் தமிழ்மொழியில் நூல்கள் எவையும் இல்லாத காலத்தில் இந்நூல் வெளியிடப்பட்டமை வகுப்பறைக் கற்றல் கற்பித்தல்களுக்கு பெரிதும் கைகொடுத்துதவியது என்பதையும் மறுப்பதற்கு இல்லை. அச்சுப்பதிப்புகள், அச்சுருப் பதிப்புகள், மரபுவழி அலங்கார வடிவங்கள், பரிமாணங்கள், இலங்கை ஓவியங்கள், சித்திர எறியம் (Perspective), ஆலய அமைப்பு முறைகள், விகாரை வடிவமைப்பு இவற்றுடன் இன்னும் பலவற்றை அது உள்ளடக்கி இருந்தது. இன்றுங்கூடச் சித்திர பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, அச்சுப்பதிப்பிற்கும் அச்சுருப் பதிப்புக்கும் இடையேயான பேதம் பற்றிய அறிவு கருகலாகவே

இருப்பதையும் நன்கு அவதானிக்கவும் முடிகிறது. இந்தப் பேதங்களை இவர் தனது நூலில் தெளிவுபடுத்தியும் இருக்கின்றார் என்பது இங்கு கவனிக்கத் தக்கது. 01.09.1980 இல் தனது ஆசிரியப் பணியினை யா/ நெல்லியடி மத்திய கல்லூரியில் நிறைவுசெய்து 26.09.1999 இல் காலமானார்.

### திரு. சி. சிவஞானசுந்தரம் (03.03.1924 – 03.03.1996)

'கார்ட்டூன்' (Cartoon) என்ற சொற்பதம் எல்லோருக்கும் தெரிந்ததொன்றாகும். இதிலிருந்து வந்ததே 'கார்ட்டூனிஸ்ற்' (cartoonist) ஆகும். அகராதியின் படி இதன் கருத்து, கேலிச் சித்திரம் வரைபவர் அல்லது வேடிக்கை ஓவியர் என்றவாறே குறிப்பிடப்பட்டுமிருக்கும். சிந்தனையின் ஆழக்கடலில் இருந்து வெளிவரும் குமிழியே சிரிப்பு என்பதால் அதற்கு 'வடிவமைப்பு' தருபவர் வெறுமனே 'கேலி' அல்லது 'வேடிக்கை' பதங்களுக்கும் அப்பாற்பட்டவராகவே கொள்ளப்பட வேண்டியவராகவும் இருக்கவும் வேண்டும். ஆனால் சரியான சொற்பதம் இன்மையால் "கேலிச் சித்திரக்காரர்" (cartoonist) என்ற பதமே வழக்கில் இருந்துகொண்டும் வருகிறது. மேலும் சித்திர அகராதியில் cartoon என்பதற்கான கருத்து மேற்குறிப்பிடப் பட்டவற்றிலிருந்து மிகவும் வேறுபட்டதாகவே இருப்பதுடன், அது பற்றிய விளக்கம் இப்போதைக்கு இவ்விடத்தில் தேவையற்றதொன்றாகவே இருக்கும் என்பதால் அது தவிர்க்கப்படுகிறது.

கரவெட்டியில் பிறந்த இவர், யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் கல்வியைக் கற்றார். 'சிரித்திரன் சுந்தர்' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இவரிடம் நகைச்சுவை உணர்வு என்பது இயல்பாகவே இவரின் வாழ்விலும் கலந்திருந்துள்ளது. இவரால் வரையப்பட்ட கார்ட்டூன் சித்திரமொன்று பிரபலமான இந்தியப் பத்திரிகையான 'Blitz' இல் பிரசுரிக்கப்பட்டது. இந்தக் கார்ட்டூனே இவரின் கன்னிப் படைப்பு என்பதுடன் இது வெளிவந்த காலம் இந்திய சுதந்திரப் போராட்ட காலம் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. வின்சன்ட் சேர்ச்சிலும் ஹைதராபாத் நிசாம் மன்னனும் இந்தியாவுக்கு எதிராகச் சதி ஆலோசனையில் ஈடுபட்டிருக்கும் கருத்தினைக் கொண்டதாக அச்சித்திரம் அமைந்திருந்ததுடன் பலரின் வரவேற்பினையும் அது பெற்றது. இதனை வரைந்ததற்காகப் பத்திரிகை ஆசிரியர் 'கரஞ்சியா' என்பவரால் சிவஞானசுந்தரத்துக்குப் பணமும் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவரின் கார்ட்டூன்கள் பம்பாய் பத்திரிகையில் வெளிவரத் தொடங்கின.

"செய் தொழில் தெய்வம், சிரிப்பே சீவியம்" என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு 'சிரித்திரன்' என்ற சஞ்சிகையை இவர் வெளியிட்டு வந்தார். இதன் காலம் 1963 – 1995 வரையாகும். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த தரமான சஞ்சிகையாக அது இருந்ததுடன் அதற்குப் பின்னர் 'கார்ட்டூன்' தொடர் பாகச் சஞ்சிகைகள் எவையும் வெளிவரவில்லை என்பதையும் கவனத்திற் கொள்ளவும். இலக்கியப் பத்திரிகைகள் வந்துகொண்டே இருக்கின்றன. ஆனால் சிரிப்பையும் சிந்தனையையும் தரக்கூடிய சஞ்சிகைகளின் இடமானது வெற்றிடமாகவே தொடர்ந்தும் இருந்து கொண்டே வருகிறது. உண்மையில் 'கார்ட்டூன் சஞ்சிகை' ஒன்றைத் தொடர்ச்சியாக

வெளியிட்டு வருவதென்பது இலகுவான பணி அல்ல. கருப்பொறிகளை இடைவிடாது தேடல் செய்யும் தீவிரம், சம்பவங்களை நகைச்சுவை உணர்வுவழி பார்த்தல் அல்லது சம்பவங்களில் இருந்து நகைச்சுவை அம்சங்களைப் பிரித்து எடுத்தல், பல்துறை சார்ந்த பரந்த அறிவு, ஆழ்ந்த அரசியற் புலமை, வெளிப்படையாகச் சொல்லமுடியாதவற்றைப் பூடகமாகக் காட்டும் நுண்திறன், எல்லாவற்றிற்கும் மேலாக உணர்வுகளுக்கு ஏற்றவாறு மிகப் பொருத்தமாகக் கோடுகளின் ஊடாக நையாண்டியுடன் பாத்திரங்களை வரைந்து காட்டும் திறன், பணம் இவையெல்லாம் கார்ட்டூன் ஓவியரின் மூலதனங்களாக இருக்கின்றன. இவை எல்லாம் ஓவியரிடம் உள்ளீடாக இருந்தால்தான் வெளியீடு என்பது கனதியாகவும் அமையும். மிகமிகச் சிலரிடம்தான் மேற்குறிப்பிடப்பட்ட அம்சங்கள் யாவும் ஒன்றிணைந்தும் காணப்படுகின்றன என்பது நிதர்சனமானது.

இந்த அவசரமான உலகில் ஆறுதலாக நின்று ஒன்றையும் வாசிக்கமுடியாதவர்களாகவே பலர் இருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் மிகச் சுருக்கமாக அதே நேரம் மனதில் பதியத்தக்கவாறு சிரிப்பூட்டும் வகையில் எள்ளளுடன் சுந்தரின் பாத்திரங்களும் அவரின் செய்திகளுடனான கருத்துக்களும் காணப்படுகின்றன. சவாரித்தம்பர், மைனர் மச்சான், மெயில் வாகனத்தார், சீனித்தாத்தாவும் கைத்தடியும், Mr and Mrs டாமோடிரன், மகுடியாரின் பதில்கள், பொருள்கள் தட்டுப்பாடான காலத்தில் யாழ்ப்பாணத்தின் நிலை, அரசியற் கருத்தோவியங்கள், சமூகச் சித்திரங்கள், காலத்தின் கோலம் இவைகளுடன் மட்டுமல்லாது இன்னும் பலவற்றுடன் தனது படைப்புலகை அவர் சிருஷ்டித்தும் கொண்டார். "அகத்திய முனிவர் இன்று இருந்தால் என்ன செய்திருப்பார்" என்ற கேள்வியானது சுந்தரிடம் கேட்கப்பட்டது. அதற்குச் சுந்தர் "அகத்திய முனி இன்று இருந்தால் அது மினி பஸ்ஸில் குனியாமல் பிரயாணஞ் செய்திருக்கும்" எனக் கூறுகின்றார். உயரம் குறைந்த சிறிய ரக மினி பஸ்கள் யாழ்ப்பாணத்தில் ஓடிய காலமொன்று இருந்தது. அந்தக் காலத்திலேயே இக் கேள்வியும் சுந்தரிடம் கேட்கப்பட்டது என்பது இங்கு முக்கியமானதாகவும் உள்ளது. சுந்தரால் உருவாக்கப்பட்ட Mr and Mrs டாமோடிரன் தமிழ் இனத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அடுக்களையிலும் ஆங்கிலத்தையே பேசுபவர்கள். இவ்வாறு இருந்தாலும் கூட Mrs டாமோடிரனுக்கு தமிழ் கலாசாரங்களைப் பற்றி அறிய வேண்டுமென்ற ஆவலும் அதிகம். இதன் காரணமாக Mr டாமோடிரனிடம் Mrs டாமோடிரன் அடிக்கடி கேள்விகள் பலவற்றைக் கேட்பார். ஒருமுறை Mrs டாமோடிரன் தனது கணவரிடம் 'டார்லிங் வட் இஸ் வடலி' எனக் கேட்கின்றார். மை கோட் இது தெரியாதா? "பேபி பல்மேறா (Baby Palmyrah) தான் வடலி" என Mr. டாமோடிரன் பதில் கொடுக்கின்றார். உலக உருண்டையைக் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு பானையைப் போல வரைந்து, அந்தப் பானையின் மேல் மெலிந்த தோற்றங் கொண்ட ஒருவர், ஒடுங்கிப்போன நிலையில் படுத்துள்ளார். அந்தப் படத்தின்மேல் "ஐம்பது கோடி மக்கள் நாளாந்தம் பட்டினியுடன் படுக்கைக்குச் செல்கின்றனர்" என்ற செய்தியையும் சுந்தர் எழுதியுமுள்ளார். இங்கு படத்துக்கான வலுவைச் செய்தியும் செய்திக்கான

வலுவைப் படமும் தருகின்றன. கவிழ்த்துக் காட்டப்பட்டிருக்கும் பானை, உணவு இல்லை என்பதற்கான குறியீடாக இருப்பதுடன் உலகத்தையும் சுட்டி நிற்கிறது. ஒருவர் தன்னைவிட முதியவரான ஒருவரைக் கண்டு ஒளிந்து நிற்கின்றார். சவாரித்தம்பர் அவரிடம் "ஏன் மரத்துக்குப் பின்னால் ஒளிக்கிறியள்" எனக் கேட்கிறார். "சத்தம் போடாதையும் என்னைப் படிப்பித்த ஆசிரியர் வருகிறார், இப்பவும் அவரைக் கண்டால் ஒரு பயம்" எனக் கூறுகின்றார். அடுத்து, நீண்ட காற்சட்டையுடன் இன்றைய காலத்து ஆசிரியர் ஒருவர் மரத்துக்குப் பின்னால் பதுங்கி நிற்கிறார். சவாரித்தம்பர் அவரிடம் "ஏன் மாஸ்ரர் மரத்துக்குப் பின்னால் பதுங்கிறியள்" எனக் கேட்கிறார். ஆசிரியர் பயத்துடன் "என்னுடைய மாணவன் வருகிறான். பட்டஞ் சொல்லிக் கூப்பிடுவான்" என ஈனஸ்வரக் குரலில் கூறுகின்றார். மேற் குறிப்பிட்டவையைப் போல் பலவற்றை இன்னுங் கூறலாம்.

தங்கு தடையற்ற கோட்டோட்டம் இவரின் உருவங்களில் உண்டு. பாத்திரங்களின் முக உணர்வு வெளிப்பாடுகளும் அவைகளின் உடற் செயல்நிலைகளும் பார்ப்பவர்களின் ஆவலைத் தூண்டுவனவாகவே உள்ளன. உருவங்களில் இரேகைச் சிக்கனம் இருப்பதுடன் இவருடைய சித்திரத்தின் கருத்தானது இலகுவாகவே புரிந்துகொள்ளக் கூடிய வகையிலும் எப்போதும் வெளிப்படும். அதிக இரேகைகளின் பயன்பாடுகள் கூடச் சித்திரத்தின் கருத்தினைச் சுவைப்பதுக்குத் தடையாக மாறிவிடுவதுடன் கவனக் கலைப்பான்களாகத் தொழிற்படவும் ஆயத்தமாகிவிடுகின்றன. வட்டத்துக்குள் கறுப்பு முழி, நீள் வட்டத்துக்குள் கறுப்பு முழி, சிறு குற்று, வளைந்த சிறு கோடு, சாதாரண கண் அமைவு என்றவாறு இவருடைய கண் வரைவுகள் காட்டப்பட்டுமிருக்கும். சில வேளைகளில் தலைமயிர், நெற்றி, மூக்கு, வாய் ஆகியன ஒரே கோடாகத் தேவைக்கு ஏற்றவாறு நகர்ந்தும் இருக்கும். கார்ட்டூன் சித்திரத்தில் வாய்களின் நிலைகள் கருத்தினைக் காட்டி நிற்கும் காட்டிகளாக இருப்பதால் வாய்கள் பல வடிவமைப்புகளைப் பெறுகின்றன. மேல் நோக்கிய வளைவு, கீழ் நோக்கிய வளைவு, கறுப்பு நிறத்தில் சாதாரண வாயின் அமைப்பு, பிறை வடிவில் வாய், பிறை வடிவில் பற்களுடன் வாய், பெரிய மீசை இருந்தால் வாயையே காட்டாது விடுதல், ஒரு சிறு குற்று, கறுப்பு நிறத்தில் ஒடுங்கிய நிலைக்குத்தான நீள்வட்டம் கொண்ட வாய், மிகச் சிறிய கோட்டுத் துண்டொன்று அல்லது இரண்டு கோட்டுத் துண்டுகள் என்றவாறு அவை காணப்படும். இவை சாதாரணமானவையே எனப் பலர் எண்ணவுங்கூடும். ஆனால் இவையே பாத்திரங்களின் உணர்வுகளைத் தெளிவுடன் காட்டும் உயிர்நாடிகளும் ஆகின்றன.

படைப்பதிலேயே 'படைப்பியற் பரவசங்கண்டு' பிறவிக் கலைஞனாகவே தனது வாழ்நாள்களை வாழ்ந்து முடித்தார். இடர்கள் வந்த போதிலும் கலையை விடாது அந்த இடர்களையே கலையும் ஆக்கினார். இதனால் ஒருவகையில் அவரின் இடர்களும் கலைந்தன. சிரித்திரன் சுந்தரின் பின் அவரின் இடைவெளியானது நிரப்பமுடியாத ஒன்றாகவே இருந்துகொண்டும் வருகிறது. அந்த இடைவெளியை நிரப்புவதென்பது அசாதாரணமாகவே இருக்கும்.

பொ. விசாகப்பெருமாள் (1936.08.31 – 2011.08.05)

வெள்ளை வரைதற் தாளை நிரப்பும் வகையில் மனித முகமொன்றை 6ஆம் வகுப்பு மாணவன் ஒருவன் கோட்டுரு வாக பென்சிலால் வரைந்திருந்தான். அந்தச் சித்திரத்தைப் பார்த்த சித்திர பாட ஆசிரியர் "ஓ, இது மிகவும் நன்றாக வந்துள்ளது. இதற்கு நீரே, நீர் வர்ணத்தைப் பயன்படுத்தி நிறந்தீட்டவும் வேண்டும்" என்றார். மாணவன் நிறந் தீட்டுவதற்கு ஆயத்தமானான். உருவத் தின் தலைமயிருக்குக் கறுப்பு நிறத்தை மட்டும் பயன்படுத்திச் சிறு பகுதிக்கு நிறந் தீட்டியதை அவதானித்த ஆசிரியர் "தலைமயிருக்குக் கறுப்பு நிறத்தை மட்டும் தீட்டுவதைத் தவிர்க்கவும்". அது பல நிறங்களால் ஆனது. சாதாரண 'நிற' ஒளிப்படமொன்றில் தலைமயிரின் நிறமானது எவ்வாறு காணப்படுகிறது என்பதையும் அவதானித்து வாருங்கள்" என எல்லோருக்கும் பொதுவாகவே கூறியதுடன் "இந்தச் சித்திரத்துக்கு நானே நிறந் தீட்டியும் காட்டுகிறேன்" என்றார்.

பெரிய கண்ணாடிக் குவளைகள் இரண்டினுள் நீர் எடுக்கப்பட்டது. ஒரு குவளையில் உள்ள நீரானது நிறந் தோய்ந்த தூரிகையைக் கழுவவும், மற்றையது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புதிய நீராகவே வர்ணங்களைக் கரைக்க வும் வசதியானதொரு ஏற்பாடாகவே அது அமைந்தும் இருந்தது. தூரிகையைக் கையில் எடுத்த ஆசிரியர் அதனைக் குவளை நீருக்குள் நன்கு அமிழ்த்திய துடன் அந்த நீர் செறிந்த தூரிகையைக் கறுப்புநிற வர்ணக்கட்டி மீது சிறிது தேய்த்து, அதன் மீது ஒட்டிக் கொண் டிருந்த நீருடன் சேர்ந்த கறுப்பு நிறத்தை வரையப்பட்ட உருவின் தலைப் பகுதியில் இட்டார். இதன்பின் தூரிகையைக் கழுவிய பின்பு, புதிய நீருக்குள் தூரிகை யை நன்கு அமிழ்த்தி அந்த நீர் கொண்ட தூரிகையை பேர்ஷியன் நீலக் கட்டி மீது தேய்த்து அதனுடன் ஒட்டிக் கொண் டிருந்த நீர் செறிந்த நீல நிறத்தை ஏற்கனவே இட்ட கறுப்பு வர்ணத்துக்குப் பக்கத்திலும் இட்டார். கறுப்பு நிற நீரும் நீல நிற நீரும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்த பகுதிகள், சேராது தனித்து இருக்கும் நிலைகள், நீரானது ஓடி; மேற்கொண்டு ஓடாது ஊறும் நிலைகள், நீர் படாது தாளின் நிறத்தில் வெள்ளையாகக் காணப்படும் இடங்கள் என அது இருந்தது. இந்த மாதிரியான செயற்பாடு கள் மஞ்சள், பச்சை, இருண்ட சிவப்பு ஆகியவற்றையும் பயன்படுத்தி மேற் கொள்ளப்பட்டது. தலை மயிருக்கான நிறந்தீட்டுகை முடிவடைந்தது. எல்லா மாணவர்களும் தங்களையே மறந்து, தமது கவனத்தை ஆசிரியரின் செய லாற்றுகையின் மீது குவித்திருந்தனர். அந்த வகுப்பில் நானும் மாணவனாக இருந்தேன். எனக்குள் வெளிச்சம் பாய்ச்சப்பட்ட உணர்வொன்று ஏற்பட் டது. ஏதோ புதியதொன்றைக் கண்ட பரவசம். நீர் வர்ணக் கோலத்தைத் தவிர வேறு எதனையும் கண்டுகொள்ள முடியாத நிலை. 1967 ஆம் ஆண்டு யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. சித்திர கூடத்தில் பெரு மதிப்பிற்குரிய எனது ஆசான் பொ. விசாகப்பெருமாளின் நுண்மையான கற்பித்தலைப் பற்றிய எனது நினைவின் நீட்சிகளே மேற் குறிப்பிடப்பட்டவையாகும். தன்னுடைய கற்றல் அனுபவத்தைக் கற்பித்தல் வழியே எமக்குள் தொற்றவைக்கும் பெரும் அவாவொன்று அவருக்குள்

இருந்தமையைப் பின் நாளில் நான் உணர்ந்தும் கொண்டேன்.

தனது ஓவியங்களின் கீழ் P.Visagan என ஒப்பமிடும் பொ. விசாகப்பெருமாள் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யா/கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரியில் கல்வியைக் கற்றவர். அரச நுண்கலைக் கல்லூரியில் சித்திரக் கலையைக் கற்று 1958 இல் சித்திர ஆசிரியரானார். யா/ கைதடி நவீல்ட் பாடசாலை, யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும் கொழும்புத் துறை ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகவும் கல்விப் பணியை நேர்த்தியுடன் செய்தவர். பிறவிக் கலைஞனாக இருந்ததுடன் மட்டுமல்லாது பிறவியிலேயே ஆசிரிய வாண்மையும் அவருக்கு இருந்துமுள்ளது என்பதை அவரிடம் கற்றவர்கள் நன்கு அறிவார்கள். 1982 - 2006 வரை நைஜீரியாவிலுள்ள MAKURDI அரச கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

எண்ணெய் வர்ணம், நீர் வர்ணம் இவற்றைப் பயன்படுத்தி ஓவியங்களை வரைந்ததுடன் ஒட்டுப் பலகையில் முழு உருவாக உருவங்களை வெட்டி, அதன் பின்னர் அவற்றைப் பொருத்தமுறச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி, மீளவும் சிறு இடைவெளிகளை விட்டுத் தளப் பரப்பில் ஒட்டுவதுடன், அவைகளுக்கு ஏற்றவகையில் நிறந்தீட்டிக் கலப்பு ஊடக ஆக்கமாகப் பல ஆக்கங்களை உருவாக்கியும் உள்ளார்.

யா/ கைதடி நவீல்ட் பாடசாலையில் பணியாற்றிய காலத்தில், கைதடிக் கிராமத்தைப் பெரிய அளவில் ஓவியமாகத் தீட்டினார். மிகவும் நீண்ட, செவ்வக வடிவுக்குள் அடங்கும் காட்சியாக அது காணப்பட்டது. கைதடிக் கிராமத்தின் காலைநேரமாக அது காட்சிப்படுத்தப்பட்டதுடன் 'சுறுசுறுப்பான காலைநேரம்' என்ற உணர்வும் அங்கு கொண்டுவரப்பட்டுமுள்ளது. எண்ணெய் வர்ண ஓவியமான அதில் தட்டையான முறையிலேயே நிறப் பிரயோகத்தைச் செய்துமுள்ளார். எருத்து மாடுகளைக் கொண்டு செல்லும் உழவன், குறுக்குக்கட்டுடன் கிராமத்து வயதான பெண்கள், சிறுவர்கள், பெண்கள், பிச்சைக்காரர்கள், நாய், குளிக்கச் செல்பவர்கள் எனவும் தூரத்தே வயல்கள், வீடுகள், கோவில்கள், குளங்கள், மரங்கள், புற்தரைகள் எனவும் காட்சியானது விரிந்தும் செல்கிறது. தூரமானது நிறச் சாயல்களின் வேறுபாடுகள் மூலம் காட்டப்பட்டும் இருக்கிறது. ஒருங்கிணைப்பான இவ்வோவியம், ஓவியரின் நிறத் தெரிவுகளினாலும் உருவங்களை ஒழுங்குபடுத்திய முறையிலும் அடிக்கடி பார்க்கத் தூண்டும் ஆவலை ஏற்படுத்துகின்றது.

'Society of Nigerian Artists' கழகத்தில் ஓர் அங்கத்தவராக இருந்தார். நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவரும் இலக்கியத்துக்காக, நோபல் பரிசினைப் பெற்றவருமான Wole Soyinka என்பவரின் பிரதிமையை Perspex (பிளாஸ்ரிக் வகை), Formica ஆகியவற்றைப் பயன்படுத்தியும் 'அக்கிரலிக்' வர்ணத்தால் நிறந்தீட்டியும் கலப்பு ஊடகமாக உருவாக்கினார். வடிவமைப்பில் நேர்த்தி வெளிப்படுகிறது.

விசாகனின் நிற உணர்வும், அவரின் கைத்திறனும் இங்கு இசைவாகியுள்ளன.

நிறங்களின் இருண்ட, மத்திம, மென், சாயல்கள் யாவும் அருகருகே பரவிச் செல்கின்றன. இதற்கு ஏற்றவகையில் முப்பரிமாணப் பண்புகள் மூக்கிலும் தலையிலும் கன்னங்களிலும் தாடியிலும் கழுத்திலும் உயர்ச்சி பெற்றுள்ளன. அவரின் அங்கியில் அலங்கரிப்பு வேலைப்பாடுகள் சமநிலையைக் குலைக்காதவாறு செய்யப்பட்டு முள்ளன.

பூடகமாக இழையோடிக் கொண்டிருக்கும் கேத்திர கணித வடிவமைகள் கொண்ட உருவங்களாகவும் கைநுட்பத் திறனுக்கே முக்கியத்தவம் கொடுத்திருக்கும் வேலைப்பாடுகளாகவும், அலங்கரிப்பு அம்சங்களின் மீது நாட்டமும், நிற உணர்வு மேலோங்கிய நிலையும் விசாகனின் கலப்பு ஊடகப் படைப்புகளில் செல்வாக்கைச் செலுத்துகின்றன. அழகின் வீச்சுக்குள்ளேயே கலைப் பயணிப்புத் தொடர்ந்தும் நடைபெற்றுள்ளது.

கலப்பு ஊடகத்தில் இயேசுநாதரின் இறுதி விருந்தைக் காட்சிப்படுத்தி As $ hu;*Perspex* என்ற பிளாஸ்ரிக் வகையும் *Acrylic* வர்ணமுங் கொண்டு அக் காட்சியானது உருவாகியுள்ளது. சித்திர எறியப் பயன்பாடு இங்கிருப்பதுடன் கீழ்த் தளம், மேற்கூரை, பக்கச் சுவர்கள் இரண்டு, இங்கெல்லாம் அலங்கரிப்புகள் காணப்படுகின்றன. *12' x 8'* அளவில் **The Benue Dancers** என்ற படைப்பை இவர் ஆக்கியிருப்பதுடன், தான் பணியாற்றிய பாடசாலைக்கு அதனை அன்பளிப்பாகவும் வழங்கியுள்ளார். ஆபிரிக்கர்களின் நடனக்காட்சியே இக் கருத்து வெளிப்பாட்டில் காட்சியாகியுள்ளது. இங்கு பின்னணிக்கு நிறந் தீட்டிய முறையும் முன்னணி உருவங்களுக்கு நிறந்தீட்டிய முறையும் வெவ்வேறானவையாக இருப்பதுடன் அவை ஒத்திசைவைக் குலைக்காதும் உள்ளன என்பதையும் உணரவும் முடிகிறது.

விசாகப்பெருமாளிடம் கற்ற மாணவர்கள் பலர், சர்வதேச ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றியதுடன் பரிசுகளையும் பெற்றுள்ளனர். கைதடி நவீல்ட் பாடசாலை மாணவன் ஒருவனும் சர்வதேச ரீதியில் முதலாம் இடத்தினைப் பெற்றமை மிகவும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

உருவங்களை உடனடியாகவே கோட்டுருவாக வரைந்து காட்டும் தாடனம் அவரிடமிருந்துள்ளது. கோடுகளின் ஏற்ற இறக்கங்களில் பார்ப்பவர்களின் கவனம் ஈர்க்கப்படுவதுடன் செய் நேர்த்தியும் அங்கு காணப்படும். பென்ஸில் அல்லது வெண்கட்டி அவரின் ஆளுகைக்கு உட்பட்டே நர்த்தனம் புரியும். பிழை ஏற்பட்டால் அக் கோட்டினை அழிப்பதென்பது நடைபெறவில்லையென்றே கூறலாம். அவரின் நடை உடை பாவனையில் எல்லாம் நேர்த்தியொன்று பேணப்பட்டவாறே இருக்கும். அவரின் வகுப்பறையின் உட்சூழல் கற்றல் கவிநிலைக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டும் இருக்கும். கற்றல் கற்பித்தல் பணியை வாழ்நாள் முழுவதும் செம்மையாகச் செய்த, அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியராக எல்லோர் மனங்களிலும் அவர் நிறைந்துள்ளார். கலையில் பரீட்சார்த்த முயற்சிகள் பலவற்றில் ஈடுபட்டதுடன், அழகியல் சார்ந்த தேடல்களிலேயே அவர் பயணித்துமுள்ளார்.

# இசை வடிவாகிய இறைவன்

**தம்பு சரோஜா**

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய னான இறைவன் ஒலி வடிவானவன், எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிபவன், எல்லாம் வல்லவன் என அறிகின்றோம் உணர்கின்றோம். ஒலிக்கு உருவமில்லை, ஆண்டவனும் அருவ மானவன், எங்கும் நின்று அருள்பாலிப் பான். ஒலி நாதம் இராக வடிவங்களை எடுத்து இசையாகிறது. இறைவன் எம் மனதில் தோன்றிய உருவங்களை எடுத்து எமக்கு என்றும் அருள் தருகின்றான்.

இனிய ஒலி நாதமாகி, சுருதியாகி ஸ்வர ஸ்தானத்திலிருந்து பாடலாகி, இசையாக வெளிவரும்போது உலகி லுள்ள அனைத்துமே இதில் இசைந்து மகிழ்ந்துபோகின்றன.

இசை என்ற சொல்லிற்கு இசைய வைப்பது என்பது பொருள். எங்களை இயக்கித் தன்பால் இசைய வைப்பவனும் இறைவனே. நாமும் "அவனருளாலே அவன் தாழ் வணங்கி" அருள்பெற இசைவதற்கு சங்கீதம் அல்லது இசை யினைப் பயின்று உய்யவேண்டுமானால், இசையின் சிறப்பினை அறியவேண்டும். இசை என்பது கட்டுப்பாடுள்ள இனிமை யான ஒலியாகும். கட்டுப்பாடில்லாத ஒலி இரைச்சலாகும். அதாவது கேட்கும் போது இனிமை தராத ஒலிகள் யாவும் இரைச்சல்களே. இந்த இனிமையான ஒலியை வடமொழியில் நாதம் என்று அழைக்கின்றனர். நாதத்திலிருந்து சுருதியும், சுருதியிலிருந்து சுரங்களும், ஸ்வரஸ்தானங்களும் இனிய சங்கீத மாகிறது.

இசையினை காதால் கேட்டு மனத்தினால் உணர்ந்து அனுபவிக்க முடியும். ஆனால் கண்களினால் பார்த்து அறியமுடியாது. நாதசொரூபியான இறைவனையும் இசையினால் இசைய வைக்கலாம். ஆய கலைகள் அறுபத்து நான்கில் நுண்கலைகளான இரசஞானக் கலைகள் எனப் போற்றப்படும் பாட்டு வாத்திய நிருத்தியம் (இயல், இசை, நாடகம்) ஆகியன தெய்வீக கலை களாகப் போற்றப்படுகின்றன. கலைகள் அறுபத்து நான்கினையும் உணர்விக்கும் எம் அன்னையின் கையிலே வீணையும் நாரதரின் கையிலே தம்புராவும் (தும்புரு) எல்லாம் வல்ல சிவபிரான் கையிலே உடுக்கையும், நந்திதேவர் கையிலே மத்தளமும், கண்ணபிரான் கையிலே வேய்ங்குழலும் எமது சங்கீதக் கலையின் சிறப்பினையும் உணர்த்துவன. மனிதர் கள் மட்டுமன்றி விலங்குகள், பறவைகள் போன்ற உலகில் உள்ள எல்லா உயிரினங்களும் இசையைக் கேட்டு மகிழ்கின்றன. மரஞ்செடிகள் கூட இசையினை உணருகின்றன என விஞ்ஞானிகள் உணர்த்தியுள்ளனர்.

மனித வாழ்க்கையில் பிறப்பி லிருந்து இறக்கும் வரை இசை ஒன்றிணைந்துள்ளது. பிறந்தவுடன் மருத்துவ அம்மை வாழ்த்துவதில் இருந்து தாலாட்டு, விளையாட்டுக்கள், பூப்புனித நீராட்டு, ஊஞ்சல், மற்றும் விஷேட சடங்குகள், திருமணப் பாடல் கள், அமங்கல பாடல்கள் போன்றன எல்லாச் சடங்குகளிலும் இசை இடம் பெறுகின்றதைக் காணலாம்.

நோயுற்றவர்களுக்கு மருந்தாகவும் இசையைப் பயன்படுத்துகின்றனர். மனநிலை பாதிக்கப்பட்ட நோயாளிகள் இசையின் மூலம் பயனடைவதும், நோயுற்றவர் இசையினைக் கேட்டு மன அழுத்தம் குறைவது, ஆஸ்தமா போன்ற நோய் குணமடைவதாகவும் ஆய்வாளர் களின் கூற்றின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

மனப்பாரத்தைக் குறைக்கும் அரிய சாதனமாக இசை விளங்குகின்றது. உழைப்பாளிகளின் களைப்புத்தீர, மழை பொழிய, கோடை நீங்க இப்படி பல விடயங்களில் இசை பயன்படுகின்றது. பசுக்களிற் பால் கறக்க, விவசாயிகள் பயிர்களில் சிறந்த அறுவடைபெற வளர்ச்சிபெற இசையினைப் பயன்படுத்து கிறார்கள்.

இத்தகு இசையானது இந்திய இசையின் இரு பிரிவுகளாக உள்ளது. தென்னக இசை, வடஇந்திய இசை என இரண்டு வகையாக உள்ளது. வடஇந்திய இசையானது இந்துஸ்தானி இசையாகும். தென்னக இசை கர்நாடக இசையைக் குறிக்கிறது.

தென்னக இசையானது தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம், மைசூராகிய தென் மாநிலங்களிற் பயிலப்படும் இசையாகும். இவ் இசையே கர்நாடக இசையாகும். கர்நாடக இசை என்பதற்கான காரணம், தமிழில் மிகப்பழமையானது என்ற பொருளாகும். எனவே தான் கர்நாடக இசை மிகப் பழமையான தென்னக இசையைக் குறிக்கிறது. கர்நாடக இசை "கர்நாடக மாநிலம்" என்று அழைக்கப் படும் இடத்திலிருந்து வந்துள்ளதால் கர்நாடக இசையென்று சிலர் கூறுவது தவறானதாகும்.

மேலும், பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள், ஹரிபாலர் எழுதிய சங்கீத சுதாகரம் (கி.பி 1309-1312) என்ற இசை நூலில் கர்நாடக இசை இந்துஸ்தானி இசை என்ற சொற்கள் முதன்முதலாக காணப்படுகிறதென்று கூறுகிறார். மேலும் டில்லியில் முகலாயப் பேரரசர்கள் ஆளத்துவங்கியு காலத்தில் இருந்துதான் இந்துஸ்தானி இசை என்றும் கர்நாடக இசை என்றும் தெளிவாகப் பிரிந்து காணப்படுவதாகவும் கூறியுள்ளார். அத்துடன் இன்று கர்நாடக இசை என்ற பெயரில் வழங்கும் இசை முறைக்குத் தாய் பண்டைய தமிழ்க் இசையே என்பதும், இந்த இசையானது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது என்பதும் அனைத்து ஆய்வாளர்களின் கருத்தாகும்.

'தென்னக இசையில் அல்லது கர்நாடக இசையின் முக்கிய தன்மை யாவது தனிச்சுர இசை *(MELODY)* அமைப்பை ஆதாரமாகக் கொண் டுள்ளது. ஐரோப்பிய இசை கோர்வைச் சுர இசை *(HORMONY)* அமைப்பாகவும், இதனைத் தொடர்ந்து பல்லிசை அமைப்பையும் *(POLY PHONY)* உற்று நோக்கும்போது கர்நாடக இசை தனித் தன்மை வாய்ந்ததாக காணப்படுவதை அறியலாம்.

கர்நாடக இசை அமைப்பில் இராக அமைப்பும் மிக முக்கியமானதாகும். இந்த இசையமைப்பில் 72 மேள இராகங்கள் கையாளப்படுகின்றன. இந்த இராக

முறைகள் வருவதற்கு முன்னோடியாக இருந்தவை தேவாரங்களில் நாம் காணும் பண்களேயாகும். இந்திய இசை வரலாற்றிலேயே இராக தாளத்துடன் கிடைக்கபெற்ற மிகப்பழமையான இசை வடிவம் என்று இசை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மற்றும் சம்பூர்ண இராகம், ஷாடவம், ஔடவம் என்று நாம் அன்று பிரித்துக் கூறும் எண்ணற்ற இராகங்களுக்கு தேவாரப் பண்களே ஆதாரமாக உள்ளன. மேலும் பாஷாங்கராகம் என்று நாம் இன்று அழைக்கின்ற தாய் இராகத்தில் இல்லாத வேறு இராகங்களும் தேவாரப்பண்களில் காணக்கூடியதாக உள்ளது. இராகங்களின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்தவை தேவாரப் பண்களே என்பதில் சிறிதும் ஐயமில்லை. தேவாரப் பதிகங்கள் பாடப்பட்ட காலத்தில் இந்தியா முழுவதிலும் ஒரேவிதமான இசைதான் இருந்து வந்தது. அக்காலத்தில் இந்துஸ்தானி இசை, கர்நாடக இசை என்ற பிரிவுகள் இருந்ததில்லை. ஆகவே இந்திய இசையினுள் ஓர் அடிப்படை இலட்சிய மாக இருந்தது பண்களேயாகும்.

பண்டைய தமிழர் இசையின் பண்புகள் மூன்று பிரிவுகளாக இருந்திருக்கின்றன என்றும் அவை யாவன, பகற்பண், இரவுப்பண், பொதுப்பண் என்னும் மூன்று பிரிவு களாகும். பகற்பண்ணிக்கு காம்போதி என்று அழைக்கப்படும் தக்கேசியும், இரவுப்பண்ணிற்கு நாம் நீலாம்பரி என்று அழைக்கும் மேகராகக் குறிஞ்சியும், சான்றாக உள்ளன. எனவே கர்நாடக சங்கீதம் தேவாரப்பண்களின் அடிப்படை யிலிருந்து இராகங்களாக வளர்ச்சியுற்றது எனலாம். மனிதனின் உணர்வுகளை வெளிப்படுத்த ஒரேநாளில்வெவ்வேறு வேளைக்கேற்றவாறு நவரசங்களை வெளிப்படுத்த இராகங்கள் ஏற்றவாறு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. விடியற் காலையில் பாடுவதற்கு பூபாளம்; எந்த நேரமும் பாடுவதற்கு சங்கராபரணம், ஆரபி இவ்வாறு உள்ளத்து, உணர்வு களை அடிப்படையாகக் கொண்டு இராகங்கள் பயன்படுத்தப்பட்டிருக் கின்றன.

தென்னக இசையான நம் கர்நாடக இசை எண்ணற்ற கிளை இராகங்களைக் கொண்டுள்ளது. இராகத்திற்கு இராகம் ஒரு ஸ்வரம் மட்டும் வேறுபட்டிருப்பினும் இராகத்தில் தனித்தனி வடிவங்கள் உள்ளடங்கி இருக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை. உதாரணமாக ஔடவ, ஔடவ, இராகங்களான மோகனம் அம்சத்வனி ஆகியவற்றைக் கூறலாம். இரண்டு இராகங்களும் ஐந்து சுரங்களைக் கொண்ட "ஆரோகண, அவரோகணம்" உடையன. இரண்டு இராகங்களிலும் தீவிர சுரங்களே உள்ளன. மோகனத்தில் தைவதம் உண்டு நிஷாதம் இல்லை, ஹம்சத்வனியில் தைவதம் இல்லை நிஷாதம் உண்டு. மற்றைய ஸ்வரங்கள் எல்லாம் இரண்டு இராகங்களிலும் ஒன்றுதான் இப்படி இருந்தாலும் மோகனம் ஒருபோதும் அம்சத்வனி போன்று ஒலிக்கமுடியாது. அதேபோல அம்சத்வனியும் மோகனம் போன்று ஒலிக்கமுடியாது. எத்தனையோ ஆயிரக்கணக்கான இராகங்களைக் கொண்ட நம் இசையான தென்னக இசையானது மிகமிகப் பரந்து விரிந்த பரப்பளவினைக் கொண்ட ஒரு தெய்வீகக் கலையாக வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இக்கலைக்கு

உயிர் நிலையானது சுருதிமாதாவும், லயபிதாவும்தான். சிவஞான சொரூப மான ஒலி வடிவத்திலிருந்து உருவாகும் நாதத்திலிருந்து, சுருதி மாதாவும் லய பிதாவும் இணைந்து அதிலிருந்து தோன்றுகின்ற இசை வடிவங்ளே எமது இசையாகும்.

இறைவன் படைப்பிலிருந்து தோன்றிய எல்லா ஜீவராசிகளிடத்திலும் ஒலியும் சேர்ந்தே பிறக்கின்றது. ஒவ்வொரு ஜீவனுக்கும் அவற்றிற்கேற்ற ஒலியும், உணர்வுகளை வெளிக் கொணரும் தன்மையும் மொழியும் உருப்பெற்றிருக்கின்றன.

இப்பூவுலகிலே அதியுயர்ந்த படைப்பு மனித இனமேயல்லால் வேறொன்றுமில்லை. மனிதப்பிறவி எத்தனையோ பிறவி எடுத்தெடுத்து இறையருளைப்பெற்று பகுத்தறிவு டையவராக வேண்டும், உய்யவேண்டு மென்ற நிலையில் உருவெடுக்கின்றது. பிறக்கின்றபோது குழந்தையும் தெய்வ மும் ஒன்றே. பிறந்தவுடன் குழந்தையின் முதலொலி பெற்றோருக்கு தேன் சிந்தும் இனிய ஒலியாக, மகிழ்ச்சியையே கொடுக்கும், கேட்போர் மனதை ஒரு கணம் தன்பால் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை. நாத வடிவான இறைவனின் படைப்பிலிருந்து வெளி வருகின்ற முதலொலியல்லவா?

இத்தகு சிறப்பு ஒலி நாதமாக, சுருதி யாக, ஸ்வரமாக, லயமாக, பாடலாக, கலையாக வளர்கிறது. வளர்ந்திருக் கிறது, வளர்ந்து கொண்டே போகிறது, ஆனால் இதனை அருமையறிந்து வளர்க்க வேண்டும்.

கலைஞன் ஒருவன் தான் முன் செய்த பிறவிப்பயனாக பிறக்கின்றான். அவன் ஒரு கலைஞனாக வளர்ந்து தான் பெற்ற ஞானக்கலையினை மற்றவர் களுக்கும் கொடுக்க வேண்டும். கொடுக்கக் கொடுக்க நீரூற்றுப் போல ஞானமும் வளர்ந்து கொண்டே செல்லும். இந்த உண்மையை நாம் அனுபவ ரீதியாகவே அறியலாம்.

சாஸ்திரிய இசையினை குரு சிஷ்ய முறைப்படி (கேள்வி ஞானத்தின் மூலம்) கற்றுவருவது மிகவும் சிறப்புடையதாகும். நமது வாக்கேயகார்கள் யாவரும் குருசிஷ்ய முறைப்படி கற்றுத் தேர்ந்தவர்களே. அப்பியாச முறையில் குருவைப் பின்பற்றி வளர்ந்தவர்களே அன்று மகான்களாக காணப்பட்டார்கள். எமக்கும் செய்முறையை அறிமுறை யினை ஆராய்ந்து தந்தவர்களும் எமது மூதாதையர்களான அரும் பெரும் கலைஞர்களேயாவர்.

ஆதியில் பாமரர்களால் பாடியும் ஆடியும் தமது உணர்வுகளைப் பகிர்ந்து அனுபவிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கலைஞானம், பின்னர் சமயகுரவர் நால்வராலும், நாயன்மார்களாலும் இறைவனுக்காகப் பாடப்பட்டது. தேவாரங்கள் (பாமாலைகள்) ஆயின. இறைவனால் அருள்பெற்றவர்கள் மூலம் பாடப்பட்ட தேவாராப் பதிகங்களும் பாடல்களும் பண்ணிசை மூலம் எமக்கு கிடைத்தன.

அந்தப் பண்ணிசை ஆரங்கள் இராகங்களாக வளர்ந்து ஸ்வர ஸ்தான வேறுபாடுகளால் (ஒலியினால்) விரிவடைந்து பல்லாயிரக் கணக்கான

இராகங்களும், பாடல்களாக எமது காதுகளில் கேட்கக்கூடியதாக வகுத்தவர்கள் எமது முதுபெருங் கலைஞர்களே. இவர்களின் பெரு முயற்சியினிலேயே கர்நாடக இசை யானது (தென்னக தமிழிசை) தனிப் பெரும் கலையாக வளர்ந்து வானளாவி நிற்கின்றது. இக்கால மாணவரும் கற்றறியக் கூடிய வகையில் இசையினை அறிந்து ஆராயும்வகையில் உள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கர்நாடக இசையினை கற்பவரும், கற்பிக்கும் ஆசிரியர்களும் அருளுடை அன்பும் ஆத்மஞானமும் பெற்று சிறப்படை வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தமிழிசையாகிய எமது கர்நாடக இசையில் தாய் போல விளங்கும் சுருதி (ஒலி நிலை) மிகவும் முக்கியமானது. எந்த ஒரு இசைக்கும் சுருதியாக ஆதார ஒலி நிலை இல்லையெனில் அது இசையாகாது. ஒரு அழகிய வீட்டைக் கட்டுவதற்கு தளம் எவ்வளவு முக்கியமோ அதேயளவு இசையெனும் அழகிய கோபுரத்தைக் கட்டுவதற்கு சுருதி ஆதாரமாகும். ஒவ்வொரு இசைக் கலைஞரும் தத்தமக்கு ஏற்ற ஒலி நிலையைத் தேர்ந்து எடுக்கவேண்டும். இந்தச்சுருதி (ஒலிநிலை) குரலுக்கு ஏற்ற நிலையில் ஒத்து இருக்கவேண்டும். சுருதியோடு குரல் வேறுபடாமற் சேர்ந்து ஒலிக்க வேண்டும்.

இசையிலே சிறந்தது குரலிசையே, பாடலுடன் சேர்ந்து கருத்துணர்த்தி ரசங்களை வெளிக்கொணரக்கூடிய சிறப்பு குரலிசைக்கேயுண்டு. குரலிசை வெவ்வேறு குரலமைப்பில் வெளி வந்தாலும் சுருதியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கலைஞனிடமும் உள்ள தனித்தன்மையினை உணர்த்தக் கூடியதாக அமைந்திருக்கும். கருவி யிசையில் நேரடியாக இலகுவிற் கருத்துக்களை அறிந்து உணர்வது குறைவாகவேயிருக்கும். ஆனால் வாத்திய இசை இராக ரசங்களையும் சாயித்திய பாவங்களையும் தனி இசை ஒலி மூலம் பிரதிபலிக்கிறது. கருவியிசையும் குரலிசையும் சேர்ந்து வெளிவரும் போது அதன் தனித்தன்மை சொல்லுதற்கரிய ஒன்றே!

"குழலும் யாழும் ஒன்றாய்க்கூடி, குரலை அதனுள் நன்றாயேற்றி முழவின் துணையாற் தாளம் காட்டி மூன்று தமிழின் முறையை நாட்டி "பாட வேண்டுமே இசைபாடவேண்டும்";

தேசிகர் அவர்கள் எமக்களித்த தீந்தமிழ்ப் பாடலில் அழகாகக் கூறியுள்ளார்கள்.

நம் தமிழிசையான பண்ணிசையில் இருந்து இசையாக வளர்ச்சியுற்ற கர்நாடக இசை குரலிசையாகவும், கருவிசையாகவும் பரந்து விரிந்து விஞ்ஞானம் கண்டு வியக்கும் அளவிற்கு உயர்ந்துகொண்டே வந்திருக்கிறது. "கல்லும் கணிந்துருகக் கனிந்த முருவலும் காட்சியளிக்கும் அந்தக் கருணையினை, கல்லிலும் உருவாக்கி இசைத் தூண்களாக "சப்த ஸ்வரங் களின்" ஒலியை எழுப்பக் கூடிய நம் தமிழ்க் கலைஞர்கள் எத்தகு கலை ஞானியராக இருந்திருக்கிறார்கள் என்பது வியப்பிற்குரியதே.

காலங் கண்டறியாத இசையினை முதன்முதல் கருத்தினில் நினைக்க வைத்தது அந்த சிவன் கருணை யல்லால் வேறென்ன? குரலிசை

மனிதனுடனேயே படைக்கப்பட்டது. ஆனால் கருவியிசை இசைஞானம் பெற்ற வாத்தியக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டு இசைக்கலைஞர் களாற் கையாளப்படுகிறது. இக்கருவிகள் வட இந்திய இசைக்கருவிகள் வேறு கர்நாடக இசைக்கருவிகள் வேறு. எந்த ஒரு நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்திய இசைக்கருவிகள் நூற்றுக் கணக்கில் உள்ளன. அவை ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு ரூபம், வெவ்வேறு பெயர்கள், அவற்றை வாசிக்கும் முறையும் வெவ்வேறே. ஒவ்வொரு இசைக்கருவியின் நாத வர்ணமும் வேறானதே. நாத அழுத்தம், அவற்றில் இயக்கக்கூடும் ஸ்வரங்கள் ஸ்தாயிகள் யாவும் வெவ்வேறே.

பொதுவாக இசைக்கருவிகளை தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி என வேறாகப் பிரிக்கலாம். இப்பிரிவுகளில் உள்ள எல்லா இசைக்கருவிகளும் இந்தியாவில் இருந்திருக்கின்றன. துளைக் கருவி களில் தோற்கருவிகளும் கஞ்சக் கருவிகளும் உலோகத்தினாலும் தோலினாலும் செய்யப்பட்ட கருவி களும், உலோகத்தினாலும் மரத்தி னாலும் செய்த கருவிகளும் பலவுண்டு. இந்திய இசைக்கருவிகளில் கமகம் என்னும் சிறப்பு அம்சத்தை வாசிக்கக் கூடிய கருவிகளே நிலைத்து நிற்கின்றன.

ஸ்வர மண்டலம் சததந்திரி வீணைகள் மறைந்துபோயின. கமக இசைக்கேற்ற கருவிகளாகிய வீணை, கோட்டு வாத்தியம் ஆகியன அழகுடன் மிளிரும் வாத்தியங்களாக நுட்பமான சுருதிகளைக் கூட்டவும் நாதத்தை அபிவிருத்தி செய்யும் பரிவார ஸ்வரங் களையும் இயக்கச் செய்யும் சாதனங் களும் பின்னரே இவ்விசைக் கருவிகளில் சேர்க்கப்பட்டன.

இந்திய இசையில் இராகம் பிரதான மானது. கார்மோனி, பாலிபோனி ஆகிய இசையிற் கையாளப்படும் வாத்தியங்கள் எமது இசையினில் வாசிக்க பொருந்தா தனவாக இருந்தபடியால் எம் இசைக்கு அவை பொருந்தாதனவாக இருந்தன. ஐரோப்பிய இசையில் சுருதி என்று ஒரு வாத்தியக் கருவியில்லை. இந்திய இசையில் சுருதிக்கென்று ஒரு வாத்தியம் தம்புரா இருக்கின்றது. இது எமது சமய புராணங்களில் வருகின்ற நாரதர் கையில் உள்ள தும்புரு என்னும் வாத்தியமாகும். இன்று தம்புரா வாத்தியக் கருவியாக வுள்ளது. இதனை அடிப்படையாக வைத்தே சுருதி, ஸ்வரம், ராகம், பாடல் என்று எமது இசை மிளிர்கின்றது. எமது மாணவர்களும் சுருதிப்பெட்டி என்ற கருவியை சுருதிக்காக உபயோகித்தும் பயில்கின்றனர். சில சிறந்த இசையாளர் கள் சுருதிப்பெட்டியுடன் தம்புராவும் உபயோகித்துப் பாடுகின்றார்கள், கருவி களாக வாசிக்கின்றார்கள். கருவி யிசையின் தன்மையும் இராகங்களையும், கமகங்களையும், இராக சாயித்திய நவரச பாவங்களையும் எடுத்துகாட்டி இசையின் இனிமையைக் கூட்டுகின்ற தாகவேயிருக்கும்.

எமது இசைக்கு இராகமும் அதன் ஜாலங்களும் எப்படியோ அந்த அளவிற்கு தந்தையாகிய தாளமும் சிறப்பு அம்சங் களாகும். இசை சப்தஸ்வரங்களில் இருந்து தோன்றியதுபோல தாளமும் சப்த தாளத்தில் இருந்தே கணிக்கப்படு கின்றது. பாட்டிற்கு தாயும் தந்தையும், சுருதியிலிருந்து (நாதத்திலிருந்து) வரும்

சப்தஸ்வரங்களும், சப்த தாளங்களும் எனலாம்.

சப்தஸ்வரங்கள் விரிந்து எவ்வாறு இசையானதோ அதேபோன்று (நிபந்தப் பாடல்களை) பாடலைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்து அழகூட்டி வருவது சப்த தாளங்களே. அவை தாள காலப் பிரமாணங்களையுடையனவாக விரிந்து பல தாளங்களாக பாடலுக்கும் இசைக்கும் மெருகூட்டுகின்ற தாளமும் இராகமும் சேர்ந்த இசையாகும்.

எமது இசையில் சிறப்பாக பத்து வகையான கமகங்கள் (அசைவுகள்) உபயோகிக்கப்படுகின்றன. கமகம் இல்லாத இசையை நீரில்லா ஆறு, நிலமில்லா இரவு, பூவில்லாக் கொடி, அணிகலனில்லாப் பெண் போல இருக்கும் என்று கலைஞர்கள் கூறுவார்கள். தென்னக இசையில் தசவித கமகங்கள் இன்றும் உபயோகத்தில் இருந்து வருகின்றது.

பச்சைமிரியம் ஆதியப்பர் இயற்றிய 'விரிபோனி' என்று தொடங்கும் பைரவி அட தாள வர்ணத்தில் இந்தப் பத்துவித கமகங்களும் கையாளப்படுகின்றன. அதைவிட கர்நாடக இசையில் கற்பனை இசை (மனோதர்ம சங்கீதம்) என்னும் பகுதி சிறப்பாகிறது. "மனோ தர்ம சங்கீதம்" என்று வடமொழியில் அழைக்கப்படும் கற்பனை இசையே, கலைஞர்கள் சிறப்படைவதற்கு, மிக முக்கியமாகும். அடிப்படையில் இருந்து கற்றுப் பயிற்சி பெற்று சங்கீதம் இசையின் நுட்பங்களை அறிந்து பின்பு உணரப்படும் இசையில் கலப்பித சங்கீதம், கற்பனை சங்கீதம் என இரண்டின் வேறுபாடுகளையுணர்ந்து வளரவேண்டும். இப்படி வந்த இசையை கல்பிதமாக படித்தவற்றைப் வெளிப்படுத்தல் என்றும், கற்பனை சக்தியைக் கொண்டு வெளிப்படுத்தல் எனவும் இரு வகையாக வெளிப்படுத்தலாம். கல்பிதம் இலகுவாக வெளிப்படலாம். ஆனால் கற்பனை சங்கீதமென்பது பரந்துவிரிந்த ஒன்று. கலைஞனின் கலைத்திறமையை வெளிப்படுத்தலாகும். இந்த கற்பனை வளத்திற்கு எல்லையில்லை. கலைஞரின் திறமைக்கேற்ப அவை விரிவடையும்.

1. இராக ஆலாபனை செய்தல் அல்லது வாசித்தல்.
2. தானம் பாடுதல் அல்லது வாசித்தல்
3. பல்லவி பாடுதல் அல்லது வாசித்தல்.
4. நிரல் பாடுதல் அல்லது வாசித்தல்
5. கற்பனை ஸ்வரம் பாடுதல் அல்லது வாசித்தல்.

இந்த மனோதர்ம பிரிவில் அடங்கும் ஐந்து வகைகளையும் வெளிப்படுத்தும் இசையில் வல்ல கலைஞர்களே உண்மையான இசைக் கலைஞர் ஆவர். அதனைத்தொடர்ந்து வர்ணம், கிருதி, கீர்த்தனை, தேவாரம், திருப்புகழ், பதம், தில்லானா போன்ற அழகிய (உருப்படிகளை) இசை வடிவங்களைக் கருத்துடன் கற்றுத் தெளிவுபெற வேண்டும்.

நம் தமிழிசைக்கே உரித்தான இசைக் கருவிகளையும் நாம் அறிந்திருத்தல் வேண்டும். தம்புர (சுருதி வாத்தியம்) வீணை, கோட்டுவாத்தியம், புல்லாங்குழல், நாதஸ்வரம், தவில், மிருதங்கம், கடம், கஞ்சிரா, மோச்சிங் முதலியவை எமது வாத்தியங்களே. வயலின், கிளாரினட் ஆகிய ஐரோப்பிய இசைக் கருவிகளில் அருமையாக

கர்நாடக இசையைக் கற்கும் வாசிக்கும் கலைஞர்கள் தோன்றியுள்ளனர்.

பல்லாண்டு காலமாக மக்கள் தென்னக இசையை குருகுல வாசமாகத் தான் கற்றுவந்தனர். பக்தியோடு ஒரு குருவை தேர்ந்து பல வருடங்கள் அவரோடு வாழ்ந்து படித்து, கருத்தூன்றிக் கற்ற பாடல்களைப் பாடிபாடித் தேர்ந்து முன்னுக்கு வருவதே குருகுலவாசம். இந்த இசை கற்கும் முறையில் ஒரு சிலரே கற்கமுடிந்தது.

இன்று பள்ளிகளிலும், கல்லூரி களிலும், பல்கலைக்கழகங்களிலும் நூற்றுக் கணக்கானோர் இசைக் குறியீடுகள், ஸ்வரதாளக் குறிப்புடன் அறிந்து கற்றல் என்ற முறையின்றி இலகுவாக அறிமுறை செய்முறையை அனுசரித்து குறியீடுகள் செய்து அறிஞர்கள் அமைத்த பாடல்களை பிழையின்றிக் கற்கவும் கற்றவற்றைக் கற்பிக்கவும். வசதியாக இலகுவான முறையை நம்மவர்கள் இன்று கையாளுகிறார்கள்.

தென்னக இசை முறைகளில் இசைப் பாடலாசிரியர்கள் அனைவருமே சிறந்த பக்திமான்களாக இருந்திருக் கின்றார்கள். அவர்கள் இயற்றிய பாடல்களும் பக்தி மயமானவையே. அப்பரும், சுந்தரரும் ஆளுடைப்பிள்ளை யும் அருணகிரிநாதரும் , குருமணிச் சங்கரரும், அருமைத் தாயுமானவரும், அருட்ஜோதி வள்ளலாரும் கருணைக் கடல் பெருகி அன்பினால் உருகி கன்னித்தமிழ்ப் பாடலை பாடியுள்ளார் களே இது ஒன்றே போதாதா? மேலும் மும்மூர்த்திகளான இசை வாக்கேய காரர்கள் எமக்கு அளித்த அரும்பெரும் பொக்கிஷங்கள் எல்லாம் இங்கேயுண்டு. எமது இசையை பக்தியிசையென்று கூறுவதும் வியப்பில்லை. இத்தகு சிறப்பு இசையினைப் பயில்பவர் புண்ணியம் செய்தவர்களே. இவ்விசையினைப் பல வழிகளிற் பயிலமுடியும். இன்று ஒலித் தட்டுக்கள், ஒலிப்பதிவு நாடாக்கள். இசைக் குறியீடுகள் கொண்ட புத்தகங்கள், வானொலியில் (கேள்வி ஞானம் பெறலாம்) தொலைக்காட்சி மூலம் இப்படி தூர இடங்களிலிருந்தும் தொலைத் தொடர்பாடல்கள் மூலம் இசை வளர்கிறது.

இன்று எங்கள் ஈழமணித்திரு நாட்டிலும் கலைஞர்கள் உள்ளார்கள். கர்நாடக இசையை கற்று தெளிந்தவர் கள் பலர் மூலம் இசைக்கலை வளர் கிறது. இவ்விசையில் நம் யாழ்ப்பாண மண்ணிற்கும் ஒரு தனிச் சிறப்புண்டு. இங்கேயும் கர்நாடக இசை வளர்கின்றது.

ஞாலம் போற்றும் அழகுடை நாடான ஈழத்திரு நாட்டில் உள்ள பாரம்பரியக் கலைகளை வளர்த்த நம் தமிழரசர்களும் மக்களும் காலப் போக்கினில் மறைந்துபோனாலும் நமக்கென்று ஓரிசையுள்ளது என்பதை மறக்கக்கூடாது. அத்தனை ஞானிகளும் சித்தர்களும் அவதரித்த இடத்தில் தெய்வீக இசை இல்லாமல் இருக்குமா? எங்கள் சமய குரவர்கள் பாடிய கோணேஸ்வரம், கேதீஸ்வரம் ஆகிய அழகிய ஐந்து ஈஸ்வரங்களும் இருக்கும் போது இசை எப்படி வளராமல் இருக்க முடியும்.

அன்றியும் அந்தக கவிவீர ராகவன் என்னும் யாழ்பாடி யாழ் வாசித்துப் பாடிப் பரிசுபெற்ற இடமல்லவா மணற்றிடராக

இருந்த யாழ்ப்பாணம். அழகிய இடமாக எத்தனையோ அரசர்களையும் கண்டிருக்கிறது. முத்திரைச் சந்தியில் இருக்கும் பழைய மன்னன் சிலையும் இக்காலத்தவர்களுக்கு நினைவூட்டுவது பல. இம் மண்ணிலே ஆறுமுக நாவலர் பெருமான் காலத்தில் தேவராத் திருமுறைகள் கோயில் தோறும் பாடப்பட்டு வந்தது யாவரும் அறிந்ததே. அக்காலத்தில் வாசிக்கப்பட்ட "சாரங்கி" என்னும் இசை வாத்தியம் இன்றும் கந்தரோடையில் உள்ள ஒரு வீட்டில் பாரம்பரிய பெரும் சொத்தாக பாதுகாக்கப் பட்டு வருகின்றமை நாமறிந்ததே.

எங்களுக்குப் பரிசாக கிடைத்த தெய்வத் தமிழிசையில் நாமும் வளர வேண்டும். நம்மவரும் வளரவேண்டும். தேர்ந்த தெய்வீக இசை நாடெங்கும் வளர்ந்து பெருகவேண்டும். ஒலி வடிவி லான இறைவனால் எமக்கு கிடைத்த இசை ஞானத்தை வளர்த்து எல்லோருக் கும் கொடுத்து ஆன்மீகத்தை வளர வைப்பதும் எமது கடமையேயாகும்.

எமது பண்ணிசையிலும் சரி கர்நாடக இசையிலும் சரி பக்தியும் தெய்வீகமுமேயிருக்கிறது. நம் தமிழிசை யில் எத்தனையோ உருப்படி வகைகளும் பாடல்களும் நிறைந்து கிடக்கின்றன. இதனைப் பயிலவேண்டும் என எண்ணுபவர்கள் எத்தனை பேர்? இந்த நவீன உலகில் நாகரீக கலாசார மாற்றங் களினால் சாஸ்தீரிய இசையில் நாட்டம் குறைந்து கொண்டே போகிறதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. முன்னைய காலத்தில் சைவ சமய கலை, பண்பாடு யாவும் ஆலயங்கள் தோறும் வளர்ந்து வந்திருக்கின்றன. நாட்டியம் (பரதம்) நாடகம், சாஸ்திரிய இசை, சமய கலாசாரம் யாவும் கோவில் களை மையமாக வைத்தே மக்களாற் கொண்டாடப்பட்டன. கோயில் நிகழ்வு களிலெல்லாம் கலைகள் இணைந்தே யிருந்தன எனலாம். பின்னர் மக்களின் கலை ரசனைகளில் மாற்றங்கண்டு, ஆத்மீகத்தை வளர்க்கவேண்டிய இடங்களில் லௌகீகப் பாடல்கள், களியாட்டங்கள் என்று தலையிடத் தொடங்கியது. இதனால் மக்களின் மனதில் அகங்காரம், ஆணவம், கோபம், முரட்டுத்தன்மை, ஜீவகருண்யம் அற்ற செயல்களில் ஈடுபடுதல், கொடூரம் இப்படி வேண்டாத, உதவாதன எல்லாம் நிறைந்தன.

பாவம் புண்ணியம் எங்கேயிருக் கின்றது என்று சொல்பவர்களையும் காணக்கூடியதாக இருந்தது. மதமும் மொழியும் ஒன்றுக்கொன்று முரண்படத் தொடங்கின. மதமும், மொழியும் ஒன்று, எல்லா மதமும் நம்மதம் "யாதுமூரே யாவரும் கேளிர்" என்ற தன்மைகள் மாறின. மக்கள் அழிவுப் பாதையை நோக்கிச் செல்லவேண்டியிருந்தது. தர்மம் தலை சாய்ந்தது. வசைகளும், ஏச்சுக்களும் எதிரெதிரான பாடல்களும், இசைகளும் மக்கள் மனங்களை எங்கோ கொண்டுபோய்விட்டன. எம்மக்கள் உலகெல்லாம் ஓடினார்கள். பெருமூச்சும் விட்டார்கள். இன்று வெளிநாடுகளிலும் நம்மவர்கள் தமிழிசையை நன்கு வளர்க்கத் தொடங்கியுள்ளார்கள். அங்கு சாஸ்த்திரிய இசையும் பரதமும் வளர்கின்றன. நம்மத நம்பிக்கையும் வளர்கிறது. இங்கும் நம்மதத்தில் கோயில்களும், பக்தியும் கோபுரங்களும் வளர்கின்றன. மக்களும் நம்பிக்கையுடன்

வழிபாட்டில் ஈடுபடத் தொடங்கியுள்ளார் கள். மதமும் மொழியும் மறையக்கூடிய ஒன்றல்லவே.

இசைக் கலையைக் கற்று இசை ஆசிரியர்களாக உருவாகியவர்கள் எத்தனையோ இசைக்கலைஞர்களை உருவாக்கக் கூடியவர்களாக இருக்க முடியும். மாணவர்களை தெய்வீக இசைக்குரிய பண்புகளோடு வழிநடத்திச் சென்று நற்பண்பு, நல்லொழுக்க நெறிகளையும் புகட்டி, சற்குருவாகத் திகழ முயலவேண்டும். எல்லோர்க்கும் இசையறிவைப் புகட்டியனுப்புவதே கடமை எனக் கொள்ளுங்கள். தெய்வீக இசையினைப் பாடவோ அன்றிக் காது கொடுத்துக் கேட்கும் அளவிற்கோ அவர்களை ஆக்கமுயலுங்கள்! நாட்டில் உள்ள சகல துன்பங்களையும் நீக்கி இறையன்பினைப் பெருக்கி மக்கள் யாவரும் உய்ய நாங்களும் உதவுகின் றோம் என்ற நினைப்புடன் பணி செய்யுங்கள். உங்களுக்கும் என்றும் இன்பமே.

இசைக் கலையானது கற்கும் போதும், கற்பிக்கும் போதும் மனதிற்கு மகிழ்ச்சியை தரும் ஒன்றாகும். மன நிலையை ஒரு நிலைப்படுத்தும் தன்மை யும் இதற்கு உண்டு. சுருதியின் நாதம் காதிலே நிறைந்து மனதை ஒரு நிலைப்படுத்தி இனிய இசையுடன் கலந்து பாடிக்கொண்டிருக்கும்போது அல்லது கருவியில் இசைக்கும்போது மனம் தியானம் போன்று நிலைத்து நிற்கும், நாத வட்டத்தை விட்டு விலகாது, மனதைச் சிதறவிடாது இசைக்குள் ளேயே அமிழ்ந்துபோவதே இக் கலை யின்பம்.

நாம் ஆலயங்களில் வழிபடும் போது இந்த ஒரு நிலை மனதில் இருந்து வழிபடவேண்டும். "தியானம்" என்பது இதுவே. இறை வழிபாட்டிலே இடையூறு கள் செய்வது பெரும் பாவமாகும். இறைவனைப் பாடி பணிகின்றபோது சொற்பிழை கருத்துப்பிழை வராது பார்த்துகொள்ளவேண்டும். கோயில் களிலே பக்தி வசமாவதற்கே நாயன்மார் கள் தேவார பதிகங்களை தந்திருக்கின் றார்கள் என்பதை எப்பொழுதும் மறக்கக் கூடாது. மகோற்சவ காலங்களில் பாடுதல் அல்லது வாசித்தல் சிறப்பாகும்.

"சலம்பூவொடு தூபம் மறந்தறி யேன் தமிழோடிசை பாடல் மறந்தறி யேன்" என்பதற்கிணங்க ஆண்டவனைப் பாடிப் பரவசமாகப் பணிந்து இசை யுருவாகிய இறைவனில் இணைய எல்லோரும் இசை பயில்வோமாக!

# கலாவிநோதன் M.P. அண்ணசாமியின் நாடக மேடைப் பாடல்கள்

அ. விஜயநாதன்

கலாவிநோதன் M.P. அண்ணாசாமி அவர்கள் தனித்துவமான ஓர் இசை நாடக நடிகர். நல்ல சாரீரவளம் உச்சஸ் தாயியில் பாடும் வல்லமையுள்ளவர். எட்டு வயது சிறுவனாக இருந்தபொழுதே தனது நாடக வாழ்க்கையை ஆரம்பித் தவர். அவருடைய நாடகங்கள் ஏறக் குறைய இரண்டாயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டுள்ளன.

கலாவிநோதனுடைய நாடக மேடைப்பாடல்கள் பற்றி நாம் அறிவதற்கு முன்பு அவரிடம் பொதிந்துள்ள ஆளுமை கள் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். ஏனைய இசை நாடக நடிகர்களிடம் இருந்து அவர் எவ்வாறு வேறுபடுகின்றார் என்பது பற்றியும் அறிதல் பொருத்தமான தாகும்.

கலாவிநோதனுடைய தந்தையார் மு.பெரியபொடி சிறந்த அண்ணாவி யாரும், நாட்டுக்கூத்துக் கலைஞரும், நாதஸ்வரக் கலைஞருமாவர். குருநாகல் நகருக்கும் சென்று தனது நாடகங்களை மேடையேற்றியுள்ளார். அவர் மரபில் உதித்த கலாவிநோதனிடமும் இத் தகைய சிறப்புக்கள் காணப்படுவது வியப்புக்குரியதல்ல.

1932ஆம் ஆண்டு கலாவிநோதன் அவர்கள் கலாலயம் என்ற நாடக சபாவை நிறுவி அதனூடாக வதிரிக் கிராமத்தில் உள்ள சிறுவர்கள், சிறுமிகள், இளைஞர்கள், யுவதிகள் ஆகியோருக்கு நாடகப் பயிற்சியளித்து, அந்த நாடகங்களை அவரால் அமைக்கப் பட்ட கொட்டகையில் மேடையேற்றி னார். அவருடைய வீட்டிற்கு அருகில் இந்தக் கொட்டகை நிரந்தரமாக அமைந் திருந்தது. பௌர்ணமி தினங்களில் இசை நாடகங்கள் இந்த நாடகக் கொட்டகை யில் நடைபெறுவது வழக்கம். அவர் சிறந்த ஓவியராக இருந்தமையினால் தானே வரைந்த 'சீன்ஸ்'ஸை தனது நாடகங்கள் மேடையேற்றப்படும் இடங் களில் உள்ள நாடக மேடைகளில் கட்டி நாடகமாடினார். மாளிகை சீன்ஸ், நந்தவன சீன்ஸ், றோட் சீன்ஸ், காட்டு சீன்ஸ் என்பவற்றைத் தனது கைப்படக் கீறி வைத்திருந்தார். அவருடைய இறப்பின் பின்னரும் அவருடைய சீன்ஸ் பல நாடக மேடைகளில் கட்டப்பட்டு நாடகங்கள் நடத்தப்பட்டன. இவை தவிர நாடகங்களுக்குரிய காட்சிகள், சோடனைகள் என்பவற்றையும் சிறப் பாகச் செய்யும் ஆற்றல் உடையவர்.

நாடகங்களுக்குரிய வாத்தியக் கருவிகளை வாசிப்பதில் வல்லவர். ஆர்மோனியம், மிருதங்கம் ஆகிய வாத்தியக் கருவிகளை பல நாடகங் களுக்கும் வாசித்துள்ளார்.

பெண் பாத்திரம் ஏற்றும் பல நாடகங்களில் நடித்துள்ளார். குறத்தி யாக, பால் விற்கும் இடைச்சி யாகவும் இன்னும் பல வேடங்களில் நடித்துள் ளார்.

இந்திய நாடக நடிகர்களுடன் இணைந்தும் நாடகம் நடித்துள்ளார். இராசப்பா, செல்லப்பா ஆகிய நடிகர்கள் இலங்கை வந்தபொழுது இராசப்பா வுடன் இணைந்து நாடகம் நடித்துள்ளார்.

இசை நாடகங்களை ஒரு மணித்தி யாலத்தில் நடிக்கக் கூடியதாகச் சுருக்கி எழுதி பல தடவை மேடையேற்றி யுள்ளார். சிறப்பாக அருணகிரிநாதர், பக்த நந்தனார், அரிச்சந்திர மயான காண்டம், அம்பிகாபதி, பட்டினத்தார் நாடகங்களை ஒரு மணித்தியாலமாகச் சுருக்கி மேடையேற்றியுள்ளார்.

கலாவிநோதன் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர். சித்திரம், சமயம், புவியியல் ஆகிய பாடங்களைச் சிறப்பாகக் கற்பிக்கக்கூடியவர். பாடசாலை ஆசிரிய ராக இருந்த காலத்தில் புராண இசை நாடகங்களை மேடையேற்றியதுடன், நாட்டிய நாடகங்களையும் மேடையேற்றி யுள்ளார். காவடி, நடனம் என்பன ஆடக் கூடியவராகவும் இருந்தார்.

சிறந்த கரப்பந்தாட்ட வீரராகவும் உதைபந்தாட்ட வீரராகவும் விளங்கினார். கலாவிநோதனுடைய கரப்பந்தாட்டம் விளையாடும் திறன் பற்றி சிலாகித்துக் கூறாதவர்கள் இல்லை. கரப்பந்தாட்டத் திற்கென்று அவருக்கு ஒரு ரசிகர்கள் குழாமே அந்தக் காலத்தில் இருந்தது.

கலாவிநோதனுடைய நாடக மேடைப் பாடல்கள் என்பன அவர் நடித்த இசை நாடகப் பாடல்களைக் குறிப்பன அல்ல. இசை நாடகங்கள் மேடை யேற்றப்பட்டபொழுது அக் காலங்களில் நடைபெற்ற சம்பவங்களை ஒட்டி அவ ரால் இயற்றி நாடக மேடைகளில் பாடப் பட்ட பாடல்களைக் குறிப்பன ஆகும். அவருடைய உள்ளத்தைப் பாதித்த சம்பவங்கள், சமூகத்தில் காணப்பட்ட அநீதிகள், சமூக ஒடுக்குமுறைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள், தமிழ் இன விரோதச் செயல்கள், பெண்களுக்கெதி ரான கருத்தாடல்கள், வறுமைப்பட்டவர் களை ஒடுக்குதல் என்பனவற்றுக்கு எதிராக அவருடைய பாடல்கள் வெளிக் கிளம்பின. அப்பாடல்கள் ஊடாக சமூகத் திற்கு சில செய்திகளைச் சொன்னார்.

கலாவிநோதனுடைய நாடக மேடைப்பாடல்கள் சில முழுமையாகக் கிடைக்கப்பெற்றன. சில பாடல்களின் இரண்டு அல்லது மூன்று வரிகளே கிடைத்துள்ளன. ஏறக்குறைய ஐம்பது வருடங்கட்கு முற்பட்ட காலங்களில் பாடப்பட்டவை இவை.

ஆரம்ப காலங்களில் கூத்துக்கள், இசை நாடகங்கள் என்பன கோயில் களிலும், கிராமியத் தெய்வங்களின் வழிபாட்டிடங்களின் வேள்விப்பொங்கல், மடை என்பன நடைபெறும் காலங் களிலும் மேடையேறின. குடியிருப்புக்கள் குறைவான காலகட்டத்தில் கிராமங் களில் வெளிகள் பல காணப்பட்டன. இவற்றை வெட்டை என அழைத்தனர். மேடைகள் அமைத்து அரங்கேற்றப் பட்டன. மேடைகளை நாடகக் கொட்டகை என அழைத்தனர்.

இவ்வாறு தான் அவருடைய கிராமத்திற்கு அணித்தாக உள்ள கிராமத்தின் கோயிலில் இசை நாடகம் மேடையேற்றப்பட்டது. அந்த ஆலயத் தில் திருவிழாவன்றும் திருவிழா முடிந்த அடுத்த நாட்களிலும் நாடகம் மேடை யேற்றப்படுவது வழக்கம். அந்த

ஆலயத்தில் ஒருமுறை சம்பூரண அரிச் சந்திரா நாடகம் நடைபெற்றது. முன் அரிச்சந்திரனாக உடுப்பிட்டியைச் சேர்ந்த வேலர் என்பவரும் பின் அரிச்சந்திரனாக கலாவிநோதனும் முன் சந்திரமதியாக சி. மாசிலாமணியும், பின் சந்திரமதியாக நடிகமணி V.V.வைரமுத்துவும் நடித்தனர். நாடகம் ஆரம்பித்து சில மணித்தியாங் களின் பின்பு கடும் மழை பெய்ய ஆரம்பித்தது. நாடகக் குழுவினரை ஆசிரியர் சி. வைத்திலிங்கம் அவர்கள் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டார். அவர் ஓர் இடதுசாரி சமசமாஜக் கட்சியின் தீவிரமான தொண்டர். அயற் கிராமங்களில் இருந்து நாடகம் பார்க்க வந்தவர்கள் தெப்பமாக நனைந்தபடி தமது வீடுகளுக்குச் சென்றனர். நாடகம் பார்க்க வருபவர்கள் குடும்பமாகவே வருவார்கள். சிறு குழந்தைகளுடனும் வருவார்கள். பாய்களும் கொண்டு வருவார்கள். கோயிலின் தெற்கு வீதியிலே தான் நாடகம் நடைபெற்றது.

மழை காரணமாக இடையில் நின்ற நாடகம் வேறு ஒரு தினத்தில் நடை பெற்றது. நாடகத்தை மீள மேடையேற்று வதற்கு கலாவிநோதன் சம்மதிக்க வில்லை. ஆனால் வைத்திலிங்கம் ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் நாடகத்தை அரங்கேற்றினார். நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அடுத்த காட்சி ஆரம்பிப்பதற்கு முன்பு பக்கத்தட்டிக்குள் இருந்து பக்கப் பாட்டுக்காரர்கள் பாடுவது வழக்கம். கலாவிநோதனும் பக்கத்தட்டிக்குள் இருந்து ஆர்மோனியம் வாசித்துக் கொண்டே அவர் பாடிய பாடல் எல்லோரையும் உசுப்பிவிட்டது.

**"கன மழை பெய்ய பெய்ய வழிவிட**
**மன மில்லா கார் காத்த பெருங் குடியே**
**நார் பூட்டி சறுக் சறுக் கெனேறி இறங்கி**
**வார் பூட்டிய மொந்தையின் எறும் பருகிய மீதி**
**தாவாராக் குந்தில் கண் ணிறுக்கி மொச் சுழிப்பீரே**
**தேவாரம் பாடும் வாயாரோ தீண்டத் தகாதார்"**

பாட்டுப் பாடி முடிந்ததும் வைத்திலிங்கம் ஆசிரியர் எழும்பி நின்று கைதட்டியதாக நாடகத்தை நேரில் பார்த்தவர்கள் சொன்னார்கள்.

இப்பாடல் ஒரு சமூகத்தவரை நையாண்டி பண்ணியதுடன் இன்னொரு சமூகத்தவரின் பண்பாட்டினையும் சமய விழுமியத்தையும் மறைமுகமாக எடுத்துக் காட்டுகின்றது.

சமதர்மவாதி வெ.தர்மகுலசிங்கம் அவர்கள் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய ஒருவர். வளர் சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர். 1950ஆம் ஆண்டு களிற்கு முன்பாக வளர்சமூக மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள், அவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் என்பனவற்றுக்கு எதிராக அந்த மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக நீதிமன்றங் களில் இலவசமாக வழக்காடிய ஒரு சட்டத்தரணி. வடமராட்சியில் உள்ள வளர் சமூக மக்கள் தேர்தலின்போது அவர் வெற்றிபெற வேண்டும் என்று தீவிரமாக உழைத்தனர். ஜெயம் என்று அழைக்கப்பட்ட தர்மகுலசிங்கம் அவர் களின் புகைப்படம் வதிரிக் கிராமத்தின் பல வீடுகளிலும் சுவர்களிலும் வளை களிலும் மாட்டி வைக்கப்பட்டிருந்தன. இந்தக் காலப்பகுதியில் வடமராட்சியில் வாழ்ந்த வளர் சமூக மக்கள் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் தர்ம குலசிங்கம் அவர்களுடைய ஆதரவாளர் களாகவும் இருந்தனர்.

சமதர்மக் கொள்கைகளைப் பரப்பு வதற்காக தர்மகுலசிங்கம் முன்னின்றவர் மட்டுமல்ல மக்களுடன் இணைந்து நாடகமும் நடித்துள்ளார்.

அல்வாய், வதிரி ஆகிய கிராமங் களுக்கு இடையில் அமைந்துள்ள சிறிய வெட்டையில் அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா அவர்களினால் தயாரிக்கப் பட்ட சமூக நாடகமான "ஏழை படும்பாடு" என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. கவிஞர் மு. செல்லையா அவர்கள் கவிஞர், பண்டிதர், ஆசிரியர் மட்டுமல்ல சிறந்த நாடக ஆசிரியருமாவர். சங்கீத ஞானம் படைத்தவர். பல நூற்றுக்கணக் கான கீதங்களின் சாகித்திய கர்த்தா. பல சீர்திருத்த நாடகங்களை எழுதியவர். கவிஞர் அவர்களால் எழுதப்பட்ட நாடகம் தான் ஏழை படும்பாடு. நாடகத் திற்குரிய கதை வசனம் பாடல்களை எழுதியவர் கவிஞர் செல்லையா. அந்த நாடகத்தில் கலாவினோதன், சி.மாசிலா மணி, செ.ஐயாத்துரை, மு.இராசையா, நா.செந்திநாதன், மு.ஆறுமுகம், வ.பரஞ் சோதி ஆகியோர் நடித்தனர். அவர்களுள் சிறப்பாக ஐயாத்துரை, கிருபா, மாசிலா மணி, செந்திநாதன் ஆகியோர் கலா வினோதனுடன் இசை நாடகங்கள் நடித்தவர்கள். ஆறுமுகம், பரஞ்சோதி ஆகியோர் பல சமூக நாடகங்களில் நடித்தவர்கள். அந்த நாடகத்தில் தோழர் தர்மகுலசிங்கம் அவர்களும் நடித்துள் ளார். ஒவ்வொரு காட்சிகளுக்கும் இடையில் றோட் சீன் விழுத்தி பின்பு அடுத்த காட்சிக்கு றோட் சீனை மேல் இழுப்பது வழமை. இப்படி றோட் சீன் விழுத்தப்பட்ட போது அடுத்த காட்சி தொடங்குவதற்கு முன்பாக தோன்றி கலாவினோதன் தானே இயற்றி ஒரு பாட்டைப் பாடினார்.

"காசு காசு காசு காசு
கையில் வந்தால் காணாக் காசு
நாளை எங்கே போவாயோ
இருக்குமிடமெங்கே சொல்"

இந்தப் பாடலில் பணத்தின் நிலை யில்லாத் தன்மையை கலாவிநோதன் சிறப்பாக எடுத்துக் காட்டினார். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த கவிஞர் மு.செல்லையா அவர்கள் நாடகம் முடிந்ததும் கலாவிநோதனின் முதுகில் தட்டி கிட்டப்பாவும் நீதான் N.S. கிருஷ்ணாவும் நீதான் என்று பாராட்டி னார்.

1949ஆம் ஆண்டு சமதர்மவாதி செ.தர்மகுலசிங்கம் அவர்கள் திடீரென காலமானார். அவருடைய மறைவு உழைக்கும் பாட்டாளி மக்களுக்கு பேரிழப்பானது. தர்மகுலசிங்கம் அவர் களுடைய இழப்பை தங்களின் ஒருவருடைய இழப்பாகவே தொழிலாள வர்க்கத்தினர் கருதினர். அந்தச் சமூகத் தினர் பலர் தங்களுடைய சோகத்தையும், அஞ்சலியையும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமாகவும் கவிதைகள் மூலமாகவும் வெளிப்படுத்தினர். ஒவ்வொரு கிராமங் களிலும் அஞ்சலிக் கூட்டங்களையும் நடத்தினர்.

தர்மகுலசிங்கம் அவர்கள் மறைந்த போது கலாவிநோதன் அவர்கள் எழுதிய பாடல் பல நாடகக் கலைஞர்களாலும் நாடக மேடைகளிலும் பாடப்பட்டது. நடிகமணி V.V.வைரமுத்து கலைஞர்கள் S.தம்பிஐயா, K.V.நற்குணம் ஆகிய பிரசித்தி பெற்ற இசை நாடக நடிகர்கள் எல்லோரும் இப் பாடலை தாம் நடித்துக் கொண்டிருந்த நாடக மேடைகளில் பாடினர்.

**"எங்கள் அருந்தலைவர் தர்மகுலசிங்கம் மறைந்தாரே**
**எங்கெங்கு தேடினும் அவர்போல் தங்கம் கிடைக்காரே**
**(எங்கள்)**
**கோட்டடி வாசலிலும் கூட்டம் கூடிப் பேசும் சபைதனிலும்**
**நாடகமேடையிலும் காணாது நலிந்து வாடினமே**
**(எங்கள்)**
**மக்கட்குத் தந்தை யெங்கே மனைவிக்கு தக்க**
**தலைவனெங்கே**
**அண்ணர்க்கு தம்பியெங்கே ஹரிசனர் கண்கண்ட**
**தெய்வமெங்கே (எங்கள்)**
**பாட்டாளி தோழனெங்கே பஸ்தொழிலாளர்**
**தலைவனெங்கே**
**கூட்டாளி ஜெயம் எங்கே எங்கே என்று கூவி**
**அழுவதும் ஐயோ (எங்கள்)**

வடபகுதியில் சமசமாஜக் கட்சியினர் ஹறிசனருக்கு என்ன செய்தனர் என்ப தற்கு "ஹரிசனர் கண்கண்ட தெய்வம் எங்கே" என்று கலாவிநோதன் பாடிய இப்பாடல் விடை அளிக்கின்றது.

1948ம் ஆண்டு இலங்கைப் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குடி யுரிமைச் சட்டமானது மலையகத் தமிழர் களின் குடியுரிமையை இல்லாமல் செய்தது. இலங்கை அரசாங்கம் மேற் கொண்ட முதலாவது இன ஒழிப்பு நடவடிக்கை இதுவாகும். இச் சட்ட மூல மானது மலையகத் தமிழர்களை நாடற்ற வர்கள் என்ற நிலைக்குத் தள்ளியது. இக் குடியுரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைத்தது.

இலங்கைத் தமிழர்களுக்கும் இந்த நிலை ஏற்படலாம் என்று நினைத்து தனது கோபத்தை பல நாடக மேடை களிலும் வெளிப்படுத்தினார். அது பாட லாகப் பரிணமித்தது.

**"இன்றைக்குத் தோட்டத்தொழிலாளி போ என்பர்**
**இன்னொரு நாளைக்கு எங்களைப் போ என்பர்**
**சிங்கள வர் சதிக்கா ளாகலாகுமோ**
**சீறி எழு தமிழா வாளை ஏந்தடா"**

என்று நாடக மேடைகளில் கொதித்துப் பாடினார்.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம், தென்மராட்சி ஆகிய இடங்களில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடைபெறுவது வழக்கமாக இருந்துவந்தது. தென்மராட்சி யில் நடைபெற்ற மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் வெற்றி பெற்றவரைக் கௌரவிப்பதற்காக பிரபல்யமான ஒருவரை விருந்தினராக அழைப்பது வழக்கம். ஒரு முறை நடைபெற்ற மாட்டு வண்டிச் சவாரிக்கு அழைக்கப்பட்டு பிரதம விருந்தினர் வெற்றி பெற்றவருக்கு மாலையிடாமல் ஓடிய மாட்டுக்கே மாலையிட்டார். அதுமட்டுமல்ல ஓடியது மாடுதானே என்று தான் மாலையிட்டது சரியென்று நியாயமும் கற்பித்தார். கலா விநோதன் கலைஞன் அல்லவா, கொடுமைகள் கண்டு கொதித்து எழுவது அவரது இயல்பு. இக் காலகட்டத்தில் அவருடைய நாடகங்கள் சாவகச்சேரி, கச்சாய், கொடிகாமம், கிளாலி, முகமாலை ஆகிய இடங்களில் நடை பெற்று வந்தன. இந்த நிகழ்வுக்குப் பின்பு முகமாலையில் நடைபெற்ற நாடகத்தின் வழமையாகவே பக்கத் தட்டிக்குள் இருந்து ஆர்மோனியம் வாசித்துக் கொண்டு பின்வரும் பாட்டைப் பாடினார்.

**"மாட்டுக்கு மாலை யிட்ட மணாளன்**
**வோட்டுக் கேட்டு வருவாரடி வீட்டுக்கு**
**வாட்டுக் கனுப்புவோம் புள்ளடி யிடாமலே**
**நாட்டுக் குதவாத தம்பிரான் றன்னை"**

1965ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வடபகுதியில் உள்ள ஆலயங் களில் சதுர்கச்சேரி நடைபெறுவது

வழக்கமாக இருந்துவந்தது. இந் நிகழ்ச்சிக்கென்று நடனமாடுபவர்களை சின்னமேளம் என்று அழைப்பர். பெரிய மேளம் தவில் நாதஸ்வரம். ஆலயங் களில் தவில் நாதஸ்வரக் கச்சேரி இரவு பன்னிரண்டு மணி வரை நடைபெறும். அதனை அடுத்து நடனம் நடைபெறும். இதற்கென்று ஒரு ஒழுங்குமுறை இருக் கின்றது. முதலில் பக்கவாத்தியக்காரர் கள் மேடையில் அமர்ந்து இருவர் பக்க வாத்தியம் வாசிக்க ஒருவர் பாடுவார். பல பாடல்கள் பாடி முடிந்ததும் இருவர் மேடையில் தோன்றி பாட்டுப் பாடுவர். நடனமாடும் பெண்கள் ஆரம்பத்தில் பக்திப் பாடல்கள் பாடுவர். பின்பு நாட்டிய மாடுவர். இறுதியாக அதாவது நாட்டியத் தில் கடைசி நிகழ்ச்சியாக தற்போது “குத்துப்பாட்டு” நாட்டியம் என்று சொல்லப்படும் நாட்டியம் நடைபெறும். இதற்கென்றே சிறு பிரபல்யமான பாடல்கள் இருந்தன.

உதாரணமாக,

**B.O.Y போய் போய் என்றால் பையன்**
**G.I.R.L கேள் கேள் என்றால் பொண்ணு**
**இந்தப் பொண்ணைக் கண்டதும் போதை உண்டாகுதே!**

**M.A.D மாற் மாற்றென்றால் கிறுக்கு**
**H.E.A.D ஹெட் ஹெட் என்றால் தலை**
**தலை கிறுக்குப் பிடிச்சு நீ ஏனோ திண்டாடுகிறாய்**

இதே மாதிரி
**டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே**
**உலகம் போற போக்கைப்பாரு தங்கமே தில்லாலே**
இப்படியான பாடல்களை நவநாகரிக உடை அணிந்து நாட்டியமாடுவர்.

இப்படியான சம்பவம் ஒன்று நடை பெற்ற போது நேரம் கடந்துவிட்டது என்பதைக் காரணம் காட்டி திருவிழா உபயகாரர்களுக்கும் ஆலய நிர்வாகி களுக்கும் இடையில் கலவரம். ஒருவர் வாளால் வெட்டுப்பட்டு இறந்தார். அதுவும் சுவாமி உள்வீதி வலம் வந்து வெளிவீதி வருவதற்கு வாசலில் காத்து நின்றபோது இச்சம்பவம் நடைபெற்றது.

இதன் பின்பு பல இடங்களிலும் நாடகம் மேடையேற்றப்பட்ட பொழுது கலாவினோதன் பின்வரும் பாடலையும் பாடுவது வழக்கமானது
**சின்ன மேளம் ஆட்டி சீர்கெட்டுப் போனவரே**
**வண்ண விளக்கும் பூட்டி வாளால் வெட்டினாரே....**

1965 இல் வதிரி தமிழ் மன்றம் நடத்திய கலைவிழாவில் கவியரங்கம், நாடகங்கள் என்பன இடம்பெற்றன. நவாலியூர் நா.செல்லத்துரை, கலா வினோதன் ஆகியோருடைய நாடகங் களும் இடம்பெற்றன.

கவியரங்குக்கு கவிஞர் ஐயாத்துரை தலைமை தாங்கினார். அவர் தனது தலைமைக் கவிதை வடிவில்
**“நாடகத்தால் நல் வதிரி**
**நாகரீகத்தால் உயர் வதிரி”**
என்ற வரிகளையும் பாடிக் காட்டினார். கலாவினோதனும் தனது நாடகத்தில் அவருடைய வரிகளை வைத்து இன்னும் இரண்டு அடிகளைச் சேர்த்துப் பாடினார்.

**நாடகத்தால் நல் வதிரி**
**நாகரிகத்தால் உயர் வதிரி**
**என்றாரே தங்கக்கவிஞர் ஐயா**
**கல்விச் சாலையது அமைத்த வதிரி**
**தமிழ் வளர்க்க மன்றம் தந்த வதிரி**

யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் அடைந்த வழக்கு கோகிலாம்பாள் வழக்கு. கோகிலாம்பாள் தன்

கணவனைக் கொன்று எருக்கும்பியில் குழிபறித்து மூடியது கண்டுபிடிக்கப்பட்டு பின் கோகிலாம்பாளுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. ஈழநாடு பத்திரிகையில் வழக்கு விபரங்கள் அடிக்கடி வந்து கொண்டிருந்தன. யாழ்ப்பாண மக்கள் மத்தியில் அதிர்வை ஏற்படுத்திய நிகழ்வு மட்டுமல்ல யாழ்ப்பாண கலாசாரத்திற்கு ஒவ்வாத ஒரு நிகழ்வாகவும் காணப் பட்டது. முகமாலையில் கலாவினோதன் அவர்களின் சத்தியவான் சாவித்திரி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை மிகவும் ஆக்ரோசமாக கோகிலாம்பாளை யும் வழக்குக்கு ஆஜரான அப்புக்காத் தரையும் சாடிப் பாடினார்.

**"கீழ்க்கோட்டில் சாட்சிக் கூட்டில்**
**கிழவர் தம்புச்சாமி, இராசலட்சுமி**
**கொடுத்த வாக்குமூலம் பதிவு செய்தார் நீதிபதி**
**அதை மேல்கோட்டுக்கு அனுப்பினாரே**
**மேதினியில் வைத்திலிங்கம்**
**தம்புச்சாமி கூட்டில் ஏறி**
**கொடுத்தாரே வாக்குமூலம்**
**அதை குத்துச்சாமி என்றார் அப்புக்காத்தார்**
**தம்புச்சாமி என்றார் நீதவான்"**

கோகிலாம்பாள் வழக்கு சுப்பிறீம் கோட்டுக்கு பாரப்படுத்தப்பட்டதையும், சுப்பிறீங் கோட்டு வழங்கிய தீர்ப்பையும் இப்பாடலில் மறைமுகமாக எடுத்துக் காட்டினார் கலாவினோதன் அவர்கள்.

கலாவினோதன் ராஜபார்ட் நடிக ராக நடித்த பொழுது அவருடன் பல நாடகங்களில் ஸ்திரீ பார்ட் நடிகராக நடித்தவர் எஸ்.தம்பிஐயா. தம்பிஐயா அவர்களும் சிறந்த அண்ணாவியாரும் நடிகருமாவார். கலாவினோதனும், கலைஞர் தம்பிஐயா அவர்களும் இணைந்து நடித்த பல நாடகங்கள் ரசிகர்கள் மத்தியில் பெரும் பாராட்டுக் களையும் வரவேற்பையும் பெற்றன. கவிகாளிதாசன் நாடகத்தில் எஸ். தம்பிஐயா அவர்கள் போஜராஜனாகவும், கலாவினோதன் அவர்கள் காளிதாசனாக வும் நடித்தனர். இருவருமே மேடையில் நினைத்தவுடன் பாடல்களை இயற்றிப் பாடும் வல்லமை உள்ளவர்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளை புரிந்துகொண்டு அதற் கேற்றாற்போல் பாடும் வல்லமைகளும் உள்ளவர்கள். காளிதாசன் நாடகத்தில் ஒரு காட்சி போஜராஜன் அவர்களுடைய அரச சபையிலே புலவர்கள் வீற்றிருக் கின்றனர். ஒவ்வொரு புலவர்களுக்கும் ஒவ்வொரு சொல்லைக் கொடுக்கின்றார் போஜராஜன் ஆகிய தம்பிஐயா அவர்கள். அந்தச் சொல்லை விளக்கக்கூடிய பாடல்களை புலவர்கள் பாடவேண்டும். அல்லது முதலும் இறுதியுமாகிய சொற் களை கொடுத்தால் அச் சொற்களை வைத்து பொருள் விளங்கக்கூடிய வகையில் பாடவேண்டும். இது எல்லா நடிகர்களாலும் முடியாத விடயம் கலா விநோதன் அவர்களுடைய திறமையை வெளிக்காட்டவேண்டும் என்பதற்காக நாடகத்திற்கு பொருந்தாத வகையில் "புலவரே அண்ணா என்று தொடங்கி.... தம்பி என்று முடியும் ஒரு பாடலை பாடுவீர்களா என்று கேட்க கலா வினோதனும் அண்ணாசாமி என்று தொடங்கி.... தம்பிஐயாவே என்று முடியும் விருத்தம் ஒன்றை பாடி முடித்தார். சபையோர் மத்தியில் இருந்து கரகோஷம் வானைப்பிளந்தது ரசிகர் களின் பாராட்டு மழையிலே இருவரும் நனைந்தனர்.

சில சந்தர்ப்பங்களில் தன்னோடு நடித்தவர்களுக்கும் பாடல்கள் சொல்லிக் கொடுத்து உதவியுள்ளார். பிரபல்யமான நடிகை ஒருவர் கலாவினோதனுடன்

நடித்தவர். சிலவேளைகளில் அவர் கதா நாயகியாகவும் சிலவேளைகளில் கதா நாயகிக்கு தோழியாகவும் வருபவர். பபூன் வேடத்தில் இவருடைய நாடகங்களில் நடித்தவர் ஒருவர் கவிதை இயற்றக் கூடியவர். அறிஞர் அண்ணாவின் தீவிர ரசிகர், இடது சாரிக் கட்சியினர் நடத்திய கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி பரிசு களும் பெற்றவர்.

ஸ்ரீவள்ளி நாடகத்தில் ஒரு காட்சி. வள்ளியின் தோழிகளில் ஒருத்தியாக பிரபல்ய நடிகை வருகின்றார். அவர்களுக்கு வரும் காவலாளிகளில் ஒருவராக பபூன் நடித்தார். நடிகையைக் கண்டதும் பபூன் "மானே உன்னைக் கண்டதும், என்னுடம்பை வாட்டுதே, வதைக்குதே, என்னுடம்பை நீட்டி நெளிக்குதே" என்று நையாண்டியாகப் பாடினார். ஏற்கனவே கலாவினோதன் இதற்கு பதிலடியாக ஒரு பாடலை அந்தப் பிரபல்யமான நடிகைக்கு சொல்லிக் கொடுத்திருந்தார்.

**"சோதாமைனர்சோப்பெரிக்கூட்டம்**
**சழிமாறித்தெரியுதுதேவ்டிம்**
**வாயாடிவம்புகள்பேசி....**
**வாங்கினான்பீடிகள்ஓசி"**

இந்தப் பாட்டுப் பாடியதில் இருந்து அந்த நடிகர் நடிகையை ஒருபோதும் நக்கலடித்துப் பாடியது இல்லை. இவ்வாறு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பாடல்களை பாடுவதில் வல்லவர்.

அவருடைய பாடலைக் கேட்டு நாடகம் பார்த்துக் கொண்டிருந்தோர் கண்ணீர் சிந்திய சம்பவம் ஒன்று உண்டு. கலா வினோதனுடைய முதலாவது மனைவி இறந்து ஆறு மாதங்களின் பின்னர் வதிரியில் தேவரையாளி இந்துக் கல்லூரி முன்பாக அமைந்துள்ள சிறிய வெட்டையில் கோவலன் கண்ணகி நாடகம் நடைபெற்றது. மாதவியைப் பிரிந்த கோவலன் கண்ணகியிடம் அடைக்கலம் தேடிச் செல்லும் காட்சி. கோவலனாகிய கலாவினோதன் "அடைக்கலமே என்று மிகவும் சோகமாக நெஞ்சுருகிப் பாடிக்கொண்டு செல்கின்றார். தனது மனைவியை நினைத்தபடி அழுது அழுது உருக்க மாகப் பாடிக்கொண்டு செல்கின்றார். பாட்டின் இறுதியில் இரு வரிகள் பார்வையாளரின் சோகத்தை உச்சப் படுத்தியது. அது தான் தனது மனைவியை நினைத்துப் பாடியது

"என் இனியவளே அடிசிற் கினியாளே
உன் வாய் அமுதம் மறப்பேனோ"

இப் பாட்டைக் கேட்டு சபையோரும் கண்ணீர் விட்டதாக நாடகத்தைப் பார்த்தவர்கள் பலரும் சொல்லியிருக்கின் றார்கள். கலாவிநோதனுடைய நாடக மேடைப் பாடல்கள் அரசியல், சமூகம் சார்ந்த பல விடயங்களைச் சொல்வன. அவை இசை நாடக வரலாற்றில் நிச்சயமாகச் சேர்க்கப்பட வேண்டும்.

# வதிரி மடம் - வதிரிக் கிராமத்தில் ஏற்படுத்திய தாக்கம் ஒரு வரலாற்று நோக்கு

**திருமதி மகேந்திரா இளங்கோ**
ஓய்வுபெற்ற ஆசிரியை

**அறிமுகம் :**

மனிதன் நாகரிக முன்னேற்றத்தில் நிரந்தர வாழ்வாதாரத்திற்கு வழிகோலிய வேளை தன் ஓய்வு காலத்தைப் பல்வேறு துறைகளிலும் விருத்தியாக்கி வந்ததுடன் காலாகாலம் சூழ்நிலைக்கேற்ப அவற்றை மேன்மேலும் மெருகூட்டி வந்துள்ளான். கருவிகளின் கண்டுபிடிப்புகளோடு கலை கலாசார அபிவிருத்தி, பொழுதுபோக்கு அம்சங்களின் விருத்தி, உற்பத்தியில் பல்வகைத்தன்மை, நுகர்வுக் கலாசார மாற்றம் என்பவற்றுடன் குழுநிலை வாழ்க்கையின்போது தான் வாழும் சமூகம் சார்ந்தும் சிந்திக்கத் தலைப்பட்டான். இதன் விளைவாக சமூகத்திற்கு தன்னாலியன்ற சேவைகளை தனித்தும் கூட்டாகவும் வழங்க முன்வந்தமையை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது.

யாழ்ப்பாண மக்கள் பல்வேறு சமூக நல அமைப்புக்களை சில நூற்றாண்டுகளுக்கு முன்பே உருவாக்கி சேவையாற்றி வந்துள்ளனர். இவற்றில் அண்மைக் காலம்வரை மக்கள் பயன்பாட்டிலிருந்தும் யுத்தத்தினாலும் வீதி அபிவிருத்தி என்ற போர்வையிலும் அழிக்கப்பட்ட தெருமூடி மடங்கள், வீதியோர மடங்கள் என்ற சேவை நிலையங்கள் பல. எஞ்சியிருக்கின்ற வீதியோர மடங்களில் ஒன்றான வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலக நிர்வாக எல்லையில் இன்றும் நிலைத்து நிற்கும் வதிரி மடத்தடி மடம் பற்றிய விபரங்களைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மடங்கள் :**

யாழ்ப்பாணத் தமிழர்களின் தனித்துவமான பண்பாட்டுக் குறிகாட்டிகளில் மடங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இம் மடங்கள் பல் வகையுண்டு. தேவைக்கேற்ற வகையிலும் அக்கால கலை, கட்டிட மரபுகளுக்கு ஏற்பவும் இவை அமைக்கப்பட்டிருப்பது கண்கூடு.

**அன்னதான மடங்கள் :**

யாழ்ப்பாணத்திலுள்ள அநேக சைவ ஆலயங்களில் அடியார்களுக்கு அமுதூட்டுவதற்காகவும், அடியார்கள் துறவிகள் நிரந்தரமாக தங்குவதற்காகவும் விழாக் காலங்களில் அடியார்கள் தங்கி இளைப்பாறுவதற்காகவும் தனவந்தர்களினால் பல மடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முதியோர் இல்லங்கள் அருமையாக இருந்த அக் காலப் பகுதியில் குடும்பத்தில் பிணக்குகள் ஏற்பட்ட முதியவர்கள், நடுத்தர வயதினர், அனாதைகள் என்போருக்கும் இம் மடங்கள் இறுதிக் கால ஆதரவை கொடுத்திருக்கின்றன. அன்னதானக்கந்தன் என்று போற்றப்படும் செல்வச்சந்நிதி ஆலயமே மிக நீண்ட காலமாக அதிக அன்னதான மடங்களைக் கொண்டிருந்ததோடு இன்றும் பல மடங்கள் காலத்துக்கேற்ப விருத்தியாகி தமது சேவையை

வழங்கிக் கொண்டிருக்கின்றன. தற்போது வேறு ஆலயங்களிலும் புதிதாக மடங்கள் அமைக்கப்பட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கிவரினும் செல்வச் சந்நிதி ஆலய அன்னதான மடங்களின் வரலாறு தனித்துவமானதும் தனித்து ஆராய வேண்டியதுமாகும்.

### தெருமூடி மடங்களும் பெரு மடங்களும்

போக்குவரத்துச் சாதனங்கள் விருத்தியற்றிருந்த காலப்பகுதியில் கடல் வாணிபம், உள்ளூர் வாணிபம் என்பவற்றை விருத்தியாக்குவதற்காக அமைக்கப்பட்டவையே பெரு மடங்களும் தெருமூடி மடங்களுமாகும். கடல் வாணிபத்தினூடாக கொண்டு வரப்படும் பொருட்கள் கடல் முகப்புத் தளங்களிலமைந்த பெரு மடங்களிலேயே (கிட்டங்கிகள்) சேமித்து வைக்கப்பட்டன. இவையே விருத்தியடைந்து கிட்டங்கிகள், துறைமுக களஞ்சியங்கள் என மாற்றமடைந்தன. பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் இவ்வாறான ஒரு மடம் இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிக் காலம்வரை இருந்தமையைக் குறிப்பிடலாம்.

உள்ளூர் வணிகர்களும் பாதசாரிகளும் தங்குவதற்காக தெருமூடி மடங்கள் அமைக்கப்பட்டன. வீதியை மூடியதாகவும் உட்புறத்தில் சுமைகளை வைக்கக்கூடியதாகவும் தங்கக்கூடியதாகவும் மேடை போலமைக்கப்பட்டதே இம் மடங்களாகும். இங்கு வாணிகப் பொருட்களை ஏற்றிவரும் வண்டிற் கூட்டங்கள் இளைப்பாறி சற்று பசி தணிந்து, திருடர்களிடமிருந்து பொருட்களைக் காப்பாற்றி உரிய சந்தைகளுக்கு எடுத்துச்செல்ல வசதியாக அமைந்தது. நீண்ட தூரம் பயணிக்கும் பாதசாரிகளும் யாத்திரிகர்களும் இத் தெருமூடி மடங்களில் பகலிலும் இரவிலும் தங்கி இளைப்பாறிச் செல்வதுண்டு. இத் தெருமூடி மடங்கள் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் மந்திகை, தும்பளை - பருத்தித்துறை வீதியில் சிவன்கோயிலுக்கு அண்மையில் அமைந்திருந்தன. தற்போது பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அண்மையிலுள்ள தெருமூடி மடமே வடமராட்சியின் தெருமூடி மடங்களின் வரலாற்றின் எச்சமாகவும் பண்பாட்டின் எடுத்துக்காட்டாகவும் உள்ளது.

### அந்தியேட்டி மடங்கள்

சைவமக்களின் வாழ்வில் ஒருவரின் மரணத்தின்பின் 31ம் நாள் நிகழும் அந்தியேட்டிக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. இக் கிரியையை புனித நீர்நிலைகளை அண்டியே நடாத்தல் வேண்டுமென்பதே விதிமுறையாகும். யாழ் குடா நாட்டு மக்களில் பெரும்பான்மையானோர் சைவசமயத்தவர்களாகையால் இக் கிரியையை நடாத்துவதற்காக கடற்கரையோரங்களில் ஆலய தீர்த்தோற்சவம் நடைபெறும் புனிதமான இடங்களில் ஆங்காங்கே பல மடங்களையமைத்து அந்தியேட்டி மடங்களென அழைத்துக் கொள்வர். இவ்வகையில் கீரிமலையில் அமைக்கப்பட்டுள்ள மடங்கள் விசேடத்துவமுடையனவாகும். வடமராட்சிப் பகுதியில் ஊறணி, சுப்பர்மடம், இன்பருட்டி போன்ற இடங்களில் தாபிக்கப்பட்டிருந்தன.

### வீதியோர மடங்கள்

வீதியின் இரு மருங்கும் வீதியை மூடி அமைக்கப்பட்ட தெருமூடி மடங்களுக்கு மாறாக அமைக்கப்பட்டதும்

உண்டு. இம் மடங்களும் இளைப்பாறுதல், தங்குதல், தொழிலின் இடையில் உணவருந்துதல் போன்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டன. இவற்றையும் பாதசாரிகளும், யாத்திரிகர்களும் பயன்படுத்தியுள்ளனர். வடமராட்சியில் நெல்லியடி (தற்போது திரு. மு. சிவசிதம்பரம் பா.உ. வின் சிலை அமைந்த இடம்), சாரையடி, சுப்பர்மடம், தில்லையம்பலம், வதிரி, மாலிசந்தை (பருத்தித்துறை - யாழ் வீதி) ஆகிய இடங்களில் இம் மடங்கள் அமைக்கப் பட்டிருந்தன. மாலிசந்தை மடத்துப் பிள்ளையார் ஆலயத்தின் முன் வீதியுடன் இணைந்த கிணற்றின் அண்மையில் இம் மடம் அமைந்திருந்தது. தற்போது அழிவடைந்த நிலையிலுள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரை (1990) இம்மடங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தபோதும் உள்நாட்டின் கொடூர யுத்தம், நவீன கலாசாரப் போக்கில் மடங்கள் முக்கியத்துவம் பெறாமை, யுத்தத்தின்பின் வீதி அகலிப்பு, அபிவிருத்தி என்ற போர்வையில் பாரம்பரியத்தின் சின்னங்களான இம் மடங்கள் அழிக்கப்பட்டமை, பொது மக்களின் அக்கறையின்மை என்பவற்றின் காரணமாக இவை கைவிடப் பட்டு, அழிக்கப்பட்டுவிட்டன. எனினும் சுற்றாடல் கிராம மக்களால் 'மடத்தடி' என்று சிறப்பித்து அழைக்கப்படுகின்ற வதிரியில் அமைந்த மடம் இன்றும் அழிவடையாது இயங்குவது குறிப்பிடத் தக்கது.

### வதிரி மடம் : அமைவிடம்

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலக நிர்வாகத்திற்குட்பட்ட நெல்லியடி மேற்கு கிராமசேவகர் பிரிவில் இது அமைந்துள்ளது. மாலிசந்தியிலிருந்து உடுப்பிட்டி வீதியூடாகச் செல்லும் பயணியொருவர் வதிரிச் சந்தியைக் கடந்து இரும்பு மதவடியை அண்மித்த பின் சில மீற்றர் தூரத்தையடைந்தால் வதிரியின் விவசாய நிலங்களையடுத்து வீதியின் இடப்புறத்திலமைந்த மடத்தினை எளிதில் கண்டு கொள்வார். "குமாரியோடை" என்ற பெயருள்ள தோட்டக்காணியிலமைந்த இம்மடம் பெரும் சிறப்பு வாய்ந்ததாகும். வதிரி, கரணவாய் வடக்கு கிராமங்களின் வாழ்வாதாரமாக விளங்கிய இருவாட்டி மண் தன்மையுள்ள தோட்ட நிலப்பரப்புக்களுக்கு மத்தியில் பிரதான விதிக்கருகில் அமைந்திருப்பது இதன் அமைவிடச் சிறப்பாகும். அத்துடன் வளர் நகரமாக விளங்கும் நெல்லியடிக்கு அண்மையில் இருப்பதும் இதன் சிறப்பை இன்னும் உயர்வடைய செய்கின்றதெனலாம். ஒருவர் இம் மடத்தடியை மையப்புள்ளியாகக் கொண்டு $360^0$ யும் சுற்றி நோட்டமிடுவாராயின் புகையிலையும் வெங்காயமும் மிளகாயும் காய்கறிகளும் விளையும் தோட்டப் பசுமையை கண்டு களிப்பார்.

### தோற்றம்

விவசாய பூமிக்கு மத்தியில் விவசாயிகளால் 200 வருடங்களுக்கு முன் இம் மடம் அமைக்கப்பட்டது. இம் மடத்தினருகில் உள்ள குமாரியோடைக் கிணறே வீதியருகிலிருந்த கிணறு ஆகும். எனவே ஆரம்பத்தில் வழிப்போக்கர்களும் ஏனையோரும் பயன்படுத்தும் வகையில் சுமைதாங்கி ஒன்றை அமைத்தே பராமரித்து வந்தனர். கிணற்றடி ஆடுகால் நிழல் இளைப்பாறப் பயன்பட்டது. பயிர்ச்செய்கை அல்லாத காலத்தில் மேய்ச்சலுக்கு விட்ட விலங்கு

களைக் கண்காணிக்க ஆடுகால் நிழல் களே போதுமானவையாக இருந்தன.

வாழ்வாதார உற்பத்திப் பயிர்களான தினை, சாமை, குரக்கன் போன்ற வற்றைப் பயிரிடும்போது குறுகிய காலப் பயிர்ச்செய்கை, முழுநேர வேலை யின்மை என்பவற்றின் காரணமாக கமக் காரர் இளைப்பாறுவதற்கு கிணற்றோடு இணைந்த ஆடுகால் நிழலே போதுமான தாக இருந்தது. காலப்போக்கில் வேளாண்மை உற்பத்தி பணப்பயிரான புகையிலையை அதுவும் ஏறத்தாழ ஆறு, ஏழு மாத பயிர்ச்செய்கை காலத்தைக் கொண்ட இப் பயிருக்கு மாற்றமடைந்த போது நிரந்தர ஓய்விடம் ஒன்றின் தேவை உணரப்பட்டது. எனவே சுமைதாங்கிக் கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஓலைக் கொட்டிலொன்றை அமைத்து கமக்காரர் தமது தேவைக்கு பயன்படுத்திக் கொண்டனர். அத்துடன் பயணிகள், வழிப்போக்கர் வியாபாரிகளும் பயன் படுத்த இடமளிக்கப்பட்டது. உடுப்பிட்டி கரணவாய் பகுதி மக்கள் வளர் நகரான நெல்லியடிக்கும் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கும் செல்லும் போது இம் மடத்தினைப் பயன்படுத்துவது கண்கூடு. இன்றளவும் இப் பயன்பாடு உண்டு.

ஓலைக் கொட்டிலாக இருந்த இம் மடத்தை கற்கட்டிடமாக்கியதில் திருவாளர் சின்னப்பிள்ளை, திருவாளர் சின்னத்துரை ஆசிரியர் ஆகியோருக்குப் பெரும் பங்குண்டு. இவர்களால் ஆரம்பிக் கப்பட்ட இப்பணியை பிற்காலப் பகுதியில் திரு. சி. நடராசா தொடர்ந்த துடன் மீண்டும் திருத்தியமைத்து அழிவடையாது பாதுகாத்துக் கொண்டனர். இம்மடம் அமைத்தலுக் கான முன்னோடி திரு. அம்பலவாணர் கேதப்பர் ஆவார். இவரது அத்திபாரமே இன்றும் தொடருகின்றது.

**வதிரியின் பொருளாதாரமும் மடமும்**

மடத்தடியைச் சூழவுள்ள பிரதேசத் தின் மண் தன்மையானது நீரைத் தேக்கி குளங்களை அமைக்கக் கூடியதாகவோ அல்லது நெற்பயிருக்குரியதாகவோ அமைந்ததல்ல. தோட்டப் பயிரச் செய்கையை மேற்கொள்ளக் கூடிய தன்மையுடையதாகும். மடத்தினருகில் செல்லும் வீதிக்கு வலதுபுறமாக அமைந்த பிரதேசம் மணற் செறிவு கூடிய தாகவும் தரைக்கீழ் நீர் ஆழமானதாகவும் அமைய வீதியின் இடதுபுறம் இருவாட்டித் தன்மை கொண்ட மண்ணும் ஓரளவு ஆழம் குறைந்த கிணறுகளையும் கொண்டது. எனவே பிழைப்பூதிய விவசாயிகளாக இருந்த இம் மக்கள் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியாது குரக்கன், தினை, சாமை போன்ற வற்றைப் பயிரிட்டதுடன் குழு முறையில் துலா மிதிப்பால் கிணற்றிலிருந்து நீர்ப் பாய்ச்சல் செய்ததுடன், பின்பு "சூத்திரம்" என்றழைக்கப்படும் மாடுகளைப் பயன் படுத்தி நீர்பாய்ச்சியும் 1960 ன் பின் நீர்ப்பம்பிகளூடாகவும் நீர்பாய்ச்சி பயிரிட்டனர்.

ஐரோப்பியர் காலத்தில் யாழ்ப் பாணப் பகுதியில் புகையிலைப் பயிர் அறிமுகமாக்கப்பட்ட போது வதிரியுட்பட வடமராட்சிப் பகுதியில் இப் பணப்பயிர்ச் செய்கையில் மக்கள் நாட்டம் கொள்ளத் தொடங்கினர். இதன் விளைவாக மடத்தடி மேலும் சிறப்படையத் தொடங்கியது. வடமராட்சிப் பகுதியில் மந்திகை, கரணவாய், வதிரி, தொண்டை மானாறு, கெருடாவில், கம்பர்மலை,

சோழங்கன் என்பனவே புகையிலை விளைவிக்கப்படும் பிரதேசங்களாகும். இவை யாவற்றையும் இணைக்கின்ற மத்திய பிரதேசமாக மடத்தடி விளங்கியது. புகையிலை நாற்று மேடைகளுக்கு சிறப்பும் புகழும் வாய்ந்த இடங்களாக விளங்கிய வதிரி, பொலிகண்டி ஆகிய இடங்களை நாடி வலிகாமம், தீவகப் பிரதேச புகையிலைப் பயிர்ச் செய்கையாளர்கள் புகையிலை நாற்றுக் கொள்வனவுக்காக வருகைதரும்போது மடத்தடி பிரபல்யமானது. நாற்றுக்களின் தரம், விலை என்பவற்றை நிர்ணயிக்கும் மத்திய இடமாக இம்மடத்தடி விளங்கியது. இவற்றை மடத்தடியில் விசாரித்த பின்பே பொலிகண்டி போன்ற இடங்களுக்கு கொள்வனவு செய்யச் செல்வர். மக்களிடம் நன்மதிப்புப் பெற்ற புகையிலைத் தரகர்களான திரு. கந்தையா, திரு. இராமலிங்கம், திரு. நாகலிங்கம் போன்றோரை வளர்த்தெடுத்தது இம் மடத்தடியே. இதன் நன்றிக் கடனாக தாம் பெற்ற அறிவை ஏனையோருக்கு புகட்டும் களமாகவும் இதனைப் பயன்படுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான உள்ளீடுகளான பசும்தாழ் பசளைகள் மாட்டெரு போன்றன அனுராதபுரம், வவுனியா போன்ற தென் பகுதிகளிலிருந்தும் தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்தும் மாட்டுவண்டிகளிலும் பிற்காலப் பகுதியில் நவீன வாகனங்களிலும் வருகைதந்தபோது இந்த மடத்தடியே இவற்றின் பரிமாற்றச் சந்தையாக விளங்கியது. பயிர்ச் செய்கைக் காலங்களில் உள்ளீடுகளை ஏற்றிவரும் வாகனங்கள் மடத்தடியிலிருந்து இரும்பு மதவடிக்கு அப்பாலும் வரிசையில் நிற்பது பிரபல்யமான பொதுச்சந்தையை நினைவூட்டும். இவ்வுள்ளீட்டுக் கொள்வனவின்போதும் இடைப்பசளை அல்லது உள்ளீடு அவசரமாகத் தேவைப்படும் விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து விநியோகிக்கும் மனப்பாங்கு கடைப்பிடிக்கப்பட்டமையால் வதிரிக்கு அப்பால் உள்ள விவசாயிகள் கூட இவ்விடத்தை நாடி வந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளனர். சில வேளைகளில் பணத் தட்டுப்பாடு ஏற்படும்போது மூன்றாம் நபரின் உத்தரவாதத்தின் பேரில் அல்லது தரகர்களின் உத்தரவாதத்தின் பேரில் உள்ளீடுகள் பரிமாற்றப்பட்டுள்ளன. இது மடத்தடியை சூழவுள்ள விவசாயிகளால் வளர்த்தெடுத்த மனிதநேய விழுமியமாகும்.

அதிகாலையில் உள்ளீட்டு வாகனங்கள் ஒரு புறம் தரித்து நிற்க விவசாயத்திற்கான ஆண், பெண் கூலியாட்களும் மடத்தின் ஒருபுறம் வந்து சேர்ந்துவிடுவர். ஒவ்வொரு விவசாயியும் தமக்குத் தேவையான எண்ணிக்கையில் தொழிலாளரை அழைத்துச் செல்வர். பின் உணவு வேளையில் இவ்விடம் உணவுக் கூடமாகவே மாறிவிடும். புகையிலைப் பயிர்ச்செய்கையின் பங்களிப்புக் குறைந்து வெங்காயப் பயிர்ச் செய்கை அதிகரித்தபோதும் இந்த வழமையே தொடர்ந்தும் பின்பற்றப் பட்டது.

வடமராட்சியின் புகையிலை உட்பட யாழ்ப்பாணப் புகையிலை மலையாள தேசத்திற்கு (இந்தியா) ஏற்றுமதி செய்யப்பட்டது. அத்துடன் கொக்குவில், கோண்டாவில் பகுதி சுருட்டு உற்பத்தியாளர்களும் தமக்குத் தேவையான புகையிலையைப் பெற்றுக்

கொள்ள இந்த மடத்தடியில் வந்தே தரகர்களுடன் தொடர்புகொள்வர். தென்னிலங்கையில் புகையிலைக்கான கேள்வி அதிகரித்தபோது நிரம்பல் செய் வதற்கு மேற் குறிப்பிட்ட வர்த்தகர்களே முன்னின்றனர். உள்ளூர் வர்த்தகர்களே உள்ளூர் உற்பத்திகளை சந்தைப் படுத்தின் பெறும் இலாபத்தின் ஒரு பகுதி எமது பிரதேச வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியும் என்ற சிந்தனையின் விளைவாக தென்னிலங்கையில் புகையிலை வர்த்தக நிலையங்களை வதிரி முதலீட்டாளர்கள் ஆரம்பித்தனர். இதில் முன்னோடியாக விளங்குவது *K.V.N* என்ற பெயரில் அம்பாந்தோட்டையில் இயங்கும் புகையிலை வர்த்தக நிறுவன மாகும். இந் நிறுவனம் வதிரியை சேர்ந்த நடராசா என்பவரின் பேரனால் 150 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாவது தலைமுறையால் இன்றுவரை நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

**சமூக முன்னேற்றமும் - மடத்தடியும்**

வாசிகசாலை, சனசமூக நிலையம் போன்றவையே ஒரு சமூகத்தின் அபிவிருத்திசார் கலந்துரையாடல்கள், திட்டமிடல், வேலைப்பகிர்வு போன்ற வற்றில் ஈடுபடுவது வழமை. இவ் வழமை க்கு மாறாக வதிரி மடத்தடி நூல்கள் அற்ற நூல் நிலையமாகவும், சமூக முன்னேற்றச் சங்கம் போன்றும் தனது கடமையை ஆற்றிவந்துள்ளது. பிற பிரதேச விவசாயிகள், தொழிலாளர்கள், வர்த்தகர்கள், வழிப்போக்கர்கள் ஒன்று கூடும் இடமாக இருந்தமையால் கருத்துப் பரிமாற்றல்கள் அறிவை விருத்தியாக்கு வதற்கு களம் அமைத்துக் கொடுத்துள் ளது. மண்ணைக் கிளறிய விவசாயிகளின் மூளையைக் கிளறி அறிவுப்பசி நீக்கிய தனால்தான் இப் பிரதேச விவசாயிகளின் பிள்ளைகள் சகல துறைகளிலும் உயர் கல்வி கற்று உள்நாட்டிலும் வெளி நாடு களிலும் சேவையாற்றி ஊருக்குப் புகழ் சேர்த்துள்ளனர். பிள்ளைகளின் கல்வி, தொழில் வழிகாட்டல்கள் மட்டுமன்றி இளைஞர் யுவதிகளுக்கான திருமண ஒழுங்குகள் பேச்சுவார்த்தைகள் கூட இம் மடத்தடியிலேயே அத்திவாரமிடப்பட்டு முடிவாக்கப்பட்டன. உள்நாட்டுப் போரி னால் மக்களும் குறிப்பாக இளைஞர்கள் இடம்பெயரமுன் நாடு சுமுகமாக இருந்த வேளையில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி, வல்லிபுர ஆழ்வார் ஆகிய ஆலயங்களின் திருவிழாக் காலங் களில் வடமராட்சியே விழாக்கோலம் கொண்டிருக்கும்பொழுது இம் மடத் தடியே தாகசாந்தி நிலையமாக விளங்கி யமை இளைஞர்களின் பொதுத் தொண்டை வெளிக்காட்டுகின்றது.


வதிரி உல்லியனொல்லை அம்பாள் ஆலய உற்சவத்தை நடாத்தும் இப் பகுதி உபயகாரர்கள் தமது திருவிழாவின்போது நடாத்தும் கலாசார நிகழ்வுகளைக் கூட இவ்விடத்திலேயே கலந்துரையாடித் தீர்மானிப்பர். பிரபலமான அண்ணாவி மாரின் கூத்துக்களை மேடையேற்றுவ தோடு நாடகங்களில் நாட்டமுடைய இளைஞர்கள் தாமே நாடகங்களை தயாரிக்க கலந்துரையாடும் இடமாகவும் உள்ளது.

**அரசியலில் கொண்ட பங்கு**

பொருளாதாரமும் அரசியலும் இரண்டறக் கலந்த ஒன்று. விவசாயிகள் தமது விளைபொருட்களுக்கு உறுதியான விலையைத் தரக்கூடிய, தமது பொருளா தாரத்தை மேம்படுத்தக் கூடிய அரசு ஒன்று ஆட்சியில் அமைவதையே விரும்புவர். மடத்தடி உறுப்பினர்களும்

இதற்கு விதிவிலக்கல்ல. இப்பிரதேச மக்களின் அரசியலறிவை மேம்படுத்துவதில் இவ்விடத்திற்கு பெரும் பங்குண்டு. விவசாயிகளாக இருந்தபோதும் கல்வியில் மேம்பாடும் அறிவு விருத்தியும் தமிழ்ப்பற்றையும் இனத்துவ ஆதரவையும் விடுதலை வேட்கையையும் இயல்பாகவே வளர்த்துள்ளன. இங்கு ஊட்டப்பட்ட அரசியலறிவு தமிழரசுக் கட்சிக்கே ஆதரவு வழங்கும் மனப்பாங்கை வளர்த்துள்ளது. திரு. *S.J.V* செல்வநாயகத்தின் கொள்கையை உள்வாங்கிய இப்பகுதி மக்கள் *1960*ல் யாழ்ப்பாண கச்சேரியில் நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டத்திலும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**மடத்தின் இன்றைய நிலை**



யுத்தம் பல பண்பாட்டு, வரலாற்று சின்னங்களையும் பழமையான கட்டிடங்களையும் தின்று அழித்தபோதும் வதிரி மடத்தடி 150 வருடங்கள் கடந்தும் நிமிர்ந்து நிற்கின்றது. இன்றும் விவசாயிகளும் தொழிலாளர்களும் வழிப்போக்கர்களும் தங்கிச் செல்கின்றனரே ஒழிய மடம் தன் சேவையில் இருந்து இளைப்பாறவில்லை. எனினும் நவீன இயந்திர யுகத்தில் வழிப்போக்கர்கள் குறைவாகவே பயன்படுத்துகின்றனர். ஒன்று கூடிக் கலந்துரையாடலும் அரிதாகிவிட்டது. எனினும் பல தசாப்த கால பண்பாட்டு எச்சமாகவும் பழமையின் சின்னமாகவும் விளங்கும் இது பேசுமாயின் கேட்பதற்கு ஒரு யுகம் வேண்டும்.

**முடிவுரை**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் பழமையைப் பறைசாற்றும் மடம் என்ற வகையில் எஞ்சியிருப்பது இது ஒன்றே. இக் கிராமத்தின் பொருளாதார, சமூக, அரசியல் வளர்ச்சியின் படிநிலையை அடுத்த சந்ததிக்கு எடுத்துக்காட்டும் இச் சின்னத்தைப் பாதுகாக்க வேண்டியது பிரதேச மக்களினதும் பிரதேச நிர்வாகத்தினதும் கடமையாகும். வன்முறைகளற்ற வகையில் இளைஞர்கள் முதியோர்கள் போன்ற சகல தரப்பினரதும் கூட்டுறவால் பிரதேசம் வளர்ச்சியடைந்தது என்பதை எடுத்துக் காட்டும் இது போன்ற பாரம்பரிய இடங்களை பாதுகாப்பதன் ஊடாக இன்றைய இளம் தலைமுறையை நேர்வழிப் படுத்தும் ஒரு ஊடகமாகப் பயன்படுத்துவோம்.

அத்துடன் நவீன பயிர்ச்செய்கை முறையாலும் தீங்கு விளைவிக்கும் பொருட்களின் உற்பத்தியாலும் சூழல் மாசடைந்தமையை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறி காலத்தின் தேவைக்கேற்ப புதிய விவசாய உற்பத்திகளில் நாட்டம் கொள்ள வைப்பதற்கும் இயற்கை விவசாயத்தை நோக்கி திசை திருப்புவதனூடாக நிலம் மலடாவதை தடுத்து சூழலை பாதுகாப்பதற்கும் இம் மடத்தை களமாகவும் பயிற்சிக் கூடமாகவும் மாற்றுவதற்கு அதிகாரிகளும் சமூக சேவையாளர்களும் முன்வருவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

# வடக்கின் விதைகளும் தெற்கின் விருட்சங்களும்

கலாபூசணம் ஆர்.எஸ். ஆனந்தன்

நாடகங்கள், கூத்துக்கள் என்பன வெறும் காட்சிப்பொருட்கள் மட்டுமல்ல. பார்வையாளர்களுக்கு எங்கள் பண்பாடுகளில் கூறப்பட்ட நல்லவை, கெட்டவை, செய்யத்தக்கவை, செய்யக் கூடாதவை என்பவை கூத்துக்கள் வழியாகக் கையளிக்கப்பட்டு வந்திருக் கின்றன.

கிராமங்களில் உள்ள பல சமூகங் கள் ஒரே இடத்தில் ஒருங்கு சேர்வதற் கான ஏதுவாக இந்நிகழ்வுகள் அமைந் திருக்கின்றன.

பண்டைய கூத்துக்கள், தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாடுகளைச் சுமந்த பொக்கிசங்களாகத் திகழ்ந்தன.

இன்று அவை தங்கள் தனித்து வத்தையும் களரிகளையும் இழந்த நிலை யில் கூத்தர்களிடம் கையேந்தி நிற்கின் றன.

தமிழர்களின் கூத்தின் பரப்பை மெல்ல அகட்டி, அதனை மீள் உருவாக்கம் செய்துகொண்டிருக்கும் பேராசிரியர் சி. மௌனகுரு ஐயா அவர் களுடன் நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் சி. ஜெயசங்கர் ஆகியோரின் முயற்சிகளும், வாழ்நாள் சாதனைகளும் என் மனம் நிறைந்து நிற்கின்றன.

அத்துடன் திருமறைக் கலாமன்றத் தின் பங்களிப்பும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய கூத்துக்களின் சிறப்புக் களும் வரலாற்றுப் பெருமைகளும் எனது இந்தச் சிறிய கட்டுரையின் வாய்க்கால் வழி ஓடி வளம்பெற வேண்டிய தொன்றல்ல.

இருந்தபோதிலும் எங்கள் நாட்டைக் கூத்தின் ஆடல்களின் தனித்துவத்தைப் பற்றிய சிலவற்றை இந்தக் கட்டுரை மூலம் நான் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

ஒவ்வொரு கலை வடிவங்களுக் குள்ளும் பல சிறப்பான அம்சங்கள் புதைந்திருக்கின்றன.

பருத்திநகரிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் வடக்காக அமைந்துள்ள எங்கள் கிராமமான திகிரி கூழாவடிக் கிராமத்தில் இன்றும் உயிர்ப்புடன் விளை யாடப்பட்டுவரும் 'நாட்டை'க் கூத்து வடிவத்தினுள்ளும் பல சிறப்பம்சங்கள் புதைந்து கிடக்கின்றன.

இந்த நாட்டைக் கூத்தானது பத்து முழ நீளமும், பத்துமுழ அகலமும், ஒன்பது முழ உயரமுமான விதானத்தை யும் கொண்ட ஒரு முப்பக்கப் பார்வை யாளரைக் கொண்ட சமதரைக் களரியில் விளையாடப்பட்டு வரும் கூத்தாகும்.

இது வடமோடி, தென்மோடி போல ல்லாமல், வேட உடை, ஒப்பனை, கதை அம்சம், ஆடல் பாடல் முறைமைகள், அண்ணாவியார் கூத்தை நடாத்திச் செல்லும் விதம், தாளம் பிசகாமல் ஆடும்

நுணுக்கங்கள், வசனங்கள் பேசும் முறைமைகள் என்பனவற்றால் பெரிதும் வேறுபட்டுக் காணப்படும்.

இவைகள் அனைத்தையும் முற்று முழுதாகத் தெரிந்துகொண்டுதான் எழுத வேண்டும் எனக் காத்திருந்தால், எனக்குத் தெரிந்தவற்றையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ளும் சந்தர்ப்பத்தையும் இழந்துவிடுவேனோ என்ற பயம் சுமந்த மனத்துடன் இந்த விடயங்களை உங்களுடன் இப்போது பகிர்ந்துகொள்கின்றேன்.

நேற்றைய பாரம்பரியங்களை இன்றைய நவீனம் மெல்ல மெல்ல தனக்குள் செமிபாடடையச் செய்து கொண்டிருக்கின்றது.

இன்று வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் எல்லாம் தமக்கே உரித்தான பாரம்பரியக் களரி அமைப்பை ஒதுக்கி விட்டு படச்சட்ட மேடைகளில் தம்மைக் காட்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இதனால் எங்கள் பார்வையாளர்கள் முன்னைய களரிகளில் கூத்தர்களுடன் சல்லாபித்ததுபோல் அல்லாமல் அன்னியப்பட்டுத் தூர விலகிப் போனார்கள்.

நான் அந்தளவில் சுமார் (250) இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்பிருந்து அமரர்களான அண்ணாவியார் கறுவல், வேலப்பா காலம்தொட்டு அதன் பின்னர் சடையன், வைரமுத்து, வைரவி அப்பா, அன்னம்மாப்பேத்தி, இளையவி அப்பா, தம்பிஐயா, சிவக்கொழுந்து என வழிவழி வந்த நாட்டைக் கூத்துக்களை இன்றும் எனது காலத்திலும் மரபு மாறாமல் களரிக் கூத்தாகவே ஆற்றுகைப்படுத்தி உயிர்ப்புடன் காத்து வருகின்றோம்.

கூத்திற்கு நாங்கள் கற்றுத்தர வேண்டியது ஏதுமில்லை. அதனிடம் நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை தான் ஏராளம்.

சலவைத் தொழிலாளர் சமூகமான நாங்கள் ஒன்றுகூடி ஒருமித்து வாழ்ந்து கலை வளர்க்கும் எங்கள் கூழாவடிக் கிராம மண், பல கலைஞர்களின் ஜீவ சுவாசம் நிறைந்த மண்.

எங்கள் அண்ணாவி வைரவி அப்பாவின் தாளத் தீர்மானங்களும் எங்கள் மூதாதையர் காலில் கட்டிய சதங்கைகள் களரிக்குள் பேசிய கதைகளும் எங்கோ தூரத்தில் சலசலத் தோடும் நதியின் ஓசைபோல் எங்கள் காதுகளில் கேட்கின்றன. கால்களைத் தானாகவே மெல்ல எங்கள் கிராம மண்ணை உரச வைக்கின்றன.

கூத்தை மற்றவர்கள் ஆய்வுசெய்து தருவதைவிட, அது கூத்தர்களிடமிருந்து பிரசவிப்பதே உயிர்த்துடிப்புள்ளதாக அமையும்.

கூத்தின் ஆட்டத்தருக்களையும், தாளத் தீர்மானங்களையும், அண்ணாவிமார் தமக்குரிய சொத்தாகவும், தகைமையாகவும் தமக்கும், தமது வாரிசுக்களுக்குமென்றே கட்டிக்காத்து வைத்திருப்பார்கள். யாருக்கும் சொல்லித்தர மாட்டார்கள்.

அண்ணாவி மரபு மறைந்து, கூத்து அருகிக் கொண்டு போவதற்கு இதுவுமொரு காரணமாகும்.

நான் ஒரு நான்கு தலைமுறை அண்ணாவி மரபுவழி வந்தபடியாலும், எனது தந்தை வழிப் பேரர்களான அண்ணாவிமார் வைரவி அப்பா, வைரமுத்தப்பா என்பவர்களுடன் எனது ஏழாவது வயதிலிருந்து காலில் சதங்கை கட்டிக் களரியில் கூத்துக்கள் விளையாடியபடியாலும் அதன் பின்னர் அப்பாவுடன் சேர்ந்து கூத்து ஏடுகளைப் படித்து மனனம் செய்ததுடன், ஆடல் முறைகளையும் அவர்களிடம் கற்றுக்கொண்டு, குதிரை ஆட்டம், பெண் கூத்தின் ஆட்டங்களை எனது பேத்தியான அன்னம்மாப் பேத்தியிடமும் கற்று மெல்ல மெல்ல என்னை நான் ஒரு அண்ணாவியாக வளப் படுத்தியுள்ளேன்.

நாட்டைக்கூத்தின் தாளக் கட்டுகளுக்கு அமைவாக ஆடும் கஷ்டத்தினாலும் பாடும் சிரமத்தினாலும் இன்றைய இளைஞர்கள் மெல்ல விலகி களரியை விட்டு தூர நிற்கின்றனர்.

எழுத்தாணிகள் பதிந்த ஏடுகள் எல்லாம் மண்ணில் எருவாகிப் போய் விட்டன. எங்கள் மனதில் பதிவாகிப் போகுமுன்னர் எல்லாமே முடிந்து விடுமா?

நாட்டைக் கூத்தின் ஒலி, ஒளி, களரியின் அமைப்பு, வேடப் புனைவு, கட்டு வேடங்கள், முகப்பூச்சு, ஆடை அணிகலம், ஆட்டத்திற்குரிய தாளக்கட்டு, தாளத் தீர்மானங்கள், தருக்களின் வகைகள் என்பனவற்றை எல்லாம் முழுமையாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதென்றால் இதுவே ஒரு முழுமையான நூலாகிவிடும்.

அதனால் அதை மனத்தில் கொண்டு உங்களின் தேடலுக்கு அவைகளை விடுத்து, நாட்டைக் கூத்தின் ஆடல் வகைகளை மட்டும் கீழே கட்டுரையில் படைக்கவிருக்கின்றேன்.

1. காப்பு
2. வருகவி
3. ஆட்டத்தரு (ஆடல்)
4. கூறல்
5. சபை கவி
6. பாத்திர இயக்கம் (பாடி ஆடுதல்)
7. தாளத் தீர்மானங்கள்
8. மங்களம்
9. குரு வணக்கம்

என்ற வரிசையின்படியே அண்ணாவிமார் கூத்துக்களைக் களரிக்குள் இயக்கி விளையாட வைப்பார்.

**1. காப்பு :**

கூத்துக்கள் பெரும்பாலும் நேர்த்திக் கடனுக்காக கோவில் வீதிகளிலேயே விளையாடப்பட்டு வந்தன.

கூத்து ஆரம்பிக்கும் முன் களரியின் வலது மேல் மூலையில் கதிரை வைத்து அதன் முன்பாக வாழைக்குற்றி நட்டு அதன் மேல் ஒரு தேங்காய்ப் பாதியை வைத்து அதனுள் தேங்காய் எண்ணெய்ப் பந்தம் ஏற்றப்படும்.

கதிரையில் பழம், பாக்கு, வெற்றிலை என்பவற்றை வைத்து குல தெய்வத்தையும் மற்றைய கடவுளரையும் நினைத்துக் கற்பூரம் கொளுத்தி, எந்த வித இடையூறும் இல்லாமல் கூத்து நடைபெற வேண்டும் என வேண்டி அண்ணாவியாரால் பாடப்படுவதே காப்புப் பாடல் எனப்படும்.

காப்புப் பாடும்போது வேடம் கட்டிய சில கூத்தர்கள் களரிக்குள் அவனியம் போட்டும் தித்தித்தா போட்டும் ஆடுவார்கள்.

**2. வருகவி**

கூத்தின் ஒவ்வொரு கதா பாத்திர மும் முதன்முதலாகக் களரிக்குள் தோன்றும்போதும் அண்ணாவியாரால் வருகவி பாடப்படும்.

கூத்தர்கள் திரை மறைவில் நிற்கப் பாடப்படும் இந்த வருகவியில் கதா பாத்திரத்தின் குணாதிசயங்கள், வேடப் புனைவு, அழகு, பாத்திரத்தின் கீர்த்தி, பெயர், வரும் நோக்கம் என்பன கூறப்படும்.

**3. ஆட்டத்தரு (விளையாட்டுத் தரு)**

அண்ணாவியாரால் வருகவி படித்த தன் பின்னர் திரை விலக்கப்படும்.

திரை விலக்கப்பட்டதும் அந்தப் பாத்திரத்திற்குரிய ஆட்டத் தருவையும், தாளக் கட்டுக்களையும் அண்ணாவியார் உரத்த குரலில் தாளமிசைத்துப் படிப்பார்.

மத்தளமும் அதையே பேசும். கூத்தர் களின் கால்களும் கைகளும் அதற்கிசை வாகத் தாளம் பிசகாமல் ஆடத் தொடங்கும்.

**4. கூறல்**

ஆடிக் களைத்த கூத்தர் களரிக்குள் வைத்திருக்கும் ஆசனத்தில் அமர்ந்து கொள்வார். அந்த வேளையில் கூத்தரின் நண்பர்கள், உறவினர்கள், சுற்றம், ஊர்ப் பெரியவர்கள் களரிக்குள் வந்து கூத்தரைப் பாராட்டுவது மட்டுமல்லாமல் அண்ணாவியாரிடம் காசு கொடுத்துக் கட்டியம் கூறச் சொல்வார்கள்.

அந்தக் கூறலில் வாழ்த்துபவரின் கீர்த்தி, பெருமையுடன் கூத்தரின் ஆட்டத்தின் சிறப்பும் கூறி வாழ்த்தப்படும்.

அத்துடன் சால்வை போர்ப்பது, நகை போடுவது போன்ற நிகழ்வுகள் கூட இடம்பெறும்.

இளசுகள் சாடைமாடையாகத் தங்கள் காதல் கண்வீச்சுக்களையும் பரிமாறிக் கொள்வதுமுண்டு. இத்தகைய பரிமாற்றங்கள் திருமணத்தில் முடிந்த கதைகளும் எங்கள் கிராமத்திலுண்டு.

**5. சபை கவி**

எழினிகள், காண்பியங்கள் ஏதும் களரிக்குள் இருப்பதில்லை.

அதனால் நிகழ்த்திக் காட்ட முடி யாத சில நிகழ்வுகளையும், சில பாத்திரங் களின் மன ஏக்கங்களையும் அண்ணாவி யார் கவித்தரு மூலம் எடுத்தியம்புவார்.

சபைக்காக எடுத்தியம்பும் இந்தத் தருவே சபை கவி எனப்படும். நவீன நாடகத்தின் உரைஞர் போன்று செயற் படும்.

**6. பாத்திரங்களின் இயக்கம்**

கூறல் முடிந்ததும் சில வேளை களில் கோவை படிப்பார்கள். அதுவும் நிறைவடைந்ததும் பாத்திரங்கள் பாடி, ஆடிக் கூத்தின் கதையை நகர்த்திச் செல்வார்கள்.

**7. தாளத் தீர்மானங்கள்**

ஆடல்களின் முடிவிலும், பாடல் கள், விருத்தங்கள் போன்றவற்றின் முடிவிலும் தாளத் தீர்மானங்கள் இடம் பெறும்.

இத் தீர்மானங்கள் அண்ணாவியா ரால் மட்டுமே பாடப்படும்.

தாளத் தீர்மானங்கள்தான் ஆடல், பாடல் போன்றவைகளின் கால மாற்றத் தைத் தீர்மானிக்கின்றன.

**8. மங்களம்**

கூத்தை நிறைவு செய்யும்போது மங்களம் பாடப்படும்.

இதுவரை கூத்தின் நிகழ்வில் எந்த வகையான குழப்பமும் இல்லாமல் நிறை வடைந்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறிப் பாடப்படுவதே மங்களம்.

மங்களம் பாடும்போது கூத்து விளையாடிய அனைவரும் களரிக்குள் நின்று அவனியம், தித்தித்தா போட்டு ஆட வேண்டும்.

ஆடும்போது முன் சென்றும், கீழ் இறங்கியும் ஆடலாமே தவிர சபையோர் களுக்கு முதுகு காட்டி ஆடக்கூடாது.

**9. குரு வணக்கம்**

கூத்தர்கள் அனைவரும் அண்ணாவி யாரின் காலில் வீழ்ந்து ஆசீர்வாதம் பெறவேண்டும். இதன்பின் கற்பூரம் காட்டிக் கதிரை எடுக்கப்படும்.

அண்ணாவியாருக்கு உதவியாக பிற் பாட்டுப் படிப்பவர்கள், மத்தளக்காரர், ஏடு பார்ப்பவர்கள் என்று பலர் நின்றியங்கிய போதும் அண்ணாவியார் மட்டுமே களரிக்குள் கூத்தருடன் கூத்தராக நின்றியங்குவார்.

அண்ணாவியார் இல்லாமல் கூத்துக்கள் இல்லை. இதுவே உண்மை.

பாடல் வகைகள்

1. காப்பு
2. வருகவி
3. சபை கவி
4. விளையாட்டுத்தரு
5. கூறல்
6. கோவை
7. கலி
8. கலித்தரு
9. கொச்சகம்
10. கொச்சகத்தரு
11. விருத்தம்
12. விருத்தத்தரு
13. ஆயிலிய விருத்தம்
14. ஆயிலியத் தரு
15. சந்தத்தரு
16. தாழிசை (அகவல்)
17. தரு (பாடல்களை பொதுவாகத் தருக்கள் என்பர்)
18. உத்தரத்தரு
19. தர்க்கத்தரு
20. சம்பயத்தரு
21. பல்லவத்தரு (மூன்று காலங்களும் அடங்கியது)
22. தாலாட்டு
23. தீர்மானங்கள்
24. மங்களம்
25. போற்றி

எனப் பலவகையான தருக்கள், அதாவது பாடல் வகைகள் உண்டு.

இவைகள் ஒவ்வொன்றும் கூத்தின் கதாபாத்திரங்களின் உணர்வுகளுக்கு ஏற்றவகையில் தருக்களின் மெட்டுக்கள் அமையும்.

இந்தத் தருக்களுக்கு நம்மவர் இராகங்கள் சொல்லி அழைப்பதில்லை. மேற்கண்ட மெட்டுக்களே பேசப்படும்.

இனி கூத்தின் ஆடல் வகைகளை நோக்குவோம்.

"கதை தழுவி வரும் ஆடலே கூத்து" இதுதான் கூத்தின் விதி.

நாடகம் என்பது நடிப்புடன் இசைந்த பாடல்.

இன்றைய கூத்துக்கள் ஏதோ ஒரு காரணத்தால் தனது, தனக்கு மட்டுமே உரித்தான ஆடலை இழந்து படச்சட்ட மேடைக்குச் சென்றுவிட்டன.

ஆனால் அவை இன்னமும் கூத்தென்ற முகவரியை மட்டும் கைவிட்டு விடவில்லை.

களரிகள் மட்டும் கூத்தர்களின் சதங்கை ஒலிக்காகக் காத்துக் கிடக் கின்றன.

எம்மவர்களால் களரிகளில் புழுதி பறக்க ஆடப்பட்ட கூத்துக்களான, செட்டி வர்த்தகன், சந்திரபூரணி, பப்பிரவாகன், அனுருத்திரன், கன்னன், வாளபிமன், சித்திரரூபன், அல்லி போன்ற நாட்டைக் கூத்துக்கள் சிலவற்றில் அமைந்த ஆடல் வகை களை நான் இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகின்றேன்.

ஒரு கதாபாத்திரம் களரிக்குள் முதன்முதல் தோன்றும்போது அது எந்த வகையான கதாபாத்திரமாக இருந்தாலும் அந்தப் பாத்திரத்தின் வகைக்கான தாளக் கட்டு உண்டு.

அதையே ஆட்டத்தரு என அழைப் பார்கள்.

இந்த ஆட்டத்தருக்கள் அண்ணாவி யாருக்கு மட்டுமே தெரிந்திருக்கும்.

ஆட்டத்தருவைச் சொல்லி அண்ணாவியார் தாளம் பிடிக்க, மத்தள காரன் வாசிக்க கூத்தர்கள் அதை வாங்கி தாளம் பிசகாமல் கால் மிதித்தாட வேண்டும்.

இந்த முழுமையான ஆட்டத்தினுள் பல ஆடல் வகைகள் உண்டு.

இந்த ஆடல் வகைகளில் ஒரு சில வகைகள் சேர்ந்தே ஒரு முழுமையான ஆட்டம் உருவாகின்றது.

ஆடல் வகைகள்

1. கொலு
2. அடைவி
3. இறங்கல்
4. அவனியம்
5. தித்தித்தா
6. ரத்தி
7. ரத்திவெட்டு
8. நாலடி
9. உள்நாலு
10. புறநாலு
11. ஒயில்
12. ஒய்யாரம்
13. மண்டி
14. தட்டிப்பாய்தல்
15. அட்சரம்
16. சுற்று (வட்டம் போடல்)
17. எட்டுப்போடல்
18. நிண்ட சுற்று
19. இருந்தெழும்புதல்

இவ்வகையான ஆடல் வகை களைத் தனித்தனியாகவே முதலில் பழகிக்கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் முழுமையான ஆட்டத்தை ஆடும்போது சுகமாகவும், இலகுவானதாகவும் இருக்கும்.

இந்த ஆடல் வகைகளில் சில வற்றை நான் கண்டிய நடனங்களில் கண்டிருக்கின்றேன்.

யட்சகானம், கதகளி போன்ற ஆடல் முறைகள் கூட இந்த ஆடல் வகைக்குள் காணக்கூடியதாக இருக்கும். இதை பேராசிரியர் கா. சிவத்தம்பி ஐயா கூட எனது நாட்டைக்கூத்தைப் பார்த்துக் கூறியுள்ளார்.

கூத்தில் வரும் ஒவ்வொரு கதா பாத்திரங்களுக்கும் வித்தியாசமான ஆடல் முறைமைகள் உண்டு.

அந்தவகையில்,

### 1) கொலு

கட்டியக்காரன் கொலு

வலதுகையில் ஒரு முழு அளவிலான பிரம்பை வைத்திருப்பார். இரண்டு கால்களையும் பக்கம் பக்கமாய் வைத்து நிற்கவேண்டும். இடதுகையை இடது இடுப்பிலும், வலது கையை பிரம்பு செங்குத்தாக இருக்கும்படி வலது இடுப்பிலும் வைத்துக்கொண்டு கால்களை இடம்விட்டு அசைக்காமல் நுனிக்காலில் எழுந்தும், தாழ்ந்தும் களரிக்குள் மூன்று பக்கப் பார்வையாளரையும் பார்க்கும் வகையில் தோள்களை மட்டும் அசைத்து நிற்பதே கட்டியக்காரன் கொலு.

இது ஓராம்கால ஆட்டத்தின் முன்னிலை. இதன்பின் ஆட்டம் தொடரும். அது இரண்டாம் மூன்றாம் காலமெனத் தொடரும்.

இவ்வண்ணம் ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் வித்தியாசமான கொலு நிலைகள் உண்டு.

அனுருத்திரன் நாட்டைக் கூத்தில் வரும் மன்னனின் கொலு நிலையையும் தருகின்றேன்.

### இராச கூத்துக் கொலு

வலது கையில் பிடித்த வாள் நெஞ்சுக்கு நேராகப் பக்கவாட்டில் பிடித்த படி இடது கையை இடுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இடது காலை மடக்காமல் வலது காலை சற்று மடக்கி அகல வைத்தபடி தோள்களை வலம் இடமாகத் திருப்பி மூன்று பக்கப் பார்வையாளரையும் பார்த்தபடி அசைவதே கொலு நிலையாகும்.

இதன்பின் தாளம் ஏற ஏற ஐந்து காலம் வரை ஆட்டம் தொடரும். குறைந்தது பதினைந்து நிமிடம் வரை தொடரலாம்.

### கொலுநிலைத் தரு

ராசே ராசே ராசேமன்னன் – தெய்யா
ராசன் போசமகா ராசன் வந்தான்....
தெய் – தெய்

### இராணி கூத்தின் கொலு

கால்களைப் பக்கம் பக்கமாக வைத்திருத்தல் வேண்டும்.

வலது கையை வலது இடுப்பிலும், இடது கையை இடது இடுப்பிலும் வைத்தபடி நின்று நுனிக்காலால் எழுந்தும் தாழ்ந்தும் நின்றசைய வேண்டும்.

கொலுநிலைத் தரு :
தா தெய் தெய் தெய்
தக்க தோம் தகதிக....
தக தக தக தக
திகு திகு திகு திகு
தளாங்கு தித் தக
தக ததிங்கிணத் தோம்....

இதேபோன்று ஒவ்வொரு கதா பாத்திரத்திற்கும் வித்தியாசமான கொலு நிலைகளும் கொலுத் தருக்களும் உண்டு.

இவைகள் எல்லாவற்றையும் நான் இங்கு எழுதித் தெரிந்துகொள்வதை விட பயில்நிலையில் அறிந்துகொள்வதே சிறப்பாகும்.

நாடகங்கள், கூத்துக்கள் என்பன வற்றை இலக்கியங்களாக அறிந்து கொள்வதைவிட கலைகளாகக் கண்டு கொள்வதே உயிருடன், உணர்வுடன் கலந்து நிலைக்கும்.

### 2. அடைவிகள் :

ஆடலின்போது தித்தித்தா, அல்லது அவனியம் போட்டபடி முன்னால் நகர்வதை முன்னடைவி என்றும் பக்கவாட்டில் நகர்வதைப் பக்கடவி என்றும் கூறுவார்கள்.

### 3. இறங்கல்

களரியின் முன்பகுதியில் நின்றியங் கும் கூத்தர்கள் இயங்கிக்கொண்டிருக்கும் அதே தாளக்கட்டுக்கு அமைவாக, சபை க்கு முதுகு காட்டாமல் பின்வருவதையே இறங்கல் எனக் கூறுவோம்.

### 4. அவனியம்

இடது காலுக்குப் பின்னால் வலது முன்கால் விரல்களை ஒரு தடவை குத்தி, பின்னர் இடது காலை இருந்த இடத்திலேயே தூக்கிவைத்து அதன் பின்னர் வலது குதிக்காலைத் தட்டி முன் வைக்க வேண்டும்.

இப்படி இரண்டு கால்களாலும் மாறி மாறி இயங்குவதே அவனியம் எனப்படும்.

இதனை பெண் கூத்தர்கள் மிகவும் பக்கம் பக்கமாகவும், ஆண் கூத்தர்கள் அகலக்கால் வைத்தும் இயங்குவார்கள்.
இதன் தாளக்கட்டு
"தா தெய் தெய் தெய்
தக்கத் தோம் தகதிக"

### 5. தித்தித்தா

ஒரே காலின் முன்கால், நடுக்கால், குதிக்கால் என்பவற்றைப் பாவித்து வலக் கால், இடக்கால் என மாறிமாறி ஆட வேண்டும். இது விரைவான ஓர் ஆடல் முறை.
இதன் தாளக்கட்டு
"தித்தித்தா தித்தித்தெய்"

### 6. ரத்தி

வலது காலுக்குப் பின்னால் இடது முன்கால் விரல்களைக் குத்தி ஆட வேண்டும். இதேபோல மாறி மாறிச் செய்வதுடன் இரண்டு கைகளாலும் வாளை நெஞ்சுக்கு நேராகச் செங்குத் தாகப் பிடித்தபடி நின்ற இடத்திலேயே சுற்றி ஆடவேண்டும்.

இவ்வகை ஆட்டம் இராச கூத்தர் களுக்கு மட்டுமே உரித்தானதாகும்.

அல்லி, பவளக்கொடி, சிந்தாமணி போன்ற வீரப்பெண்களுக்கும் இவ்வகை ஆட்டம் சேர்க்கப்படுவதுண்டு.

பெண் கூத்தர்கள் வாளைப் பக்க வாட்டில் வலது கையில் பிடித்தபடி இடது கரத்தை இடுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இவை மூன்றாம் கால ஆடல் வகையைச் சார்ந்தது.

**7. நாலடி**

இடது காலுக்கு முன்பாக வலது கால் நுனி விரல்களை நான்கு முறை குத்தி, மேலெழுந்து துள்ளி அரை வட்ட மாக நின்ற இடத்தில் ஆட வேண்டும். இப்படியே இடது கால்களாலும் செய்து ஆடவேண்டும்.

இது இராசகூத்தின் நான்காம் கால் ஆட்டம்.

**8. ஒயில்**

ஆடல்களில் காலங்கள் உண்டு. முதலாம், இரண்டாம், மூன்றாம் காலங் கள் என ஆடல் முறை கூடிக்கொண்டே போகும்.

ஒவ்வொரு கால முடிவிலும் தீர்மானம் அண்ணாவியாரால் தீர்க்கப் படும்.

ஒவ்வொரு காலமும் களரியின் ஒவ் வொரு பக்கத்திலும் ஆடவேண்டும்.

அப்படிப் பக்கம் மாறும்போது ஆண் கூத்தர்கள் சுழன்று பாய்ந்து மறு பக்கப் பார்வையாளர் முகத்துக்குச் செல் வார்கள்.

பெண் கூத்தர்கள் அப்படியன்று. இடுப்பில் ஒரு கையை வைத்துக் கொண்டு மறுகையை வீசியபடி களரியை ஒரு தடவை சுற்றிவந்து மறுபக்கம் நிற்பார்கள். அந்த நடையே ஒயிலாகும்.

ஒயில் பெண் கூத்தர்களுக்கு ஒய்யார நடை பேணப்படும்.

**9. சுற்று**

நின்ற இடத்தில் சுற்றியும் சுழன்றும் ஆடுதல்.

தூதர்கள், மளுவர்கள், வேடர், குறவர் போன்றவர்களுக்கு இவ்வகை ஆடல் வரும்.

வீரதீரச் செயல்களைக் காட்டுவது போல் நின்ற இடத்தில் சுழன்றும், இருந்தும், எழும்பியும், துள்ளியும், பாய்ந்தும் ஆடும் ஒருவகை ஆட்டமாகும்.

விரைவான ஆட்டத் தருவையும், தாளக் கட்டையும் கொண்டது.

இதன் தாளக்கட்டாக,

| | |
|---|---|
| தாம் தீந்தத் தெய்<br>தக தாம்தீந்தத் தெய் | 1ம் காலம் |
| தக தாம் தீந்தத்<br>தெய்ய தோதக<br>தாம் தீந்தத்தெய் | 2ம் காலம் |
| தக தாம் தீந்தத்<br>தெய்ய தோதக<br>தொங்கு தீதக தெய் | 3ம் காலம் |
| தக்கு தாகுதா<br>தெய் தெய் தெய்<br>தாகு தாகுதா<br>தெய் தெய் தெய் | அண்ணாவி<br>காலமேற்றலும்,<br>கூத்தரின் விரை<br>வான ஆடலும் |
| தக்க தொம்<br>தத் தரிகிட<br>தக்க தீம்<br>தகதிகதா<br>தா தீம் தக்கதெய் | தாளத் தீர்மானம் |

**10. எட்டுப் போடுதல்**

இது இராச கூத்தர்களுக்கு மட்டுமே உரித்தான ஆடல் வகை. நான்காம் காலத் துக்குரிய ஆட்டம்.

களரியின் நடுப்பகுதியில் எட்டு வடிவ மாக தித்தித்தா போட்டு விரைவாக ஆடப்படும் ஆட்டமாகும்.

### 11. வட்டம் போடுதல்

களரிக்குள் பெரு வட்டமாக ஆடுதல். இவ்வகை ஆடல் ஆட்ட முடிவில் தான் அமையும். இது எல்லாப் பாத்திரத்திற்கும் பொதுவான ஒரு ஆடல் முறை.

### 12. அச்சரம்

இடது காலை வலது காலுக்கு முன்னால் வைத்து, வலது காலை எடுத்து திரும்ப இடது காலுக்கு முன் வைத்து, இடது காலை அப்படியே பின் நகர்த்தி வைத்து, பின் வலது காலை இடது காலின் பின் வைக்கவேண்டும்.

இது வசனம், விருத்தம், சரணம் என்பன பேசும்போதும் காதல், வீரம் சார்ந்த உத்தரத் தருக்கள், தர்க்கத் தருக்கள் பாடும்போதும் பாவிக்கப்படும்.

பெண் கூத்தர்கள் அச்சரம் போட்டு ஆடுவதில்லை.

### 13 . மண்டி

பெண் கூத்தர்கள் இரு கைகளாலும் ரத்தி வெட்டுப் போட்டபடி தாளத்திற் கேற்ப மெல்ல இருத்தல் மண்டி எனப் படும்.

ஆண் கூத்தர்கள் வீரமான தருக்கள் பாடி ஆடும்போது வலது, இடது முழங் கால்களை மாறிமாறி நிலத்தில் முட்டு வதையும் மண்டி எனப்படும்.

பெண் கூத்து மண்டியை ஆண் கூத்தர்களும், ஆண் கூத்து மண்டியைப் பெண் கூத்தர்களும் பாவிப்பதில்லை.

ஒரு கூத்தரின் முழுமையான தோற்ற ஆட்டத்தினுள் மேற்கண்ட எல்லா ஆடல் வகைகளும் வருவது கிடையாது.

பாத்திரங்களின் தகுதிக்கேற்றால் போலவே ஆடலின் பகுதிகள் உள்ளடக் கப்படும்.

பெண் கூத்தின் ஆட்டத்திற்கும் ஆண் கூத்தின் ஆட்ட முறைகளுக்கும் நிரம்பவே வித்தியாசங்கள் காணப்படும்.

அவைகளை நான் எழுதி நீங்கள் படித்துத் தெரிவதைவிட பட்டறிவதே சாலச் சிறந்ததாகும்.

### குறைந்த நேரத்திற்குரிய சில விளையாட்டுத் தருக்கள்

சிறிய கதாபாத்திரங்களைக் களரிக் குள் அறிமுகப்படுத்தும்போது அண்ணா வியார் இத்தகைய தாளக் கட்டுக்களை உச்சரித்துத் தாளம் பிடிப்பதுண்டு.

1. தக்கு தாகுதா
   தெய், தெய், தெய்

   தாகு தாகுதா
   தெய், தெய், தெய்

2. தானினோ தனித்த தனி
   தானினோ தனித்த தனி
   தாம், தக தாம், தெய்

3. தாம் தகு தாக்குத்தனும்
   தரி தீம்,
   தீம் காரத் தில்லானா,
   தச்சொம் கும் தரி
   தசித குணா திரி
   தரித குண தரிக
   தாகுட கும் தரி தெய்.

முப் பக்கப் பார்வையாளரைக் கொண்ட சமதரைக் களரியான எங்கள் களரியில்

எங்கள் கூத்தர்கள் ஆடிய ஆட்டமும் பாடிய பாடல்களும் இன்றும் என் மனத் திரையில் விரிந்து செல்கின்றன.

பலபத்திரன் கணபதி, அல்லிக் கதிர்காமர், வீமன் கிட்டிணன், அரக்கன் கணபதி போன்றவர்கள் கூத்தின் கதா பாத்திரத்தின் பேருடன் இன்றும் எங்கள் மனத்தில் உயிர் வாழுகின்றார்கள்.

சந்திரபூரணி நாட்டைக்கூத்தில் மன்னன் போசராசனின் முழுமையான ஆட்டத்தருவொன்றைப் பார்ப்போம்.

மன்னன் போசராசனின் ஆட்டத்தரு

மன்னன் வருகவி

**கவி :**

**பொன்னின் முடி பளபளென்ன - பூவின்முடி**
**தள தளெனப் பொருந்தி வீசும்.**
**கன்னல் மதனாரெனக் காரிகையோர்**
**மையல் கொண்டு கருதும் மன்னன்**
**மருங்கினொளி பளபளென்ன**
**மானகரம் தன்னி லிப்போ**
**மன்னனாம் போசராசன்**
**சபைதனில் ஏகின்றார் ஏகின்றாரே.**

தீர்மானம்:

**தக தாம். தெய்யத். தா**
**தா தீந்தக்கத். தெய்.**

## ஆட்டத்தரு

1ம் காலம் :

இராசே இராச இராசே மன்னன் – தெய்யா
இராசன் போசமக ராசன் வந்தான்....

ஆடல்முறை :

கொலுநின்று வலம், இடம் தட்டிப் பாய வேண்டும். சுழன்று பாய்ந்து முன் சென்று தாளத்துடன் இறங்கவேண்டும். பின்னர் அவனியம் போட்டு முடிக்க வேண்டும்.

தீர்மானம் :

"தாம், தெய்ய தா
ததிந்த, ததீந் தக்கத் தெய்"

2ம் காலம் :

"ராச ராசமக ராசன் போசமக
ராசன் கொலுவில் வந்தானிதே"
தெய், தெய்....

ஆட்ட முறைமை :

தித்தித்த போட்டுப் பின்னிறங்கி முன் சென்று வலம் இடமாகத் திரும்பி ஆடி முடிக்கவேண்டும்.

தீர்மானம் :

"தா, தக்க தீம் தா,
தாளாங்கு தித் தக ததிங்கின தெய்"

3ம் காலம் :

பத்துப் பதினெட்டு வாத்தியம் முழங்கிட
தித்திப் புல்லாங்குழல் ஊதவே

ஆட்ட முறைமை :

ரத்திபோட்டு ஆடி தித்தித்தாவுடன் முன்சென்று பாய்ந்து சுழன்று பின் வர வேண்டும்.

தீர்மானம் :

"தா தக்கதீம் தா,
தளாங்கு தித் தக ததிங்கின தெய்"

4ம் காலம் :

அதிரடி பீரங்கி ஆகாச வாணங்கள்
அண்டர்களும் புடை சூழவே – தெய்யா....
ராச ராச மகா ராசன் போசமக
ராசன் கொலுவில் வந்தானிதோ
தெய், தெய்....

ஆட்ட முறைமை :

நாலடி போட்டு, எட்டுப் போட்டாடி வட்டம் போட்டு முடிக்கவேண்டும்.

*தீர்மானம் :*
*"தக்க சொம், தத் தரிகிட, 2*
*தகக தீம், தரிகிட தா,*
*தா தீம் தக்கத் தெய்"*

*இறக்கம் :*
*"தக தாம், தெய்ய தா, தாதீந்த,*
*தா தீம் தக்கத், தெய்"*

கிராமத்து மக்களின் ஜீவ சுவாசத் துடன் கலந்த இந்தக் கூத்துக்களை நவீனமயப்படுத்துகின்றோம் என்ற நினைப்பில் அதன் இருப்புக்களைத் துலைத்து நிர்வாணமாக்குவதை நான் விரும்புபவனல்லன்.

எங்கள் கிராமத்துத் தாய்மார்கள் பிள்ளைகளைப் பாலூட்டித் தாலாட்டும் போது கூட கூத்துப் பாடல்களையே பாடக் கேட்டிருக்கின்றேன்.

தாயின் கெற்பக்கிரகமுடைத்து தொப்பூள்கொடி அறுபட்ட போதிலும், கூத்துக்கும் எனக்குமுள்ள தொப்புள் கொடி இன்னமும் அறுபட்டுப் போக வில்லை.

எனதன்பு வாரிசுகளே! வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் தவிக்கும் எங்கள் இனத்தின் அடையாளங்களைச் சுமந்து நிற்கும் பழம்பெரும் கலையான எங்கள் களரிக் கூத்துக்களுக்கு உயிர் தந்து உய்ய வழிசெய்யுங்கள். அதன் ஆடல், பாடல்களைக் கற்றுக் கொள் ளுங்கள். அது இங்கே தேய்ந்து தெற்கே உயிர்பெற்றுக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

# வடமராட்சிப் பிரதேச நாவல்களும் ஈழத்து நாவல் செல்நெறியும்

பேராசிரியர் செ. யோகராசா

ஈழத்து நாவல் செல்நெறியை ஆழப் படுத்தியதிலும் அகலப்படுத்தியதிலும் வடமராட்சிப் பிரதேச நாவல்களின் பங்களிப்பு பற்றி அவதானிப்பது அவசிய மானது.

(1)

ஈழத்து நாவல் செல்நெறியை ஆழப் படுத்தியதில் வடமராட்சிப் பிரதேச நாவல் களின் பங்களிப்புக் குறித்து முதலிற் கவனிக்கலாம்.

**சமூக ஒடுக்குமுறைகள் சார்ந்த நாவல்கள்**

வடமராட்சிப் பிரதேசத்தின் மூன்றா வது நாவலாகக் கருதப்படக்கூடிய 'நீலகண்டன் ஒரு சாதி வேளாளன்' (இடைக்காடர், 1925) அது எழுந்த கால கட்டத்து நாவலாசிரியர்களின் பெரும்பா லோரது கண்ணோட்டத்திற்கு அமை வாக, சாதிப் பிரச்சினையை மேலோட்ட மாக அணுகுகின்றது. வேளாள சாதியின னான புவிமன்னனுக்கும் பண்டார சாதி யினளான கமலாவதிக்கும் பிறந்த நீலகண்டன் தந்தையின் சொத்துரிமை யை பெறுவதற்கு ஏற்பட்ட தடையை முதன்மைப்படுத்துகின்ற இந்த நாவலில் பல குறைபாடுகளிருப்பினும் சாதிப் பிரச்சினை தொடர்பான முதல் நாவல் என்ற பதிவு இந்நாவலுக்குண்டு.

தொடர்ந்து இப் பிரதேசத்தில் எழுந்த 'விடிவைநோக்கி' (தெணியான், 1973) கவனத்திற்குரியதாகின்றது. ஒடுக்கப்பட்ட சாதிப் பிள்ளைகளது கல்வித் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்குத் தடையாகவுள்ள சூழ் நிலைகளையும் அவ்வழி ஒடுக்கப்பட்ட சமூகஞ் சார்ந்த பாடசாலை ஆசிரிய னொருவன் எதிர்கொள்ளும் பிரச்சினை களையும் கவனத்திற்குட்படுத்துகின்றது.

'பரம்பரை அகதிகள்' (தெணியான், 1985) ஒடுக்கப்பட்ட, குடியிருப்பதற்கு காணியற்ற மக்களைப் 'பரம்பரை அகதி'களாக இனங்கண்டு அதற்காகப் போராடி அம்மக்கள் மத்தியிலே எழுச்சியை ஏற்படுத்தும் இளைஞ னொருவன் பற்றியது.

'இடிபடும் கோட்டைகள்' (நா.யோகேந்திரநாதன், 2018), 1950 – 1960 காலப் பகுதியில் வடமராட்சிப் பகுதிக் கிராமமொன்றினிலே நிலவிய சாதிப் பிரச்சினை பற்றிப் பேசமுற்படுகின்றது. பிரதேச மணத்துடன் சமூக - பண் பாட்டுப் பின்புலத்தில் எழுதப்பட்ட இந்நாவலில் சாதி ஒடுக்குமுறைகள் நுட்பமாக - சுருக்கமாகப் பேசப்பட் டிருப்பதோடு அடிநாதமாக, உயர்ந்த - தாழ்ந்த சமூகத்தினருக்கிடையிலான காதற்கதையொன்றும் இடம்பெற் றுள்ளது. உண்மைப் பாத்திரங்கள் சிலவும் இடம்பெற்றுள்ளன.

'கரையைத்தேடும் கட்டுமரங்கள்' (கே.எஸ். பாலச்சந்திரன், 2011) மீனவக் குடும்பமொன்றின் கஷ்டங்கள் நிறைந்த வாழ்க்கையின் சித்திரிப்பாகின்றது. (டானியல், செ. யோகநாதன், அங்கையன், கைலாயநாதன் முதலானோர் இவ்

விடயம் பற்றி ஏலவே விரிவாகப் பேசியுள்ளனர்)

சமூக ஒடுக்குதல்களை மேற்கொண்டோர் பற்றிய நாவல்களுள் நிலப்பிரபுத்துவக் குடும்பமொன்றின் சரிவைச் சிறப்பான முறையில் சித்திரிக்கும் நாவலொன்றினைத் தந்த பெருமை (மரக்கொக்கு, 1994) தெணியானுக்குள்ளது. (இப் பொருள் பற்றிய சில நாவல்கள் செ. கணேசலிங்கனாலும் எழுதப்பட்டுள்ளன)

**சீதனப் பிரச்சினை :**

சீதனப் பிரச்சினை பற்றி ஈழத்தின் பிற பிரதேசங்களில் சில நாவல்கள் எழுந்துள்ளன. வடமராட்சிப் பிரதேசத்தில் எழுந்துள்ள வேறு சில நாவல்களிலும் (உ-ம் : பொ. பத்மநாதனின் பொன்னம்மாவின் பிள்ளைகள்) பல பிரச்சினைகளுளொன்றாகப் பேசப்பட்டுள்ளது. எனினும், இப் பிரதேசத்திலெழுந்த 'மீட்டாத வீணை' (ஏ.ரி. நித்தியகீர்த்தி, 1974) உருக்கமான முறையில் இப்பிரச்சினை பற்றிப் பேசியிருப்பது கவனத்திற்குரியது.

**குடும்ப உறவுகள், காதல், அன்பு, பாலுணர்ச்சிச் சிக்கல்கள் :**

மேற்கூறிய விதத்தில் குடும்ப உறவு, காதல் பற்றி எழுந்த நாவல்களுள் குறிப்பிடத்தக்கதொன்றாக, க.சச்சிதானந்தத்தின் 'அன்னபூரணி' (1942) காணப்படுகின்றது.

பாலுணர்ச்சியை முக்கியப்படுத்தி எழுந்த நாவல்களுள் 'பொன்னம்மாவின் பிள்ளைகள்' (பொ. பத்மநாதன், 1970) வறுமைப்பட்ட சூழலில் வாழ்கின்ற பொன்னம்மாவின் குடும்பம் பற்றிப் பேசுகின்றது. உடலுணர்ச்சிப் பின்புலத்தில் கலைத்துவமான முறையில் அது பற்றிச் சித்திரிக்கின்றது, காத்திருப்பு (தெணியான்) (யோ.பெனடிக்ற் பாலனின் 'குட்டி', எஸ்.பொ.வின் சடங்கு, தீ என்பன வெவ்வேறு கோணங்களில் இவ் விடயத்தை அணுகியுள்ளன)

**போர்க்கால அவலங்கள்/ போராட்டங்கள் :**

இவ்விடயம் பற்றி எழுந்த இக்கால நாவல்களுள் சிதைவுகள் (தெணியான், 1999) வடமராட்சி இடப்பெயர்வுச் (1991) சூழல் காலத்தைப் பின்னணியாகக் கொண்டு நகர்கின்றது.

மேற்கூறிய நாவல் சமூகப் பின் புலத்தில் நகர அதற்கு முற்பட்ட ஒப்றேஷன் காலத்து உண்மையான நிகழ்வுகளையும் (உ-ம் : தேர் எரிப்பு) இடப்பெயர்வினையும் பற்றி சித்தரிப்பதாக 'ஒரு பூ' (கே.எஸ். துரை) விளங்குகின்றது.

அண்மையில் வெளிவந்த 'நீந்திக் கடந்த நெருப்பாறு' (நா. யோகேந்திரநாதன்) பாகம் - I (2016) பாகம் - II (2017) ஆகியன நீண்டகாலப் பின்புலத்தில் போர்க்கால அவலங்கள் பலவற்றை அகன்ற போர்வையில் ஆழமான முறையிலே விவரிக்கின்றன. எழுத்தாளரது நேரடி அனுபவங்களூடாக அவை வெளிக்கிளம்புகின்றமை இவற்றின் தனிச்சிறப்பு (தமிழ்க்கவி, வெற்றிச் செல்வி ஆகியோரது படைப்புகளும் இவ்வழிச் செல்வனவே)

மேற்குறிப்பிட்ட நாவல்களுக்கு முன்னர் வெளிவந்த 'கொலம்பசின் வரைபடங்கள்' (யோ. கர்ணன், 2013) நாவலும் போராட்ட இறுதி நிகழ்வுகள்

பற்றியெழுந்த படைப்புகளுள் கலைத்துவம் மிக்கதொரு படைப்பாகின்றது.

**மலையக நாவல் :**

மேற்கூறிய விதத்தில் வெளிவந்த நாவல் என்ற விதத்திலே 'மூட்டத்தினுள்ளே' (புலோலியூர் சதாசிவம், 1983) முக்கியமானதொரு படைப்பாகின்றது; குடியுரிமைப் பிரச்சினையையும் அதனாலேற்பட்ட விளைவுகளையும் முக்கியப்படுத்துகின்றதென்ற விதத்திலே குறிப்பிடத்தக்கது.

**பிரதேச நாவல்கள் :**

சமூகப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தாமல் வடமராட்சிப் பிரதேச மக்களில் ஒரு சாராரது வாழ்க்கைச் சித்திரிப்புகளை ஓரளவு மண்வாசனையுடன் சித்திரிக்கின்ற நாவல்கள் என்ற விதத்தில் இரு நாவல்களைக் குறிப்பிடத் தோன்றுகின்றது.

மேற்கூறியவற்றுளொன்று 'நாணயம்' (புலோலியூர் க. சதாசிவம், 1980). வடமராட்சிப் பிரதேசத்தின் நாடித்துடிப்பு, மனித உறவுகளைப் பிணைக்கும் பந்தமாகிய சடங்குகள், நம்பிக்கைகள், பண்பாட்டம்சங்கள், எண்ணக்கருக்களின் உயிர்த்துடிப்பான வெளிப்பாட்டின் ஊடகமான பேச்சு வழக்கு ஆகியவற்றை வெளிப்படுத்துவதில் ஓரளவு வெற்றிபெற்றுள்ளது இந்நாவல் என்பதில் தவறில்லை.

மற்றொரு நாவல், 'நம் தாயர் தந்த தனம்' (வல்வை கமலா பெரியதம்பி, 1994) என்பது. வல்வெட்டித்துறையில் வாழ்ந்து வந்த நான்கு தலைமுறைக் குடும்பத்தினரின் கதையை - காதல், வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என்பனவற்றின் ஊடாக விவரிக்க முற்படும் இந்நாவல் மேற் குறிப்பிட்ட நாவல் போன்று உருப்பெறாவிட்டாலும் ஆவணப்பதிவு என்ற விதத்திலும் வல்வெட்டித்துறை, கொழும்பு, சிங்கப்பூர் ஆகியனவற்றைக் கதைக் களங்களாகக் கொண்டுள்ளன என்ற விதத்திலும் ஓரளவு கவனத்திற்குரியது.

'சுயம்வரம்' (இ.செ.துரை, 1993) என்ற புலம்பெயர் நாவலிலும் வல்வெட்டித்துறை பிரதேச மணம் கமழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(2)

இனி, வடமராட்சிப் பிரதேச நாவல்கள் ஈழத்து நாவல் செல்நெறிகளை அகலப்படுத்தியிருப்பது பற்றி வகைப்படுத்தி நோக்கலாம்.

**புலம்பெயர் நாவல்கள் :**

மேற்கூறிய வகையிலடங்கும் புலம்பெயர்ந்துள்ள இப்பிரதேச எழுத்தாளர் களது நாவல்கள் என்ற விதத்திலே கவனிக்கின்றபோது முக்கியமானதும் சுவாரஸ்யமானதுமான குறிப்பொன்றுள்ளது. அதாவது, இப்பிரதேசத்தின் ஆரம்ப நாவல்களே புலம்பெயர்ந்த நாவல்களுடனேதான் ஆரம்பமாகின்றது என்பதே அதுவாகும். அதாவது மலேயாவிலிருந்து வெளிவந்த இரண்டாவது நாவலான பாலசுந்தரம் அல்லது 'சன்மார்க்க ஜெயம்' புலோலியூர் க. சுப்பிரமணியம் என்பவரால் 1917இல் எழுதப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந் நாவலின் 2ம் பாகம் பற்றி மட்டுமே அறியமுடிகின்றது. முதல் நாவல் பற்றிய தகவல் இன்றுவரை அறியப்படாதுள்ளது) கிடைப்பின் இதுவே முதல் நாவலாதல் கூடும்.

சமூகச் சீர்திருத்த நோக்குடைய இந்நாவல் 19ம் நூற்றாண்டில் பிரித்தானியரது ஆட்சிப் பின்புலத்தில், கோலாலம்பூரின் உருவாக்கம், கிறிஸ்தவ மதப் பரம்பல், இலங்கை - இந்திய தமிழரது பிணக்குகள் முதலான பல வரலாற்றுத் தகவல்களைக் கொண் டுள்ளது. இந் நாவலின் தொடர்ச்சி (நீலாக்ஷி அல்லது சன்மார்க்க முடிவு) 1923 இல் வெளியானது.

'விமானங்கள் மீண்டும் வரும்' (நெல்லை க. பேரன், 1985) என்ற நாவல் மத்திய கிழக்கு நாடுக்கான புலப்பெயர்வு பற்றிய முதல் நாவல் என்ற பெருமை யுடையது. தங்களுடைய சகோதரிகளின் சுகங்களுக்காக ஒவ்வொரு குடும்பத்து இளைஞரும் எவ்வளவு தூரம் கஷ்டப் படுகின்றனர் என்பதனை உணர்த்து கின்றது இந்நாவல்.

முற்குறிப்பிட்ட 'சுயம்வரம்' என்ற நாவலின் ஒரு பகுதி வல்வெட்டித்துறை யைக் களமாகக் கொண்டது எனில், மற்றொரு பகுதி டென்மார்க்கை பின்புல மாகக் கொண்டிருக்கிறது. டென்மார்க் தமிழரது வாழ்க்கையூடாக டென்மார்க் மக்களது உன்னதமான சில குண இயல்புகள் வெளிப்படுத்தப்படுவது, இந்நாவலின் சிறப்பு.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் சில, தலைமுறை இடைவெளிசார் முரண் பாடுகளினால் எழுவது. அத்தகைய சூழலில் முரண்படும் ஒரு குடும்பம் சார்ந்த சில மனிதர்களைப் பாத்திரங் களாகக் கொண்டு எழுந்த புலம்பெயர் நாவல்களுள் முதல் நாவல் – முதன்மை யான நாவல் – என்ற சிறப்பிற்குரியது. 'சில மனிதர்களும் சில நியாயங்களும்' (கரவை மு. தயாளன், 2016). இரத்தமும் சதையுமான முரணுறு பாத்திரங்களும், வீச்சுடைய தர்க்க ரீதியான உடையாடல் களும் (முற் குறிப்பிட்ட உள்ளடக்கத் தோடு) ஈழத்துப் புலம்பெயர் நாவல்களுள் இந் நாவலுக்குத் தனிச் சிறப்பை வழங்குவது குறிப்பிடத்தக்கது.

ஈழத்திலிருந்து தமிழர்கள் புலம் பெயர்வதற்கான காரணங்களை - சூழலை - யதார்த்தபூர்வமான, விமர்சன ரீதியான பின்புலத்தில் எடுத்துக்கூறும் 'கடல் கடந்து போனவர்கள்' (கரவை, மு. நற்குணதயாளன், 2005) என்ற நாவலும் ஈழத்துப் புலம்பெயர் நாவல்களுள் முக்கியமானதொன்று. ஆண்டு அடிப்படையில் பொருந்தாவிடினும் மேற்குறிப்பிட்ட உள்ளடக்க அடிப்படை யில் ஈழத்துப் புலம்பெயர் நாவல் வரலாற்றில் முதல் நாவலாகின்ற சாத்தியம் இந் நாவலுக்குள்ளது.

புலப்பெயர்வின் விளைவுகளால் புலம்பெயர்ந்தோரது, ஈழத்தில் வாழ் கின்ற குடும்பங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை குடும்ப நிலை நின்று எடுத்துக்காட்டும் வித்தியாசமானதொரு படைப்பு 'பனையின் நிழல்' (தெணியான், 2006). அதாவது, கணவனை பிரிந்து வாழ்கின்ற பெண்ணொருத்தியின் பாலுணர்ச்சி வேட்கையினால் சீரழிகின்ற வாழ்க்கையை விபரிப்பது இந்நாவல்.

'தொப்புழ்கொடி' என்ற இன்னொரு நாவல் (தெ. நித்தியகீர்த்தி, 2009) அவுஸ்திரேலியாவையும் இலங்கை யையும் களமாகக் கொண்டது. 1983 இனக் கலவரச் சூழலில் இலங்கை யிலிருந்து சென்ற குடும்பமொன்று

ஈரிடங்களிலுமுள்ள போராளிகளுக்கு உதவி செய்வதனால் ஏற்படும் விபரீத விளைவுகள் பற்றிப் பேசும் இந்நாவல் உண்மைச் சம்பவங்களையும் உண்மைப் பாத்திரங்களையும் கொண்டு உருவாகி யுள்ளதென்று நாவலாசிரியர் குறிப்பிடு வது மனங்கொள்ளத்தக்கது.

மேற்கூறியவற்றிலிருந்து இப் பிரதேச எழுத்தாளரது புலம்பெயர் நாவல்கள் ஈழத்து நாவல் செல்நெறியை அகலப்படுத்தியிருப்பது தெரிய வருகிறது.

**பிராமணிய நாவல்கள் :**

ஈழத்து நாவல் செல்நெறியை மேற் கூறிய விதத்தில் அகலமாக்கியவை என்ற விதத்தில் கவனம் பெறுகின்ற நாவல்கள் இரண்டுமே வடமராட்சிப் பிரதேச நாவலாசிரியர்களால் எழுதப் பட்டவையே. இவற்றுளொன்று 'பொற் சிறையில் வாடும் புனிதர்கள்' (தெணியான், செப். 1989). மற்றொன்று 'விடிவெள்ளி பூத்தது' (ஈழத்து சோமு, செப். 1989). மேற்கூறியவற்றுள் முதல் நாவல் ஆலயங்களில் பூசகர்களாக இருந்துவரும் பிராமணர்களது அவலங் களை உருக்கமான முறையில் சித்திரிக்கும் சிறப்புடைய முதல் நாவலாகின்றது. ஏனைய நாவல் இன்னொரு கோணத்தில் அவற்றைச் சித்திரிக்கின்றது. ஆக, இப் புதிய உள்ளடக்கம் சார்ந்த இரு நாவல்களும் இப்பிரதேச எழுத்தாளர்களால் எழுதப் பட்டமை கவனத்திற்குரியது. இவ் விதத்தில் ஈழத்து நாவல் செல்நெறியில் இவற்றின் முக்கியத்துவம் பெரியது.

**போர்க்கால நாவல்கள் :**

இவ்விதத்தில் முற்குறிப்பிட்ட 'சுயம்வரம்' நாவலுக்கு வேறிரு சிறப் பியல்புகளுமுள்ளன. இவற்றுளொன்று மக்களும் போராளிகளும் சேர்ந்து, தமது குடும்பத்தவர் பலரது அழிவிற்கும் காரண மாகவிருந்த, கடற்படைக் கலமொன் றைத் தாக்குவது. மற்றொன்று தாக்குதல் உத்தி முறையை கடலோர முதியவர் களது இயற்கை பற்றிய அவதானிப்பு வெளிப்பாட்டினூடாகப் பெற்றுக்கொள் வது. இவை, வேறெந்த போர்க்காலப் போராட்டம் தொடர்பான நாவல்களுக் கும் இல்லை என்பதே கவனத்திற் குரியது.

**சமூக ஒடுக்குமுறை சார்ந்த நாவல்கள் :**

மேற்கூறிய விதத்தில் எழுந்த நாவல்களுள் வித்தியாசமானதொன்று 'குடிமைகள்' (தெணியான், 2013). சவரத் தொழிலாளர்கள் யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் தோறும் பெரும்பாலும் மிகக் குறைந்த தொகையினரான குடும்பங் களாக வாழ்ந்து வருகின்றார்கள். இந்த அமைப்பு அவர்கள் வாழும் பகுதிகளில் அவர்களைப் பலவீனப்படுத்தி வைத் திருக்கின்றது. ஆதிக்க சக்தி இந்த மக்களைத் தங்கள் ஆதிக்கத்துள் அடக்கி வைத்துக்கொள்வதற்கு வெகு வாய்ப்பானதாக காணப்படுகின்றது. இந்தச் சமூக மக்களின் வாழ்வுநிலை எவ்வாறு இருந்துவந்தது, அதன் தொடர்ச்சியான வாழ்வு இன்று எவ்வாறு சாதியத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக் கின்றது என்பதனை 'குடிமைகள்' நாவலுக்கூடாக சொல்லியுள்ளார் நாவலாசிரியர். இவ்விதத்தில் முதல் நாவலாகிய இந் நாவலும் ஈழத்து நாவல் செல்நெறியை அகலப்படுத்தியுள்ளது.

**சைவ சித்தாந்தம் சார்ந்த நாவல் :**

தமிழில் சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேற்குறிப்பிட்ட விடயத்தை உருவகப்படுத்தி நாடகங்கள் எழுந்துள்ளன. (உ-ம் : மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை எழுதிய 'மனோன் மணியம்', சோமசுந்தரப் புலவரின் 'உயிரிளங்குமரன்',1936) தமிழ் நாட்டில் ஆரம்ப கால நாவலாசிரியரான தி.ம. பொன்னுசாமிப்பிள்ளையால் இவ்வகை நாவல்கள் பல எழுதப்பட்டுள்ளன. இவ்விதத்தில் ஈழத்திலெழுந்த ஒரே யொரு நாவல் என்ற பதிவிற்குரியது 'சித்தகுமாரன்' என்ற நாவல் (இடைக் காடர், 1925). ஆரம்பத்தில் கவனித்த ஈழத்தில் முதற் சாதிய நாவல் எழுதிய இடைக்காடரே இந் நாவலையும் தந்துள்ளார்)

**குடும்ப உறவுகள், அன்பு, காதல் முதலியன சார்ந்த நாவல்கள் :**

மேற்கூறிய விதத்தில் ஈழத்து நாவல் பரப்பை அகலப்படுத்திய மூன்று நாவல் களை இப் பிரதேசம் தந்துள்ளது.

ஒன்று,'நீரலைகள்' (வல்வை, ந. அனந்தராஜ், 2003). இளமைக் காலத்தில் வசதியாக வாழ்ந்தபோது உள்ளவற்றை யெல்லாம் பிள்ளைகளுக்கு வாரி வழங்கி விட்டு முதுமையில் பிள்ளைகளால் தெருவீதிக்குத் தூக்கியெறியப்பட்ட நிலையில் பெற்றோர் படும் அவலங் களை விவரிப்பது இது.

மற்றொன்று,'கானலில் மான்' (தெணியான், 2009) பெற்றோர், நண்பர், மனைவி, குழந்தை முதலானவரின் அன்பிற்காக ஏங்கும் ஒருவனது கதையாகவுள்ளது. இப் படைப்பு.

பிறிதொன்று 'தவறிப்போனவன் கதை' (தெணியான், 2010) கைமாறு எதிர்பாராமல் ஆபத்தான வேளையில் உதவிசெய்த, முகமறியாத மனிதநேயம் மிக்க ஒருவன் பற்றிய கதையே இந் நாவலாகின்றது. இவ்விதங்களில் ('மரக்கொக்கு', 'காத்திருப்பு', 'கானலில் மான்' உட்பட) ஈழத்து நாவல் பாத்திர உருவாக்க வரலாற்றில் தெணியானுக்கு முக்கிய இடமுள்ளமை கவனிக்கப்பட வேண்டியது.

**வரலாற்று நாவல்**

ஈழத்திலேயே முதல் வரலாற்று நாவலைத் தந்த பெருமையும் வடமராட்சிக்கு உள்ளது. 'அடிமையின் காதலி' என்ற அந் நாவலின் ஆசிரியர் திக்கம் சிவயோகமலர்.

**மொழிபெயர்ப்பு நாவல்கள் :**

பிறமொழிகளிலிருந்து மொழி பெயர்த்தோ தழுவியோ தந்த எழுத்தாளர்கள் பலரும் இப்பிரதேசத்தில் உள்ளனர். எடுத்துக்காட்டு :

- ✧ பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய 'பூஞ்சோலை' (மூலம் : ஜேர்மன்), 'வாழ்க்கையின் விநோதங்கள்' (மூலம் : பிரெஞ்)
- ✧ செ. கதிர்காமநாதன் எழுதிய 'நான் சாகமாட்டேன்' (மூலம் : வங்காளம்)
- ✧ மணிவேலுப்பிள்ளை எழுதிய 'மாய மீட்சி' (மூலம் : செக் நாட்டிலிருந்து பிரான்சிற்குப் புலம்பெயர்ந்த எழுத்தாளர்)

இறுதியாகக் குறிப்பிட்ட நாவலின் வரவு, புலம்பெயர்ந்த எழுத்தாளரொருவரெழுதிய படைப்பு என்ற விதத்திலே தமிழிற்கு முக்கியமானது. 'இதில்வரும்

பிரதான பாத்திரங்கள் அனைவருக்கும் தாயக வேட்கை உண்டு. எனினும், எவருக்கும் மீட்சி நனவில் கைகூட வில்லை. நினைவில் புதையுண்ட மீட்சி, நனவில் கைகூடவில்லை. மகத்தான மீட்சி மாய மீட்சியாய் மாறுகிறது' என்பதே நாவலின் கருவாகும்.

**ஆங்கில நாவல் :**

உலகப் புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளரான அழகு சுப்பிரமணியம் ஆங்கிலத்தில் *Mr. Moon* என்றொரு நாவலை எழுதியுள்ளார். இவர் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரென்பது இலக்கிய ஆர்வலரறிந்த விடயமே. இவரது சிறுகதைகள் ராஜ சிறீகாந்தனால் மொழிபெயர்க்கப்பட்டு நூலுருப்பெற்றது. *Mr.Moon* மொழிபெயர்க்கப்பட்டாலும் நூலுருப்பெற வில்லை (அதற்கான அவசியமுள்ளது)

**சோ. ராமேஸ்வரனின் நாவல்கள் :**

வடமராட்சிப் பிரதேச நாவலாசிரியர்களுள் 'யோகராணி கொழும்புக்குப் போகிறாள்' (1992), 'இவர்களும் வாழ்கிறார்கள்' (1993), 'இலட்சியப் பயணம்' (1994), 'அக்கரைக்கு இக்கரை பச்சை' (1994), 'மௌன ஓலங்கள்' (1995), 'வடக்கும் தெற்கும்' (1996), 'இன்றல்ல நாளையே கல்யாணம்' (1996), 'சிவபுரத்துச் சைவர்கள்' (1998) முதலான பல நாவல்கள் எழுதிய பெருமைக் குரியவர் சோ. ராமேஸ்வரன். விரிவஞ்சி இவை கவனத்திற்குட்படுவது தவிர்க்கப் பட்டுள்ளது.

**விடுபட்ட நாவல்கள் :**

நந்தினி சேவியர் (மேகங்கள், 1973 - ஈழநாடு தொடர்), செ. கதிர்காமநாதன் (கோடை நதி, மித்திரன் தொடர்), சந்திரா தியாகராசா (தாயகம்), நெல்லை க. பேரன் (நேர்கோடுகளும் வளைகோடுகளும், ?), பொ. பத்மநாதன் (யாத்திரை, புயலுக்குப் பின்) ஆகியோரது படைப்புகளை இத்தருணத்தில் பெறமுடிய வில்லை.

விடுபட்ட நாவலாசிரியர்களைத் தவிர்த்து நோக்கும்போது ஈழத்து நாவல் செல்நெறியை ஆழப்படுத்தியவர்களும் அகலப்படுத்தியவர்களும் என்ற விதத்திலே தெணியான், கி.செ.துரை, ஏ.ரி.நித்தியகீர்த்தி,ஈழத்துச் சோமு, புலோலியூர் சதாசிவம், கரவை மு. தயாளன், நா. யோகேந்திரநாதன், யோ. கர்ணன் முதலான பலருக்கும் முக்கிய இடமிருப்பது குறிப்பிடத்தக்கது. (நந்தினி சேவியர், செ. கதிர்காமநாதன், சந்திரா தியாகராசா, பொ.பத்மநாதன், நெல்லை க.பேரன் ஆகியோரது படைப்புகள் பார்வைக்குட்படும்போது மேற்குறிப்பிட்ட பட்டியல் நீள்வதற்கு இடமுள்ளது என்பது கவனத்திற்குரியது) மொழி பெயர்ப்பு நாவல்களைத் தந்தவர்களென்ற விதத்தில் இன்றைய நோக்கில் செ. கதிர்காமநாதன், மணி. வேலுப்பிள்ளை ஆகியோர் முக்கியமானவர்கள். ஆங்கில எழுத்தாளர் என்ற விதத்தில் பெருமைப்படக்கூடியவர் அழகு சுப்பிர மணியம்

(கவனிக்க : மேற்கூறிய ஆய்வு முழுமையானதன்று. வகைப்பாடுகளும் நெகிழ்ச்சிக் குரியவை. வேறு வகைப்பாடுகளும் - உதாரணமாக 'பெண்களது வாழ்க்கைச் சித்திரிப்பு' உள்ளன)

# "சொற்களுக்குப் பெறுமதி இல்லை"

**குப்பிழான் ஐ. சண்முகன்**

நேற்றைய இரவு எனக்கு ஓர் அபூர்வமான கனவு வந்தது. பதினொரு மணியளவிலேயே படுக்கைக்கு சென்றேன். நித்திரை வரவில்லை. அப்படியும் இப்படியுமாக உழன்று கொண்டிருந்தேன். தூரத்தில் எங்கிருந்தோ கூத்துப்பாடல் சத்தம், மெதுவாகக் கேட்டுக்கொண்டிருந்தது. "அசமுகி சபையில் வந்தாள். .. முகத்தோடு உடல் குலுங்கிட அசமுகி சபையில் வந்தாள்". தொடர்ந்து தாம் தூமென வாத்தியங்களின் கலவைச் சத்தங்கள். அடுத்த அறையில் குழந்தைகளுடன் தூங்கும் மனைவி ஒரே சீரான குறட்டைச் சத்தம். திறந்திருக்கும் ஜன்னலால் எட்டிப் பார்த்து சிரிக்கும் நிலவு. முன்னிரவில் வெப்பம் தணிந்து, இதமாக ஊதும் மெல்லிய காற்று. அங்கும் இங்கும் செல்லும் மனதை ஒருநிலைப்படுத்தி, ஒன்று இரண்டு மூன்று என எண்ணியவாறு எனது மூச்சை கவனித்தவாறே இருக்கின்றேன்.

எப்போது உறங்கினேனென்று தெரியவில்லை. மெல்லிய சுகந்தமான வாசனை கமழ்ந்த மாதிரியும், இதமான தென்றல் வருடி உடம்பெல்லாம் குளிர்ந்த மாதிரியும் இருந்தது. மெல்லிய சதங்கைச் சத்தம்.... ஆயிரம் கோடி சந்திரப் பிரகாசத்துடன் தேவி பிரசன்னமாகி இருக்கின்றாள். இந்த உலகை இயக்கும் தாய் அவள்தானாம்; அண்ட பிரசண்டமெல்லாம் ஆக்குபவரும், காப்பவரும், அழிப்பவரும் அவள்தானாம். தீமைகளை எல்லாம் அழித்து நன்மைகளை விளைவிப்பவளும் அவள்தானாம். உயிர்கள் எல்லாவற்றுக்கும் கருணையை பிரவாகமாகக் கொடுப்பவளும் அவள் தானாம்.

நான் என்னை மறந்து பிரமித்து நின்றேன். கைகளை தலைமேல் குவித்து வணங்க வேண்டுமா - வேண்டாமா எனத் தடுமாறி மலைத்துப் போய் நின்றேன்.

அவள் என்னைப் பார்த்து முறுவலித்தாள். பின்னர் தனது சிவந்த அதரங்களை திறந்து சொன்னாள். "பக்தனே என்னை நீ அடிக்கடி நினைக்கிறாயென்று எனக்குத் தெரியும். தீராத மன அவசங்களில் உழல்கின்றாயென்றும் எனக்குத் தெரியும். அவரவர்களும், அவரவர்களுக்கு விதித்தபடிதானே வாழ வேண்டும். விதியை - விதிகளை மாற்ற முடியாதல்லவா? பூமி அதன் அச்சில் இழை பிசகாது சுழலவேண்டுமென்பதும், அண்டவெளியில் மிதக்கும் கோடான கோடி நட்சத்திரங்களும் அதனதன் இயல்பிலேயே இயங்க வேண்டுமென்பதும் விதிதானே. நானே விதி, விதியே நான். அணுவிலும், அணுவிலும் அணுவாய் இம்மியளவில் பிழைத்தாலும்.. பிழைக்காது நானே விதி; விதியே நான்.

"அறிவேன் தாயே. எல்லாவற்றுக்கும் காரணி நீயே தான் தாயே! காரியமும் நீயே தான் அறிவேன் தாயே. ஆனால் என்னுடைய மன அவசங்கள்.... அதை என்னவென்று சொல்வது. இந்த மனிதர்கள், என் சகபாடிகள். என் உடன் பிறந்தவர்கள் என்னோடு இவ் உலகில் வாழ்பவர்கள். எல்லோரும் சொல் ஒன்று - செயல் ஒன்றாய், விதி ஒன்று - வினை

ஒன்றாய், குரல் ஒன்று – குணம் ஒன்றாய், ஆனால் தாயே நீ பூரணி நீயே விதி – நீயே வினை; நீயே காரணி – நீயே காரியக்தாரி. அம்மா உன் தாள் சரணம் அம்மா. இந்த மன அவசங்களிலிருந்து எனக்கு விடுதலை தரவேண்டும் தாயே.

"பக்தனே உன் குறைகளை நான் போக்குவேன். நீ சொல்பவை எல்லாம் எனக்கு புரிந்த மாதிரியும் இருக்கிறது; நீ சரியாகத்தானே வாழ்கிறாய். உனக்கு விதிக்கப்பட்ட ஆசாபாசங்களுக்கு அமைய, பூலோகத்து இன்பதுன்பங் களை அனுபவித்தபடி வாழ்வின் உத்தரியங்களுக்கு ஆட்பட்டபடி, அனு தினமும் ஜகத்காரணியாக என்னை நினைத்தபடி.... மகனே உனது மன அவசங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"தாயே வேறொன்றும் இல்லை. ஏன் இந்த மனிதர்கள் ஒருவருக்கொருவர் அடிபடுகின்றார்கள். நான் பெரிசு நீ பெரிசு – இல்லை நான்தான் பெரிதென்று கொக்கரிக்கிறார்கள். என்னது என்னது என்னதென்று எல்லாவற்றையும் வாரிக் குவிக்கிறார்கள். மற்றவனிடம் இருப்பதை தட்டிப் பறிக்கிறார்கள். மற்றவருக் குரியதை பிடுங்கிக் கொள்கிறார்கள்; புரள்கிறார்கள்; சுடுகிறார்கள்; வெட்டு கிறார்கள்; இரத்தம் சிந்துகிறார்கள்; உயிர்களை கொல்கிறார்கள்; கும்பிட்ட வனின் கைகளை வெட்டுகிறார்கள்; எதிர்த்தவனின் தலையைச் சீவுகிறார்கள். ஒருவனை ஒருவன் சந்தேகக் கண்ணால் பார்த்துக்கொண்டே ஒப்புக்குச் சிரிக் கிறார்கள். கை குலுக்குகிறார்கள்; கட்டி அணைக்கிறார்கள்...."

அன்னை ஆர்ப்பாட்டமாக சிரித் தாள்; அவளது அமைதியான ஆகர்ஷிக் கும் தோற்றத்திற்கு பொருத்தமில்லாத சிரிப்பு.

"போதும் நிறுத்து பக்தனே! இயக்கம் என்பது அதுதானே; பிரபஞ்சத் தில் படைக்கப்பட்டவை யாவும் சதா இயங்கிக்கொண்டேதான் இருக்கும். ஒத்தோடுவதாய், எதிரும் புதிருமாய், ஒன்றுடன் ஒன்று சம்பந்தமில்லாததாய், புலன்களுக்கு புலப்படா வகையில் தொடர்புள்ளவையாய் இடையறாத இயக்கம். இயக்கமின்றேல் பிரபஞ்ச மில்லை; உயிரினங்கள் இல்லை. ஏன் என் படைப்பில் மேம்பட்ட படைப்பான மனிதனுமே இல்லை. இன்பமும் துன்பமும், சுகமும் துக்கமும், சிரிப்பும் அழுகையுமாய், பிறப்பும் இறப்புமான, இணைவும் பிரிவுமான மனித வாழ்க்கையே இல்லை. கவிதை இல்லை, இலக்கியங்கள் இல்லை, கலைகளே இல்லை, எல்லாம் சூனியமாய் போய்விடும். எனவேதான் இயக்கமே பிரபஞ்சம் – இயக்கமே சக்தி; சக்தியே இயக்கம்; எல்லாமே நான்தான்.

"அறிவேன் தாயே! இவற்றை எல்லாம் நான் அறிவேன் தாயே. ஆனால் என்னுடைய மன அவசங்கள்.... அவற்றை என்னவென்று சரியாகச் சொல்ல எனக்குத் தெரியவில்லை. முரண்கள் இயல்பானவைதான்; முரண்கள் உள்ளனதான்; முரண்கள் இருந்தால்தான் இயக்கம் – வாழ்வு உருண்டோடும் என்று எனக்கும் தெரியும் தான். ஆனால்...."

"ஆனால்.... என்ன, ஆனால் சொல் மகனே! முயல்; தெண்டி; கோடி காட்டு; நான் புரிந்து கொள்வேன். சாத்திய மான அளவிற்குப் புரிந்துகொள்ள முயல் வேன்"

"சரி தாயே! முயல்கிறேன்; தெண்டிக்கின்றேன். இன்று உலகிலுள்ள மக்களில் பெரும்பாலோர் உயிர்களைக் கொன்று, அவற்றின் மாமிசத்தைப் புசிக்கிறார்கள்"

"அப்படித்தான் நடக்கிறது. அப்படித்தான் விதிக்கப்பட்டிருக்கிறது."

"ஆனால், உயிர்களை கொல்லக் கூடாது, புலாலைப் புசிக்கக்கூடாதென்று பாடசாலைகளில் கற்பிக்கிறார்கள், கோயில்களில் பிரசங்கிக்கிறார்கள்...."

"பொய் சொல்லக் கூடாது, கொள்ளையடிக்கக்கூடாது என காலாதி காலமாக உபதேசம் செய்கிறார்கள். ஆனால் பொய்யாலும் கொள்ளை யாலுமே உலகம் இயங்குகின்றது"

"மனிதர்களில் ஏற்றத்தாழ்வு இல்லை. எல்லா மனிதர்களின் உடலி லும் சிவந்த இரத்தமே ஓடுகிறது. சாதி இன மத பேதங்களில்லை. எல்லாரும் ஓர் நிறை – எல்லோரும் இந் நாட்டு மன்னர் என்கிறார்கள். ஆனால் எத்தனை எத்தனை ஆயிரம் சாதிகளையும், இனங் களையும், மதங்களையும் தூக்கிப் பிடித்துக் கொண்டு அடித்துப் புரண்டு மாள்கிறார்கள்"

"நீ சொல்வதெல்லாம் சரி; அப்படித் தான் உலகம் இயங்கிக் கொண்டிருக் கிறது மகனே! முரண்களால் தான் வாழ்க்கை உயிர்ப்புள்ளதாகிறது"

"சரி தாயே! சரி தாயே! இப்படி எல்லாம் கற்பிக்காமல் உபதேசம் செய்யாமல், பம்மாத்துக்கள் இல்லாமல் கட்டிப் புரண்டு அடித்துக்.... கொன்று வெற்றி முழக்கம் செய்பவர்களாய், தோல்வியால் துவண்டு துடிப்பவர் களாய்...."

"புரிகிறது மகனே! சுருக்கமாய் சொன்னால் சொல் ஒன்று – செயல் ஒன்றாய் மனிதர்கள் வாழ்கின்றார்கள் என்றுதானே சொல்ல வருகிறாய்; இந்தக் கலியுகத்தில் அதுதானே நியதி; சொற் களுக்கு பெறுமதி இல்லை. செயல் களுக்குத்தான் பெறுமதி கற்பிப்பார்கள்; உபதேசம் செய்வார்கள். சொற்கள், சொற்கள், சொற்களாய் காற்றில் பறக்க விட்டுகொண்டே இருப்பார்கள். அவற்றை எல்லாம் நம்பக்கூடாது மகனே.

"நான் நம்பிவிட்டேன் தாயே. கேட்டவற்றை படித்தவற்றை எல்லாம் நம்பிவிட்டேன். பொய் சொல்லக் கூடாது; களவெடுக்கக்கூடாது; கொள்ளை அடிக்கக்கூடாது. மற்றவர்களை ஏமாற்றக்கூடாது. சாதிபேதம் பாராட்டக் கூடாது. என்றெல்லாம் படித்தவற்றை நம்பிவிட்டேன் தாயே"

"நான் இந்த மனிதர்களுடன் பூமி யில் வாழமுடியாமல் தவிக்கிறேன் தாயே"

பலத்து சத்தமிட்டு அழுது விட்டேன் போலிருக்கிறது. திடீரென விழிப்பு வந்துவிட்டது. எல்லாம் இருள் மயம். ஜன்னலால் எட்டிப் பார்த்த நிலவை கறுத்த மேகங்கள் மூடி இருந்தன. பக்கத்து அறையில் குழந்தைகளுடன் உறங்கிக் கொண்டிருந்த மனைவி கனவில் ஏதேதோ புசத்திக் கொண்டிருந் தாள்.

# செருக்கடங்கிய சிங்கம்

**திருமதி புனிதவதி சண்முகலிங்கன்**

## *காட்சி - I*

*களம் : காடு*
*பத்திரங்கள் : சிங்கம், நரி, குரங்கு*

*சிங்கம் அரங்குக்கு வருதல் (பின்னணியில் பாட்டு)*

*ராசாதி ராசா சிங்கராசா வருகிறார்*
*ராச நடை நடந்தே மிடுக்குடனே வருகிறார்*
*பிடரி மயிரைச் சிலுப்பிச் சிலுப்பி*
*வீர நடை நடக்கிறார்*
*இடறி விழுந்தே மிருகங்கள்*
*விழிகள் பிதுங்கி ஒழிந்திட*
*இடி என முழங்கியே*
*அங்கும் இங்கும் பார்த்துமே*
*ராசாதி ராசர் சிங்கராசா வருகிறார்*
*ராச நடை நடந்தே மிடுக்குடனே வருகிறார்.*

சிங்கம் : (கொட்டாவி விட்டுக்கொண்டே) இண்டைக்குத்தான் நல்ல சாப்பாடு. வயிறு முட்டச் சாப்பிட்டிட்டன். நித்திரை வாற மாதிரிக் கிடக்கு. சாப்பிட்டால் ஒரு களை வரும். கண்ணும் 'டிம்' அடிக்கும். உங்களுக்கும் தெரியும்தானே. ஒருக்கா கை கால் முகத்தை உதில தெரியிற குளத்தில கழுவுவம். எல்லாம் சரியாயிடும்.

(சிங்கம் குளத்தருகே போதல். முதலில் காலைக் கழுவுதல். பின் கையைக் கழுவுதல். பிறகு முகத்தைக் கழுவுதல்)

சிங்கம் : ஆ... ஆ... என்ன குளிராய் இருக்கு. ஐஸ் போலக் குளிருது. இப்படியே கழுவிக்கொண்டே இருக்கலாம் போலக் கிடக்குது (தண்ணியை உற்றுப் பார்த்தல்) கண்ணாடி போல பளபளப்பாய்க் கிடக்குது. ஓம் ஓம் அப்படித்தான் (மீண்டும் உற்றுப் பார்த்து) என்ன உந்த தண்ணிக்க தெரியுது நானே. சீ... சீ... அப்படி இருக்காது. திரும்ப ஒருக்கா பாப்பம். (சற்று அதிசயித்து) ஓம் ஓம் நான்தான் நான்தான் உப்படி வடிவே நான். என்ன வடிவான முகம். நல்லாய் ஒளிவீசுற கண். ஒருக்காச் சிரிச்சுப் பாப்பம். (சிரித்தல்) மணியாய் இருக்குது. நல்ல வெள்ளைப் பல். சாய் இத்தனை நாளும் இதைக் கவனிக்காமல் விட்டிட்டன் (தலையை அங்கும் இங்கும் அசைத்து) என்ன சோக்கான மயிர் எங்கடை ஆக்களிலே ஆருக்கு இப்படி வடிவான மயிர் இருக்கு.

(இந்த நேரம் நரியார் வருதல்)

நரி : வணக்கம் சிங்கராசா. என்ன சிங்கராசா ஆரோடை கதைக்கிறியள் (அங்கும் இங்கும் பார்த்து) ஒருத்தரையும் பக்கத்திலே காணேல.

சிங்கம் : பக்கத்தில் ஆக்கள் இருந்தால்தான் கதைக்கிறதோ (குளத்தில தன் உருவத்தைக் காட்டி) இஞ்சை பார் இந்த தண்ணிக்கை தெரியிற என்ரை உருவத்தைப் பாத்து அப்பிடியே 'சொக்' அடிச்சுப் போச்சு.

நரி : தன்ரை அழகு தனக்குத் தெரியாது எண்டு சொல்லுவினம். உதைப் பத்தி எங்களுக்குச் சொல்லவும் பயம். சொன்னாலும் நம்புவியளோ. ஆருக்குத் தெரியும். சற்று நிதானித்து சிங்கத்தை உற்றுப்பார்த்து ராச களை அப்பிடியே முகத்திலே தெரியுது. உடம்பும் அப்படித்தான் இருக்கு. ராசா போல மிடுக்காகத்தான் இருக்கு.

பாடல் : ராசாண்ட ராசாதான் சிங்கராசாண்ட ராசாதான்
நாட்டு ராசா அங்கே – நாட்டிலே
காட்டு ராசா இங்கே – காட்டிலே்
களையான முகம் ராசா களையான முகம்
உரமான கால் நல்ல உரமான கால்
ராசாண்ட ராசா தான்

(நரி, சிங்கம் ஆடுதல்)

இந்த நேரம் கிழட்டுக் குரங்கு பொல் ஊன்றியபடி வருதல்.

குரங்கு : என்ன சிங்கராசாவே ரொம்ப உற்சாகத்தோட ஆடிக் கொண்டிருக்கிறியள். நரியாரும் உங்களோடை சேந்து ஆடுது....

சிங்கம் : ஒண்டுமில்லை. நித்திரை தூங்குதெண்டு உந்தக் குளத்திலை முகத்தைக் கழுவேக்கை....

குரங்கு : கழுவேக்கை.... ஏதும் பிரச்சினையே

சிங்கம் : ஏ.... கிழட்டுக் குரங்கே உமக்கு எப்பவும் பிரச்சினை எண்டுதான் வாயிலை வரும்.

நரி : தாத்தா குரங்காரே! சிங்கராசா குளத்திலே முகத்தைக் கழுவேக்கை, தன்ரை முகத்தை நல்லா உத்துத் தண்ணிக்கை பார்த்திருக்கிறார். அப்ப தான் அவருக்கு தன்ரை முகத்தின்ரை, உடம்பின்ரை ராச களை தெரிந்தது. அது தான் சந்தோஷத்தில ஆடுறார். நானும் அவரைப் பார்த்து ஆடுறன்.

குரங்கு : உமக்கும் ராச களை வந்திட்டுது போல.

சிங்கம் : ஏன் நரியாரை நக்கலடிக்கிறியள் அதை விடுங்கோ. நான் சொல்லுறதை கேளும் குரங்காரே. ஆள் பாதி ஆடை பாதி எண்டு ஒரு பழமொழி கேள்விப் பட்டிருக்கிறியளோ.

குரங்கு : ஓம் ஓம் அதுக்கென்ன இப்ப.

நரி : நானும் கேள்விப் பட்டிருக்கிறன் ராசாவே.

சிங்கம் : எனக்கு திடீரென ஒரு ஆசை வந்திருக்கு.

நரி, குரங்கு : சொல்லுங்கோ ராசாவே சொல்லுங்கோ.

சிங்கம் : இந்த ராச களையான முகத்திற்கும் தோற்றத்திற்கும் பொருத்தமான ராச உடை அலங்காரம் செய்யவேணும் எண்டு ஒரு ஆசை
(குரங்கு முகத்தை திருப்பி சுளித்தல்)

நரி : அடிசக்கை, நல்ல ஐடியா சிங்க ராசாவே நல்ல ஐடியா. ஆனால்.... உந்த உடுப்பு படுப்புகளை எப்படி எடுக்கிறது எண்டுதான் யோசனையா இருக்கு.

சிங்கம் : என்ன யோசனை நரியாரே. நீர்தானே வலு புத்திசாலி. தந்திரசாலி. அதோட நாட்டு நடப்பும் உமக்குத்தானே நல்லாத் தெரியும். முந்தி ஒருக்கா தோட்டத்தில திராட்சைப் பழமும் எட்டி எட்டிப் பிடுங்க பாத்தனீரல்லோ?

நரி : சாய், அந்தப் பழைய கதையை விடுங்கோ. இப்ப இந்தப் புதுக் கதையைப் பாப்பம்.

குரங்கு : (தடியில் நிலத்தைத் தட்டிக்கொண்டே) ஏலுற காரியத்தைத் தானே செய்யலாம்.

சிங்கம் : சீ கிழட்டுக் குரங்கே, வாயைப் பொத்து. நரிக்கு எல்லாம் ஏலும்.

நரி : ராசா இதை நான் எங்க எப்பிடி எடுக்கிறது?

சிங்கம் : என்ன நரியாரே இழுத்தடிக்கிறீர். என்ரை குணம் தெரியுந்தானே? எப்பிடியாவது ஒரு கிழமைக்கை ராச உடுப்பு அலங்கார ஆபரணம் எல்லாம் கொண்டுவந்து சேர்க்கவேணும். இல்லாட்டி.... துலஞ்சியள். (சிங்கம் குதித்து உதைப்பது போல் பாவனை காட்டி செல்லுதல்) குரங்கும் நரியும் கவலையுடன் செல்லுதல்.

## காட்சி - II

பத்திரங்கள் : குரங்கு, நரி, யானை, ஒட்டகச்சிவிங்கி

(நரி ஒப்பாரி வைத்தழுதல். குரங்கும் அதோடு சேர்ந்து அழுதல்)

நரி : ஐயோ ஐயோ ஐயோ
ஆரட்டைச் சொல்லி அழுவன் - இதை
ஆரட்டைச் சொல்லி அழுவன்.
ராச உடுப்பு வாங்கி எல்லோ வரச் சொன்னார் சிங்கராசா
இதுக்கு எங்க போவன் ஐயோ ஆரைக் கேப்பன்.

குரங்கு : கடவுளே என்ர கடவுளே. கையெடுத்துக் கும்பிடறம். எப்படி எண்டாலும் இதை ஒப்பேத்தித் தந்திட வேணும் ஐயா.

இந்த நேரம் யானையும் ஒட்டகச்சிவிங்கியும் வருதல்.

ஒ.சிவிங்கி : ஆரோ அழுகிற மாதிரிச் சத்தம் கேக்குது.

யானை : ஓம் ஓம் கேக்குது. ஒப்பாரி வைச்சு அழுகிற மாதிரிக் கிடக்குது. வாரும் சத்தம் வாற திசையை நோக்கிப் போவம்.

(யானையும் ஒட்டகச்சிவிங்கியும் நரி, குரங்கு இருக்கும் இடத்திற்கு வருதல்)

யானை : (நரியாரை உற்றுப் பார்த்து) என்ன நரியாரே ஒப்பாரி வைச்சு அழுகிற மாதிரிக் கிடக்கு.

ஒ.சிவிங்கி : உம்மை உந்தக் கோலத்தில் ஒரு நாளும் நான் காணேல.

குரங்கு : உதை ஏன் கேக்கிறியள். எங்க சிங்க ராசாவுக்கு ஒரு புதுவித ஆசை வந்திருக்கு. ராசா போடுற மாதிரி உடுப்புப் படுப்பெல்லாம் போட்டுப் பாக்க வேணுமாம்.

ஒ.சிவிங்கி : போச்சடா, போச்சு. அது சரி அவர் ராச உடுப்பு போட ஆசைப்பட்டால் அதுக்கு ஏன் நீங்க அழவேண்டும்.

நரி : ஐயோ என்னைத் தானே அந்த உடை அலங்காரங்களை எல்லாம் எங்கையெண்டாலும் போய் எடுத்துவரச் சொன்னார். ஐயோ இதுக்கு நான் எங்க போவன் (நரியார் அழுதல்)

யானை : கொஞ்சம் யோசிச்சு எதுக்கும் முயற்சி செய்யவேணும். முடியாது எண்டு சோம்பிக் கொண்டும், அழுது கொண்டும் இருக்கக்கூடாது. அதோட உப்பிடி அழுகிறவையை எனக்குப் பிடிக்கவும் மாட்டுது. குயிலைப் போல பாடிக் கொண்டும் மயிலைப் போல சந்தோஷமாய் ஆடிக் கொண்டும் இருக்கவேணும். அப்பதான் நிதானிச்சு யோசிக்சு எதையும் செய்யலாம்.

ஒ.சிவிங்கி : மயில் எண்டு யானையார் சொன்ன உடனே எனக்கு ஒரு நல்ல ஐடியா வந்திருக்கு.

எல்லா மிருகங்களும் : (குரங்கு, நரி, யானை) என்ன ஐடியா என்ன ஐடியா

ஒ.சிவிங்கி : எங்கட மயிலாரைத் தெரியுமல்லே. அவ அடிக்கடி நாடகங்களிலே நடிக்கிறவ. டான்ஸ் ஆடுறவ. அவவைப் போய்க் கேட்டா இதுக்கு ஏதாவது வழி சொன்னாலும் சொல்லுவா.

அழுத நரி ஓடிவந்து ஒட்டகச்சிவிங்கியின்ரை கையை குலுக்கி நல்ல யோசனை. இது நல்ல யோசனை. வாங்கோ இப்பவே நாங்கள் எல்லாரும் மயிலாரிட்டைப் போவம். (பாடிக்கொண்டு போதல்)

மயிலாரிட்டைப் போறம் நாங்கள்
மயிலாரிட்டைப் போறம்
ஒயிலாக ஆட்டம் ஆடும்
மயிலாரிட்டைப் போறம் நாம்
ராசா வேசம் போட ஆசைப்பட்ட சிங்கராசாவுக்கு
ராச உடுப்பெல்லாம் வாங்கிறதுக்கு உதவி கேட்டு - நாங்கள்
மயிலாரிட்டைப் போறம். மயிலாரிட்டைப் போறம்.

## காட்சி - III

பத்திரங்கள் : மயில், குயில், யானை, ஒட்டகச்சிவிங்கி, நரி, குரங்கு)

குயில் பாட்டுப் பாட மயில் நடனம் ஆடுதல்

தா தா தரிகிண தோம்
தந்தோம் தந்தோம்
வந்தனம் தந்தோம்
தா தா தரிகிண தோம்

(யானையின் தலைமையில் ஒட்டகச்சிவிங்கி, நரி, குரங்கு மயிலாரிடம் அடைதல்)

யானை : வணக்கம் வணக்கம் மயிலம்மா வணக்கம்.

மயில் : எல்லாருக்கும் வணக்கம் வணக்கம். (எல்லாரையும் பார்த்து) என்ன எல்லாரும் ஒண்டாய் வந்திருக்கிறியள்.

நரி : உங்க ஆட்டம் நல்லா இருந்திச்சு. சுப்பர்.

மயில் : அப்பிடியே. ரொம்பத் தாங்ஸ். நான் நாளைக்கு ஒரு நாடகத்தில நடிக்கப் போறன். ஒரு ராச சபையில டான்ஸ் ஆடுற மாதிரி ஒரு காட்சி. அது தான் ஆடிப் பாத்துக் கொண்டிருந்தனாங்கள் (குயிலையும் பார்த்தபடி கூறுதல்)

நரி : கும்பிடப் போன தெய்வம் குறுக்க வந்த மாதிரிக் கிடக்கு. எங்களுக்கு ஒரு உதவி செய்வியளோ.

மயில் : என்னால முடிஞ்சா கட்டாயம் செய்வன்.

நரி : எங்கட சிங்கராசாவுக்கு ராச உடுப்புப் போட்டுப் பாக்க ஆசை வந்திருக்கு.

குரங்கு : எங்கையெண்டாலும் அந்த உடுப்பை வாங்கிவரச் சொல்லி இருக்கிறார்.

நரி : உங்களுக்குத்தானே கன பேரோட சிநேகிதம். நாடகத்தில நடிக்கிறதாலே. அதுதான்....

குரங்கு : உங்களுக்கு தெரிஞ்ச ஆரட்டையும் உந்த உடுப்பை இரவல் வாங்கி தருவியளோ எண்டு கேக்க வந்தனாங்கள்.

மயில் : (சற்று யோசித்து) கொஞ்சம் கஷ்டம்தான். எண்டாலும் உதவி கேக்கிறவைக்கு இயண்டதைச் செய்யத்தான் வேணும். எதுக்கும் நான் அந்த நாடகத்தில ராசா வேடம் போடுறவரைக் கேட்டுச் சொல்லுறன்.

மயில் : *Phone* ல கதைத்தல். ஹலோ ஹலோ (பாவனை கதைத்தல் போல்)

பின்பு மிருகங்களைப் பார்த்து *No Problem* (நோ புறபிளம்) நான் எப்படியும் அந்த உடுப்பை இரவல் வாங்கி தருவன். பயப்படாமல் போட்டு வாங்கோ.

நன்றி நன்றி மிக்க நன்றி மயிலாரே

பாய் பாய்.

(பாடிக் கொண்டு போதல்)

நன்றி நன்றி கடவுளே நன்றி
நன்றி நன்றி மயிலாரே நன்றி

நரி : பத்து தேங்காய் கடவுளுக்கு உடைப்பன்.
பத்தென்ன இருபதும் உடைப்பன்
நன்றி நன்றி கடவுளே நன்றி.

## காட்சி - *IV*

பத்திரங்கள் : சிங்கம், நரி, குரங்கு

சிங்கம் கோபத்துடன் அங்கும் இங்கும் உலாவித் திரிதல்.
கோபத்தோட குதித்து குதித்து ஆடல்.

சொன்ன தவணை முடிஞ்சு போச்சு
இண்டையோட முடிஞ்சு போச்சு
ராச உடுப்பு கொண்டு வா எண்டு
சொன்ன தவணை முடிஞ்சு போச்சு.

நரி ஆக்களை இன்னும் காணலை - அந்த
குள்ள நரி ஆக்களை இன்னும் காணலை.

என்ரை குணம் தெரியாதோ அவையளுக்கு
என்ரை குணம் தெரியாதோ.

(அப்போது நரியும் குரங்கும் வேர்க்க விறுவிறுக்க வருதல். சிங்கத்தைப் பார்த்து வணக்கம் அரசே வணக்கம் என மண்டி இடுதல்)
சிங்கம் அவர்களை இறுமாப்புடன் பார்த்துக் கொண்டிருத்தல்.

நரி : கொண்டு வந்தோம் கொண்டு வந்தோம். உங்கள் விருப்பம் போல அரசரே எல்லாம் நாம் கொண்டு வந்தோம்

(எல்லா ஆடை அணிகளையும் அணிவித்தல்)
மேல் சட்டை இதோ போட்டிடுவீர் - அரசே
இதோ போட்டிடுவீர்
தலை முடி இதோ பாத செருப்பும் இதோ
கணக்காய் இருக்கு நல்ல கணக்காய் இருக்கு
உடை வாளையும் இடுப்பில் செருகிடுவீர்
உடுப்பெல்லாம் போட்டு ராசா ஆடுதல்.

சிங்கம் பாடி ஆடுதல்.
சந்தோஷம் சந்தோஷம் மெத்தச் சந்தோஷம்
சொன்ன சொல்லைக் கேட்டு நடந்தீர்
சந்தோஷம் சந்தோஷம் மெத்தச் சந்தோஷம்
கடமைக்காய் செய்யாது கரிசனையாய்
கச்சிதமாய் ஆடை அணிகள் - ராச ஆடை அணிகள்
கொண்டு வந்தீர்
சந்தோஷம் சந்தோஷம் மெத்தச் சந்தோஷம்
என் மனம் குளிர நடந்த உங்களுக்கு
சன்மானம் ஒன்று தருவேன் நான் தருவேன்
அதுக்கு முன்
இன்னொன்றும் செய்திடுவீர் நீவிர்
இன்னொன்றும் செய்திடுவீர்.

குரங்கு, நரி : சொல்லிடுவீர் சொல்லிடுவீர் செய்திடுவோம் செய்திடுவோம்.

சிங்கம் : காட்டு ராசா நான் ஊர்வலம் வரவேண்டும். என்னை காட்டில் உள்ள எல்லா பிராணிகளும் பார்த்து மரியாதை செய்யவேண்டும். ஈ எறும்பு தப்பாது வந்திட வேண்டும். வந்திட வேண்டும்.

(சிங்கம் செல்லுதல்)

பறையடித்து நரியார் கூறுதல். (டும்.... டும்.... டும்) எங்கள் சிங்கராசா நாளை ராச உடையுடன் ஊர்வலம் வாறார். எல்லோரும் தவறாது வந்திடுங்கள். அவரை மரியாதை செய்திடுங்கள்.

பிராணிகள் புறுபுறுத்தல்.

பிராணி $I$ : ராச உடுப்பு வேணும் எண்டார். எவளவு கஷ்டப்பட்டு எடுத்துக் குடுத்திருக்கினம் குரங்குத் தாத்தாவும் நரியாரும்.

பிராணி $II$ : இப்ப என்னெண்டால் ஊர்வலம் வரப் போறாராம் ஊர்வலம். எல்லாரும் வந்து அவரை மரியாதை செய்ய வேணுமாம்.

பிராணி $III$ : வரவர இவருக்கு நல்ல தலைக்கனம் ஏறிப்போச்சு.

பிராணி $IV$ : வரவரக் கெப்பர் மெத்திப் போச்சு.

பிராணி $V$ : கெதியா கவுண்டு விழப் போறார்.

(காட்டு மிருகங்கள் இவ்வாறு புறுபுறுப்பதைப் பார்த்த குரங்கார்) சரி சரி கதையை விட்டிட்டுக் காரியத்தில் இறங்கவேணும். சிங்கத்தார் காதில இதுகள் விழுந்தால்.... அவ்வளவுதான். எல்லாரும் துலைஞ்சம். ராச உடுப்போட ஊர்வலம் வரப்போற சிங்கராசாவை மரியாதை செய்ய எல்லாரும் புறப்படுவம் வாங்கோ.

## காட்சி - $V$

பின்னணிப் பாடல் :

யானையார் துந்துபி முழங்க நரியார் ஆலவட்டம் பிடிக்க
சிங்க ராசா ஊர்வலம் வாறார் ஊர்வலம் வாறார்.
குயிலார் பாட்டுப்பாட குரங்கார் தாளம் போட மயிலார் நடனம் ஆட
எங்க ராசா சிங்க ராசா ஊர்வலம் வாறார்.
எல்லாரும் வாருங்கோ எல்லாரும் வாருங்கோ
எங்க ராசாவை பார்த்து மரியாதை செய்யவே
எல்லாரும் வாருங்கோ எல்லாரும் வாருங்கோ.
குடு குடு எனவே குரங்குத் தாத்தா முன்னுக்குப் போறார்
ஒட்டகச்சிவிங்கியும் அவரை தொடர்ந்து நிமிந்து பாத்துவாறார்
பாரும் முயல் தம்பியார் பாஞ்சு பாஞ்சு போறார்
ஊரும் கொள்ளி எறும்பும் ஊர்வலம் காண
தள்ளி வருகுது கொஞ்சம் தள்ளி வருகுது.

முயல் : என்ன கொள்ளி எறும்பார் எம்மோட லயினிலே வராமே கொஞ்சம் தள்ளி வாரீர்.

கொ.எறும்பு : உங்களோட சேந்து வரச் சரிப்படாது. பக்கத்தில வந்தால் உங்கட காலுக்கை மிதிபட்டுச் செத்துப் போடுவன்.

முயல் : அதுவும் சரிதான். ஏதோ கொஞ்சம் புத்தியாய் நடவும்.

ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறது.

பொல்லுப் பிடிச்சு வாற குரங்குத் தாத்தாவை சிங்கராசா பார்க்கிறார்.

சிங்கம் : என்ன குரங்கே எவ்வளவு துணிவு உமக்கு. செங்கோல் பிடிச்சுக் கொண்டு வாறீர். செங்கோல் ராசாவான எனக்குத்தான் உரிமை. உமக்கு எவ்வளவு துணிவு. இப்படிச் சொல்லிக்கொண்டே குரங்கின் பொல்லைப் பறித்து எறிதல்.

குரங்கு : ஐயோ சிங்கராசா இது செங்கோல் இல்லை. ஊன்றுகோல். இது இல்லாட்டி நான் நடக்க சரியா கஷ்டப்படுவன். தடக்கி விழுந்திடுவன்.

சிங்கம் : மூச்சுக் காட்டாதே. ஓடு அங்காலே.

(குரங்கு நொண்டி நொண்டி செல்லுதல்)

அடுத்து ஒட்டகச்சிவிங்கி வருதல். அதை சிங்கம் நன்றாய் உற்றுப் பார்த்தல்.

சிங்கம் : என்ன தலைக்கனம் உமக்கு. தலை நிமிர்ந்து உசாராய் நடக்கிறீர். ராசாவுக்கு முன்னாலே தலை குனிஞ்சு பணிஞ்சு நடக்கத் தெரியாதோ.

(அதன் தலையில் தன் செங்கோலால் தட்டுதல்)

ஒ.சிவிங்கி : ஐயோ ராசா அடிக்காதையுங்கோ. எனக்கு உப்பிடித்தான் நீண்ட கழுத்து.

சிங்கம் : வாய் பொத்து. வேறு கதை கதைக்கப்படாது. குனிஞ்சு பணிஞ்சு நடந்து கெதியா போ....

(ஒட்டகச்சிவிங்கி குனிய மாட்டாது குனிஞ்சு போதல்)

அடுத்து முயல் குட்டிகள் இரண்டு சல்யூட் அடித்து அடித்து வணக்கம் ராசா வணக்கம் என்று கூறியபடியே துள்ளித்துள்ளிச் செல்லுதல்.

சிங்கம் : அச்சாப் பிள்ளையள். உங்களுக்கு இருக்கிற பணிவு, புத்தி இந்த பெரிசுகளுக்கு இல்லை. மோடுகள் மோடுகள் முட்டாள்கள் முட்டாள்கள்.

(சிங்க ராசா அங்கும் இங்கும் உலாவி கர்ஜித்துத் திரிதல். தூரத்தில் இருக்கிற கொள்ளி எறும்பைக் காணுதல்)

சிங்கம் : ஏய் கொள்ளி எறும்பே. ஏன் உப்பிடி ஒதுங்கி தள்ளி நிற்கிறீர்.

கொ.எறும்பு : உங்கட ஊர்வலம் பார்த்து மரியாதை செய்யத்தான் வந்தனான் ராசா. நான் சின்ன பிராணி. கிட்ட வந்தால் மிதிபட்டுச் செத்துப்போவன். அதோட உங்க பக்கத்தில தண்ணி நிறைஞ்ச பள்ளமும் ஒண்டு இருக்குது. அதை என்னால தாண்டவும் ஏலாது. அதுதான் என்ன செய்யிறது எண்டு தெரியாம இப்படி நிற்கிறன்.

சிங்கம் : அது சரி என்னைப் பணிஞ்சு ஏன் மரியாதை செய்யேலை.

கொ.எறும்பு : நான் தலைகுனிஞ்சு கும்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறன். தூரத்தில நிற்கிறதாலே உங்களுக்குத் தெரியேல.

சிங்கம் : (யானையைப் பார்த்து) எறும்பு சொல்லுறது சரியோ.

யானை : (எட்டிப் பார்த்து) சரி சரி மெத்தச் சரி.

ஒ.சிவிங்கி : (கழுத்தை நீட்டி) 100 க்கு 100 உண்மை

சிங்கம் : கெட் அவுட். நீர் எனக்குச் சாட்சி சொல்லுறீரோ.

நரி : எட்டிப் பார்த்து சிங்கராசாவே, எறும்பு உங்களுக்குச் சரியா மரியாதை செய்யேல. ஏதோ நளினம் பண்ணி ஆடுற மாதிரிக் கிடக்கு.

சிங்கம் : அப்படியே சங்கதி எனக் கூறி எட்டிப் பார்த்தல்.

கொ.எறும்பு : (பாடி ஆடுதல்)

சின்ன மனிசன் சின்ன மனிசன் சின்ன மனிசன் நான் அல்லோ
கடுகு போல சின்னஞ் சிறிசாய் இருந்த போதிலும்
கடிச்சனெண்டால் துடிச்சு துடிச்சு பதறிப் போவினம்
கடிச்சனெண்டால் துடிச்சு துடிச்சுப் பதறிப் போவினம்
லால லால லால லால லால லாலா

சிங்கம் : (கோபத்துடன்) அடப் பொடிப்பயலே எத்தனை துணிச்சல் உமக்கு பாடி ஆடுவீரோ எனக் கூறி துள்ளி நடத்தல்.

குரங்கு : ராசா பாத்து நடவுங்கோ. பக்கத்தில ஒரு பள்ளம் இருக்கு.

சிங்கம் : சும்மா நச்சு பல்லி போல கதையாதே. (எறும்பு நிற்கும் இடம் நோக்கி சிங்கம் வேகமாக நடத்தல். சற்று தடக்குப் படுதல். பின்பு சமாளித்து எழும்புதல்)

அட பொடிப்பயலே உன்னை என்ன செய்யிறன் பார் எனக் கூறிக்கொண்டே குதித்தோடுதல். தன்னை மறந்து பக்கத்தில் இருந்த பள்ளத்தில் கால் வைத்து சறுக்கி விழுதல்.

சிங்கம் : ஐயோ என்னைக் காப்பாத்துங்கோ காப்பாத்துங்கோ எனக் கத்துதல். கையைக் காலை உதறுதல். செங்கோல் ஒரு பக்கமாயும் செருப்பு இன்னொரு பக்கமாயும் சிதறிக் கிடத்தல்.

குரங்கு : சிங்க ராசாவைப் பாக்கப் பாவமாய்க் கிடக்கு. ஆபத்து நேரத்தில கோபம் பாக்கக்கூடாது. வாங்கோ வாங்கோ எல்லாரும் வாங்கோ. சிங்கராசாவை தூக்கி எடுப்பம்.

எல்லோரும் ஓடி வந்து தூக்குதல்.

பாட்டு :

ராச வேசம் போட்டு ஊர்வலம் போன – எங்க
ராசா வழுக்கி விழுந்து போனாரே
ராசா வழுக்கி விழுந்து போனாரே
ஐயோ ஐயோ எண்டு கத்தி கத்தி குழறி அழுகிறார்
ஐயோ ஐயோ எண்டு கத்தி கத்தி குழறி அழுகிறார்
கோபம் காட்டாது பாவம் பார்த்து அவரைத்
தூக்கி விட்டிடுவோம் தூக்கி விட்டிடுவோம்
ம்ம்ம் எடுத்தாச்சு ராசாவை தூக்கி எடுத்தாச்சு.

சிங்கம் : (தட்டு தடுமாறி நடத்தல்) ஐயோ காலை கீழ விடமுடியேல. கால் முறிஞ்சு போச்சு போல.

குரங்கு : கொஞ்சம் நோ. எண்ணை தடவி, எதுக்கும் இந்தப் பொல்லைப் பிடிச்சு நடவுங்கோ.

ஒ.சிவிங்கி : நோ எண்ணெய் தடவுதல்.

சிங்கம் : எல்லாரும் என்னை மன்னிச்சுப் போடுங்கோ. ராசா எண்ட செருக்கோட உங்களுக்கு எவளவு கஷ்டம் தந்தனான். நான் விழுந்தோடனை பகிடி

பண்ணாமல் ஓடிவந்து என்னைக் காப்பாத்தினிங்கள். இவளவு நாளும் தலைக்கனம் பிடிச்சு அலைஞ்சனான். இப்பதான் புத்தி வந்துது.

மிருகங்கள் : புத்தி வந்தது புத்தி வந்தது எங்கட சிங்கராசாவுக்கு
நல்ல புத்தி வந்தது புத்தி வந்தது புத்தி வந்ததுவே.

சிங்கம் : தலைக்கனம் போச்சு தலைக்கனம் போச்சு தலைக்கனம் போச்சுதே. எல்லாரும் எங்கட சகோதரர் எங்கட சகோதரர் எண்ட எண்ணம் வந்ததுவே எண்ணம் வந்ததுவே.

எல்லோரும்: புத்தி வந்தது புத்தி வந்தது புத்தி வந்ததுவே
நல்ல புத்தி வந்தது புத்தி வந்தது புத்தி வந்ததுவே.

# கரவெட்டி மண்ணே
# எங்கள் கரவெட்டி மண்ணே

**வேல் நந்தகுமார்**
தகுநய மொழியருவி

கரவெட்டி மண்ணே எங்கள் கரவெட்டி மண்ணே
வயல் குளம் நிறை வளம்மிக்க மண்ணே
இயல் இசை நாடகத்தால் சிறக்கும் மண்ணே
அயலவரையும் பேணி வாழும் மண்ணே
அகிலத்தில் சைவத் தமிழ் காக்கும் மண்ணே.

(கரவெட்டி மண்ணே....)

வரகவி கிருஸ்ணாழ்வார் வாழ்ந்த மண்ணே
உரமிகு பண்டிதர் வீகவால் உயர்ந்த மண்ணே
சிவசிதம்பரத்தினால் சிவந்த மண்ணே
சிவத்தம்பி வாழ்ந்து சிறந்த மண்ணே
சிரித்திரன் சுந்தரால், மன்னவன் கந்தப்புவால்
நகைச்சுவை உணர்வுமிகு நல்மண்ணே.

(கரவெட்டி மண்ணே....)

கரவைவேலன் கோவைமுதல்
உரமாய் தமிழ், சைவம் வளர்க்கும் மண்ணே
கரவை கிழாரின் கவிதைகளால்
பிள்ளைக்கவியின் பெருமைகளால்
கணபதிப்பிள்ளையின் கவித்துவத்தால்
பெருமையுறும் எங்கள் மண்ணே.

(கரவெட்டி மண்ணே....)

கல்விச்சாலைகளும் சாதனைகளும் நிறைந்த மண்ணே
கலையின் பரம்பரையால் சிறக்கும் மண்ணே
பக்திநிறை ஆலயங்களும் புராணபடன வித்தகரும்
முத்திபெற எமக்கு வழிகாட்டும் மண்ணே
உழைக்கும் மனிதர்களால் உயரும் மண்ணே
உலகத் திசையெங்கும் சிறக்கும் மண்ணே
எத்தனை மாற்றங்கள் தான்வரினும்
எழில்மிகு கிராமமாய் உயிர்க்கும் மண்ணே.

(கரவெட்டி மண்ணே....)

# திரு. சுப்பிரமணியம் சண்முகசுந்தரம்



நெல்லியடியில் பிரபலியமான தொழில் அதிபராகவும், சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்குபவர் திரு. சுப்பிரமணியம் சண்முகசுந்தரமாவர்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்து வகுத்தலும் ஈதலும்" மானுடராய் பிறந்தார் கடன் என்று கூறலாம். இவ்வகையில் சமூக நலனுக்காக மனங்கோணாது உதவும் வள்ளல் தன்மை உடையவர் இவராவர்.

எமது பிரதேச செயலக காணிக் கொள்வனவுக்கான நிதி வழங்குவதிலும் பெரும் பங்காற்றியவராவர். வதிரி பரமானந்த சிறுவர் முதியோர் இல்ல வளர்ச்சியில் தாராளமாக பங்கெடுத்துக்கொண்டவர். நாளைய உலகம் நலமாக இயங்கவைப்பது வைத்தியசாலைகள். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தியிலும் தாதியர் தினம், உலக காசநோய் தினம் போன்றவற்றை கொண்டாடி மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் பங்கு கொண்டவர்.

வடமராட்சிக் கல்வி வலயத்தின் ஆளுகைக்கு உட்பட்ட வறிய பிள்ளைகளின் கல்வி நலனோம்பல், விளையாட்டுத் துறையுடன் தொடர்பான வர்ண இரவு நிகழ்வுகளை நடாத்துதல் என பல துறைகளிலும் உதவி செய்துள்ளார்.

தனிமனிதனின் ஆரோக்கியம் மேம்பட சிலரின் அறுவைச் சிகிச்சைகளுக்கும் நிதி உதவியளித்தவர். தென்னிலங்கையில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனருத்தாரண செயற்பாடுகளுக்கும் உதவியவர். சமூக மேம்பாட்டிற்கென இவரிடம் நிதி உதவி பெறும் சிறப்பைவிட மனிதனின் இறுதி இருப்பிடமாகிய சுடுகாட்டினை பராமரிப்பதில் ஆர்வம் காட்டிய முதல் மனிதராக இவரைக் கூறலாம்.

இதுபோன்ற பல்வேறு சமூகப் பணிகள் ஆற்றிய திரு. சு. சண்முகசுந்தரம் அவர்களை கௌரவிக்கும் முகமாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை அவருக்கு 'சமூகச்சுடர்' என்ற விருதை வழங்கி கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

# திரு. வல்லிபுரம் ஆறுமுகம் தங்கமயில்



கரவையூர் சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், தமிழ் பண்டிதர், திவ்வியாதங்கன் வ.ஆ. தங்கமயில் அவர்கள் சிறந்த சமய சொற்பொழிவாளர். மரபுக் கவிதை புனைவதில் வல்லவர். அதிலும் சித்திரக் கவிதை புனைவதும், சிங்கள, ஆங்கிலக் கவிதை புனைவதும் இவரது சிறப்பம்சமாகும்.

பல போட்டிகளுக்கு நடுவராகவும் பேச்சாளராகவும், கவியரங்க பங்குபற்றுநராகவும் திகழ்ந்து வரும் இவர் 'கண்ணன் கவசம்', நல்லைக் கந்தன் மீது 'நலநய கந்தர் அனுபூதி', 'நல்லூரான் திவ்விய பாமாலை' என்பவற்றைப் பாடி வெளியிட்டும் உள்ளார்.

மேலும் சின்னக் கதிர்காம முருகன் மீது முருக புராணம், கரணவாய் மூத்த விநாயகர் மீது அந்தாதி, முழங்காவில் முருகனுக்குப் புராணம், கருணாகரப் பிள்ளையாருக்கு அந்தாதி, நயினாதீவு நாகபூசணி அம்மனுக்கு அந்தாதி, வல்லிபுர மாயவனுக்கு அனுபூதி என்பவற்றுடன் பல ஆலயங்களிற்கு ஊஞ்சற் பாட்டுகளையும் எழுதியுள்ளார். இவரது சில ஆக்கங்கள் பத்திரிகையிலும் பல நூற்றாண்டு மலர்களிலும் பிரசுரமாகியுள்ளன.

இவரது கலைத்துறை சேவையினைப் பாராட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக கலாசார பேரவை 'கலைஞான வாரிதி' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

# திரு. கந்தன் பாலன்



இமையாணன் கிழக்கு வீமன்புலத்தைச் சார்ந்த கந்தன் பாலன் பல்துறை சார்ந்த இலக்கிய விற்பன்னராவர். கவிதை, சிறுகதை, நாடக எழுத்தாக்கம், பாடலாக்கம், நாட்டார் இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டவர். பிரதேச மட்டத்திலான திறந்த போட்டிகளிலும் கட்டுரையாக்கம், கவிதையாக்கம், நாடக ஆக்கம் போன்ற வற்றிலும் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றவர்.

கலைத்துறையில் இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி இமையாணன் கலை இலக்கிய மன்றம் இவருக்கு, "இமையூர் கலை வல்லோன்" என்ற கௌரவ விருதினை வழங்கி கௌரவித்தது. கலாசார அலுவல்கள் திணைக்களம் இவருக்கு 'கலாபூஷணம்', 'சர்வோதயம்', 'கலைமாமணி' போன்ற விருதுகளை வழங்கி கௌரவித்தது. இவற்றைவிட பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் முதலமைச்சர் விருதினையும் வழங்கி கௌரவித்தது.

இவரது கலைத்துறை சேவையினைப் பாராட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக கலாசார பேரவை 'கலைஞான வாரிதி' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

# திரு. கைலாயபிள்ளை தர்மகுலசிங்கம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் அல்வையூரை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை தர்மகுலசிங்கம் ஒரு சிறந்த நாடகக் கலைஞர். சமூக, வரலாற்று நாடகங்களில் நடித்ததோடு, சில நாடகங்களுக்கு கதை வசனம் எழுதி இயக்கியும் உள்ளார்.

யாழ் பல்கலைக்கழக ஊழியர் தின விழாவில் குழந்தை சண்முகலிங்கத்தின் 'உறவுகள் நரகொடு சொர்க்கம்' என்ற நாடகத்திலும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலக தமிழாராய்ச்சி மகா நாட்டின் கலை நிகழ்வில் 'அலாவுதீன்' என்ற நாடகத்திலும் நடித்து பலரின் பாராட்டைப் பெற்றவர்.

இவரது கலைத்துறையின் சேவைகளை நயந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் 'கலாபூசணம்'; 'சர்வோதயம்'; 'கலைமாமணி' போன்ற விருதுகளை வழங்கிக் கௌரவித்துள்ளது. கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையம், 'கலைத்தென்றல்' என்ற விருதையும், புதுக்குடியிருப்பு மந்துவில் கவிதாலய நாடகமன்றம் 'கலைமணி' விருதையும் வழங்கி கௌரவித்தன.

இவரது கலைப்பணியை பாராட்டும் வகையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை 'கலைஞான வாரிதி' என்ற கௌரவப் பட்டத்தை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றது.

# திருமதி புனிதவதி சண்முகலிங்கன்



கரணவாய் தெற்கினைச் சேர்ந்த திருமதி புனிதவதி சண்முகலிங்கன் சிறுவயது முதல் புராண இதிகாச கதைகளில் ஈடுபாடு கொண்டிருந்தவர். பட்டப்படிப்பு முடித்து ஆசிரியப் பணியை மேற்கொண்டதன்மூலம் பள்ளிக்கூட மாணவ சமூகத்தினரையும் தன் வழிப்படுத்த முயன்று வெற்றி கண்டவர். பல நாட்டிய நாடகங்களுக்கான பாடல்களை எழுதி கல்லூரியின் கலைத்துறையை நன்கு வளப்படுத்தியவர். இவர் எழுதிய நாட்டிய நாடகங்களும், நாடகங்களும் தொகுக்கப்பட்டு நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

ஓய்வுபெற்ற வேளையிலும் அவர் தனது கலைத்துறை சேவையைக் கைவிடவில்லை. அறநெறிப் பாடசாலைகளில் இந்துசமய அறநெறிச் சிந்தனைகளை வளப்பதில் தனது ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றார்.

இவரது கலைத்துறை சேவையைப் பாராட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக கலாசார பேரவை, 'கலைஞான வாரிதி' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கி கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

# திருமதி சிவமணி விவேகானந்தன்



அல்வையூரில் பிறந்து வளர்ந்த இவர் சிறு வயது முதல் கலைத்துறையில் ஆர்வம் காட்டியிருந்தார். இவர் கணவர் நடிகநாதமணி எஸ். விவேகானந்தன், கவிஞர் நாடக மன்றத்தினூடாக பல மரபுவழி இசை நாடகங்களையும் சமூக, புராண நாடகங்களையும் மேடை ஏற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வானொலி கிராமங்கள் தோறும் ஒலிப்பதிவு செய்யும் நிகழ்வில் பாய் உற்பத்திப் பாடலை செல்வி உமா தணிகாசலத்தோடும், தாய் மகள் பாடலை திருமதி சந்திரா சிவதாசனோடும் பாடியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இலங்கை வானொலி கூட்டுத்தாபனத்தால் ஒலிப்பதிவு செய்யப்பட்ட காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் ஆரியப் பூமாலையாகவும் நடித்துள்ளார். சிறுவர்களுக்கு இன்னும் வில்லிசை, நாடகம் போன்ற துறைகளில் பயிற்றுவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவரது கலைத்துறை சேவையைப் பாராட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை 'கலைஞான வாரிதி' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கி கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

*With Best Compliments from....*

# திருவுடையாள் 07 மலர் வெளியீடு

**பிரதேச கலாசாரப் பேரவை, வடமராட்சி தெற்கு மேற்கு**
**பிரதேச செயலகம், கரவெட்டி அமைப்பாளர்களால்**
**திருவுடையாள் மலர் வெளியிடப்படவுள்ளது.**
**திருவுடையாள் மென்மேலும் வளர**
**வாழ்த்துகின்றோம்.**

**நெல்லியடி சனசமூக நிலையம், நெல்லியடி.**

# செல்லத்துரை பல்பொருள் வாணிபம்

**"திருவுடையாள்" மலர் சிறப்புற**
**மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.**

**நாவலடி, உடுப்பிட்டி.**
**0772236055**

**உரிமையாளர்**




இருப்பவர்கள் (இ.வ.) : இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்)
நிற்பவர்கள் (இ.வ.) : க. இந்திரகுமார் (காவலாளி), ந. சுதர்சன் (சாரதி), சி. சிவசுதன் (அலுவலக பணியாளர்), க. கிசோக்காந் (அலுவலக பணியாளர்), த. முதுகல (சாரதி), க. அனுஷியா (அபி. உத்தி), ச. கஜானா (பொ.மு.உ), சி. ஜெயசுதாஹினி (பொ.மு.உ), ஜீ. சுகன்யா (பொ.மு.உ), க. சசிகலா (பொ.மு.உ), பி. சுதாகினி (பொ.மு.உ), சி. சுபாசினி (பொ.மு.உ), த. புவனேஸ்வரி (பொ.மு.உ), பா. விஜயரூபி (பொ.மு.உ)

## திட்டமிடல் கிளை



இருப்பவர்கள் (இ.வ.) : வே.கா. குருநாதன் (பிரதம பொது முகாமைத்துவ உதவியாளர்), இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்), மை. இராஜகுமார் (அபிவிருத்தி இணைப்பாளர்)

நிற்பவர்கள் (இ.வ.)

1ஆவது நிரை : ச. வதனா (அ.உ), ஸ். தர்சினி (அ.உ), ச. டில்லிராணி (மனிதவள அ.உ), சி. வனஜா (அ.உ), இ. வாசுகி (அ.உ), த. ஜனாதனா (அ.உ.), ஞா. பகபதி (அ.உ), யோ. ரதிதேவி (பொ.மு.உ), அ. மயூரி (அ.உ), சு. குமுதா (அ.உ), பி. மேனகா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பயிலுனர்)

2ஆவது நிரை : த. கேசவன் (அ.உ), ந. பாலகுமார் (தொ.உ), க. அமுதன் (அ.உ), ச. ஸ்ரீஸ்கந்தராசா (அ.உ), த. குகராசா (அலுவலகப் பணியாளர்)

# கணக்குக் கிளை



**இருப்பவர்கள் (இ.வ.) :** இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்), T. கலைச்செல்வன் (நிதி உதவியாளர்)

**நிற்பவர்கள் (இ.வ.) :** செ. நிரஞ்சனா, பா. அனிதா, பி. ஜீவா, அ. சிரோமி, ம. நவநீதா, சி. தர்மிளா, க. சங்கீதா, பா. துஷியா, ஜெ. சுமதி, த. பிரசன்னா, க. நிக்ஷன், ந. மயூரரூபன், கி. கவிதரன், த. பிரபாகரன்.

# கிராம அலுவலகர்கள் கிளை



**இருப்பவர்கள் (இ.வ.) :** க. ஜீவகுமார் (பொ.மு.உ), இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்), கி. ரவிக்குமார் (நிர்வாக கிராம அலுவலர்), வி. தவதர்சினி (அ.உ)

**நிற்பவர்கள் (இ.வ.)**

**1ஆவது நிரை :** சி. வித்தியாபதி, கி. கிருஷ்ணமேனன், யோ. சுஜீந்திரன், ச. பாலசிங்கம், வ. தயானந்தா, மா. சிவநேசன், கு. சந்திரமோகன், நா. சிவதர்சன், த. சுதர்சன், சி. சிவசங்கர், இ. கிரிசாந்தன், ச. அருண்காந்தி, யோ. சசீகாந்தன், பா. லலித், கு. குகதாசன்

**2ஆவது நிரை :** பா. வைகுந்தன், ச. ஜனகன், சி. பாரதிராஜ், க. பிரேந்திரா, கு. சசிகுமார், எ.ஜ. கஜிதா, கு. மனோரூபினி, ல. தனுஜா, செ. பிரமிளா, வி. பிரேமிலா, சோ. ரமேஷ், து. சுதாகரன், ப. நிஷாந்தன்

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் (இ.வ.) : ர. வில்சன்ஜெறின் (சமுர்த்தி முகாமையாளர்), த. அஜிதா (சமுர்த்தி முகாமையாளர்), இ. ரஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்), ச. பேமராஜ் (சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர்), பா. நிர்மலன் (சமுர்த்தி முகாமையாளர்), பொ. சுரேஸ்குமார் (சமுர்த்தி முகாமையாளர்)

நிற்பவர்கள் (இ.வ.) :

1ஆவது நிரை : க. சிவரஞ்சினி, ந. கிருஷ்ணதேவி, பா. வானதி, செ. மனோரஞ்சிதம், சி. ஈஸ்வரி, க. வளர்மதி, ஆ. சாந்தகுமாரி, பி. சரிதா, ந. வாசுகி, ஜோ. சிவஜேலா, சி. நிமாலினி, வி. ரஜிதா, சு. வனிதாதேவி, க. மஞ்சுளா, பு. சிவதர்சினி, தே. சுகந்தினி, சி. சிவமனோகரி, சி. சுமதி, ஜெ. பிரபாநிதி, ச. விஜி

2ஆவது நிரை : ப. தயாளகாந்தன், வெ. கமலதாஸ், த. பிரபு, க. பிரபாகரன், மா. அறிவழகன், சி. இரட்னவடிவேல், ச. சிவரூபன், க. சிறீதரன், க. சதீஸ், சி. சிவகணேசமூர்த்தி, கே. வளர்மதி, ஜெ. கல்யாணி, ம. சதீஸ்கரன், சி. நிதர்சன், க. குபேந்திரன், த. சுஜீவன், ப. ஜெயசீலன், ப. விஜிதன், செ. புனிதராஜ், க. தினேஸ், செ. தேவநீதன், தி. விக்கினேஸ்வரன், அ. உதயகுமார், ந. அண்ணாத்துரை, சு. கிருஷ்ணலிங்கம்

# பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள் (இ.வ.) :** இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்)

**நிற்பவர்கள் (இ.வ.) :**

**1ஆவது நிரை :** கை. தீபா, வே. பகீர்வதனா, ச. பத்மரஞ்சினி, க. இந்துமதி, சி. வானதி, பா. பவானி, பா. துஷ்யந்தினி, இ. யசோதா, கோ. வாணி, யோ. சகிலா, வி. நீரஜா, த. சுரேகா, ச. கல்பனா, பா. பிருந்தா, க. கிருஷ்ணானந்தி, ந. லோகாயத்திரி, உ. ஜெயகிரிஜா

**2ஆவது நிரை :** கு. சிவபாதசுந்தரம், க. பிரேமதாஸன், அ. ஞானாகரன், த. தவகர்ணன், த. அகிலேந்திரன், அ. செந்தூரன், அ. சதீஸ், ப. இளங்கீரன், கு. லோகேஸ்வரன், பே. ஜெயநந்தினி, அ. குமுதினி, ம. புஸ்பலோஜினி, பி. தயாநிதி, இ. பிரபாளினி

# மேலதிக மாவட்ட பதிவாளர் கிளை



**இருப்பவர்கள் (இ.வ.) :** ஐ. சிவானதி (மேலதிக மாவட்ட பதிவாளர்), இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), எஸ். சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), எஸ். ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்)

**நிற்பவர்கள் (இ.வ.) :** வ. பாலச்சந்திரன் (அலுவலகப் பணியாளர்), கி. கோமலதா (பொ.மு.உ), கி. அமிர்தகுமாரி (பொ.மு.உ), அ. தாரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ச. உதயமதி (பொ.மு.உ)

## தேசிய அடையாள அட்டை, உற்பத்தித் திறன், வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கிளைகள்



இருப்பவர்கள் (இ.வ.) : இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்)

நிற்பவர்கள் (இ.வ.) : இ. அஜிதா (அ.உ), பி. அனுலா (அ.உ), கா. யசோ (அ.உ), மே. ஷாலினி (அ.உ), கு. சிந்துஜா (அ.உ), சு. சுமன் (அ.உ), இ. காசிநாதன் (அ.உ)

# சமூகசேவைக் கிளை



**இருப்பவர்கள் (இ.வ.) :** இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்), சு. வரதபாஸ்கரன் (சமூகசேவை உத்தியோகத்தர்)
**நிற்பவர்கள் (இ.வ.) :** மு. நிற்குணானந்தன் (அலுவலகப் பணியாளர்), ஏ. திருத்தேவி (அரச முகாமைத்துவ உதவியாளர்), வி. நிவேதனா (அ.உ., சமூக சேவை), பா. ஷர்மிளா (அ.உ.), நி. பாமினி (அரச முகாமைத்துவ உதவியாளர்), ஞா. கேதாரணி (அ.உ.)

# வெளிக்களக் கிளை



**இருப்பவர்கள் (இ.வ.) :** சே. செல்வசுகுணா (கலாசார உத்தியோகத்தர்), இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்)

**நிற்பவர்கள் (இ.வ.)**

**1ஆவது நிரை :** S. கணநாதன் (வீடமைப்பு உத்தியோகத்தர்), R. ஜெய்கர் [அ.உ. (திறன்)], I. சசிகரன் [அ.உ (தொழிற்துறை)], N. அரவிந்தன் (தொ.உ), H. சாமந்தி (மு.உ), S. இராசமலர் [அ.உ (கலாசார மத்திய நிலையம்)], D. ஆசா [அ.உ (தொழிற்துறை)], A. ரஜிதா [அ.உ (இந்து கலாசாரம்)]

**2ஆவது நிரை :** N. நாகராஜா (அலுவலகப் பணியாளர்), T. ஜெறோம்குணராஜ் (விஞ்ஞான தொழினுட்ப உத்தியோகத்தர்), S. புவிராஜசிங்கம் (தொழினுட்ப மனிதவள மேம்படுத்துகை அலுவலர்), N. ஶ்ரீதர் [அ.உ (கலாசாரம்)], R. ரமேஷன் (புள்ளி விபரவியல் உத்தியோகத்தர்)

# கிராம அபிவிருத்தி, காணிக் கிளைகள்



இருப்பவர்கள் (இ.வ.) : இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாளூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்), சி. சாந்திகுமார் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
நிற்பவர்கள் (இ.வ.) : சசிக்குமார் (FI), கு. ரதிவதனி (DO), பூ. சியாமளா (DO), பா. அனுலா (DO), சி. கனகாம்பிகை (MA), து. விஜிதா (DO), ப. நகுலேஸ்வரி (LUPO), இ. சேந்தன் (DO)

# சிறுவர், பெண்கள் அபிவிருத்திக் கிளை



இருப்பவர்கள் (இ.வ.) : இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்)

நிற்பவர்கள் (இ.வ.) : சு. ஜானகி [அ.உ (உளவளத்துறை)], செ. ஜெயகௌரி (மகளிர் அ.உ), க. ரஜீவன் (இளைஞர் சேவை உத்தியோகத்தர்), சி. ஞானகணேசன் [அ.உ (முன்பிள்ளை பருவம்)], க. இளவரசன் (பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்), கி. தர்சினி (அரச முகாமைத்துவ உதவியாளர்), க. சிந்துரா [அ.உ (சிறுவர் உரிமை மேம்பாடு)]




இருப்பவர்கள் (இ.வ.) : இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாளரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்)

நிற்பவர்கள் (இ.வ.) : செ. சோபினி, கி. நவராணி, சு. செல்வப்பிரியா, பா. சுபா, இ. ஹஜனி, ச. சுகிர்தா, சீ. சுதர்சன், கு. தேனுசா, யோ. அபிநயா, ம. கார்த்திகா, ரா. தசாயினி, ஜெ. பிரபாலினி, ம. கிருபாகரி, சி. சாமந்தி, தி. ஆஷா

# கலாசார அதிகார சபை



**இருப்பவர்கள் (இ.வ.)** : எஸ். ஸ்ரீதர் (அபி.உ/ இணைப்பாளர்), கி. செகராசசிங்கம், சி. பேரின்பநாயகி, இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (தலைவர்/ பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்), த. அஜந்தகுமார் (செயலாளர்), பூரணசுதாகரக் குருக்கள்

**நிற்பவர்கள் (இ.வ.)** : மா. அனந்தராஜன், க. பாலன், செ. சிவப்பிரகாசம், கி. இன்பரூபன், கி. ரவிக்குமார், ந. ரகுநாதன், ந. மயூரரூபன்




இருப்பவர்கள் (இ.வ.) : க. யோகநாதன், வி. சிவசிதம்பரம், இ. றஞ்சினி (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்), சி. சிவரஞ்சன் (கணக்காளர்), ஈ. தயாரூபன் (பிரதேச செயலர்), சி. ராஜீவ் (உதவிப் பிரதேச செயலர்), க. சக்திவேல் (நிர்வாக உத்தியோகத்தர், பதில்), எஸ். விநாயகமூர்த்தி, ஆ. சிவநாதன்

நிற்பவர்கள் (இ.வ.) : செ. சிவப்பிரகாசம், எஸ். குணராசா, சே. செல்வசுகுணா (கலாசார உத்தியோகத்தர்), இ. ரவிக்குமார் (நிர்வாக கிராம அலுவலர்), ந. ஸ்ரீதர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

## திட்டமிடல் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் - 2016, 2017




## மரம்நடுகை வேலைத்திட்டங்கள்




## பனைமரம் நடுகை வேலைத்திட்டங்கள் - 2017




## புனரமைப்பு வேலைத்திட்டங்கள் - 2016, 2017




கலாசார விழா - 2016, 2017















சித்திரப் போட்டி - 2017



## விளையாட்டு விழா - 2016, 2017









## கிராம அபிவிருத்திக் கண்காட்சி - 2016, 2017










சர்வதேச சிறுவர் தினம்


சிறுவர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடு


முன்பள்ளிச் சிறுவர்களுக்கான உதவித் திட்டங்கள்


முதியோர்களுக்கான உதவித் திட்டங்கள்

## சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் - 2016, 2017









## புகைத்தல், போதைஒழிப்பு வேலைத்திட்டம்





## திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம்





## மனிதவள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 2016, 2017








## தேசிய தொழில் முயற்சியாளர் வேலைத்திட்டங்கள்





e Mobile & Lap Mart
Main Street Nelliady
Tp:- 077 4115 544 , 021 226 1414

Vzone medicals
Medi Care
Kodikama Road, Nelliady.

# அருள் நாயகி

## சைவ உணவகம்

இன்றைய ஸ்பெஷல்

அப்பம்
நெய் தோசை
மசாலா தோசை
வெங்காய தோசை
கொத்துறொட்டி



*With Best Compliments from....*



திருமண பட்டுச்சாறிகள்,
கூறைச்சாறிகள்,
பட்டுச்சேட்டுகள்,
Model சல்வார்கள்,
Office சாறிகள்
மற்றும்
ஆண்கள், பெண்கள்,
சிறுவர், சிறுமியர்களுக்கான
அனைத்து ஆடைத்தெரிவுகளையும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள...

# சிறீரங்கம் ரெக்ஸ்

வதிரி வீதி, உடுப்பிட்டி.
0213737455

பிரதான வீதி, நெல்லியடி.
(Nation Turst Bank அருகில்)
021-5619048

*With Best Compliments from....*

# வானதி அரிசி ஆலை



## கொடிகாமம் றோட், நெல்லியடி.



எம்மிடம் தரமான கறுப்பன் நாடு, கறுப்பன் தீட்டல்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

*With Best Compliments from....*

# எமரால்ட் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்





Nippon Cement,
Couseway Paint வகைகள்,
கட்டிடப் பொருட்கள்
என்பவற்றை தரமாகவும் மலிவாகவும்
சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.





CAUSEWAY PAINTS

யாழ் வீதி,
உடுப்பிட்டி.

T.P. : 021-2263468,
Fax : 021-2055989

# JANA CIVIL WORKS
# &
# JANA TRADE CENTRE







Yarl Point Pedro Road,
Imayanan,
Jaffna


021 - 226 2077
077 - 6000970

jeyaratnamr@yahoo.com
www.janacivilworks.com

*With Best Compliments from....*

# VELLAN CONSTRUCTION

*All kind of civil Engineering work*






*Maththoney, Karaveddy West, Karaveddy.*
*T.P. : 0776181414, 0777322720*

*With Best Compliments from....*

# Vinmeen



# Pizza



## Vinmeen
## RESTAURANT & BAKERY

ஐந்தாவது ஆண்டு வெற்றிப்படியில் காலடி எடுத்துவைக்கும் நாம் நவீன உயர்தர ஐசிங்கேக் ஓடர்களை உடனுக்குடன் செய்து வழங்கி வருகின்றோம். மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுகளை ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் நவீன உயர்தர வெதுப்பக உற்பத்திகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

No - 83, MAIN STREET, NELLIADY,
KARAVEDDY.
T.P. : 021 226 1051

கிளை : பஸ் நிலையம் முன்பாக
(இலங்கை வங்கி அருகில்)
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
தொ.பே. 021 226 1354


செல்லமுத்தூஸ்
புடவை மாளிகை
Sellamuthus Textiles
Main Street Nelliady, Karaveddi Tel:- 021 226 3238
தாயை வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம்
ஆறு முறை பூமியை வலம் வருதலும், நூறு முறை ஸ்நானம் செய்தலும்,
ஆயி ரம் தரம் காசியில் குளித்தலும், ஆகியவற்றால்
கிடைக்கும் புண்ணியம் தாயை ஒருமுறை வணங்கினாலே கிடைக்கும்

*With Best Compliments from....*


MARUTHAM
PAINT DEALERS


Dulux
let's colour


NIPPON PAINT

TOKYO CEMENT


YARL BEACH HOTEL & RESTAURANT
077 236 7422
STANDARD A/C ROOMS
DELUX A/C ROOM
BIRTHDAY PARTIES
WEDDING RECEPTIONS
CONFERENCE FACILITIES
GET-TOGETHERS
ANNIVERSARIES
Yarl Beach Hotel & Restaurant
yarlbeachhotel@gmail.com
021 226 1567 / 077 236 7422
Vallai, Point Pedro Road, Jaffna.


With Best Compliments from....
Arun
Tex & Fancy Palace
Main Street,
Nelliady
T.P : 077 714 9459
021 226 2857



With Best Compliments from....
TITANIC
RESTAURANT
NELLIADY
(You will feel you're in home When you are with us)
Open Daily 9.30 am To 9.30 pm
We Closed on Friday.
No. 204, Main Street,
Nelliady, Karaveddy,
Jaffna.
Home Delivery
Tel : 0212262323


With Best Compliments from....
CHITHAMPARAPILLAI
BOOK DEPOT
Dealer's in stationery, School Books
Printing paper & Etc
No.60, 64,
Nelliady, Karaveddy.
Tel : 0212263223
0212264155

*With Best Compliments from....*

Subash
BAKERY

# சுபாஸ் பேக்கரி





பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

T.P.No. : 0212262447
0212262922

*With Best Compliments from....*

அனைத்து விதமான
அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்...

# தமிழ்ப்பூங்கா பதிப்பகம்

- TYPE SETTING - ENGLISH & TAMIL
- BOOK BINDING & SPIRAL BINDING
- RUBBER STAMPS
- VISITING CARDS & LETTER HEADS
- WEDDING CARDS & BAGS



பிரதான வீதி.
நெல்லியடி. கரவெட்டி.
0212264014 | 0779597145
tamilpoonka@gmail.com



தமிழ்ப்பூங்கா - 0212264014